வரு.74 இல. 46 ★

www.vaaramanjari.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

24 பக்கங்கள் 100/-

2022 நவம்பர் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

November 13 Sunday, 2022







02 மயிரிழையில் மீட்கப்பட்ட சட்டவிரோத புலம்பெயர்வாளர்கள்



03 கிரிக்கெட்டுக்கே அபகீர்த்தி ஏற்படுத்திய தனுஷ்க



05 நாட்டை சீர்குலைக்க ஜனநாயக விரோத குழுக்கள் முயற்சி!



24 வரலாறு திரும்புகிறது

### எதிர்க்கட்சித் தலைவரின் செயற்பாட்டால்

# சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைப்பதில் இன்னும் தாமதம்

சுயாதீன ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படுவது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் காலம் தாழ்த்தும் செயற்பாடுகள் காரணமாக அனைத்தும் தடைப்பட்டிருப்பதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்பட வேண்டுமென சிவில் அமைப்புகள் மற்றும் பல்வேறு தரப்புகளிலிருந்து கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டிருந்தாலும் எதிர்க்கட்சித் தலைவரின் பொறுப்பற்ற செயலால் சுயாதீன ஆணைக் குழுக்கள் அமைக்கப்படுவதில் தாமதம் ஏற்படுவதாகவும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கும் அதிகாரம் முழுமையாக அரசியலமைப்புக் குழுவுக்கே இருப்பதால் அரசியலமைப்புக் குழுவுக்கு பிரதமர், சபாநாயகர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரின் இணக்கப்பாட்டுடன் உறுப்பினர்களாக நியமிக்கப்பட வேண்டிய சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளின் நியமனம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரின் இணக்கப்பாடு இதுவரை தெரிவிக்கப்படாததன் காரணமாகவே இந்த தாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமையின் காரணமாக சுயாதீன ஆணைக்குழுக்களை நியமிக்கும் அதிகாரம் கொண்ட அரசியலமைப்புச் சபைக்கான உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அரசியலமைப்புச் சபைக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படுவது தொடர்பில் 21 ஆவது திருத்தச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம், 19 ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்ட விடயமே தவிர எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை என்றே சொல்லப்படுகிறது.

எதிர்க்கட்சித் தலைவரின் இவ்வாறான செயற்பாடு காரணமாக சுயாதீன ஆணைக்குழுக்கள்

06

### இரா.சம்பந்தனுக்கு 'ஜனநாயக பொன்' விருது



ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக தன்னை அர்ப்பணித்த மூத்த அரசியல் பிரமுகரை அங்கீகரிப்பதற்காக வழங்கப்படும் 'ஜனநாயகப் பொன் விருது' முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தனுக்கு வழங்கப்பட்டது. 'இன்ஸிரியூட் ஒப் பொலிட்டிக்ஸ்' நிறுவனத்தால் இந்த விருது வழங்கப்பட்டது.

ஜனநாயகம், நல்லிணக்கம் ஆகியவற்றுக்காகத் தன்னை அர்ப்பணித்த புகழ்பெற்ற

06

# பொருளாதார நெருக்கடியிலிருக்கும் மக்களை கட்டியெழுப்பும் பட்ஜட்



### ஜனாதிபதியால் நாளை சமர்ப்பிப்பு

நாளை பி.ப 1.30 க்கு வரவு செலவு திட்ட உரை

பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடனும் பொருளாதார ஸ்திரத் தன்மையை ஏற்படுத்தும் நோக்குடனும் நிதி அமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை திங்கட்கிழமை 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை (14) திங்கட்கிழமை பி.ப 1.30 மணிக்கு நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை இரண்டாவது மதிப்பீட்டுக்காக சமர்ப்பித்து உரையாற்றுவார்.

06

### நாட்டின் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட

# போட்டித்தன்மையுடன் கூடிய பொருளாதாரமே ஒரே இலக்கு



ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட போட்டித்தன்மையுடன் கூடிய பொருளாதாரமே இலங்கையின் ஒரே குறிக்கோளாக இருப்பதனால், முப்படைகளின் பாதுகாப்பு மற்றும் மூலோபாயத் திறன்களின் அவசியம் குறித்தும் அதற்கான ஒதுக்கீட்டை அதிகரிப்பதன் முக்கியத்துவம் தொடர்பிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

06

### ஜனாதிபதியின் வேலைத்திட்டங்கள் மூலம்

# இலங்கையை அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்ற முடியும்



நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுத்துள்ளதாக தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார். இதன் காரணமாகவே அரசாங்கத்தின் மீதும் ஜனாதிபதியின் மீதும் மக்கள் பெரும் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பு கிராண்ட்பாஸ் புனித ஜோசப் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற

06




## மனிதநேயத்தை மதிப்போருக்கு மகிழ்ச்சி தரும் நீதிமன்றத் தீர்ப்பு

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறைத் தண்டனை அனுபவித்து வந்துள்ள ஆறு பேரையும் விடுதலை செய்யுமாறு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இவ்வழக்கில் எல்லாமாக ஏழு பேர் சிறைவாசம் அனுபவித்து வந்தனர். அவர்களில் பேரறிவாளன் கடந்த மே மாதம் 18 ஆம் திகதி உச்சநீதிமன்றத்தினால் விடுதலையாகியிருந்தார். எஞ்சியுள்ள ஆறு பேருக்கும் இப்போது விடுதலை கிடைக்கின்றது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கின் எதிரிகளான நளினி, ஜெயக்குமார், ரவிச்சந்திரன், முருகன், சாந்தன், ரொபர்ட் பயஸ், பேரறிவாளன் ஆகிய 7 பேரும் கடந்த முப்பது வருடங்களாக சிறைவாசம் அனுபவித்து வந்தனர்.


பேரறிவாளன் விடுதலையானதைத் தொடர்ந்து சிறையிலுள்ள தங்களையும் விடுவிக்கக் கோரி நளினி உள்ளிட்டோர் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர். அந்த மனுவின் அடிப்படையிலேயே எஞ்சிய ஆறு பேரும் தற்போது விடுதலையாகின்றனர்.

ராஜீவ் கொலைவழக்கில் சிறைத்தண்டனை அனுபவித்து வந்த ஏழு பேரையும் உலகெங்கும் உள்ள மனிதநேயம் கொண்டவர்கள் அனுதாபக் கண்கொண்டே நோக்கி வந்தனர். ஏழு பேரும் தங்கள் வாழ்நாளில் முப்பது வருடங்களை சிறைக்குள்ளேயே தொலைத்து விட்டனர். அந்தத் தண்டனைக் காலமானது ஏனைய கைதிகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் அதிகம். இந்திய நீதித்துறையின் வரலாற்றை எடுத்துக் கொண்டால் இக்கைதிகள் ஏழு பேரும் பத்து வருட காலத்துக்கு முன்னரே விடுதலை செய்யப்பட்டிருக்க வேண்டும்.

06

# நிதிக் கட்டமைப்பை வலுப்படுத்த IMF மற்றும் உலக வங்கி இணக்கம்






சர்வதேச நாணய நிதியமும் உலக வங்கியும் இலங்கையின் நிதிக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கு 13 அம்சங்களின் கீழ் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன.

அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே ஜனாதிபதியின் தலைமை அதிகாரி சாகல ரத்நாயக்கவிடம் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர்கள் இந்த இணக்கப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர்.

இலங்கையின் கடன்

06

### நுவரெலியா முதல் அவிசாவளை வரையான

# பெருந்தோட்டத்துறை "நலிவுற்ற" பிரிவாக அறிவிக்கப்பட வேண்டும்

### ஜனாதிபதிக்கு மனோ அவசர கடிதம்

நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை, மொனராகலை, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, காலி, மாத்தறை மற்றும் அவிசாவளை வரை

06

**வாழ்வாதார உதவிகளை வழங்குமாறும் பிரதமர் மோடி, முதல்வர் ஸ்டாலினிடமும் கோரிக்கை**



# டீசல் அதிகரிப்பையடுத்து பஸ் கட்டணத்தில் திருத்தம் செய்யப்படமாட்டாது



டீசலின் விலை நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டாலும், தற்போதைக்கு பஸ் கட்டணத்தில் திருத்தம் எதுவும் செய்யப்படமாட்டாதென இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன நேற்று தெரிவித்தார்.

அக்டோபர் 17 ஆம் திகதி டீசல் விலை லீற்றருக்கு 15 ரூபாய் குறைக்கப்பட்டு,

06

# டீசல், மண்ணெண்ணெய் விலைகள் அதிகரிப்பு

டீசல் புதிய விலை - ரூ. 430
மண்ணெண்ணெய் - ரூ. 365



டீசல் மற்றும் மண்ணெண்ணெய் விலைகளில் திருத்தம் மேற்கொள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது. இதற்கமைய, நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 15 ரூபாவினாலும், மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 25 ரூபாவினாலும்

06

# சூரியவெவ குளத்தில் மூழ்கி மூன்று சிறுமிகள் மாயம்

● 08 மாத குழந்தை உட்பட 05 பேர் மீட்பு

● தோணியில் சவாரி சென்றபோது சம்பவம்

சூரியவெவ, மஹாவெலிக்கடஆர குளத்தில் மூழ்கி 03 சிறுமிகள் காணாமற்போயுள்ளனர். 05 பேர் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நேற்று (12) காலை சூரியவெவ, மஹாவெலிக்கடஆர குளத்தில் அங்கு மீன் பிடிப்பதற்காக பயன்படுத்தப்படும் சிறிய தோணியொன்று கரையில் கட்டப்பட்டிருந்தது. இதனை பயன்படுத்தி 08 பேர் குளத்தில் சவாரி சென்றுள்ளனர்.

06

# சிவப்பு சீனி இறக்குமதிக்கு வர்த்தக அமைச்சு, நிதி அமைச்சிடம் அனுமதி கோருகிறது



நுகர்வோருக்குத் தேவையான சிவப்பு சீனியை இறக்குமதி செய்ய வர்த்தக அமைச்சு நிதி அமைச்சிடம் அனுமதி கோரியுள்ளது.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சிவப்பு சீனி போதுமானதாக இல்லை என்பதனாலேயே அதனை இறக்குமதி செய்ய வேண்டுமென வர்த்தகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

06




# மயிரிழையில் மீட்கப்பட்ட சட்டவிரோத புலம்பெயர்வாளர்கள்



இலங்கையருடன் பயணித்துக் கொண்டிருந்த சிறிய கப்பலொன்று வியட்நாமுக்கும் பிலிப்பைஸுக்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் கடுங்காற்றில் சிக்குண்டு கடந்த வாரம் அனர்த்தத்திற்கு உள்ளானது. இக்கப்பலில் இருந்து கைத்தொலைபேசி ஊடாக விடுக்கப்பட்ட அபயக்குரலை அடிப்படையாகக் கொண்டு இலங்கை கடற்படையினரின் கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையம் விரைந்து செயற்பட்டது. அந்த துரித செயற்பாட்டால் அக்கப்பலில் இருந்த அனைவரும் திங்கட்கிழமை நண்பகலாகும் போது பாதுகாப்பாக மீட்கப்பட்டு வியட்நாமுக்கு அழைத்து வரப்பட்டு தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு

## உயிர்காத்த தொலைபேசி அழைப்பு

## ஆபத்துகள் நிறைந்த கடற்பயணத்தை தடுப்பது எப்படி?



உணவும் மருத்துவ வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இவர்கள் தொடர்பிலான ஆரம்ப விசாரணைகளில், கடல் மார்க்கமாக கனடாவுக்கு புலம்பெயரும் நோக்கில் இவர்கள் தமது பயணத்தை ஆரம்பித்தது தெரிய வந்துள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சு இவர்கள் குறித்து வியட்நாமுடன் இராஜதந்திர ரீதியில் தொடர்புகளை மேற்கொண்டுள்ளது. ஆனால் இவர்கள் முகம் கொடுத்துள்ள அனர்த்தம் மிகவும் பயங்கரமானதாகும். அவ்வாறு ஆபத்துக்கள் நிறைந்த இம்முயற்சியில் இவர்கள் ஏன் ஈடுபட்டார்கள்? அதற்கான காரணம் என்ன? என்றவாறான கேள்விகள் எழவே செய்கின்றன.

அது தான், 'அதிகம் வருமானம் ஈட்ட வேண்டும், நல்ல சம்பளம் பெற வேண்டும். அப்போது தான் நல்ல வீடு, சொத்துடன் வாழ முடியும். சமூகத்தில் நல்ல மதிப்பும் மரியாதையும் கிடைக்கும். இதற்கு அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கு புலம்பெயர்வது ஒன்றுதான் வழி',

என்ற எண்ணமும் எதிர்பார்ப்பும் தான் இவர்களையும் உயிரை கையில் பிடித்தேனும் படகுகளில் பயணப்பட வைத்திருக்கிறது. இவ்வாறு மேற்கு நாடுகளுக்குச் சென்று செழிப்புற வாழவேண்டும் என்ற கனவுடன் எதிர்வரும் ஆபத்தையும் பொருட்படுத்தாமல் பயணிப்பது எங்கள் நாட்டைச் சேர்ந்தவர்கள் மாத்திரமல்ல. உலகில் வளர்முக மற்றும் மூன்றாம் மண்டல நாடுகளைச் சேர்ந்த பலரும் அவ்வாறு செல்வதை நாங்கள் அறிந்திருக்கின்றோம். அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கு புலம்பெயரும் போது தமது கனவும் தேவைகளும் நிறைவேறும் என்பதே அவர்களது எதிர்பார்ப்பாகும்.

வளர்முக மற்றும் மூன்றாம் மண்டல நாடுகளை சேர்ந்தவர்கள், தொழில்களை எதிர்பார்த்தும் வருமானம் ஈட்டிக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையிலும் அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்குச் செல்வதை அந்நாடுகளது குடிவரவு சட்டங்கள் இடமளிப்பதில்லை. சட்ட விரோதமாக தமது நாட்டுக்குள் வர வேண்டாம் என்றும் அவ்வாறான முயற்சிகளில் ஈடுபட வேண்டாம் என்று அந்நாடுகளே வெளிப்படையாகக் கூறி வருகின்றன. சட்டவிரோத குடியேற்றவாசிகள் தொடர்பான சட்டங்களையும் அனேக நாடுகள் கடுமையாக்கியுள்ளன, அவற்றையும் மீறி தமது நாடுகளுக்குள் வருபவர்கள் அவர்களது நாடுகளுக்கே திருப்பி அனுப்பி வைக்கப்படுவர் என்றும் அந்நாடுகள் எச்சரிக்கின்றன. இலங்கையிலிருந்து அனேகமானோர் அவுஸ்திரேலியாவுக்குச் சட்டவிரோதமாகச் செல்வதால், அந்நாடு தனது கடல் ரோந்துப் பணிகளை கடுமையாக்கியுள்ளதுடன் மீறி அங்கு வந்தால் திருப்பி அனுப்பப்படுவீர்கள் என்றும் இங்குள்ள தமது தூதரத்தின் ஊடாக பிரசாரம் செய்கின்றது.

சட்ட ரீதியாக தமது நாட்டுக்குள் வருவதை கட்டுப்படுத்தவும் சட்ட விரோதமான முறையில் வருவதை தடுக்கும் வகையிலும் குடிவரவு குடியல்வு சட்டங்களையும் கூட அனேக நாடுகள் கடுமையாக்கி வைத்திருக்கின்றன. அத்தோடு வளர்முக மற்றும் மூனறாம் மண்டல நாடுகள் தங்களது பிரஜைகள் சட்ட விரோதமான முறையில் வேறுநாடுகளுக்குள் நுழைவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் அறிவுறுத்தியும் இருக்கின்றன.

இவ்வாறான கட்டுப்பாடுகள் நடைமுறையில் இருந்தும் கூட அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கு சட்ட ரீதியாகவோ, சட்ட விரோதமான முறையிலோ புலம்பெயர்வதற்கான முயற்சிகளில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றது. இம்முயற்சியில் ஈடுபடுபவர்கள் தாம் வாழும் வீடு, மற்றும் சொத்துக்களை விற்றும் அடகு வைத்தும் மாத்திரமல்லாமல் கடன் எடுத்தும் கூட இலட்சக்கணக்கில் பணத்தை செலவுசெய்கின்றனர். ஆனால் இது நம்பிக்கையற்றதும் பாதுகாப்பற்றதுமான ஆபத்துகளும் அனர்ந்தங்களும் நிறைந்ததுமான முயற்சி. இருந்தும் இவ்வாறான முயற்சி தரை மார்க்கம், கடல் மார்க்கம், ஆகாயமார்க்கம் என்றபடி உலகின் பல பிராந்தியங்களிலும் இடம்பெறவே செய்கின்றது.



இவ்வாறான முயற்சியில் ஈடுபட்டவர்கள் பல வகையான துன்பங்களுக்கும் ஆபத்துகளுக்கும் முகம் கொடுத்துமுள்ளனர். குறிப்பாக சொத்துகளை மாத்திரமல்லாமல் உயிர்களையும் கூட இழந்திருக்கின்றனர். கொள்கலனில் மறைந்து ஒரு நாட்டின் எல்லையிலிருந்து மற்றொரு நாட்டுக்குள் பிரவேசிக்க முயன்ற சிலர், மூச்சுத் திணறி உயிரிழந்திருந்த சம்பவமொன்று கூட ஏற்கனவே பதிவாகி இருக்கின்றது.

மத்திய தரைக்கடல் ஊடாக சட்ட விரோத புலம்பெயர்வில் ஈடுபடும் படகுகள் அவ்வப்போது விபத்துக்குள்ளாகவோ, கவிழவோ செய்கின்றன. இவ்வாறு ஐரோப்பாவுக்கு புலம்பெயரும் முயற்சியில் ஈடுபட்டவர்கள் பயணித்த படகொன்று 2015 செப்டம்பர் 02 ஆம் திகதி மத்திய தரைக்கடலில் மூழ்கியது. அப்படகில் கனடாவுக்கு செல்லும் நோக்கில் பயணித்த அய்லான் குர்தியின் தாய், குர்தியின் சகோதரர் உட்பட இரண்டு வயதான அய்லான் குர்தியும் உயரிழந்தார். தந்தை மாத்திரமே உயிருடன் மீட்கப்பட்டார். அய்லான் குர்தியின் மரணம் உலகையே உலுக்கியது. ஆபத்துக்கள் நிறைந்த பயங்கரமான இச்சட்ட விரோத புலம் பெயர்வின் போது இவ்வாறு பல உயிரிழப்புகள் இடம்பெற்றிருக்கின்றன.

இந்தப் பின்புலத்தில் தான் இவ்வாறான பயணங்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் இந்நாட்டிலும் கடுமையாக முன்னெடுக்கப்படுகின்றன. இருந்த போதிலும் ஆட்கடத்தல் காரர்களின் பசப்பு வார்த்தைகளையும் ஏமாற்று வாக்குறுதிகளையும் நம்பி இம்முயற்சியில் ஈடுபடக் கூடியவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். அவ்வாறு கடல் மார்க்கமாக மீன்பிடிப்படகுகளில் புலம்பெயர்வதற்கு காத்திருந்த நிலையில் ஏற்கனவே பலர் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

அவர்கள் பயணிக்கத் தயார்படுத்தப்பட்டிருந்த படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. இவ்வாறான முயற்சியில் ஈடுபட்டவர்கள் பயணிக்கத் தயாராக இருந்த நிலையில் சிலாபம், மாத்தறை, திருகோணமலை, மட்டக்களப்பு, கற்பிட்டி உள்ளிட்ட பல பிரதேசங்களில் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளனர். சட்டவிரோத பயண முயற்சியில் ஈடுபட்டவர்கள் இந்நாட்டின் கடற்பரப்புக்குள் வைத்தும் கூட கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு சட்ட விரோத புலம்பெயர்வைக் கட்டுப்படுத்தவென விரிவான அடிப்படையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள போதிலும் அம்முயற்சியில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளது. அதற்கு வியட்நாம் கடலில் அனர்த்தத்திற்கு உள்ளாகி மீட்கப்பட்டு அங்கு தங்க வைக்கப்பட்டிருப்பவர்களும் நல்ல உதாரணம்.

வியட்நாமுக்கும் பிலிப்பைன்ஸுக்கும் இடையிலான கடற்பரப்பில் அனர்த்தத்திற்கு உள்ளான லேடி 3 என்ற இக்கப்பல் இந்த அனர்த்தத்திற்கு உள்ளாவதற்கு நான்கைந்து வாரங்களுக்கு முன்னர் இக்கப்பலில் பயணித்தவர்கள், மியன்


அய்லான் குர்தி

மாருக்கும், தாய்லாந்துக்கும், மலேசியாவுக்கும் சுற்றுலா விசாவில் சென்றுள்ளனர். இவர்கள் சில தினங்களுக்கு முன்னர் தாய்லாந்திலிருந்து சுமார் நூறு அடி நீளம் கொண்ட மீன்பிடிக் கப்பலில் மியன்மார் நாட்டு கொடியுடன் கனடாவை நோக்கி பயணிக்க ஆரம்பித்துள்ளனர். இக்கப்பல் வியட்னாமுக்கும் பிலிப்பைன்ஸுக்கும் இடைப்பட்ட கடற்பரப்பை அடைந்த சமயம் கடல் கொந்தளிப்பாகவும் கடுங்காற்றுடனும் காணப்பட்டுள்ளது.

அச்சமயம் இக்கப்பல் வியட்நாமின் தெற்கு கடற்கரையில் அமைந்துள்ள வொங் தௌ துறைமுகத்தில் இருந்து 258 கடல் மைல் தூரத்தில் காணப்பட்டுள்ளது. இந்நிலையில் கடந்த 05 ஆம் திகதி (நவம்பர் 2022) கப்பலின் என்ஜின் பகுதியில் திடீரென துவாரம் ஏற்பட்டு கடல் நீர் உட்பிரவேசிக்கத் தொடங்கியுள்ளது. இதனை அறிந்த கப்பலோட்டி சிறிய படகொன்றில் தப்பியோடியதையடுத்து கப்பலில் இருந்தவர்கள் அபயக்குரல் எழுப்பியுள்ளனர். தாம் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் தம்மைக் காப்பாற்றுமாறும் தொலைபேசி ஊடாக இக்கப்பலில் இருந்த ஒருவர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனை அறிந்த இலங்கை கடற்படையின் கடல்சார் ஒருங்கிணைப்பு மீட்பு மையம் விரைந்து செயற்பட்டு சிங்கப்பூர், வியட்நாம், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளிடம் இவர்களைப் பாதுகாப்பாக மீட்க உதவுமாறு கோரிக்கை விடுத்தது. இக்கோரிக்கைக்கு சிங்கப்பூர் உடனடியாக பதிலளித்தது.

அத்தோடு வியட்நாம் கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தினர் அனர்த்தத்திற்கு உள்ளாகியுள்ள கப்பலுடன் உடனடியாகத் தொடர்பு கொள்வதற்கான முயற்சிகளை முன்னெடுத்ததோடு, அனர்த்தத்திற்கு உள்ளான கப்பல் காணப்பட்ட கடற்பிராந்தியத்தில் பயணித்த ஏனைய கப்பல்களுக்கும் அவசர உதவிக்கான சமிக்ஞைகளையும் விடுத்தனர்.

அதனடிப்படையில் அச்சயம் அப்பகுதியில் பயணித்த வாகனங்கள் ஏற்றிச் செல்லும் ஜப்பானின் ஹீலியோஸ் லீடர் என்ற கப்பல் விரைந்து செயற்பட்டதோடு மூழ்கிக் கொண்டிருந்த கப்பலில் இருந்த 303 பேரையும் அதாவது, 264 ஆண்களையும் 19 பெண்களையும் 20 சிறுவர்களையும் கடந்த 7 ஆம் திகதி பாதுகாப்பாக மீட்டு வியட்நாமின் வொங் தௌ துறைமுகத்திற்கு அழைத்து வந்தது. இவர்கள் தற்போது வியட்நாமில் உணவு மற்றும் மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு பாதுகாப்பாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர். வியட்நாமிலுள்ள இலங்கை தூதரக அதிகாரிகளும் வியட்நாம் உத்தியோகத்தர்களும் இவர்களை சந்தித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கப்பலில் இருந்து மீட்கப்பட்டுள்ளவர்களில் பெரும்பகுதியினர் இலங்கையின் வடக்கு, கிழக்கு பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர். அவர்களில் 70க்கும் மேற்பட்டவர்கள் யாழ் குடாநாட்டை சேர்ந்தவர்கள் என்பதும் ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. கனடா செல்வதற்காக இக்கப்பலில் இருந்தவர்களிடம் தலா ஒவ்வொருவரிடமும் ஐயாயிரம் அமெரிக்க டொலர்கள் படி பெறப்பட்டுள்ளதாக அவர்களது உறவினர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

ஆனால் ஆபத்துக்கள் நிறைந்த இப்பயணத்தில் கையடக்கத் தொலைபேசி ஒருவரிடமேனும் இல்லாதிருந்தால், அல்லது கையடக்கத் தொலைபேசி செயற்படாதிருந்தால் இவர்கள் அனைவரது நிலைமையும் என்னவாயிருக்கும் என்பதை ஒவ்வொருவரும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆகவே ஆபத்துக்கள் நிறைந்த பயங்கரமான இச்சட்ட விரோத புலம்பெயர்வு முயற்சிகளை தவிர்த்துக் கொள்வதில் ஒவ்வொருவரும் கவனம் செலுத்த வேண்டும். அதுவே ஆரோக்கியமானதும் பாதுகாப்பானதுமாகும்.



மர்லின் மரிக்கார்...



## அரங்கேற்றம்

நிர்த்தனா நடனக் கல்லூரியின் அதிபர் கலைமாமணி ஸ்ரீமதி சிவானந்தி ஹரிதாசனின் மாணவியும் திருமதி கமல் கோபால் ஐயர் தம்பதிகளின் புதல்வியும் பிரிட்டிஷ் கல்லூரியின் மாணவியுமான அதிதி ஐயரின் பரதநாட்டிய அரங்கேற்றம் கடந்த 5ஆம் திகதி சனிக்கிழமை மாலை பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக இந்திய தூதரக சுவாமி விவேகானந்தர் கலாசார நிலையத்தின் பணிப்பாளர் ரேவந் விக்ரம் சிங் கலந்துகொள்ள சிறப்பு அதிதியாக அஞ்சலிக்கா சித்திரசேன மெல்வானி பங்கேற்றார்.

## 24வது கொடே தேசிய சாகித்திய விருது -2022

### இறுதி சுற்றுப் பட்டியல்

**நாவல்**

1 ஆதுரசாலை சிவ.ஆரூரன்
2 அன்புடையர் பிறர்க்கு ஆ.மு.சி. வேலழகன்
3 வீணையடி நீ எனக்கு வி.மைக்கல் கொலின்

**சிறுகதை**

1 கடலோரப் பாதை முதூர் முகைதீன்
2 நேற்றைய மனிதர்கள் இராஜேஸ்வரி பாலசுப்பிமணியம்
3 நெத்திக்காசு பாலரஞ்சனி ஜெயபால்

**கவிதை**

1 கடுவன் பூனை ஏ.கே.முஜாரத்
2 நான் உமர்கய்யாமின் வாசகன் ஏ.நஸ்புள்ளாஹ்
3 யாருக்கோ பெய்யும் மழை தாட்சாயணி

**முதல் நூல்**

1 கறையிலா குற்றங்கள் சபீனா சோமசுந்தரம்
2 பிறப்பிட நிழலிலே ஜன்ஸி கபூர்

இவற்றில் தலா ஒவ்வொரு துறைக்கும் சிறந்த ஒரு நூல் தெரிவு செய்யப்பட்டு டிசம்பர் மாதம் கொழும்பில் நடைபெறும், 24வது கொடகே தேசிய சாகித்திய விழா 2022யில் அறிவிக்கப்பட்டு விருது வழங்கப்படும்,





வார இறுதியில் சென்னையில் நடந்த தமிழ் நாடகத்துறைத் தந்தை தவத்திரு சங்கரதாஸ் நூற்றாண்டு விழாவில், தமிழகக் கவிஞர் நிழற்படக்கலைஞர் இந்திய, இலங்கை இலக்கிய உறவு இணைப்பாளர் முனைவர் மு.ஜலால்தீன், "ஒளிப்பட நாயகன்" சிறப்புப் பட்டத்தினை திரைப்பட நடிகர்'பாக்யா" சிற்றிதழ் ஆசிரியர் கே.பாக்யராஜ் மற்றும் கலை இலக்கியப் புரவலர் நல்லி குப்புசாமி ஆகியோரிடமிருந்து பெறுகிறார். படத்தில் கலைஞர் டி.கே.எஸ். கலைவாணன்,கலைமாமணி வி.ஜி.பி.சந்தோசம், அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழக உபவேந்தர் உதயநேசன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

# கிரிக்கெட் விளையாட்டுக்கே அபகீர்த்தியை ஏற்படுத்திய தனுஷ்க குணதிலக்க!

எம்.ஜி.ரெட்னகாந்தன்



இலங்கையில் பல தசாப்தங்களாக நடைபெற்றுவந்த உள்நாட்டு யுத்தம் முடிவடைந்ததன் பின்னரும் கூட, இலங்கை பல பயங்கரவாத தாக்குதல்கள், கொரோனா பெருந்தொற்று அதன் பின்னர் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி, ராஜபக்ஷக்களின் ஊழல் விவகாரம் அதனைத் தொடர்ந்து தொடர்ச்சியான மக்களின் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக அரசியல் தலைமைகளின் பதவி விலகல் போன்ற திடீர் திருப்பங்கள் காரணமாக இலங்கை ஒரு சர்ச்சைக்குரிய நாடாகவே சர்வதேசத்தினால் பார்க்கப்பட்டு வந்தது. தற்போது நாடு மீண்டும் சுபீட்சத்தை நோக்கி சென்று கொண்டிருக்கையில் மீண்டும் சர்வதேச அரங்கில் அதற்கொரு கரும் புள்ளி!.

அவுஸ்ரேலியா சிட்னி நகரில் நடைபெற்றுவரும் உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் விளையாடிய இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக மீதான பாலியல் குற்றச்சாட்டும் அதனைத்தொடர்ந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை (06) அவுஸ்ரேலிய பொலிசாரால் அவர் கைது செய்யப்பட்டமையும் சர்வதேச ரீதியில் பெரும் சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணியானது அவுஸ்ரேலியா சிட்னி நகரில் நடைபெற்ற சர்வதேச கிரிக்கெட் போட்டியில் கலந்துகொண்டிருந்தது. கிரிக்கெட் விளையாட்டில் இடது கை மட்டை ஆட்டக்காரரான இவர், வலது கை பந்து வீச்சாளராகவும் பிரகாசித்துள்ளார்.

சிட்னி நகரில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் காயமடைந்த தனுஷ்க குணதிலக தொடர்ந்து விளையாட அவரது உடல் நிலை இடம்தரவில்லை. ஆனால் அவர் உடனடியாக நாடு திரும்பவில்லை.

இயற்கை எழில்கொஞ்சும் அவுஸ்ரேலிய சிட்னி நகரின் அழகும், ரிண்டர் என்ற சமூக வலைத்தளம் ஊடாக அறிமுகமாகிய 29 வயதான பணக்கார வெள்ளைக்காரப் பெண்ணுடனான நட்பும் உடனடியாக தனுஷ்க குணதிலக நாடு திரும்புவதை தடுத்தன.

சிட்னி படகுத்துறையில் அமைந்துள்ள திறந்தவெளி மதுபானச்சாலையில் மதுபானத்துடன் ஆரம்பித்திருக்கின்றது இவர்கள் இருவருடைய 'டேற்றிங்'. சிறந்த கிரிக்கெட் விளையாட்டு வீரரான இவர் உண்மையிலேயே நேர்மையானவராகவும், ஒழுக்கமானவராகவும் இருந்திருந்தால் அந்த வசந்தகால டேற்றிங் இரவு மகிழ்ச்சிகரமான இரவாக அமைந்திருக்கும்.

தனுஷ்க குணதிலகவும் வெள்ளைக்கார பெண்ணும் இன்னும் சில இடங்களுக்குச் சென்று உணவு உண்டுள்ளனர். அந்தப் பெண்ணின் அழைப்பை ஏற்று தனுஷ்க குணதிலக அவளது வீட்டுக்கு சென்றுள்ளார். இங்கேதான் தனுஷ்க குணதிலகவின் தலையில் சனியன் ஏறி உட்காந்து கொண்டது. அப்பெண்ணின் அழைப்பை தவறாக புரிந்துகொண்டு அவளின் வீட்டிற்கு பயணித்துள்ளார் தனுஷ்க குணதில.

விளையாட்டு வீரர்களுக்கு ஒழுக்கம் மிக முக்கியமானது. அவர்கள் சர்வதேச போட்டிகளில் விளையாடும் போது ஒரு நாட்டை பிரதிநிதித்துவம் செய்து அந்த நாட்டு ரசிகர்களின் பிரதிநிதியாக விளையாடுகிறார்கள். அப்படியான வீரர்களை அந்தநாட்டின் மக்கள் கதாநாயகர்களாக கொண்டாடுவார்கள்.

ஒழுக்கம் தவறும் வீரர்கள் தங்கள் வாழ்க்கையை தொலைத்து தங்கள் நாட்டுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்துகின்றனர்.

பிரபல உலக குத்துச்சண்டை வீரர் மைக் டைசன் பல பெண்களை பாலியல் வன்புணர்வு செய்து சிறை சென்றதுடன் தனது உலகப் புகழையும் இழந்திருந்தார். அதே போல் பிரபல உதைபந்தாட்ட வீரரான மரடோனா போதைவஸ்து மற்றும் பெண் விவகாரங்களில் சிக்கி தனது பெயரையும் புகழையும் இழந்திருந்தார். இது ஒரு சில உதாரணங்களே.

இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதில மீது பாலியல் பலத்காரம் உள்ளிட்ட நான்கு குற்றச்சாட்டுக்களை அவுஸ்ரேலிய பொலிசார் பதிவு செய்துள்ளனர்.

அவுஸ்ரேலிய பெண்ணுடனான டேட்டிங்கில் அவள் வீட்டிற்கு சென்றவுடன் தன்னிலை மறந்த தனுஷ்க குணதில முறையற்ற விதத்தில் தன்னுடன் பாலியல் உறவில் ஈடுபட்டதாக பாதிக்கப்பட்ட பெண் பொலிசாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

பாலியல் வன்புணர்வின்போது நான்கு முறை தனது கழுத்தை நெரித்து தன்னை மூச்சடக்க செய்துள்ளதாகவும், அந்த நேரத்தில் தன்னை கொலைசெய்ய முயற்சிப்பதாகவே தான் அஞ்சியதாகவும் பொலிசாரிடம் அப்பெண் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

அவுஸ்திரேலியா போன்ற முதலாம் உலக நாடுகளில் கடந்த 50 ஆண்டுகளில் பெண்களுக்கு எதிரான வன்முறை சட்டங்கள் பலமுறை திருத்தப்பட்டு பலப்படுத்தப்பட்டுள்ளன. பெண்களின் நியாயமான சனநாயக மனித உரிமைகள் சட்டமாக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பாலியல் ரீதியில் பாதிக்கப்படுகின்ற பெண்கள் அதற்கெதிராக போராக்கூடிய வல்லமையோடும் துணிவாகவும் இருக்கின்றார்கள். அவுஸ்ரேலியாவில் பெண்களுக்கு ஆதரவான சட்டங்கள் பணக்காரப் பெண் என்றோ, ஏழைப்பெண் என்றோ, தாழ்த்தப்பட்ட பெண் என்றோ பார்ப்பதில்லை எனவே குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தான் குற்றவாளி அல்ல என சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்க வேண்டும் அல்லது குற்றத்தை ஒப்புக்கொள்ள வேண்டும்.

சம்பவம் தொடர்பில்

கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலகவின் செயற்பாடுகள் 'பொறுப்பற்ற தனிப்பட்ட செயல்' என அவுஸ்ரேலியாவிடம் இலங்கை அரசாங்கம் வருத்தம் தெரிவித்துள்ளது. உண்மையில் இலங்கை கிரிக்கெட் சபையானது ஒழுக்கமுள்ள வீரர்களை உருவாக்குகின்றதா? அல்லது தெரிவு செய்கின்றதா? என்ற கேள்வி எழுகின்றது.

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்காக தெரிவு செய்யப்படும் வீரர்களின் ஒழுக்கம் ஆய்வு செய்யப்படுகின்றதா? அவ்வாறு செய்யப்பட்டிருந்தால் இலங்கை கிரிக்கெட் அணியினருக்கும் நாட்டிற்கும் இந்த தலைகுனிவு ஏற்பட்டிருக்காது.

தனுஷ்க குணதிலகவின் மீதான பாலியல் குற்றச்சாட்டினைத் தொடர்ந்து அவுஸ்ரேலிய பாலியல் குற்றப்பிரிவு புலனாய்வு பிரிவினர் இலங்கை நாட்டவர் ஒருவரையும் கைது செய்துள்ளனர். இந்த இரண்டு நபர்களும் இலங்கையில் பல பாலியல் வன்புணர்வு சம்பவங்களுடன் தொடர்புபட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். ஆகவே அவுஸ்திரேலிய பொலிசாருக்கு தெரிந்திருக்கும் இத்தகவல்கள் இலங்கை பொலிசார் மற்றும் இலங்கை கிரிக்கெட் சபையினருக்கு தெரியாமல் போனது ஆச்சரியமான விடயம். இலங்கையில் மாத்திரமல்ல உலகநாடுகளில் கிரிக்கெட் விளையாட்டுக்கு அதிகளவான ரசிகர்கள் உள்ளனர்.

இந்தியாவை எடுத்துக்கொண்டால் கிரிக்கெட் விளையாட்டில் அந்நாட்டு தேசிய அணி தோல்வியை தழுவினால் ரசிகர்களால் விளையாட்டு வீரர்களின் வீடுகள் கூட அடித்து நொறுக்கப்படும்.

அவ்வாறான தீவிர ரசிகர்கள் பல நாடுகளில் உள்ளார்கள். உண்மையில் விளையாட்டு நட்சத்திரங்கள் மற்றும் சினிமா நட்சத்திரங்கள் ஆகியோர் மக்களால் மதிக்கப்படுபவர்களாகவும் விரும்பப்படுபவர்களாகவும் இருக்கின்றார்கள். அதன் காரணமாகவே பல பல்தேசிய கம்பனிகள் விளையாட்டு வீரர்களுக்கு கோடி ரூபாய்களை கொட்டி கொடுத்து தமது விளம்பரங்களில் நடிக்க வைக்கின்றன.

இவ்வாறாக மக்கள் மனங்களில் இடம் பிடிக்கும் விளையாட்டு நட்சத்திரங்கள் ஒழுக்க சீலர்களாக இருக்குமிடத்து இளைய தலைமுறை அவர்களின் வழியை பின்பற்றுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. இன்று இலங்கையில் காணப்படும் பொருளாதார நெருக்கடி மற்றும் இளைஞர்கள் மத்தியிலான போதைப்பொருள் பாவனை பெருக்கம் என்பன நாட்டின் ஸ்திரத்தன்மையை கேள்விக்குறியாக்கியுள்ள நிலையில், தனுஷ்க குணதிலக போன்ற பிரபல கிரிக்கெட் நட்சத்திரங்களின் பொறுப்பற்ற, சட்டவிரோத செயற்பாடுகள் ரசிகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளதுடன் நாட்டின் கௌரவத்திற்கு தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் விளையாட்டு வீரர்களுக்கு ஒழுக்கத்தையும் பொறுப்புக்கூறும் பக்குவத்தையும் முதலில் கற்றுக்கொடுக்க வேண்டும் என்பதனை தனுஷ்க குணதிலகவின் சமூக முரண் நடவடிக்கை தெளிவுபடுத்தியுள்ளது. தன்மீதான குற்றச்சாட்டு பொய்யானது என தனுஷ்க குணதிலகவினால் மறுக்கப்பட்டுள்ள போதிலும் நான்கு குற்றச்சாட்டுக்களையும் உறுதி செய்து நீதிமன்றத்தில் ஆவணங்கள் சமர்ப்பிக்ககப்பட்டதால், பிணையில் வெளியே வரமுடியாத சிறைவாசம் தனுஷ்க குணதிலகவிற்கு விதிக்கப்பட்டுள்ளது.

அனைத்துவகை விளையாட்டுக்களிலிருந்தும் தனுஷ்க குணதிலகவை இலங்கை கிரிக்கெட் சபை நிறுத்தியுள்ளதுடன், இப்பாலியல் வன்புணர்வு தொடர்பாக விசாரணை செய்வதற்கு ஒரு குழுவை ஏற்பாடு செய்துமுள்ளனர்.

இலங்கை கிறிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக தான் குற்றமற்றவர் என்பதனை நிரூபிப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளார், அவர் மீதான குற்றச்சாட்டுக்களுக்கான ஆதாரங்கள் பொலிசாரிடம் வலுவாக உள்ளதால் தனுஷ்க குணதிலக அவ்வளவு இலகுவில் வெளியே வந்துவிட முடியாது என்பது தெரியவருகின்றது. வழக்கு விசாரணைகள் முடியவே குறைந்தது ஒருவருடம் ஆகலாம் எனத் தெரியவருகின்றது. அதுவரையில் சிறைவாசம்தான்.

இவ்வருடம் நடைபெற்ற அவுஸ்ரேலிய பாராளுமன்ற தேர்தலில் எந்த பெரிய கட்சிகளின் ஆதரவும் இல்லாமல் சுயாதீனமாக நின்று ஆறு பெண்கள் வெற்றி பெற்று அவுஸ்ரேலியாவின் மத்திய பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆகவே அவுஸ்ரேலியாவின் அரசியலமைப்பு சட்டம் வளைந்து கொடுப்பதற்கு வாய்ப்பில்லை. தண்டனை கடுமையானதாகவே இருக்கப் போகின்றது.





எதிர்காலத்திற்கு பெறுமதி வாய்ந்த நல்வாழ்த்து!

நாட்டின் ஊக்கமிக்க பிள்ளைகளின் கனவுகள் வெற்றியடையும் வேளை அன்பார்ந்தவர்களின் ஒவ்வொரு பாசமிக்க அரவணைப்பிலும் இருப்பது அன்பான வாழ்த்துக்களே.

எட்டுத்திக்கும் ஒலிக்கும் நல்வாழ்த்துக்களுக்கு மத்தியில் ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் வழங்கும் சுப பெத்தும், புலமைப்பரிசிலில் சிறப்புர சித்தியடைந்த எமது நாட்டின் ஊக்கமிக்க பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு வழங்கக்கூடிய பெறுமதிமிக்க நல்வாழ்த்தாகும்.

375 சுப பெத்தும் புலமைப்பரிசில்கள்

2020ஆம் ஆண்டின் தரம் 5 புலமைப்பரிசில், கா.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தர பரீட்சைகளில் சிறப்புர சித்தியடைந்த பிள்ளைகளுக்கு 225 சுப பெத்தும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.

2021ஆம் ஆண்டின் தரம் 5 புலமைப்பரிசில் மற்றும் கா.பொ.த. உயர்தர பரீட்சைகளில் சிறப்புர சித்தியடைந்த பிள்ளைகளுக்கு 150 சுப பெத்தும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.

சுப பெத்தும் புலமைப்பரிசிலுக்கான தகைமையை பெறுவதற்கு ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் ஆயுள் காப்புறுதி ஒப்பந்ததாரர்களுக்கு www.srilankainsurance.com ஊடாக இப்போது விண்ணப்பிக்க முடியும்.

Company Registration Number - PB 289

| ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் ஆயுள் காப்புறுதி ஒப்பந்ததாரர்களின் பிள்ளைகளுக்கு | | |
|---|---|---|
| தரம் 5 புலமைப்பரிசில் | க.பொ.த. சாதாரண தரம் | க.பொ.த. உயர் தரம் |
| வருடாந்தம் ரூ. 20,000 வீதம் 5 வருடங்கள் | வருடாந்தம் ரூ. 40,000 வீதம் 2 வருடங்கள் | வருடாந்தம் ரூ. 50,000 வீதம் 3 வருடங்கள் |

2022 நவம்பர் 30ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.
விண்ணப்பதாரர்களில் தேர்ந்தெடுக்கப்படும் சிறப்பு வெற்றியாளர்களுக்கு சுப பெத்தும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.
மேலதிக தகவல்களுக்கு உங்கள் காப்புறுதி ஆலோசகர் அல்லது 0112 357 357 அழையுங்கள்.

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

SLIC
ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று

# தொழிற்சங்கவாதியாக முத்திரை பதித்த எம்.எஸ். செல்லச்சாமி



ஏழைக்குடும்பத்தில் கடைசிப் பிள்ளையாக பிறந்த எம்.எஸ். செல்லச்சாமி பிறந்தது நவம்பர் 13ந் திகதியாகும். அவர் வறிய குடும்பத்தில் பிறந்து பள்ளிப் படிப்பை இரவு நேரப்பாடசாலையில் தொடங்கினார். பொகவந்தலாவை நகரில். இளைஞர் முன்னணியை தொடக்கி செயற்பட்டு வந்தார், செல்லச்சாமியின் துடுக்கான நடவடிக்கைகளும், சிறப்பான பேச்சு ஆற்றலையும் அறிந்து இ.தொ.காவின் கம்பளை மகாநாட்டில் அவரது நண்பர் அவரை அறிமுகப்படுத்தினார்.

அன்று தொடக்கம் சௌமியமூர்த்தி தொண்டமான் மறையும்வரை அவருக்கு நெருக்கமானவராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தோட்டங்களில் தொழிற்சங்கம் உருவாக்குவதென்பது தோட்ட நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் இருந்த காலம். ஆனால் அவற்றை எல்லாம் எதிர்கொண்டு தனது பயணத்தை மனம் தளராமல் தொடர்ந்தார். மலையக நகரங்களான கொட்டகலை, தலவாக்கலையில் இ.தொ.கா காரியாலயங்களில் கடமையற்றினார், தொடர்ந்து தொழிற்சங்க போராட்டங்களில் தீவிரம் காட்டி இளமை காலத்தில் பம்பரமாக சுழன்றதன் காரணமாக, மக்கள் மத்தியில் பிரசித்தமானவராக விளங்கினார். தோட்டங்களில் நடக்கும் தொழிலாளர்களுக்கெதிரான, பிரச்சினைகளை தீர்த்துவைப்பதில் முன்னின்று செயற்பட்டார். அதன் காரணமாக ஸ்திரமான ஒரு இடத்தை இ.தொ.காவில் பிடித்தார்.

1950ம் ஆண்டு மடக்கும்புரயில் முத்துராக்கம்மாள் என்பவரை திருமணம் செய்துகொண்டார். தொடர்ந்து தலவாக்கலை தலைவராக தெரிவு செய்யப்பட்டார். அதன்பிறகு இ.தொ.காவின் பொதுச் செயலாளராக கட்சி மாநாட்டில் தெரிவானார். மறைந்த சௌமிய மூர்த்தி தொண்டமானின் வலதுகரமாக திகழ்ந்து இ.தொகாவின் தலைமை காரியாலயத்தை வழி நடத்தியவர்களில் இவரும் ஒருவராக விளங்கினார்.

1977ம் ஆண்டு பொதுத்தேர்தலில் கொழும்பில் போட்டியிட முன்வந்தபோது அப்போதைய அரசியல்வாதிகள் இவரை தேர்தலில் போட்டியிட வேண்டாம் என் பயமுறுத்தியபோதும் துணிச்சலாக முன்வந்து தேர்தலில் போட்டியிட்டார். வெற்றி பெறாவிட்டாலும் கணிசமான வாக்குவங்கியை பெற்றுக்கொண்டாம்.

தேர்தலில் தோல்வி கண்டாலும் முழுநேர அரசியல்வாதியாக கொழும்பு நகர்ப்புற மற்றும் வறிய மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் அவ்வப்போது ஏற்பட்டபாதிப்புகளில் இருந்து மக்களை காப்பாற்றினார்.

1983ம் ஆண்டு இனக்கலவரத்தின் போது பாதிக்கப்பட்ட மக்களின் துயர்துடைக்க முழுமூச்சாக செயற்பட்டதால். கொழும்பில் செல்லச்சாமி என்ற பெயர் பிரபல்யமாகி மீண்டும் பாராளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்று போக்குவரத்து பிரதி அமைச்சராக தெரிவானார். கொழும்பு மட்டுமல்லாது நாடுமுழுக்க நடைபெறும் கூட்டங்களில் பங்கேற்றார்.

சௌமியமூர்த்தி தொண்டமானுடன் இந்தியாவின் பிரதமர் இந்திராகாந்தி அம்மையார், காமராஜர், கலைஞர் கருணாநிதி, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ஆகியோருடனான கலந்துரையாடல்களில் பங்கேற்றினார்.

1938ம் ஆண்டின் இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு செல்லச்சாமியின் அளப்பரிய நடவடிக்கைகளால் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

தனது குடும்ப நலனைக்கூட பொருட்படுத்தாது முழுநேர அரசியல், தொழிற்சங்க நடவடிக்கைககளில் பங்கேற்பதிலேயே பெருமளவு நாட்டம் கொண்டவர்.

இலங்கையின் வட கிழக்கில் உள்ள அரசியல் தலைவர்கள் உட்பட பெரும்பான்மை அரசியல்வாதிகளிடமும் நல்ல நட்புடன் பழகி வந்தவர், தனது 93வது வயதில் இயற்கை எய்தினார். நாட்டில் நல்லது நடக்கவேண்டும் என எண்ணி, தனது உடல் பொருள், மக்கள் நலனுக்கே தன்னை அர்ப்பணித்த செல்லசாமியின் புகழ் என்றென்றும் வரலாற்றில் நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

கே.பத்மநாதன்

# மரணிக்கும் வரை அரசியல் செய்தவர்

## முன்னாள் பிரதி அமைச்சர் மர்ஹூம் அப்துல் மஜீதின் 35 வது நினைவு தினம் இன்றாகும்



“தலைவர்களை மறக்கின்ற சமூகம், தலைவர்களை உருவாக்குகின்ற சக்தியினை இழந்து விடுகிறது” என்ற மர்ஹூம் ஏ.ஆர்.எம். அஸீஸின் கருத்தொன்று நினைவிலே நிழலாடுகிறது.

எனவேதான், மரணிக்கும் வரை அரசியல் செய்து வாழ்ந்த மர்ஹூம் ஏ.எல்.ஏ. அப்துல் மஜீதின் வாழ்வினை, கண்ணீர் சிந்தும் அந்த நினைவுகளை மீட்டிப் பார்க்கின்றேன்.

திருகோணமலை மாவட்டத்தில், கிண்ணியா பிரதேசத்தில் 1932.11.13 இல் அப்துல் மஜீது பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியினை கிண்ணியா ஆண்கள் மகா வித்தியாலயத்திலும், மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்திலும், திருகோணமலை இந்துக் கல்லூரியில் உயர் கல்வியினையும் கற்றார். இந்தியாவில் திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியிலும், பூனா இன்டர் மீடியற் கல்லூரியிலும், சென்னை பிரசிடன்சிக் கல்லூரியிலும் கல்வி கற்று மேடைப் பேச்சுக்களிலும், அரசியல் விவகாரங்களிலும் தேர்ச்சி பெற்ற சாணக்கியனாக தமது மண்ணுக்குத் திரும்பினார். அன்றைய தி.மு.க. தலைவர்களான அறிஞர் அண்ணா, கருணாநிதி, நெடுஞ்செழியன் போன்றோரின் தொடர்புகளினால் மஜீதும் தமிழ் மாணிக்கமாக கிண்ணியாவிலே பிரகாசிக்கத் தொடங்கினார். ஆசிரியராக, அதிபராக, ஆரம்பித்த அவரது வாழ்க்கை அதற்குள் முடங்கவில்லை. அரசியலில் உள்ள ஆர்வம் காரணமாக 1960ம் ஆண்டில் அவரது பாதை மாறத் தொடங்கியது. மேற்குறிப்பிட்ட அம்சங்கள் தான், அவரது வாழ்க்கைச் சுருக்கமாகும். ஆனால் 1960ம் ஆண்டின் பின்னர்தான் அவரது துணிச்சல் நிறைந்த அரசியல் வரலாறு உதயமாகின்றது.

1960ம் ஆண்டில், இரண்டு பொதுத் தேர்தல்கள் நம் நாட்டிலே நடைபெற்றன. 1960 ஜூலையில், இரண்டாவது நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஏ.எல்.ஏ. மஜீது வெற்றி பெற்றார். அன்றைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் துணிச்சல் மிக்க தலைவராக இருந்ததால், உலகின் முதற் பெண் பிரதமரான திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க இவருக்கு போக்குவரத்து மராமத்து உதவி அமைச்சர் பதவியினை வழங்கினார், 1960ம் ஆண்டிலிருந்து, பாராளுமன்றப் பிரவேச வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. 1977ம் ஆண்டு வரை பதினேழு வருடங்களாக திருகோணமலை மாவட்டத்தின் ‘ராஜா’ வாக இவர் செயற்பட்டார். சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் குரலாக வாழ்ந்து மறைந்தார், முஸ்லிம் மக்களை விட இவரது மறைவு அந்நிய சகோதரர்களின் கண்களை இன்றும் கசியச் செய்கின்றது. மூதூரிலிருந்து அவர் தோப்பூர் செல்வார். மூதூரின் மூத்த ஆதரவாளர்களைக் கண்டு அவர்களின் இன்னல்களைக் கேட்டறிவார். இருதயபுரத்திலே, கிறிஸ்தவர்களின் பிரச்சினைகளை அணுகுவார், பட்டித்திடலிலே, சின்னத்தம்பியாரின் வீட்டில் மாம்பழம் சாப்பிடுவார், தோப்பூர் சந்தியில் அன்று வாழ்ந்த சிங்கள மக்களோடு அமர்ந்து கதைப்பார். பத்துக் கிலோ மீற்றர் தூரத்திலுள்ள தோப்பூர்க் கிராமம் செல்லும் வரை மூன்று இனங்களின் அன்புப் பாலமாகச் செயற்பட்டார். அவர் மறையும் வரை, எல்லா இனங்களும் இணைந்திருந்த மூதூர் பிரதேசத்தில், இனப்பிரச்சினையே ஏற்படவில்லை. பௌத்தர்களின் ‘பிரித்’ ஓதலும், தேவாலய மணியோசையும், இந்துக் கோயில்களின் தேவாரங்களும், பள்ளிவாசலின் பாங்கோசையும் இணைந்து கேட்டுக் கொண்டேயிருந்தன. அவரால் அன்று வளர்க்கப்பட்ட இன ஐக்கியம், அவரின் வாழ்நாளின் பின்பும் நலிவடையவில்லை.

1960 தொடக்கம் 1970 வரை மர்ஹூம் ஏ.எல்.ஏ அப்துல் மஜீதின் பணிகள் தொடராக நடைபெற்றன. அவரிடம் குவிந்திருந்த திறன்கள் சொல்லில் அடங்காதவை. தமிழ் மொழிப் புலமை, பேச்சாற்றல், தமிழ் சிங்கள சகோதரர்களோடு உள்ள உறவு, ஆங்கில, சிங்கள மொழியாற்றல், தீர்க்க தரிசனமான பார்வை, என்பன இத்தசாப்த காலத்தில் அனைவராலும் இனங்காணப்பட்டன. எதிர்க்கட்சியில் இருந்தாலும், ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினரை விட அதிகமான உத்வேகம், அவரிடம் காணப்பட்டது. டட்லி சேனநாயக்க பிரதமராக இருக்கின்ற பொழுது, ஓதிய ‘அல்ஹம்து சூறா’ இன்னும் பாராளுமன்றப் பதிவேட்டில் உள்ளது.

இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் பொழுது, விடியற் காலையிலேயே விரைந்திடுவார். வெள்ளமேற்பட்டால், முழங்கால் வரை சாறனை மடித்துப் பிடித்துக் கொண்டு அதற்குள் நிற்பார். புயலடித்தால், கடல் மார்க்கமாக தமிழ் சகோதரர்கள் வாழும் சம்பூர் பகுதியில் நிற்பார். இன்னும் எத்தனையோ தமிழ் சகோதரர்கள் அப்துல் மஜீதைப் பற்றி கதை கதையாக சொல்வார்கள். அதனாலேதான் எப்பொழுதும் அவருக்கு ஒரு வாக்கு வங்கி, சம்பூரில் இருந்து கொண்டிருக்கிறது.

1970 தொடக்கம் 1977 வரை இவரது அரசியல், உச்சத்திற்கு சென்றது என்று சொல்லலாம். திருகோணமலை மாவட்டம் மூன்று இனங்களும் ஏறக்குறைய சமமாக வாழும் மாவட்டமாகும். இம்மாவட்டத்தின் அரசியல் அதிகாரியாக இவர் நியமனம் செய்யப்பட்டிருந்தார். தகவல் ஒலிபரப்பு பிரதி அமைச்சராகவும் இவர் தொழிற்பட்டார். அன்றைய பிரதம மந்திரியாக இருந்த ஸ்ரீமாவோ பண்டார நாயக்க இவரது துணிச்சலையும், திறன்களையும் விளங்கி இப் பதவிகளை அன்னாருக்கு வழங்கியிருந்தார். கல்வி வளர்ச்சிக்காக தமிழ், முஸ்லிம், சிங்களப் பாடசாலைகளை உருவாக்கினார். எல்லோருக்கும் சமத்துவமாக மகா வித்தியாலயங்களைக் ஏற்படுத்தினார். தமிழ் முஸ்லிம் பிரதேசங்களில் புதிய குளங்களை உருவாக்கி, அதன் மூலம் விவசாய வளர்ச்சிக்கும் அவர் அளவில்லா பங்களிப்புக்களை நல்கினார். பதவிகளை வழங்குகின்ற பொழுது எல்லோரும் பெறக் கூடிய விதமாக நியமனங்களைப் பிரித்து வழங்கினார். சிறுபான்மை இனங்களின் மீது, தான் ஒரு சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவன் என்ற உணர்வோடு மிகுந்த பாசம் காட்டினார். “சேருவில புனித நகராக்கப்படவேண்டும் என்பது நியாயமானது, ஆனால் அதேபோல கோணேஸ்வரக் கோயில் அமைவிடமும் திருகோணமலை முற்றவெளியப்பா கபுறடி அமைந்துள்ள வலயமும் புனித நகராக்கப் படவேண்டும் " எனக் குரல் எழுப்பினார். இப்பொழுது பார்த்தாலும் அவர் புகழ் பாடிக்கொண்டிருக்கின்ற அரச அலுவலகங்களைக் காணலாம். இவர் பற்றி எழுத, எதை எழுதுவது, எதை விடுவது எனத் தடுமாற்றம் ஏற்படுகின்றது. முஸ்லிம்களுக்காக குடியேற்றத் திட்டங்களை உருவாக்கியதைக் கூறவா.. சொல்லுக் கேட்காத பாதுகாப்பு அதிகாரிகளை பயமுறுத்தியதைக் கூறவா ..ஒரு மஜீது போனால், மூதூர் தொகுதியில் ஒன்பது மஜீதுகள் உருவாகுவார்கள் என்ற 1960 ம் ஆண்டின் கனவு இன்றும் நனவாகியதைச் சொல்லவா. .

இவருடைய அரசியற்காலம் 1977ம் ஆண்டோடு முற்றுப் பெறவில்லை. தேசிய ரீதியாக வீசிய அந்த அரசியற் சூறாவளியில் அப்துல் மஜீது என்ற ஆலமரம் வீழ்ந்தது. ஆனால் அரசியலிலிருந்து அவர் ஓய்வு பெறவில்லை. 1987 ம் ஆண்டு அவர் மரணிக்கும் வரை கோழி, குஞ்சுகளை அணைப்பது போல, அனைத்து ஆதரவாளர்களையும் அணைத்து வந்தார். ஓர் ஆதரவாளன் கூட, மாற்றுக் கட்சிக்குச் செல்லவில்லை.

இவரது மகன் நஜீப்.ஏ. மஜீது மூதூர்ப் பாராளுமன்றப் பிரதிநிதியாகவும், அமைச்சராகவும், கிழக்கு மாகாண முதலமைச்சராகவும் தெரிவு செய்யப்படுவதற்கு மிகப் பிரதானமான காரணி, மரணித்த அவரது தந்தை மர்ஹூம் மஜீது ஆகும்.

1987 நவம்பர் 13ம் திகதி அப்துல் மஜீது கொலை செய்யப்படுகின்றார். இலங்கையில் சுடப்பட்டு இறந்த முதலாவது முஸ்லிம் அரசியல்வாதி இவர்தான்.

ஏக அல்லாஹ் அவரைப் பொருந்திக் கொள்வானாக ..

மேலான சுவர்க்கத்தினை அவருக்கு வழங்கிவிடுவானாக..

ஏ. நஜிமுதீன் SLEAS மூதூர்.

# சீனன்கோட்டை அல் ஸலாஹ் மத்ரஸாவில் இன்று முப்பெரும் விழா

## பிரதம பேச்சாளராக நளீமிய்யா முதல்வர் பங்கேற்பு

**அஜ்வாத் பாஸி**




20வது வருடத்தில் காலடியெடுத்து வைத்துள்ள பேருவளை, சீனன்கோட்டை அல் ஸலாஹ் அரபுக்கல்லூரியின் முப்பெரும் விழா இன்று 13ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 3.30 மணி முதல் இரவு 9.00 மணிவரை மத்ரஸா வளாகத்தில் வெகு விமர்சையாக நடைபெறவுள்ளது.

மத்ரஸாவின் நிர்வாக சபைத்தலைவர் எம்.எஸ்.எம். ரஸ்வி தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் மத்ரஸாவிலிருந்து வெளியேறிய அல்ஹாபிழ், அல்ஆலிம் மாணவர்களின் பட்டமளிப்பு மற்றும் பகுதி நேர வகுப்புகளில் குர்ஆனை மனனம் செய்த மாணவர்கள் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்நிகழ்வில் பிரதம பேச்சாளராக ஜாமியா நளீமிய்யா கலாபீட முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத் (நளீமி) கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். மேலும் சீனன் கோட்டை பள்ளிச்சங்கத்தலைவர் முக்தார் ஹாஜியார், மத்ரஸாக்களின் உலமாக்கள், அதிபர்கள், புத்திஜீவிகள், பள்ளிவாசல்களின் நிர்வாக சபை உறுப்பினர்கள், ஊர் பிரமுகர்கள், பெற்றோர்கள் உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளதாக விழா ஏற்பாட்டாளர்கள் சார்பில் ஹிதாம் அலி வாரமஞ்சரிக்கு தெரிவித்தார். பெண்களுக்கும் இந்நிகழ்வை கண்டுகளிப்பதற்கு பிரத்தியேக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



பிரபல ஓவியர் எஸ்.எச். சரத் ஓவியத்துறையில் ஈடுபட்டு 50 ஆண்டுகள் பூர்த்தியடைந்ததைக் கொண்டாடும் முகமான ஓவியக் கண்காட்சி இம்மாதம் 18ஆம் திகதி முதல் 21 ஆம்திகதி கொழும்பு லயனல் வென்ட் கலையரங்கில் நடைபெறவுள்ளது. 18ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு இக்கண்காட்சி ஆரம்பமாகும். 19 முதல் 21ஆம் திகதி வரை காலை 10 மணிமுதல் பி.ப 7.30 வரை கண்காட்சி நடைபெறும்.



# அரசியல் அரங்கம்

அர்ஜுன்

**ஜனநாயக ரீதியில் அதிகாரத்தை உறுதிப்படுத்த முடியாத சில குழுக்கள் கைகோர்த்துக் கொண்டு நாட்டைச் சீர்குலைக்க பல்வேறு ஜனநாயகவிரோத நகர்வுகளை மேற்கொள்வது மிகவும் தெளிவாக தெரிகிறது. அரசியல் வேறுபாடுகளை ஒருபுறம் வைத்துவிட்டு நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் கைகோர்க்க வேண்டும் என ஆளும் கட்சியின் பிரதம கொரடாவும், அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். தற்போதைய அரசியல் நிலைவரங்கள் குறித்து அமைச்சர் எம்முடன் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டார்.**



# நாட்டை சீர்குலைக்க ஜனநாயக விரோத குழுக்கள் முயற்சி!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுடன் சந்திப்பு

**கே: ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தனது தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்துள்ளது. இருந்தபோதும் இந்தப் பிரசாரங்களுடன் உடன்படவில்லையென நீங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கூறியிருந்தீர்கள். இது பற்றிய விளக்கம் என்ன?**

பதில்: கடந்த மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற தொடர் கலவர சம்பவங்களையடுத்து எமது கட்சியின் செயற்பாட்டாளர்கள் 10 இற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர். நாடு முழுவதும் 680 இற்கும் மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. தாக்குதலில் ஈடுபட்ட அந்தக் குழுவினர் முதலில் தங்கள் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். மக்கள் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கும் சூழ்நிலையை உருவாக்குவதாயின், முதலில் நாம் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்கு தீர்வை வழங்க வேண்டும்.

நாடு முழுவதும் கூட்டங்களை நடத்துவதால் மக்கள் எங்களுடன் கைகோர்க்க மாட்டார்கள். ஆகக் குறைந்தது சொத்துக்களை இழந்தவர்களுக்கு இழப்பீடுகளை வழங்க வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு குறைந்த பட்சம் நஷ்டஈட்டையாவது வழங்குமாறும், அடுத்த தேர்தலை எதிர்கொள்ளும் வரை எமது நிறுவனத்திறனை வலுப்படுத்துவதற்காக கிராம மட்டத்தில் பொறிமுறையொன்றை ஆரம்பிக்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

**கே: நாளை தேர்தல் நடத்தப்பட்டாலும், பொதுஜன பெரமுனவின் வெற்றி உறுதி என்று நீங்கள் கூறியிருந்தீர்கள் அல்லவா?**

பதில்: தற்போதுள்ள சூழ்நிலையில் எந்தக் கட்சியாலும் வெற்றி பெறவோ, ஆட்சியைப் பிடிக்கவோ முடியாது என்பதை நான் உணர்ந்து கொண்டுள்ளேன். நான் கூறுவது என்னவெனில், எதிர்காலத் தேர்தலில் போட்டியிட்டால், மற்றைய எல்லாக் கட்சிகளையும் விட, இன்னும் சில பாராளுமன்ற உறுப்பினர்களையாவது எம்மால் பெற்றுக் கொள்ள முடியும் என்பதேயாகும். 2019 மற்றும் 2020 இல் நாங்கள் வெற்றி பெற்றது போல் தனியொரு கட்சி மட்டும் கூட்டணிக்கு செல்லாமல் ஆட்சி அமைக்கும் நிலைமை தற்பொழுது இல்லை. எவ்வாறாயினும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினால் நிச்சயமாக ஏனைய கட்சிகளை விட குறைந்தபட்சம் ஒரு பாராளுமன்ற உறுப்பினரையாவது பெற்றுக் கொள்ள முடியும்.

**கே: பொதுஜன பெரமுனவின் அரசியல் செயற்பாடுகளைத் தொடர்வதற்கு தலைமைத்துவ சபையொன்று நியமிக்கப்பட வேண்டும் என நீங்கள் முன்மொழிந்திருந்தீர்கள். இது பற்றி நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?**

பதில்: இளைஞர்கள் மற்றும் அனைத்து அனுபவமிக்க அரசியல்வாதிகளையும் ஒன்றிணைத்து கட்சியின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு தலைமைத்துவ சபையொன்றை நியமிக்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நான் அழைப்பு விடுக்கிறேன். அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷவும் அங்கு இருக்கிறார். அவர் இந்த நாட்களில் வெளிநாட்டில் இருக்கிறார். இப்படியான ஒரு தலைமைக்குழுவை உருவாக்க அவரின் ஆலோசனைகளையும் உதவிகளையும் பெறலாம்.

**கே: கடந்த சில நாட்களுக்கு முன்னர் கொழும்பில் சில அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புகள் அரசுக்கு எதிரான போராட்டமொன்றை நடத்தியிருந்தன. இதனை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்: ஜனநாயக ரீதியில் அதிகாரத்தை உறுதிப்படுத்த முடியாத சில குழுக்கள் கைகோர்த்து நாட்டை சீர்குலைக்க பல்வேறு ஜனநாயக விரோத நகர்வுகளை மேற்கொள்வது மிகவும் தெளிவாக தெரிகிறது. தற்போது, நாடு முன்பு இருந்த நெருக்கடியிலிருந்து இயல்பு நிலைக்குத் திரும்பி வருகிறது. பெட்ரோல், டீசல், எரிவாயு போன்றவையும் தட்டுப்பாடின்றி கிடைக்கும் அதேவேளையில் சில பொருட்களின் விலைகள் குறைந்து வருகின்றன.

சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அதிகரித்துள்ளது. இது நேரடியாக நமது டொலர் கையிருப்பை அதிகரிக்க உதவும். சுற்றுலாப் பயணிகளின் வருகை கடந்த மாதத்தை விட கணிசமான அளவு அதிகரித்துள்ள நிலையில், உள்நோக்கம் கொண்ட சில பிரிவினர் அதை நாசப்படுத்த இந்த மாதம் தங்கள் எதிர்ப்புப் பிரசாரங்களைத் தொடங்கியுள்ளனர்.

## சுற்றுலாப் பயணிகளின் வருகையைத் தடுக்க விஷமப் பிரசாரங்கள்!

பொதுமக்கள் போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும் போது, எந்தவொரு சுற்றுலாப் பயணியும் அத்தகைய நாட்டுக்குச் செல்ல ஆர்வம் காட்ட மாட்டார்கள். எனவே, சில பிரிவினர் வேண்டுமென்றே நாட்டை அத்தகைய நிலைக்கு மாற்ற முயற்சிக்கின்றனர். அதைத்தான் அவர்கள் இப்போது செய்ய முயற்சிக்கின்றனர்.

**கே: பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் செயற்பாட்டை சுதந்திரக் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விமர்சித்துள்ளார். உங்கள் கருத்துக்களை விரிவாகக் கூற விரும்புகிறீர்களா?**


பதில்: உண்மையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டோர் நாட்டை அழிப்பதில் முக்கிய பங்காற்றினர். குடும்ப அரசியலை கடுமையாக விமர்சித்த மைத்திரிபால சிறிசேன, தற்போது தனது மகனை அரசியலுக்கு கொண்டு வந்து சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்த முயற்சிக்கிறார். சுதந்திரக் கட்சிக்குள்ளும் இதற்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. எனினும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா கூறுவதை நாட்டு மக்கள் பெரிதாகக் கருதவில்லை.

**கே: ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாக அரசாங்கத்தில் இருந்து விலகிய உறுப்பினர்களும், ஏனைய எதிர்க்கட்சி உறுப்பினர்களும் கூறி வருகின்றனர். இதனை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்: உண்மையில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில மற்றும் வாசுதேவ நாணயக்கார போன்றவர்கள் கட்சியில் பிளவு ஏற்பட்டதால் கட்சியில் இருந்து விலகினர். சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்பட்டுள்ள நிலையில், அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு இன்னும் எம்முடன் இருக்கின்றது. இதற்கு அரசாங்கத்தில் பிளவு ஏற்பட்டுள்ளது என்பதுதான் காரணம். கட்சியில் இருந்து விலகியவர்கள் உட்பட அனைவரும் மீண்டும் ஒன்றுசேர வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கிறேன். அப்போதுதான் எதிர்கால தேர்தல்களில் வெற்றி பெற முடியும்.



> 'அரசியல் வேறுபாடுகளை ஒதுக்கி வைத்து விட்டு நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் கைகோர்க்க வேண்டும்!'



மலரும் யுகத்திற்கு புதியதோர் வடிவம்

மிலிந்த மொரகொட

# மக்களிடையே நட்பை உருவாக்கும் பாதயாத்திரையே நாட்டுக்கு அவசியம்

தேர்தல் நடத்துவது ஜனநாயகமாகும். பொதுமக்களின் பிரதிநிதிகளை தெரிவு செய்வதோடு, அதிகளவு பிரதிநிதிகளைக் கொண்டுள்ள கட்சிக்கு அரசியல் அதிகாரம் கிடைக்கும். இந்தியாவில் எட்டு வருடங்களாக பிரதமர் பதவியை வகித்து வருகின்ற நரேந்திர மோடியை அதிகாரத்திலிருந்து வெளியேற்றி ஆட்சியைக் கைப்பற்றுவதே அங்குள்ள எதிரணிக் கட்சிகளின் இலக்காக உள்ளது. இந்தியாவில் தற்போது ஆட்சி செய்து வரும் தேசிய ஜனநாயக கூட்டமைப்பு பாரிய கூட்டணியாகும். பாரதீய ஜனதா கட்சி அதன் பிரதான சக்தியாகும்.

பிரதான எதிர்க்கட்சியாக 'யுனைட்டெட் ப்ரோகிரெஸ்வ்' கூட்டமைப்பு விளங்குகின்றது. அதில் இந்திய தேசிய காங்கிரஸ் முக்கிய இடத்தை வகிக்கின்றது. தேசிய காங்கிரஸ் அடுத்த தேர்தலை இலக்காகக் கொண்டு பாரிய பாதயாத்திரையொன்றை ஏற்பாடு செய்துள்ளது. கடந்த ஓகஸ்ட் 28ஆம் திகதி தமிழ்நாட்டின் கன்னியாகுமரி நகரில் ஆரம்பமான பாதயாத்திரை 3,570 கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்டதாகும். அப்பாதயாத்திரைக்கு 150 நாட்கள் எடுக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. பயணத்தின் முடிவு ஜம்மு காஷ்மீர் பிராந்தியத்தின் தலைநகரான ஸ்ரீநகர் ஆகும்.

15 பிராந்தியங்கள் இணைந்ததாக இப்பாதயாத்திரை மூலம் காங்கிரஸ் தனது கட்சியின் பலத்தைக் காட்டுவதற்காக ஏற்பாடு செய்துள்ள இப்பாதயாத்திரையில் பல இடைபாதை யாத்திரைகளும் இணைந்து கொள்ளவுள்ளன. தமிழ்நாடு, கேரளா, கர்நாடகம், மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம் உள்ளிட்ட பல பிராந்தியங்களிலும் 10 உபஅமைப்புகளுக்கு மேல் அமைக்கப்பட்டு சிறப்பாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்திய அரசாங்கத்தின் ஆட்சிக்காலம் 2024 மே 16ஆம் திகதி முடிவடையவுள்ளது. ஏப்ரல் அல்லது மே மாதமளவில் தேர்தல் ஒன்றை நடத்த வேண்டியுள்ளது. ஜனநாயக ஆட்சி முறை காணப்படும் நாடுகளிடையே ஒரேநேரத்தில் பெருந்தொகையான மக்கள் வாக்குகளை பயன்படுத்தும் சந்தர்ப்பம் இந்திய தேர்தலில் காணப்படுகின்றது. தேர்தல் ஆணைக்குழு தேர்தலை நடத்துகின்றது. தேர்தலை கண்காணிக்க சர்வதேச சமூகத்துக்கு இடமளிக்கப்பட்டுள்ளது.

இந்திய லோக்சபாவில் 543 உறுப்பினர்கள் தேர்தல் மூலம் நியமிக்கப்படுகின்றார்கள்.104 ஆவது திருத்தத்தின்படி கலப்பு இந்தியர்களுக்காக பாராளுமன்றத்தில் இரண்டு ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

பாரிய, நீண்ட பாதையாத்திரையின் முடிவில் இந்தியர்களின் மனதில் மீண்டும் காங்கிரஸின் சக்தி உறுதி செய்யப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் எதிர்பார்க்கின்றார்கள். பல பிராந்தியங்களின் தேர்தல்கள் அண்மையில் நடைபெற்றதோடு, அங்கு மீண்டும் தமது பலத்தை பாரதீய ஜனதா கட்சி தலைவர் பிரதமர் மோடி உறுதி செய்துள்ளார். உத்தரப் பிரதேச முதலமைச்சர் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், அவ்வெற்றி பிரதமர் மோடியின் வழிகாட்டலிலேயே நடந்தது எனக் கூறப்படுகின்றது.

காங்கிரஸ் கட்சியும் பாரதீய ஜனதா கட்சியும் எதிர்வரும் தேர்தலுக்காக முன்னணிகளை அமைத்து வருவதோடு, அதில் பாரதீய ஜனதா கட்சி மேற்கொண்டு வரும் இந்துத்துவ மதக் கொள்கைகள் குறிப்பிடத்தக்க அம்சமாகும். உலகில் மிகப்பெரிய இந்து ஆலயமாக ராம் மந்திரை அமைப்பது அதில் ஒரு அம்சமாகும்.

காங்கிரஸ் கட்சியின் முக்கிய பாத்திரமான டில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அண்மையில் இந்தியப் பிரதமருக்கு சவால் ஒன்றை விடுத்ததோடு, இந்திய பணநோட்டுகளில் இலட்சுமி மற்றும் விநாயகரின் உருவங்களை உள்ளடக்குமாறு யோசனைகளைத் தெரிவித்தார். நடைப்பயணத்தின் போது பொதுமக்களிடையே தெரிவித்த அந்த யோசனைக்கு பாரிய அளவில் பிரதிபலிப்பு கிடைத்துள்ளது.

ஆசிய அரசியலில் அதிகளவு ஒற்றுமைகள் உள்ளன. இலங்கையின் தன்மையும் எவ்விதத்திலும் இதற்கு விதிவிலக்கல்ல. அரசியல்வாதிகளுக்கு அதிகாரம் இல்லாமல் இருப்பு இல்லை. அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்ட நாளிலிருந்து எதிர்க்கட்சி அரசாங்கத்தை கவிழ்த்து மீண்டும் ஆட்சிக்கு வர தயாராகின்றது. அரசாங்கம் எதிர்க்கட்சியின் பலத்தைப் பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. அரசாங்கமும் எதிர்க்கட்சியும் மேற்கொள்ளும் இந்தப் போராட்டத்தின் இடையில் சிக்கிக் கொள்ளும் மக்கள் பாதிப்புக்குள்ளாகின்றார்கள்.

எதிர்காலத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள், மாகாண சபைத் தேர்தலுடன் பொதுத்தேர்தலும் நடத்தப்படுவதற்கு இடமுள்ளது. இந்தத் தேர்தலை இலக்காகக் கொண்டு மீண்டும் அரசியல்வாதிகள் ஏற்பாடுகளை செய்து வருகிறார்கள். வாக்குகளை கேட்டு கிராமத்துக்கு வர வேண்டாம் என்று கூறப்படுகின்ற பொழுதும், மீண்டும் மீண்டும் முயற்சி செய்யும் அரசியல் கட்சிகள் பலப்பரீட்சையில் ஈடுபடுகின்றன. நாட்டுக்குத் தேவை கட்சி அரசியல் மற்றும் அதனுடன் இணைந்ததான கொள்கைகளுமாகும். குறுகிய கருத்துகளுடன் தொடர்ந்து பயணிக்க முடியாது. முதலீடுகள் அவசியமாகும். மக்களின் பலத்தை ஒன்றுபடுத்த வேண்டும். பிரிந்த அணியினரை ஒன்று சேர்க்க வேண்டும். கட்சி, நிறம், மதம், இனம் மற்றும் குலம் என பிரிந்துள்ள சமூகத்தை இணைக்கும் நடவடிக்கைக்குச் செல்ல வேண்டும். எமக்கும் பாதயாத்திரை அவசியமாகும். ஆனால் அது மக்களின் உள்ளங்களிடையே நட்பை ஏற்படுத்தும், நம்பிக்கையை உருவாக்கும் பயணமாக அமைய வேண்டும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

# இருநூறு வருடங்கள் கடந்தாலும் அங்கீகாரம் கிடைக்கவில்லை

## கல்வி இராஜாங்க அமைச்சர் ஆதங்கம்

மாவத்தகம தினகரன் நிருபர்

மலையகத்தைப் பொறுத்தவரையில் நாங்கள் 200 வருடங்கள் வாழ்ந்தாலும் அதற்கான அங்கீகாரம் கிடைக்கவில்லை என்ற ஆதங்கம் இருக்கின்றது. நாட்டிற்கு அந்நிய செலவாணியை ஈட்டுக் கொடுப்பதில் பெரும் பங்கை வகித்தாலும் அதற்கான அங்கீகாரம் கிடைக்கவில்லை என்பது பொது விடயமும் உண்மையும் கூட என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

கண்டி ரஜவெல இந்து தேசிய கல்லூரியின் பரிசளிப்பு விழா பல்லேகலையில் அமைந்துள்ள மத்திய மாகாண சபையின் பிரதான கேட்போர் கூடத்தில் அதிபர் எம். கோகிலேஸ்வரி தலைமையில் நடைபெற்றது இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து பேசிய அவர்,...



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மலையக மக்களின் உயர்வுக்காகவும் அவர்களை தேசிய நீரோட்டத்தில் இணைத்துக் கொள்வதற்காகவும் ஒரு குழுவை அமைப்பதற்கு தீர்மானித்துள்ளார். அந்தக் குழுவுக்குள் யார் யார் வர வேண்டும் என்று சிபாரிசு செய்யும்படி எம்மிடமும் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

இதற்கான குழுக்கள் அமைப்பதற்கு அவசியம் கிடையாது. எங்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த நாட்டில் காணப்படும் பாரபட்சம் என்ற ஒரு விடயத்தை மட்டும் அகற்றுங்கள். மலையக மக்களின் பிரச்சினைகள் இயல்பாகவே தீர்ந்து விடும்.

எந்த விடயத்தை எடுத்துக் கொண்டாலும் பாரபட்சம், மாற்றாந்தாய் மன்பான்மையுடனான செயற்பாடு எமது சமூகத்தின் தலைவிதியாக இருந்து கொண்டிருக்கிறது,

இந்தப் பாரட்சமும் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் கூடிய செயற்பாடும் நீக்கப்பட்டால் போதும் நாங்கள் ஏனையவர்களுக்கு நிகரானவர்கள் அல்லது ஏனையவர்களுக்கு ஒரு படி மேலானவர்கள் என்ற அந்தஸ்தை பெற முடியும்.ஒவ்வொரு மலையக பிரஜையும் பாரபட்சம் என்ற நிலைக்கு முகம் கொடுத்தவர்களாகவே உள்ளனர்.

நாம் 200 வருடங்களை கடந்து நிற்கின்றோம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக எமது சமூத்திலிருந்து இதுவரை ஒன்பது பேராசிரியர்கள் உருவாக்கப் பட்டுள்ளார்கள் என்பதுதான் ஒரு கவலைக்குரிய விடயம். வெறுமனே இதுவரைக்கும் ஒன்பது பேராசிரியர்கள் மட்டுமே உருவாக்கப்பட்டுள்ளார்கள்.

நாங்கள் எவரோடும் போட்டி போடக் கூடிய தன்மையைக் கொண்டவர்கள். ஆகவே வாய்ப்பு இல்லாத ஒரு நிலைமை. எமக்கு கிடைக்க வேண்டியவை கிடைக்கப் பெறாமை என்ற ஒரு நிலைமை.இது மாத்திரமே எமது முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கின்றது. இதைப் மாற்ற முயற்சி செய்வோம்.

நிகழ்வில் முன்னாள் மத்திய மாகாண சபைத் தலைவர் துரை மதியுகராஜா, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர், பிரஜா சக்தி நிறுவனத்தின் பணிப்பாளர் பாரத் அருள்சாமி, மத்திய மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் விக்கினேஸ்வரன், பரீட்சைத் திணைக்கள உதவி ஆணையாளர் விஸ்வநாதன், தமிழ் வர்த்தக சங்கத் தலைவர் அன்பழகன் என பலர் கலந்து கொண்டனர்.

# சம்பந்தனுக்கு 'ஜனநாயகப் பொன் விருது'; இ.தொ.கா உறுப்பினர்கள் நேரில் வாழ்த்து



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான இரா.சம்பந்தனுக்கு 'ஜனநாயகப் பொன் விருது' வழங்கப்பட்டுள்ளமைக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் செந்தில் தொண்டமான், பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், போசகர் சிவராஜா,பிரதி தலைவி அனுசியா சிவராஜா, சிரேஷ்ட சட்ட ஆலோசகர் மாரிமுத்து ஆகியோர் நேரில் சென்று வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

இரா.சம்பந்தன் ஆற்றிய சேவைகளுக்காக இவ்விருது பல வருடங்களுக்கு முன்னதாக கிடைத்திருக்க வேண்டியது என்றும், இவ்விருதானது தங்களுடைய அளப்பரிய சேவையை எடுத்துக் காட்டுகிறது எனவும் இவ்விருது கிடைத்தமைக்கு முழு மலையக மக்கள் சார்பாகவும் வாழ்த்துக்களை தெரிவிப்பதாக இ.தொ.கா தெரிவித்துள்ளது.

இரா.சம்பந்தன் இ.தொ.காவின் வாழ்த்துக்களுக்கு தனது நன்றிகளை தெரிவித்ததுடன், தனக்கும் மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானுக்குமிடையிலான நட்புறவையும் நினைவுப்படுத்தியுள்ளார்.

அத்துடன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மலையக சமூக மேம்பாட்டிற்காக தொடர்ந்தும் வெற்றிகரமான பணிகளை முன்னெடுக்க வேண்டும் என இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

# யாழில் சீரற்ற காலநிலையால் 733 பேர் பாதிப்பு

யாழ். மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக 221 குடும்பங்களைச் சேர்ந்த 733 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் டி.என்.சூரியராஜா தெரிவித்ததுள்ளார்.

அத்துடன், ஒரு வீடு பகுதிகளவில் சேதமடைந்துள்ளதாகவும், 14 குடும்பங்களை சேர்ந்த 46 பேர் நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவில் 174 குடும்பங்களைச் சேர்ந்த 584 பேரும், யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவில் 25 குடும்பங்களைச் சேர்ந்த 80 பேரும், மருதங்கேணி பிரதேச செயலகப் பிரிவில் 21 குடும்பங்களைச் சேர்ந்த 62 பேரும், கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 7 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# தரம் ஒன்றிலிருந்து மாணவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்த திட்டம்

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

தரம் ஒன்றில் இருந்து மாணவர்கள் ஆங்கிலத்தில் உரையாடுவதை அதிகரிக்க 2023ஆம் ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இதற்கமைய அனைத்து மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அரச பாடசாலைகளின் 01/02 ஆம் தரங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 13,500 ஆசிரியர்களை நவம்பர் 18 மற்றும் 19 ஆம் திகதிகளில் பயிற்றுவிப்பாளர்களாகப் பயிற்சியளிக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். எதிர்கால தேவையை கருத்தில் கொண்டு பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கில மொழியைக் கற்பிப்பதற்கு முன்னுரிமை வழங்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார விடுத்த கோரிக்கைக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார். ஆங்கில மொழி மூலப் பாடப்புத்தகங்களில் உள்ள இலக்கணப் பிழைகள் இங்கு கவனம் செலுத்தப்பட்டதுடன், அவ்வாறான இலக்கணப் பிழைகள் உள்ளதா என்பதைக் கண்டறியுமாறு தேசிய கல்வி நிறுவகத்துக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்தார். அத்துடன் இலங்கையிலுள்ள தமிழ் மொழிமூலப் பாடசாலைகளில் உள்ள பிள்ளைகள் விரும்பினால் சிங்கள மொழிமூலத்தில் கல்வி கற்க சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும் இங்கு பரிசீலிக்கப்பட்டது.

## இரா.சம்பந்தனுக்கு 'ஜனநாயக

அரசியல் பிரமுகர்களின் மதிப்பீடு நடத்தப்படுகின்றது. அதற்கமைய, இரா.சம்பந்தன் வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே கிடைக்கும் ஜனநாயகப் பொன் விருதைப் பெற்றார். நான்கு தசாப்த கால பாராளுமன்ற வாழ்க்கையில் ஜனநாயகத்துக்காக தமிழ் மக்களின் தலைவராக இரா. சம்பந்தன் காட்டிய அர்ப்பணிப்பை மதிப்பிட்டே இந்த விருது வழங்கப்பட்டது.1933 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 05 ஆம் திகதி பிறந்த இரா. சம்பந்தன், தற்போது 83 அகவையிலுள்ளார்.

## பெருந்தோட்டத்துறை "நலிவுற்ற...

படர்ந்துள்ள பெருந்தோட்டத் துறை குடியிருப்புக்களை "நலிவுற்ற" பிரிவாக அறிவித்து, அதற்கான விசேட ஒதுக்கீட்டு அபிவிருத்தி திட்டங்கள் அமுல்படுத்த வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மனோ கணேசன் அவசர கடிதமொன்றை எழுதியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான விசேட வாழ்வாதார உதவிகளை இலங்கை அரசுக்கு வழங்கி உதவுமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கும் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகரூடாக கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட துறையின் நிலைமை மோசமடைந்து பட்டினிச் சாவு ஏற்படுவதற்கு முன் இனியும் தாமதிக்காமல் இந்நடவடிக்கை அவசர நிலையாக கருதி முன்னெடுக்கப்பட வேண்டுமென்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மனோ கணேசன் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் "வறுமை" பற்றிய கணக்கெடுப்பு அறிக்கையில் உலக வங்கி, இலங்கையின் தேசிய வறுமை மட்டம் 26 விகிதமாக உயர்ந்துள்ள வேளையில் பெருந்தோட்ட துறையில் வறுமை 53 விகிதமாக அதீதமாக உயர்ந்திருக்கிறது. அதேவேளை ஐநா உலக உணவு நிறுவனத்தின் இலங்கை பற்றிய அறிக்கையில் "உணவின்மை", நகர துறையில் 43% என்றும், கிராமிய துறையில் 34% என்றும், பெருந்தோட்ட துறையில் 51% என்றும் கூறுகிறது.

நாட்டில் இன்று நிலவும் கடுமையான பொருளாதார நெருக்கடியினால் ஏற்பட்டுள்ள, உணவின்மை பிரச்சினையால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள இந்திய வம்சாவளி மலையக பெருந்தோட்ட மக்களுக்கு விசேட உதவிகளை வழங்க இந்திய மத்திய அரசும், தமிழக மாநில அரசும் முன்வர வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## சுயாதீன ஆணைக்குழுக்கள்...

அமைக்கப்படுவது தாமதமாவது ஒருபுறமிருக்க ஐக்கிய மக்க சக்தி பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையிலான பொருளாதார நிலைப்படுத்தலுக்கான குறுகிய மற்றும் நடுத்தர வேலைத் திட்டங்களுக்குரிய (Waste and means) நியமனங்களையும் வழங்குவதற்கும் எதிர்க்கட்சித் தலைவரிடமிருந்து இணக்கம் இதுவரை கிடைக்கவில்லையென்றே தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் தலைமையிலான வேலைத்திட்டத்துக்குக் கூட எதிர்க்கட்சித் தலைவர் இதுவரை இணக்கம் தெரிவிக்காமையால் ஐக்கிய மக்கள் சக்கிக்குள் முரண்பாடுகள் மேலும் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## நிதிக் கட்டமைப்பை வலுப்படுத்த...

மறுசீரமைப்பு மற்றும் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதற்காக உலக வங்கி மற்றும் நாணய நிதியத்தின் தலைவர்கள் இலங்கை வந்திருந்தனர்.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேண்டுகோளுக்கிணங்க, இந்தக் குழு கடந்த காலங்களில் இலங்கைக்கு வந்து பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தது.

அதன் பிரதிபலனாகவே இலங்கையின் நிதிக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கு 13 அம்சங்களின் கீழ் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன.

கடன் மறுசீரமைப்பு தொடர்பான தொழில்நுட்ப ஆதரவு மற்றும் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை வழங்குவதாகவும் ஜனாதிபதியின் தலைமை அதிகாரியின் முன்னிலையில் அவர்கள் உறுதியளித்துள்ளனர்.

மேலும், இந்நாட்டில் நிதி முகாமைத்துவத்துக்கான பல விடயங்ககளுக்கும் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அவர்கள் தமது இணக்கப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர்.

## சிவப்பு சீனி இறக்குமதிக்கு ...

இதனையடுத்தே வர்த்தக அமைச்சு நிதி அமைச்சிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது. தற்போது மொனராகலை மாவட்டத்திலுள்ள பெலவத்தை, எம்பிலிபிட்டிய விலுள்ள செவனகல, கல்லோயா மற்றும் ஹிங்குரான தொழிற்சாலைகளில் சிவப்பு சீனி உற்பத்தி செய்யப்படுகிறது.

ஆண்டுதோறும் எண்பதாயிரம் மெற்றுக்தொன் சிவப்பு சீனி உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற போதும் உள்நாட்டுத் தேவைக்கு அது போதுமானதாக இல்லை.

அதேவேளை நுகர்வோர் வெ ள்ளைச் சீனியை விட சிவப்பு சீனியின் மேல் அதிக நாட்டம் கொண்டுள்ளதால் சந்தைக்கு வரும் சிவப்பு சீனி போதுமானதாக இல்லையென்பதாலேயே வர்த்தக அமைச்சு சிவப்பு சீனியை இறக்குமதி செய்ய தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## போட்டித்தன்மையுடன் கூடிய...

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (11) நடைபெற்ற சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான பட்டமளிப்பு விழாவில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

ஆயுதப் படைகள் மற்றும் 2030 பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் ஏன் இவ்வளவு கவனம் செலுத்துகிறதென சிலர் கேள்வி எழுப்பலாம், ஆனால் அவ்வாறு செய்யாவிட்டால் நாட்டுக்கு எதிர்காலம் இல்லையென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

"நாம் பிறந்த காலத்தில் போலன்றி தற்போது வேறுபட்டதொரு உலகில் வாழ்கின்றோம். நாம் பிறந்த போது இந்து சமுத்திரத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை. அப்போது இந்து சமுத்திரம் தொடர்பில் எவரும் கவனம் செலுத்தவில்லை." எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கப்பல் போக்குவரத்தை சுதந்திரமாக மேற்கொள்ள முடியாவிட்டால் ஏற்றுமதி பொருளாதாரத்தின் நோக்கங்களை பூர்த்தி செய்ய முடியாதென தெரிவித்த ஜனாதிபதி, பொருட்களைக் கொண்டு செல்வதில் தடைகள் ஏற்பட்டால் என்ன நடக்கும் என்றும் கேள்வி எழுப்பினார்.

2021 ஆம் ஆண்டு மக்கள் நாட்டை விட்டு வெளியேற முடியாமல் போனதையும், தரை அல்லது கடல் வழியாக பொருட்களை கொண்டு செல்ல முடியாத நிலை தோன்றிய அனுபவத்தை நினைவு கூர்ந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாம் இருக்கும் சூழல் எங்கள் கட்டுப்பாட்டில் இல்லாமல் போனாலும், பொருட்களை கொண்டு செல்லும் திறனிலேயே நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளதென்றும் சுட்டிக் காட்டினார்.

ஏனைய தரப்பினரின் செயற்பாடுகள் இலங்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தலாம் எனினும் அதன்போது, அரசியல் மற்றும் இராஜதந்திர திறன்களைப் போன்று இராணுவத் திறன்களையும் நாம் பயன்படுத்தி எமது குடிவரவு உரிமைகள் மற்றும் தரை மற்றும் கடல் மார்க்கமாக பயணிப்பதற்கான எமது உரிமைகள் என்பன எவ்வகையிலும் தடைபடாத வகையில் நாம் கவனமாக இருக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் வலியுறுத்தினார்.

## டீசல் அதிகரிப்பையடுத்து...

நேற்று நள்ளிவு முதல் 15 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது.அதன்படி, ஒரு லீற்றர் டீசலின் விலை 415 ரூபாவிலிருந்து 430 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

## டீசல், மண்ணெண்ணெய்...

அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி தற்போது 415 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்த ஒரு லீற்றர் டீசல் நேற்று நள்ளிரவு முதல் 430 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 340 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுவந்த ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் நேற்று நள்ளிரவு முதல் 365 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரிப்பையடுத்து இந்த திருத்தம் செய்யப்படுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் சமையல் எரிவாயுவும் 80 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சூரியவெவ குளத்தில் மூழ்கி...

குளத்தின் மத்திக்கு சென்றபோது தோணி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் மூன்று சிறுமிகள் காணாமல் போயுள்ளனர். தோணியில் 08 பேர் இருந்ததாகவும் எட்டு மாத கைக் குழந்தை உட்பட ஐந்து பேர் பிரதேசவாசிகளால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

10 முதல் 18 வயதுக்குட்பட்ட சிறுமிகளே காணாமல் போயுள்ளனர் என்றும் அவர்களை தேடும் பணியை கடற்படையினர் மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

தோணியில் பயணித்தவர்கள் குருணாகல் பகுதியைச் சேர்ந்தவர்களென்றும் சூரியவெவ பகுதியில் தங்களது உறவினர் வீட்டில் நடைபெறும் நிகழ்வொன்றில் கலந்து கொள்வதற்காக வந்தவர்களென்றும் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

விடுமுறைக்காக தங்களது பிரதேசத்திலிருந்து வேறு பிரதேசத்துக்கு வருபவர்கள் ஆற்றிலோ குளங்களிலோ கடலிலோ நீராடச் செல்வதை தவிர்த்துக் கொள்ளுமறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## இலங்கையை அபிவிருத்தியடைந்த...

விசேட போஷாக்கு நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியுடன் வறுமை நிலை அதிகரிக்க ஆரம்பித்துள்ளதால், குழந்தைகளின் போஷாக்கு நிலையை பாதுகாக்கும் வகையில் இவ்வாறான வேலைத்திட்டங்கள் தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளதாக சாகல ரத்நாயக்க மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் வழிகாட்டுதலின் கீழ் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு உத்தரவாத வேலைத் திட்டம் பாரிய பலமாக உள்ளது என சுட்டிக்காட்டிய அவர், தன்னார்வ அடிப்படையில் இவ்வாறான போஷாக்கு வேலைத்திட்டங்களை ஏற்பாடு செய்வதையும் பாராட்டினார்.

ஜனாதிபதியின் வேலைத்திட்டத்தின் பிரகாரம் இந்த நாட்டை எதிர்காலத்தில் அபிவிருத்தியடைந்த நாடாக மாற்ற முடியும் எனவும், அதற்கு குறிப்பிட்ட கால அவகாசம் தேவையெனவும் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

சரியான தொலைநோக்குப் பார்வையினூடாக நாட்டை அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்வதற்கு, மாறாத கொள்கைக் கட்டமைப்பொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனவும், தேவைக்கு ஏற்ப அதனை சட்டமாக்கி முன்னோக்கி நகர்த்துவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பாரெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பொருளாதார நெருக்கடியிலிருக்கும்...

நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீட்டு மீதான விவாதம் நாளை மறுதினம் 15ஆம் திகதி ஆரம்பிக்கவிருப்பதுடன், இதன் மீதான வாக்கெடுப்பு நவம்பர் 22ஆம் திகதி பி.ப 5.00 மணிக்கு நடத்தப்படும்.

நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் குழுநிலை மீதான விவாதம் நவம்பர் 23ஆம் திகதி ஆரம்பிக்கவிருப்பதுடன், டிசம்பர் 08ஆம் திகதி பி.ப 5.00 மணிக்கு மூன்றாவது மதிப்பீட்டுக்கான வாக்கெடுப்பு நடத்தப்படும். இதற்கமைய நாளை (14) முதல் டிசம்பர் 08ஆம் திகதி வரையான காலப் பகுதியில் ஞாயிறு மற்றும் போயா தினங்கள் தவிர கிழமையின் ஏனைய நாட்களில் பாராளுமன்ற அமர்வு நடைபெறும்.

வரவுசெலவுத்திட்ட உரை நடைபெறுவதை முன்னிட்டு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் நாளைய தினம் பொதுமக்கள் கலரி வெளிநாட்டு இராஜ தந்திரிகளுக்காக மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். பாராளுமன்ற வாகனத் தரிப்பிடம் மூடப்பட்டிருப்பதுடன், உறுப்பினர்கள் வருகை தரும் வாகனங்கள் உரிய தரிப்பிடத்துக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

அத்துடன், போக்குவரத்துப் பொலிஸார் மற்றும் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் போக்குவரத்து ஏற்பாடுகள் குறித்த நடவடிக்கைகளை முன்னெடுப்பர்.

2023ஆம் ஆண்டு ஒதுக்கீட்டுத் (திருத்தச்) சட்டமூலம் தொடர்பான குழுநிலை விவாதத்திற்கான நேரத்தை அதிகரிப்பது குறித்து எதிர்க்கட்சி முன்வைத்த கோரிக்கைக்கு அமைய குழுநிலை விவாதத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரத்தை ஒன்றரை மணித்தியாலங்களினால் அதிகரிப்பதற்கும் இங்கு தீர்மானம் எடுக்கப்பட்டது. இதற்கமைய வரவுசெலவுத்திட்டத்தின் குழுநிலை விவாதம் நடைபெறும் நவம்பர் 23ஆம் திகதி முதல் டிசம்பர் 7ஆம் திகதி வரையான காலப் பகுதியில் பாராளுமன்ற விவாதங்கள் பி.ப 7.00 மணிவரை நடத்தப்படவிருப்பதுடன், இதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டதற்கு அமைய டிசம்பர் 08ஆம் திகதி மூன்றாவது மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு பி.ப 5.00 மணிக்கும் நடத்தப்படவுள்ளது.

# எங்கள் கருத்து

## மனிதநேயத்தை மதிப்போருக்கு மகிழ்ச்சி தரும் நீதிமன்றத் தீர்ப்பு!

ஆனால் இவ்விவகாரமானது இந்திய தேசிய அரசியலுடன் சம்பந்தப்பட்டதாகிப் போனதால், அவர்களின் விடுதலை இழுபறி நிலைக்குள்ளாகி விட்டது. ஆனாலும் இப்போதாவது அவர்களுக்கு விடுதலை கிடைத்திருப்பது மனிதநேயம் கொண்டவர்களை நிம்மதியடையச் செய்துள்ளது.

ராஜீவ் கொலைவழக்கைப் பொறுத்தவரை 'மர்மமுடிச்சுகள்' இன்னுமே அவிழ்க்கப்படவில்லை என்பதுதான் பரவலான அபிப்பிராயம் ஆகும். சிறைவாசம் அனுபவித்த ஏழு பேரும் கொலையில் நேரடியாகச் சம்பந்தப்படவில்லையென்றும், கொலைத்திட்டத்தை அறிந்து கொள்ளாதவர்களாக துரதிர்ஷ்டவசமாக அகப்பட்டுக் கொண்டவர்களெனவும் இந்திய ஊடகங்களில் ஏராளமான செய்திகள் இதுவரை வெளிவந்துள்ளன.

கொலைவிடயத்தை விசாரணை செய்த மத்திய புலனாய்வுத் துறை உயரதிகாரி ஒருவர் தனது சேவை ஓய்வுக்குப் பின்னர் இதே போன்ற காலங்கடந்த கருத்தையே கூறியிருந்தார். அதேவேளை இந்திய நீதிபதியொருவரும் இவ்வாறான கருத்தொன்றை தனது சேவை ஓய்வுக்குப் பின்னர் வெளிப்படுத்தியிருந்தார்.

இந்திய நீதித்துறை சுயாதீனமும் பலமும் வாய்ந்தது. ஆனாலும் நீதிமன்றத்தில் குற்றமொன்றை ஆதாரங்களுடன் நிரூபிக்க வேண்டியவர்கள் பொலிசார் ஆவர். அதன் அடிப்படையிலேயே தீர்ப்பு வழங்கப்படுகின்றது. இந்நிலையில் ஏழு பேர் மீதும் கடந்த முப்பது வருடங்களாக உலகெங்குமிருந்து அனுதாபங்கள் குவிந்து கொண்டே இருந்தன. அவர்கள் அப்பாவிகள் என்ற அபிப்பிராயம் உலகப்பெருவெளியில் பரவியிருந்தது.

எதுஎவ்வாறாயினும், மனிதநேயத்தை நேசிக்கும் அனைவருக்கும் இவ்விடுதலை மகிழ்ச்சியைத் தருகின்றது. அன்பு, காருண்யம், மன்னிப்பு, மனிதநேயம், கொல்லாமை ஆகிய உயரிய தத்துவங்கள் கொண்ட இந்து, பௌத்த மதங்கள் உதித்த இந்திய மண்ணில் இந்தத் தீர்ப்பானது மனிதநேயத்தையே வெளிப்படுத்தி நிற்கின்றது.

# பெயர்களில் கூட அதிகம் வித்தியாசம் காட்டாத வடக்கின் தமிழ் கட்சிகள்

கருணாகரன்

"தமிழரசுக் கட்சி காலமாகி விட்டது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் ஏறக்குறைய செல்லாக் காசாகி விட்டதாகச் சொல்கிறீர்கள். அப்படியென்றால், அடுத்ததாக உங்கள் தெரிவு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியா? அல்லது விக்கினேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியா? அல்லது ஐங்கரநேசனின் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கமா? அல்லது சிவாஜிலிங்கம் –ஸ்ரீகாந்தாவின் தமிழ்த்தேசியக் கட்சியா? அல்லது வேறு ஏதாவது உண்டா?" என்று கேட்கின்றனர் சில நண்பர்கள்.

இதற்கு என்ன பதிலைச் சொல்ல முடியும்?

ஏனென்றால், இவர்கள் தேடுவது தங்களுக்குத் தெரிந்த வட்டத்திற்குள்தான். அதற்கப்பால் வேறொன்றைப் பற்றிச் சிந்திப்பதில்லை. அப்படிச் சிந்திப்பதற்குத் துணிவதும் இல்லை. நாம் புதிதொன்றைச் சிந்தித்தால்தான் முன்னேற முடியும். மாற்றங்களைக் காண முடியும். அதற்குத் துணிச்சல் வேண்டும். அந்தத் துணிச்சலே மாற்றங்களைத் தரும். நமக்குத் தேவையான பயனை உண்டாக்கும்.

ஒரு சிறிய உதாரணம் – 1970, 0 களில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டபோது தமிழ் இளைஞர்களில் ஒரு தரப்பினர் போராடுவதற்கென்று இயக்கங்களுக்குப் போனார்கள். இன்னொரு சாரார் புலம்பெயர்ந்து சென்றனர். இரண்டும் அன்றைய நெருக்கடிச் சூழலை எதிர்கொள்வதற்கான மாற்று ஏற்பாடுகள்தான். இதை அன்றைய அரசியல் கட்சிகளோ தலைவர்களோ செய்யவில்லை. இதற்கு வழிகாட்டவும் இல்லை.

தமக்கு முன்னுள்ள நெருக்கடிக்கு முகம் கொடுப்பதற்கெனப் புதிதாக அன்றைய இளைஞர்கள் துணிச்சலாகச் சிந்தித்தனர். அதுதான் போராட்டமாகியது. அதுதான் பின்பு புலம்பெயர் சமூகமாகியது.

ஆகவே இன்றும் அதைப்போன்ற ஒரு நிலை – ஒரு சூழலே உருவாகியுள்ளது.

இந்தச் சூழலைப் புரிந்து கொண்டு பொருத்தமான தீர்மானத்தை மக்கள் எடுக்க வேண்டும். குறிப்பாக இளைய தலைமுறையினர் இதில் துணிவோடும் ஆற்றலோடும் செயற்பட வேண்டும். முற்றிலும் புதிதாகச் சிந்தித்தால் ஒழிய, தமிழ் அரசியலில் மாற்றத்தை உருவாக்கவே முடியாது. தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வையும் காண முடியாது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, தமிழ்த்தேசியக் கட்சி, தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம், தமிழ் மக்கள் கூட்டணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழத்தமிழர் சுயாட்சிக்கழகம் என ஏராளமான கட்சிகள் இன்று விளைந்து போயுள்ளன. எதிர்காலத்தில் இதைப்போல இன்னும் சில கட்சிகள் உருவாகக் கூடும். அதற்கான சாத்தியங்களே உண்டு.

அ ர சி ய ல் நெறிமுறை தவறி, ஜனநாயக வெளி சுருங்கச் சுருங்க கட்சிகளின் பெருக்கம் அதிகரிக்கும்.

இப்படிப் பல கட்சிகள் பெருகியுள்ள போதும் தமிழரின் இனப்பிரச்சினைக்கு ஏதாவது தீர்வு கிட்டியுள்ளதா? தமிழ் மக்கள் நாளாந்தம் சந்தித்துக் கொண்டிருக்கும் பிரச்சினைகளில் ஏதாவது ஒன்றுக்குப் பரிகாரம் காணப்பட்டதா?

ஒன்றுமே நடக்கவில்லை.





ஏனென்றால், இவற்றுக்கிடையில் பெரிய வேறுபாடுகள் எதுவுமில்லை. எல்லாமே ஒரு மையத்திலிருந்து பிரிந்தவையே. அதாவது ஒரு அச்சில் வார்க்கப்பட்டவை. கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இவை எல்லாம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் இருந்தவை. அதிலிருந்து கொள்கையின் அடிப்படையில், குணாம்ச வேறுபாட்டினால் பிரிந்தவை அல்ல. நடைமுறைப் பிரச்சினைகளால் பிரிந்தவை. குறிப்பாக அதிகாரப் போட்டியினால், பிளவுண்டவை.

இதில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிதான் ஓரளவுக்கு தீர்வு யோசனைகளால் (ஒரு நாடு இரு தேசம் என) வேறுபட்டு நிற்கிறது. அதுவும் தன்னுடைய அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விதத்தில் வேறுபடவில்லை. மற்றும்படி முரண்பாடுகளால் பிரிந்தவையே இந்தக் கட்சிகள். சிவாஜிலிங்கம், ஸ்ரீகாந்தா போன்றோர் ரெலோவில் செல்வம் அடைக்கலநாதனுடன் உண்டான பிணக்கின் நிமித்தமாக வெளியேறித் தனி அணியை உருவாக்கியவர்கள். ஒப்பீட்டளவில் ஐங்கரநேசன் மட்டுமே சற்று வேறுபட்டுச் செயற்படுகிறார். யாழ்ப்பாணத்திற்குள்தான் அவர்களுடைய செயற்பாட்டு வீச்செல்லை வலுவானதாக இருந்தாலும் அதில் செயற்பாட்டுத் தன்மையைக் கொண்டிருக்கிறார். குறைந்த பட்சம் சூழலையாவது அவர் வளப்படுத்துவதற்கு முயற்சிக்கிறார். மற்றவை எல்லாமே ஒரு வாய்பாட்டைக் கொண்டவை.

இந்தக் கட்சிகளில் பெரும்பாலானவற்றின் பெயர்களில் கூட அதிகம் வித்தியாசமில்லை. சட்டென்று பார்க்கின்றவர்களுக்கு எல்லாமே ஒன்று போலத் தோன்றக் கூடியவை. அது உண்மையும்தான். "தமிழ்த் தேசியம்" என்ற சொல்லை அடைமொழியாக வைத்தால்தான் மக்களுடைய வாக்குகளை அறுவடை செய்யலாம் என்று கருதுவதன் விளைவு இது. இது முழுமையான தந்திரமே. மக்களை மடையர்களாக்கும் அபத்தச் சிந்தனை.

இவ்வளவுக்கும் இவர்களில் எவருக்கும் (எந்தக் கட்சியினருக்கும்) தாம் கருதுகின்ற கூறுகின்ற "தமிழ்த்தேசியம்" என்பதற்கான அடிப்படைப் புரிதலோ விளக்கமோ கிடையாது. கட்சியின் பெயரில் மட்டும் விளம்பர லேபிளாகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். தமிழ்த் தேசியம் குறித்த சரியான புரிதல் இருந்தால், அதைப் பலப்படுத்தும் விதமாகச் செயற்பட்டிருப்பர். இப்படிப் பலவீனப்படுத்தும் விதமாக நடந்து கொள்ள மாட்டார்கள்.

இந்தத் "தமிழ்த்தேசிய நோய்", 2000 த்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது உருவானது. இப்பொழுது அது முற்றிப் பெருகிக் கொண்டிருக்கிறது. ஆனால், இதை உருவாக்கும் போதுபின்னாளில்இப்படியெல்லாம் சீரழிவுகளைச் சந்திக்க வேண்டும் என்று இதை உருவாக்கிய புலிகளும் கருதியிருக்கவில்லை. இதற்கு அனுசரணையாக இருந்தோரும் கருதவில்லை. அவர்கள் இருந்திருந்தால் தலையில் கையை வைத்திருப்பார்கள். பலருக்குத் தலையில் தீர்ப்பையே எழுதியிருக்கவும் கூடும்.

1970 களில் உருவாகிய ஆயுதப் போராட்ட இயக்கங்கள் "ஈழம்", "தமிழீழம்" என்ற சொல்லை அர்த்தபூர்வமாகவே பயன்படுத்தின. ஆனால் 1980 களில் ஏட்டிக்குப் போட்டியாக ஆளுக்கு ஒரு இயக்கம் என்று ஆரம்பிக்கப்பட்டபோது, "ஈழம்", "தமிழீழம்" என்பதெல்லாம் ஒரு பாஷனுக்காக வைத்துக் கொண்டதைப்போலத்தான் இன்றைய தமிழ் அரசியற் கட்சிகள் "தமிழ்த்தேசியம்" என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றன.

ஆகவே, தமிழரின் வரலாறு முன்னோக்கி நகரவேயில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு 20 ஆண்டுகள் கடந்து விட்டன. விடுதலைப்புலிகளின் ஆதிக்கமில்லாமல், அது சுயாதீனமாகச் செயற்படத் தொடங்கி 13 ஆண்டுகளாகி விட்டன. இதுவரையில் அது என்ன செய்திருக்கிறது? இனி என்ன செய்ய உத்தேசித்துள்ளது?

உருப்படியாகச் செய்தது என்றால் எட்டுப் பத்துக் கட்சிகளைக் குட்டி போட்டதுதான் மிச்சம். அதாவது எதிர்த்தரப்புக்கு வாய்ப்பைக் கொடுத்தது. இப்படித் தன்னுடன் இணைந்திருந்த தரப்புகளை உடைத்துச் சிதறடித்து பல அணிகளாக்கி விட்டு, இப்பொழுது ஒற்றைமையைப் பற்றி அது பேசுகிறது. இதைக் கேட்கும்போது முட்டாளுக்கும் சிரிப்பு வரும். ஆனால், கூட்டமைப்பின் தலைவர்கள் இதை வாய் கூசாமல் சொல்கிறார்கள். அவர்களுடைய கணிப்பில், தமிழ் மக்கள் மகா மூடர்கள் என்பதாகவே உள்ளனர். அந்த நம்பிக்கையில்தான் மக்களுடைய நம்பிக்கைக்கும் எதிர்பார்ப்புக்கும் மாறாகத் துணிச்சலாக அவர்களால் கதைக்கவும் செயற்படவும் முடிகிறது.

கூட்டமைப்பைப் போலத்தான் ஏனைய தரப்புகளும். அவற்றிடமும் எந்தப் புதினமும் இல்லை. எந்த மாற்று வழியும் கிடையாது. எத்தகைய மக்கள் நலத்திட்டங்களும் இல்லை. செயற்பாட்டுக்கான வழிமுறையோ அர்ப்பணிப்புணர்வோ கிடையாது. எல்லோரும் வெறும் வாய்ப் பேச்சு வீரர்களாகத்தான் உள்ளனர்.

இதனால்தான் இவர்கள் எவரையும் பொருட்படுத்தாமல் மக்கள் தங்களுக்கான போராட்டத்தை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றனர். கேப்பாப்பிலவுப் போராட்டம், இரணைதீவுத் தரையிறக்கம், வலி வடக்கு நில மீட்புப் போராட்டங்கள், காணாமலாக்கப்பட்டோரின் போராட்டம், குருந்தூர் மலைப் போராட்டம் என அனைத்துப் போராட்டங்களையும் மக்கள் சுயாதீனமாக முன்னெடுக்கின்றனர். மக்கள் முன்னெடுக்கும் போராட்டங்களில் இந்தக் கட்சிகள் வெட்கமில்லாமல் போய் ஒட்டிக் கொள்கின்றன. அவ்வளவுதான்.

உண்மையில் இந்தத் தமிழ் அரசியற் கட்சிகள் செயலிழந்து விட்டன. கோட்பாட்டாலும் நடைமுறைகளாலும் இவை தோற்று விட்டன. பாராளுமன்றத்தில் உரத்துப் பேசுவதற்கு அப்பால் இவற்றிடம் வேறு எந்தப் பொருளுமே இல்லை. முன்பொரு காலம் அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம், தளபதி அமிர்தலிங்கம், இரும்பு மனிதன் நாகநாதன், தந்தை செல்வநாயகம், அடங்காச் சிங்கம் ஜீ.ஜீ. பொன்னம்பலம், கோப்பாய்க் கோமகன் வன்னியசிங்கம் என அன்றைய தலைவர்கள் முழங்கியதைப்போல இப்பொழுது சாணக்கியன், சிறிதரன், சுமந்திரன், கஜேந்திரன்கள் முழங்குகிறார்கள்.

இதைக் கேட்கும்போது பலருக்கும் உடலில் புல்லரிக்கும். ரோமங்கள் சிலிர்க்கும். அவ்வளவுதான். அதற்கப்பால் இவற்றுக்கு எந்த அரசியல் பெறுமானமும் கிடையாது.

ஒடுக்குமுறைக்குள்ளாகிய மக்களின் அரசியலை முன்னெடுக்கும் விதமே வேறு. விடுதலைக்கான அரசியல் வழியே வேறு. அது நடைமுறை அரசியலோடு இணைந்தது. மக்களோடு பின்னிப் பிணைந்தது. பிரமுகர்த்தனத்துக்கு (வெள்ளை ஆடைக்கு) மாறானது. அர்ப்பணிப்பு மிக்கது. இதைப் புரிந்து கொள்ளாத வரை இப்படித்தான் தோல்வியும் பின்னடைவும் நிகழும்.

எனவேதான் தமிழரசுக் கட்சியும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் ஏனைய தரப்புகளும் இன்று பயனற்றவை ஆகி விட்டன என்று ஆதாரபூர்வமாகவே சொல்ல வேண்டியுள்ளது. ஏன், "தமிழ் மக்கள் பேரவை என்றொரு அமைப்பு" மிக மூன்று ஆண்டுகளுக்கு முன்பு வலு டாம்பிகமாக ஆரம்பிக்கப்பட்டது. "எழுக தமிழ்" என்றொரு பிரமாண்ட எழுச்சிக் கூட்டமும் நடத்தப்பட்டது. இப்பொழுது அந்தப் பேரவை எங்கே? அந்த எழுச்சிக்கு என்ன நடந்தது?

இப்பொழுது தமிழ்த்தேசியப் பேரவை என்றொரு அமைப்பு உருவாகியுள்ளது. இது எத்தனை மாதம் தாக்குப் பிடிக்கும் என்று தெரியவில்லை.

இதுபோலப் பல வரலாற்றுச் சோகங்கள் (வரலாற்று வேடிக்கைகள்) உண்டு. இதைக்குறித்த விமர்சங்களும் கேள்விகளும் பரவலாக எழுந்துள்ளன.

இதை தனியே நான் மட்டும் சொல்லவில்லை. நானும் என்னைப் போன்ற சிலரும் இதை அழுத்தமாகச் சில ஆண்டுகளாகச் சொல்லி வருகிறோம். அப்பொழுது பலரும் இதை முகச் சுளிப்புடன் பார்த்தனர்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

- தமிழ்த்தேசியத்தை கட்சியின் பெயரில் மட்டும் விளம்பர லேபிளாகப் பயன்படுத்துகிறார்கள்.
- மக்களை மடையர்களாக்கும் அபத்த சிந்தனை.
- 2000ஆம் ஆண்டில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது "தமிழ்த்தேசிய நோய்" உருவானது.

# "கோப் 27" மாநாடு உயிர் வாழ்வுக்கு உகந்த சுற்றாடலை உண்டாக்குமா?

சுஐப் எம். காசிம்

உயிரிகளின் உயிர் வாழ்வுக்கு எகிப்துக் காலநிலை மாநாடு எந்தளவு உத்தரவாதமளிக்கும்? கோடிக் கணக்கில் பணம் கொட்டப்பட்டு நடாத்தப்படும் எகிப்து "கோப் 27" காலநிலை மாநாடு, இம்முறை நூறு பக்கங்களையுடைய அறிக்கையை அவைக்கு சமர்ப்பிர்த்துள்ளது.

2030ஆம் ஆண்டுக்குள் வருடமொன்றுக்கு இரண்டு ட்ரில்லியன் டொலரைச் செலவிடாவிடின், பூமி எம்மை வாழவிடாது என்றும் அந்த அறிக்கை எச்சரிக்கிறது. இல்லாவிடின் 2030க்குப் பின்னர் இத்தொகை இன்னும் அதிகரிக்குமாம்.

இந்தளவு நிதியை செல்வந்த நாடுகள்தான் வழங்க வேண்டும். முதலீட்டாளர்கள் இன்னும் பல்துறை அபிவிருத்தி வங்கிகளும் இதில் பங்களிக்கலாம். இத்தனைக்கும் இந்தக் கணிப்பில் சீனாவின் செயற்பாடுகள் உள்வாங்கப்படவில்லை.

புதிய தொழில்நுட்ப மோகத்தில் விண் வெளியில் வாழ ஆசைப்படும் சீனா, குரங்கு மற்றும் பல்லி உள்ளிட்ட உயிரிகளை அனுப்பி சுவாசிப்பதற்கான சாத்தியங்களை ஆராய்கிறது.

இதுவே, இப்படியென்றால் பூமியில் சீனா எதைச் சாதிக்காமல் விடும்? இந்த மாற்றங்கள்தான் காலநிலையை சீரழித்து பூமியை வெப்பமடையச் செய்கிறது. இந்த வெப்பம் அதிகரித்தால் ஓசோன் படலத்தில் மேலும் ஓட்டை விரிந்து, நாம் வாழ முடியாத நிலை ஏற்படும்.

தற்போது ஏற்பட்டுள்ள இந்த வெப்பநிலையில் இரண்டு பாகை செல்சியசையாவது குறைக்க வேண்டும் என்கிறது கோப் 27 அறிக்கை. இதற்காக வருடாந்தம் இரண்டு ட்ரில்லியன் அமெரிக்க டொலரைச் செலவு செய்ய வேண்டுமாம். இரண்டு பாகை செல்சியசை குறைக்கும் காரியம் சாத்தியமில்லை என்பதால், 1.5 பாகையையாவது குறைக்கும் முயற்சியில் எகிப்து காலநிலை மாநாடு கவனம் செலுத்தியுள்ளது.

மனித செயற்பாடுகள் மட்டும்தான் காலநிலையை சவாலுக்கு உட்படுத்தவில்லை. இயற்கைத் தாண்டவமும் இதில் பிரதானமானதே! சூறாவளி, வெள்ளம், சுனாமி, காட்டுத் தீ, பனிப்பாறை உருகுதல் மற்றும் எரிமலை வெடிப்புக்களும் இயற்கை தாண்டவம்தான். மனித சக்தியால், இவற்றை முற்றாகக் கட்டுப்படுத்த இயலாது.

ஆனால், முடியுமான வரை முயன்று மட்டுப்படுத்த முடியும். இதுவும் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கே சாத்தியம். வறிய இன்னும் வளரும் நாடுகளுக்கு இவ்விடயம் சாத்தியமே இல்லை. இதற்காகவே, வருடாந்தம் தேவைப்படும் இரண்டு ட்ரில்லியன் டொலர் செலவிடப்படவுள்ளது.



பிரதானமாக மனித அறிவால் உண்டாக்கப்படும் இயற்கை அழிவுகளை இல்லாதொழிக்க வழிகள் செய்யப்படல் அவசியம். வளர்ச்சியடை ந்த நாடுகளுக்கிடையில் நிலவும் கட்டுப்பாடற்ற தொழில் மயமாதல்தான் காலநிலையை மாற்றி, சுற்றாடலை சுருங்கச் செய்வதாக இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த மாநாட்டில் உரையாற்றினார். இதனால், பாதிக்கப்படும் வறிய, வளரும் நாடுகளுக்கு ஆக்கக் காரணிகள்தான் கை கொடுக்க வேண்டும் என்பதும் அவரது நிலைப்பாடு.

தனது தேவைகளுக்கு ஏற்ப இயற்கையை வளைத்தெடுக்குமளவுக்கு விஞ்ஞானம், தொழில்நுட்பம் விஞ்சியுள்ள யுகமிது. ஆனால், பனிப்பாறைகள் உருகுதல், நிலச்சரிவு, சூறாவளி, காட்டுத் தீ, எரிமலை வெடிப்பு மற்றும் வெள்ளம் போன்ற இயற்கையின் சில சீற்றங்கள், விஞ்ஞான வியூகத்துக்கு கட்டுப்படுவதாக இல்லை. இதனால், ஏற்படும் அழிவுகளை வளர்ந்த நாடுகள் ஈடு செய்யும். வளரும் நாடுகளும் வறிய நாடுகளும்தான் ஈடு செய்ய இயலாதுள்ளன.

எனவே, இயற்கை அழிவுகளை முன்கூட்டி அறியும் நவீன வசதிகள் இந்நாடுகளில் ஏற்பாடு செய்யப்படல் அவசியம். பெரும்பாலும், மனிதனை மட்டும் மையப்படுத்தியே காலநிலை மாநாடு நடைபெறுகிறது. ஊர்வன, பறப்பன, உலவித்திரிவனவை பற்றி யார் சிந்திப்பது?காட்டுத் தீயால் இவ்வகை உயிரிகளில் எத்தனை மாண்டிருக்கும். புயல், வெள்ளம் உள்ளிட்ட சீற்றங்களில் குஞ்சுகள் மற்றும் பிஞ்சுகள் என எத்தனை செத்து மடிந்திருக்கும். இதிலுள்ள இரட்டிப்புக் கவலை இயற்கையால் மட்டுமன்றி மனித செயற்பாடுகளாலும் இவை மடிய மற்றும் மாள நேரிடுவதுதான்.

எனவே, காடுகளை அழிப்பது, கட்டடங்களை உடைப்பது என்றில்லாமல், காடுகளை வளர்ப்பது, நவீன தொழில்மயமாதலை தவிர்ப்பது என்பவற்றை கடைப்பிடித்தாவது, நமது சூழலை நாம் இயன்ற வரை பாதுகாக்க வேண்டும்.

**நாட்டில் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அதேவேளை, எரிபொருள் மற்றும் எரிவாயுவைப் பெற்றுக் கொள்ள பல நாட்களாக நீண்ட வரிசையில் காத்திருக்கும் அவலம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு சுமுகமான வாழ்க்கை முறையொன்றைக் கொண்டு செல்வதற்கான சூழல் தற்போது ஓரளவு ஏற்படுத்தப்பட்டுள்ள இந்நிலையில் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து சுமுக சூழலைக் குழப்புவதற்கு முயற்சிகளை மேற்கொள்வது தெளிவாகவே தெரிகின்றது.**



**'அரகல' என்ற அன்றைய போராட்டம் படிப்படியாகத் தணிந்து போவதையும், ஆர்ப்பாட்டங்களில் இப்போது பங்கேற்கின்ற மக்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டு செல்வதையும் நன்றாகவே காண முடிகின்றது**

# அருகிச் செல்லும் ஆர்ப்பாட்டங்கள்!

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து எதிர்க்கட்சிகள் மற்றும் அவற்றுடன் சார்ந்த தொழிற்சங்கங்கள் இணைந்து கடந்த 02 ஆம் திகதி ஏற்பாடு செய்திருந்த எதிர்ப்புப் போராட்டம் இதன் ஒரு அங்கமாக அமைந்திருந்தது.

அவர்கள் ஏற்பாடு செய்திருந்த போராட்டம் வெற்றியளித்ததாகத் தெரியவில்லை. அரசியல் சக்திகளால் தொடர்ந்தும் ஏமாற்றப்படப் போவதில்லையென்ற மக்களின் மனோநிலை அன்றைய போராட்ட தினத்தில் வெளிப்படுத்தப்பட்டிருந்ததைக் காணக் கூடியதாகவிருந்தது.

விலைவாசி அதிகரிப்பு உள்ளிட்ட வாழ்வாதாரப் பிரச்சினைகள் மக்களுக்குக் காணப்படுகின்றன என்பதை எவரும் மறுப்பதற்கு இல்லை. இருந்தபோதும், மக்களின் இந்த சிக்கலான சூழலைப் பயன்படுத்தி அரசியல் செய்யும் எதிர்க்கட்சியினரின் காய்நகர்த்தல்களுக்கு மக்கள் தயாராக இல்லையென்ற செய்தியும் இதன் ஊடாகச் சொல்லப்பட்டுள்ளது.

தற்பொழுது இருக்கும் சூழ்நிலையில் அரசியல் செய்யும் நோக்கில் எவரும் மக்களைத் தேடிச் செல்ல முடியாத நிலையே காணப்படுகிறது. இந்த விடயத்தை எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதுதான் இங்கே முக்கியமாகும்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்காக சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளின் உதவியை இலங்கை நாடியிருக்கும் இன்றைய சந்தர்ப்பத்தில் இதுபோன்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்கள், நெருக்கடி நிலைமையை மேலும் சிக்கலாக்கும் என்பது புரிந்து கொள்ளப்படுகிறதா என்ற கேள்வி காணப்படுகிறது.

மக்களுக்கும், நாட்டுக்கும் நன்மை செய்ய வேண்டுமென்ற உண்மையான நோக்கம் இருந்தால் அரசாங்கத்தைப் பொறுப்பேற்று வழிநடத்திச் செல்வதற்கு எதிர்க்கட்சியினர் முன்வர வேண்டும். அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வருமாறு பல்வேறு அழைப்புகள் விடுக்கப்பட்ட போது அவற்றை நிராகரித்து விட்டு தற்பொழுது மக்களை உருவேற்றி மீண்டும் வீதிக்கு இறக்கிப் போராட முயற்சிப்பதில் அர்த்தம் இல்லை என்பதையும் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அதேநேரத்தில், பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டு தேர்தலொன்றுக்குச் செல்லுமாறு எதிர்க்கட்சியைச் சேர்ந்த பலர் வலியுறுத்தி வருகின்றனர். நாட்டின் ஜனநாயகத் தன்மையை உறுதிப்படுத்த தேர்தல்கள் நடத்தப்பட வேண்டியது அவசியம் என்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்து இல்லையென்றாலும், நாடு இப்போது எதிர்கொண்டுள்ள சூழ்நிலையில் தேர்தலொன்றுக்குச் செல்ல முடியாமா என்ற நடைமுறைக் கேள்வியும் இங்கு காணப்படுகிறது.

அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கும், அரசாங்கத்தின் அன்றாட செலவினங்களை மேற்கொள்வதற்கும் போதியளவு ஒதுக்கீடுகள் காணப்படாத நிலையில், பாரியதொரு செலவில் தேர்தலுக்குச் செல்வதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றதா என்பது குறித்தும் அரசியல் தரப்பினர் கவனத்தில் கொள்ள வேண்டும். வெறுமனே அரசியல் இருப்புகளுக்காகவும், அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காகவும் நாட்டை மேலும் மேலும் சிக்கல்களுக்குத் தள்ளுவதற்கு முயற்சிக்கக் கூடாது.



கடந்த சில மாதங்களுக்கு முன்னர் எரிபொருட்களுக்கு நீண்ட வரிசை காணப்பட்டது. மக்கள் கால்வலிக்க காத்திருக்கும் சூழல் படிப்படியாகக் குறைக்கப்பட்டு விலைவாசி அதிகமாக இருந்தாலும் சாதாரன சுமுக வாழ்க்கைக்கான வழிவகைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்குள் கொண்டு வருவதற்கு கடும் பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறான பின்னணியில் நாட்டில் போராட்டங்களை முன்னெடுத்து இலங்கையில் ஸ்திரமற்ற தன்மை காணப்படுகின்றது என்ற செய்தி சர்வதேசத்துக்கு வழங்கப்படுமாயின், இலங்கைக்குக் கிடைக்கக் கூடிய அந்நிய செலாவணி உள்ளிட்ட வருமானங்கள் பல இழக்கப்பட்டு விடும்.

நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் காணப்பட்டாலும் நாட்டைக் கட்டியெழுப்பவும், முதலீடுகளை மேற்கொள்வதற்கும் புலம்பெயர்ந்து சென்ற இலங்கையர் பலர் ஆர்வமாக இருக்கின்றனர் என்பதே நிதர்சனம். இதற்கு உதாரணமாக கடந்த வாரம் கனடாவைச் சேர்ந்த வர்த்தகக் குழுவொன்று இலங்கை வந்திருந்தது.

யுத்தம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக நாட்டைவிட்டு வெளியேறி தற்பொழுது கனேடிய பிரஜைகளாக வசித்துவரும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் பலரே இந்தக் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தனர். இக்குழுவினர் வெளிவிவகார அமைச்சர், சபாநாயகர், கல்வி அமைச்சர் உள்ளிட்ட பல தரப்பினரையும் சந்தித்து முதலீடு குறித்த தமது ஆர்வத்தை வெளியிட்டிருந்தனர்.

இதுபோன்று பலர் தமது நாட்டுக்காக வந்து உதவிகளைச் செய்வதற்கும், முதலீடுகளை மேற்கொள்வதற்கும் ஆர்வமாக இருக்கின்றனர். இவ்வாறான தரப்பினருக்குத் தேவையான சட்டரீதியான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டாலும், முதலீடுகளுக்கான சூழலை உறுதிப்படுத்த அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

**பொருளாதார நெருக்கடியை சாதமாகப் பயன்படுத்தி அரசியல் ஆதாயம் பெறுவதற்கு எதிரணியினர் முயற்சிப்பதை புரிந்து கொண்டுள்ள பொதுமக்கள்!**

விலைவாசி அதிகரிப்புப் போன்ற விடயங்களால் மக்களுக்கு சிக்கல்கள் இருக்கின்றன என்பதை யாரும் மறுக்கவில்லை. இந்த நிலைமையைப் போக்குவதற்கு ஆர்ப்பாட்டம் தான் ஒரே வழியா என்பதற்கு பதில் தேடப்பட வேண்டும்.

இது விடயத்தில் ஆளும் கட்சி எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். குறிப்பாக ஆளும் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும், கடந்த அரசாங்கத்தினை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்கு உதவியாக இருந்த அரசியல்வாதிகள் சிலரும் மக்களின் ஆத்திரத்தைத் தூண்டும் வகையிலான அரசியலை முன்னெடுக்கின்றனர். இதுவும் தவிர்க்கப்பட வேண்டிதொன்றாகும். மக்களை மீண்டும் மீண்டும் குழப்பும் வகையிலான செயற்பாடுகள் நிலைமைகளை மோசமாக்கி விடும் என்பது உணரப்பட வேண்டும்.

அதேபோல, ஊழல் மோசடிகள் மற்றும் தரகுப் பணம் பெறுவது போன்ற செயற்பாடுகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். இவற்றில் வெளிப்படைத் தன்மையைக் கொண்டுவந்து மக்களின் நம்பிக்கையை வெல்ல வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். இதனை விடுத்து அமைதியான போராட்டங்களைத் தடுப்பதால் மாத்திரம் மக்களை அமைதிப்படுத்த முடியாது. எனவே, அரசாங்கமும் இது விடயத்தில் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகளைக் காலதாமதமின்றி முன்னெடுக்க வேண்டும் என்பதுதான் மக்களின் கருத்தாக இருக்கின்றது.

கடந்த ஆட்சியாளர்களின் காலத்தில் கொள்ளையடிக்கப்பட்ட மக்கள் பணம் மீண்டும் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்ற கோஷங்களே கடந்த ஆர்ப்பாட்ட நாட்களில் முன்வைக்கப்பட்டிருந்தன என்பதையும் இங்கு கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

பி.ஹர்ஷன்...

---

**உலகிலேயே வலுவான வெளியுறவுக் கொள்கையைக் கடைப்பிடித்து வருகின்ற நாடு இந்தியா ஆகும். அதன் காரணமாகவே உலக அரங்கில் இந்தியா பொருளாதாரத்திலும் ஆயுதபலத்திலும் வளர்ச்சியடைந்து வருகின்றது. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் அடிப்படைக் கூறுகளாக பின்வரும் விடயங்களைக் குறிப்பிடலாம்.**



# சிறப்பான வெளியுறவு கொள்கையினால் உலகில் உயர்ந்து நிற்கும் தேசம் இந்தியா

சுதந்திர இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைக்கான அடிப்படைக் கோட்பாடுகள் இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்பே உருவாக்கப்பட்டவையாகும். இந்தக் கோட்பாடு விடுதலைப் போராட்டத்தின் போது படிப்படியாக வளர்ச்சியுற்றது. காலனித்துவம் எந்த வடிவில் வந்தாலும் அதை எதிர்ப்பது என்பதே இந்தக் கோட்பாட்டின் அடிநாதமாகும். காலனித்துவ எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு, இனஒதுக்கலை எதிர்த்தல், இனவெறியை எதிர்த்தல், வல்லரசு நாடுகளுடன் அணி சேராமை, ஆபிரிக்க–ஆசிய ஒற்றுமை, பிறநாடுகளை ஆக்கிரமிக்காமல் இருத்தல், பிறநாடுகளின் உள்நாட்டு நிகழ்வுகளில் தலையிடாமல் இருத்தல், ஒரு நாடு மற்றொரு நாட்டின் இறையாண்மை மற்றும் நிலஎல்லையை மதித்தல், உலக அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துதல், நாடுகளுக்கிடையேயான அமைதியை நிலைநிறுத்துவதில் வெற்றிடம் ஏற்படா வண்ணம் இரு நாடுகளும் சமநீதியைப் பாதுகாத்தல் ஆகியன இந்திய வெளியுறவுக் கொள்கைகளின் அடிப்படைகளாகும்.



இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் அமெரிக்கா மற்றும் சோவியத் ஒன்றியம் ஆகிய இரு வல்லரசு நாடுகளுக்கிடையே ஏற்பட்ட பனிப்போர் காரணமாக இந்திய வெளியுறவுக் கொள்கைக்கு சிக்கல் ஏற்பட்டது. ஆனால் இந்தியா அணிசேராக் கொள்கை மூலம் அதற்குத் தீர்வு கண்டது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பாரதீய ஜனதாவின் கொள்கை இந்தியாவின் வளர்ச்சிக்கு உதவக் கூடிய சர்வதேச சூழலை உருவாக்குவதாகும். உலகமய சூழலுக்கு ஏற்ப இந்தியப் பொருளாதாரத்தை மேம்படுத்துவது, வல்லரசு நாடுகளுடனான உறவைப் பலப்படுத்துவது, அண்டை நாடுகளுடனான நல்லுறவையும் நட்பையும் மேம்படுத்துவது போன்றன நரேந்திர மோடி தலைமையிலான பாரதீய ஜனதாவின் பிரதான கோட்பாடுகள் ஆகும்.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.வின் இரண்டாவது ஆட்சிக்காலம் இப்போது தொடருகின்ற நிலையில், முன்னைய ஆட்சிகளுடன் ஒப்பிடும்போது, தற்போது வெளியுறவுக் கொள்கையில் சிறப்பான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதே பொதுவான கருத்தாகும்.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான இரண்டாவது ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து சுருக்கமாக ஆராய்வது இங்கு அவசியம்.

தற்சார்பு இந்தியாவுக்கான அழைப்பை நரேந்திர மோடி அனைத்துத் தரப்பினரிடமும் விடுத்து வருகின்றார். மோடியின் இரண்டாம் ஆட்சியின் முதலாண்டு நிறைவடைவதற்கு முன்னதாகவே பிரதமரின் பேச்சுக்களில் 'தற்சார்பு' என்ற புதிய சொல் இடம்பெறத் தொடங்கியது.

அவர் நாட்டுக்கு ஆற்றிய 33 நிமிட உரையில் 'தற்சார்பு' என்று பொருள் தரும் 'ஆத்மநிர்பர்' என்ற இந்திச் மொழிச் சொல்லை 33 முறை பயன்படுத்தினார். 'தற்சார்பு' என்பது சுதேசியுடன் இணைக்கப்பட்டுள்ளது. அது மாறிவரும் பொருளாதாரக் கொள்கையை நோக்கி நகர்கிறது. ஆனால் பரஸ்பர சார்பு கொண்ட தற்போதைய உலகில், பாதுகாப்புவாதக் கொள்கையாக 'தற்சார்பு' என்பதை பின்பற்றி எந்த பெரிய பொருளாதாரமும் வெற்றி பெற முடியாது என்பதே பிரதமர் மோடியின் கொள்ளையாகும்.

தற்சார்பைக் கடைப்பிடிப்பதால் இந்தியா சுயநலமாக மாறிவிட்டது என்றோ, உலகத்திலிருந்து இந்தியா துண்டிக்கப்படுமென்றோ பொருளில்லை. தன்னிறைவு பெற்ற இந்தியா இயற்கையாகவே சர்வதேச இந்தியாவாக இருக்கும் என்பதே அதன் அர்த்தமாகும்.

பாரதீய ஜனதா அரசாங்கத்தின் முதல் ஐந்து ஆண்டுகளில் பிரதமர் நரேந்திர மோடி அதிக அளவிலான வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டிருந்தார். ஆனால் இரண்டாவது ஆட்சிக் காலத்தில் பிரதமரின் வெளிநாட்டுப் பயணங்கள் வெகுவாகக் குறைந்து விட்டன.

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகளில் உள்ள குறைபாடுகளை சீர்படுத்துவதற்காக ஆட்சியின் ஆரம்பத்தில் சில ஆண்டுகள் செலவிடப்பட்டதாக இந்திய வெளியுறவுத்துறை அதிகாரி ஒருவர் கூறுகின்றார். அதுமாத்திரமன்றி




தற்சார்பு அடைவது என்பது ஒரு வரலாற்று மாற்றம். புதிய உலக ஒழுங்கு என்பது சார்புநிலையை மையமாகக் கொண்டிருக்கக் கூடாது. அது புதிய பொருளாதார அடிமைத்தனத்தை ஏற்படுத்தும் என்பது அவரது கோட்பாடு.

அன்றைய காலத்தில் கோதுமை, அரிசி மற்றும் தானியங்களை வெளிநாடுகளில் இருந்து இந்தியா வாங்கிக் கொண்டிருந்தது. 1967_ 68 இல் ஒரு பெரிய பஞ்சம் இந்தியாவில் ஏற்பட்டபோது மக்கள் சிரமப்பட்டனர். ஆனால் விவசாயிகள் இந்தியாவை தற்சார்பு உள்ளவர்களாக மாற்றினார்கள், அதையடுத்து இப்போது இந்தியா தலைநிமிர்ந்து நிற்கின்றது.

இந்தியாவிடம் இருந்து எந்தப் பொருட்களையும் வாங்கப் போவதில்லை என்று கூறி பாகிஸ்தானின் அன்றைய பிரதமர் இம்ரான் கான், இந்தியாவில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்வதற்குத் தடை விதித்தார். ஆனால் அதன் பின்னர் தனது நாட்டின் தேவையின் இக்கட்டான நிலையை உணர்ந்து, இந்தியாவிடம் இருந்து மருந்துகளை வாங்கிக் கொண்டார் அன்றைய பிரதமர் இம்ரான் கான்.

**இந்தியா உலகத்துடன் இணைந்திருக்கின்றது. வெளிநாடுகளுடன் நெருக்கமான நட்புறவை மேம்–படுத்துவது மிக அவசியம். அதேவேளை இந்தியா தன்னிறைவை நோக்கி முன்னேற வேண்டும் என்பது பா.ஜ.கவின் உறுதியான திட்டம்!**

மருத்துவத் துறையில் இந்தியா தன்னிறைவு அடைந்திருப்பதையே இந்த நிகழ்வு எடுத்துக் காட்டுகின்றது.

ஒருபுறம் இந்தியா உலகத்துடன் இணைந்திருக்கின்றது. ஆனால் இந்தியா தன்னிறைவை நோக்கி முன்னேற வேண்டும். வெளிநாடுகளுடன் நெருக்கமான நட்புறவை மேம்படுத்துவது மிக அவசியம். ஆனால் தன்னிறைவை அடைந்து கொள்வது பிரதானம் என்பது பா.ஜ.கவின் உறுதியான திட்டமாக உள்ளது.

நேபாளம் மற்றும் வளைகுடா நாடுகள் என்றெல்லாம் அண்டை நாடுகளுக்கு இந்தியாவின் எந்தவொரு பிரதமரும் பல ஆண்டுகளாக பயணம் மேற்கொள்ளவில்லை என்று சுட்டிக்காட்டுகிறார் நரேந்திர மோடி தலைமையிலான முன்னைய மத்திய அரசில் வெளியுறவுத்துறை இணையமைச்சராக இருந்த அக்பர்.

எனவே அயல்நாடுகளுடனான உறவுகளை வலுப்படுத்த பிரதமர் நரேந்திர மோடி முயற்சிகளை மேற்கொண்டார்.

*(17ஆம் பக்கம் பார்க்க)*

எஸ்.சாரங்கன்...

**பொருளாதார ரீதியில் நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்துவரும் அரசாங்கம், நாட்டில் அரசியல் ரீதியான ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதிலும் அக்கறை செலுத்தியிருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.**




**வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் விவகாரம் தீர்க்கப்பட வேண்டியதாகும். அதற்கு விரைந்து தீர்வு காணப்பட வேண்டும்**

# அந்நிய தலையீடு அவசியமில்லை!

# புரிந்துணர்வுடன் நாமே தீர்வுகளை காண்போம்!

## வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

வடக்கு மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு அடுத்த வருடத்திற்குள் தீர்வு காணப்பட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியிருப்பதன் ஊடாக அரசாங்கத்தின் உறுதியான நிலைப்பாடு தற்போது வெளிப்பட்டுள்ளது.

புதிய அரசியலமைப்பின் ஊடாக தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கத் தயாராக உள்ளதாக ஜனாதிபதி கூறியிருக்கிறார். அதன் பின்னர் சில நாட்களின் பின்னர் தமிழர் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதி மீண்டும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தீர்வுகள் குறித்துப் பேசும் நோக்கில் வடக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அடுத்த வாரம் தொடக்கம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க எதிர்பார்த்திருப்பதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, எமது பிரச்சினைகளுக்கு நாமே பேச்சுவார்த்தைகளை நடத்தித் தீர்வைப் பெற்றுக் கொள்வோம், வெளித் தரப்பினரின் தலையீடுகள் அவசியம் இல்லை என்பதையும் கூறியிருந்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவிருந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சாதகமான நடவடிக்கைகள் பல எடுக்கப்பட்டிருந்த போதும், அப்போதிருந்த அரசியல் சூழலால் பல்வேறு எதிர்ப்புக்கள் தோன்றியிருந்தன. இருந்தபோதும், ஜனாதிபதி என்ற அதிகாரத்துடன் ரணில் விக்கிரமசிங்க தற்போது முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு, பாரிய எதிர்ப்பினைத் தெரிவிக்கும் நிலையில் தென்னிலங்கை அரசியல் சக்திகள் இல்லாமல் இருப்பது

**நாட்டில் புரையோடிப் போயுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கும் முற்போக்கான திட்டங்கள்**

சாதகமானதொரு சூழலாக அமைந்துள்ளது.

தமிழர் தரப்பின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்ற விடயத்தில் இதயசுத்தியுடன் பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும். இதற்கு தமிழர் பிரதிநிதிகளும் பூரண ஒத்துழைப்பு வழங்கி, மத்திய அரசாங்கம் நீட்டியுள்ள நேசக் கரத்தை சரியாகப் பற்றிக் கொண்டு தமிழ் மக்களுக்கு விமோசனத்தைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் செயலாற்ற வேண்டும்.

அரசாங்கம் முன்னெடுக்கும் செயற்பாடுகள் குறித்து அவ்வப்போது பாராளுமன்றத்தையும், அதன் ஊடாகப் பொதுமக்களையும் தெளிவுபடுத்தி வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடந்த சில நாட்களுக்கு முன்னர் எகிப்தில் நடைபெற்ற கொப் 27 காலநிலை குறித்த சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றிருந்தார்.




இங்கு, தாம் நடத்தியிருந்த சந்திப்புக்கள் மற்றும் அம்மாநாட்டில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து பாராளுமன்றத்தில் விசேட கூற்றை முன்வைக்கும் போதே ஜனாதிபதி தமிழர் பிரச்சினைத் தீர்வு விடயத்தையும் சுட்டிக்காட்டியிருந்தார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், உண்மையை கண்டறியும் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழு, ஊழல் போன்றன தொடர்பில் புதிய சட்டங்களை உருவாக்க வேண்டும். ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் இதற்கான சட்டமூலங்களை அமைச்சர்கள் சமர்ப்பிக்கவுள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள எல்.ரி.ரி.ஈ சந்தேகநபர்களை விடுவிக்க நடவடிக்கை எடுத்தோம். மேலும் சிலர் விடுவிக்கப்பட வேண்டியுள்ளனர். எழுத்தாளர் ஒருவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார், அவருக்கு எதிரான வழக்கு நிறைவடைந்ததும் அவரை விடுவிக்க எதிர்பார்த்துள்ளோம்.

இது குறித்து முன்னாள் ஜனாதிபதியுடனும் கலந்துரையாடப்பட்டுள்ளது. மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என்றும் ஜனாதிபதி கூறியிருந்தார்.

காணாமல் போனவர்கள் குறித்த வழக்குகளைத் துரிதப்படுத்த வேண்டும் என்ற விடயம் பொதுவாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது. இதற்கான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி, நீதி அமைச்சருக்குப் பணிப்புரை வழங்கியிருந்தார். 75 ஆவது சுத்திர தினக் கொண்டாட்டத்தின் போது இந்தப் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும். யாரும் எமது நாட்டு பிரச்சினைகளில் தலையிடத் தேவையில்லை. எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு முன்னோக்கிச்செல்லவேண்டும். வடக்கு, கிழக்கின் பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

**பொருளாதார ரீதியில் நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து வரும் அரசாங்கம், அரசியல் ரீதியான ஸ்திரத்-தன்மையை ஏற்படுத்துவதிலும் அக்கறை!**

ஜனாதிபதியின் இந்தக் கருத்துக்களின் ஊடாக அரசியல் ரீதியில் காணப்படக் கூடிய சவால்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான முயற்சிகள் வெளிப்படுகின்றன. உண்மையில் நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு சர்வதேச நாணய நிதியம் மாத்திரமன்றி ஏனைய சர்வதேச அமைப்புக்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து உதவிகளைப் பெற்றுக் கொள்வதாயின் நிச்சயமாக அரசியல் ஸ்திரத்தன்மை என்பது அவசியம்.

அவ்வாறான பின்னணியில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதாயின் நிச்சயம் சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டியது காலத்தின் தேவையாகும். அத்துடன், எல்லா விடயங்களையும் இனவாதக் கண்ணோட்டத்தில்பார்க்காமல்,நாட்டில் வாழும் சகமக்கள் என்ற கண்ணோட்டத்துடன் பிரச்சினைகளை அணுகுவதும் அவசியமாகும்.

கடந்த பல தசாப்தங்களாக வெவ்வேறு பேச்சுவார்த்தைகள் நடைபெற்றிருந்த போதும் தமிழ் மக்கள் அவற்றின் மீது நம்பிக்கை இழந்தவர்களாகவே இன்னமும் காணப்படுகின்றனர். எனவே மீண்டும் நடத்தப்படக் கூடிய பேச்சுவார்த்தைகள் வெறும் அரசியல் காய்நகர்த்தலாக அன்றி உண்மையில், இதயசுத்தியுடனான முயற்சிகளாக இருக்க வேண்டும் என்பதே தமிழர்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

**வடக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அடுத்த வாரம் தொடக்கம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க ஜனாதிபதி எண்ணம்**

இதேவேளை, காலநிலை மாற்றம் மற்றும் உணவுப் பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் எந்தளவுக்கு ஸ்திரமான நிலைப்பாட்டில் உள்ளது என்பதையும் ஜனாதிபதி தனது உரையில் வெளிப்படுத்தியிருந்தார். காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக் கழகத்தை இலங்கையில் அமைக்க வேண்டும் என்று முன்னர் யோசனை முன்வைத்திருந்த ஜனாதிபதி, தனது விசேட காலநிலை ஆலோசகராக நேர்வேயின் முன்னாள் அமைச்சர் எரிக் சொல்ஹெய்மை நியமித்திருந்தார்.

இவ்வாறான பின்னணியில் எகிப்தில் நடைபெற்ற கொப் 27 காலநிலை மாற்றம் குறித்த மாநாட்டில் நேரடியாகப் பங்கேற்று உலகத் தலைவர்கள் பலருடன் ஜனாதிபதி சந்திப்புகளை நடத்தியிருந்தார். ஜீ20 நாடுகள் மற்றும் அபிவிருத்தியடைந்த நாடுகள் இந்த மாநாடு தொடர்பில் அக்கறை காண்பிக்காதமை குறித்த அதிருப்தியைத் தாம் வெளியிட்டிருந்ததாகவும், காலநிலை மாற்றத்தின் நிகழ்வுகளைக் குறைக்கும் வகையில் அபிவிருத்தியடைந்த நாடுகள் தொழிற்சாலை உமிழ்வைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை குறித்தும் சுட்டிக்காட்டியிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

நாம் இதே மாதிரி தொடர்ந்து செல்ல முடியாது. 2030 இல் நிலைமை மோசமடையுமென ஐ.நா பொதுச் செயலாளர் தனது உரையில் தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் பிரதமரிடம் இருந்து இமாலயம் கரைவதைப் பற்றி அறிந்து கொண்டோம். அது பாகிஸ்தானை பாதிப்பதாக தெரிவித்தாலும் அது கூடவே நேபாளம், இந்தியா, பங்களாதேஷ், மியன்மார்,மாலைதீவு, இலங்கை மற்றும் தென்னிந்தியாவையும் பாதிக்கும் அபாயம் உள்ளது.

எனினும் பாரிய நாடுகள் இது தொடர்பான எவ்வித கருத்தையும் இன்னும் முன்வைக்கவில்லை. இந்நிலைமை தொடருமாக இருந்தால் 2050 இல் 1.5பாகை செல்சியஸ் இலக்கு தொடர்பில் கொப்28 இல் ஜீ20 நாடுகளுடன் முட்டிமோதுவதை விட வேறு வழியில்லை.

எம்மைப் போன்ற நிலைப்பாடுடைய நாடுகளுடன் பேச்சு நடத்த ஆயத்தமாக இருக்கின்றோம். இன்னும் பல நாடுகள் இதற்காக காத்திருக்கின்றன. வெளிவிவகார அமைச்சரும் சுற்றாடல் அமைச்சரும் அதற்கான ஏற்பாடுகளை செய்வார்களெனவும் ஜனாதிபதி தனது உரையில் சுட்டிக்காட்டியிருந்தார்.

அடுத்ததாக உள்ள பிரச்சினை உணவுப் பாதுகாப்பு. இவ்விடயம் தொடர்பில் இலங்கைக்குப் பாரிய அச்சுறுத்தல் இல்லாவிட்டாலும், ஆபிரிக்க நாடுகளில் சுமார் 2030 மில்லியன் மக்கள் பாதிக்கப்படுவதுடன் அங்கே பெரும் எண்ணிக்கையான இறப்புக்கள் ஏற்படுமென்றும் அஞ்சப்படுகிறது. எனினும் இதுபோன்ற நாடுகளுக்காக எவ்விதமான உதவிகளோ நிதியுதவியோ பற்றி அங்கு கலந்துரையாடப்படவில்லை.

சிலரால் உணவுகளை உற்பத்தி செய்ய முடியாது. மேலும் சிலருக்கு உணவு உற்பத்திக்கு அவசியமான உரத்தைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. அவர்களுக்கு நாம் உதவ வேண்டும். அவர்களுள் அநேகமானவர்கள் கடனில் இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவ வேண்டுமென நான் சர்வதேச நாணய நிதியத்திடம் கூறியுள்ளேன்.

சர்வதேச நாணய நிதியம் உக்ரேனுக்கு உதவுகின்றது. அந்நாடு ரஷ்யாவுடன் போர் செய்கின்றது. அதுபோலவே இதுவும் வாழ்க்கைக்கானதொரு போராட்டமே என்பதனால் உக்ரேனுக்குப் போலவே இந்நாடுகளுக்கும் உதவுமாறு நாம் மேற்குலகை கேட்கின்றோம் என்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

இம்மாநாட்டின் போது சர்வதேச நாணய நிதிய முகாமைத்துவப் பணிப்பாளரை சந்திக்கக் கிடைத்த வாய்ப்புப் பற்றியும் ஜனாதிபதி பிரஸ்தாபித்திருந்தார். சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர் மட்டத்திலான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. கடன் மறுசீரமைப்புக் குறித்து இந்தியா மற்றும் சீனாவுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்பட்டதும் டிசம்பர் மாதத்திற்குள் இறுதி முடிவை எட்ட முடியும் என எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

பாராளுமன்ற ஜனநாயகத்தின் மீதும் அதன் கட்டமைப்பின் மீதும் அசையாது நம்பிக்கை கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரசாங்கம் முன்னெடுக்கும் திட்டங்களை அவ்வப்போது பாராளுமன்றத்திற்குக் தெளிவுபடுத்தி வருகின்றார்.

கடந்த கால ஜனாதிபதிகளுடன் ஒப்பிடுகையில் ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுகள் முக்கியமானதொரு முன்னேற்றமாகப் பார்க்கப்படுகிறது. அது மாத்திரமன்றி அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கியதாக பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருப்பதும் இதனூடாக வெளிப்படுகிறது. இவ்வாறான பின்னணியில் ஏனைய அரசியல் கட்சிகளும் இந்த சாதகமான சூழலைப் பயன்படுத்தி நாட்டை முன்னேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதுதான் மக்களின் எதிர்பார்ப்பாகும்.




**தமிழர் பிரச்சினைக்கான தீர்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு பாரிய எதிர்ப்பினைத் தெரிவிக்க முடியாமல் தென்னிலங்கை அரசியல் சக்திகள் பலமிழந்து இருப்பது சாதகமானதொரு சூழல்**





# ஹற்றன் நகரின் அழிவுக்கு வித்திடும் குப்பைக் கூளங்கள்

## தசாப்த காலமாக தொடரும் கழிவகற்றும் பிரச்சினை...

மலையகத்தின் நுழைவாயில் மற்றும் குறிஞ்சியின் அழகு நகரம் என்று வர்ணிக்கப்படும் ஹற்றன் நகரம் சுற்றுலாத்துறையில் முக்கியத்தும் மிக்க பிதேசமாகும். அத்தோடு அனைத்து மக்களால் போற்றப்படும் சிவனொளிபாத மலை யாத்திரை செல்லும் வழிப்பாதையாகவும் ஹற்றன் நகரம் உள்ளது. இவ்வாறு பல முக்கியத்துவங்களை கொண்ட இப்பிரதேசம் இன்று தினமும் குப்பை கூளங்கள், துர்நாற்றம் வீசும் நகரமாக மாறியுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கினறனர்.

பிரிட்டிஷ் வெள்ளையர்களின் காலனித்துவ ஆட்சியில் 1850 ஆம் ஆண்டு டிக்கோயா டீ கம்பனியை முகாமைத்துவம் செய்த வெள்ளைக்கார துரையால் ஹற்றன் நகரம் உருவாக்கப்பட்டது.

தேயிலை பெட்டிகளை ரயில் மூலம் ஏற்றிச்செல்ல ரயில் நிலையம் ஒன்று 1850 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு அந்த ரயில் நிலையத்திற்கு ஹற்றன் என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

அவ்வாறு பெயர் சூட்டப்பட்ட ஹற்றன் நகரம் மலையக தமிழர் அதிகமாக வசிக்கும் ஒரு மத்திய நகரமாகவும்,அனைவரும் விரும்பக்கூடிய ஒரு நகரமாகவும் இன்று விளங்குகிறது.

ஹற்றன் நகரம் கல்வி,கலாசாரம், வர்த்தகம்,இயற்கை அழகு போன்ற சகலவற்றையும் ஒருங்கே கொண்ட நகரமாகும் ஆனால் இன்று குப்பை நகரமாக மாறியுள்ளது. நகரில் நிறையும் குப்பைகளை அகற்றி கொட்டுவதற்கான இடம் இன்மையால் குப்பைகள் நகரசபையால் கிரமமாக எடுக்கப்படுவதில்லை என்ற குற்றஞ்சாட்டும் இருக்கிறது.குப்பை கூளங்களால் எமது நாட்டில் பல பிரச்சினைகள் உருவாகியுள்ள உருவாக்கப்பட்டுள்ளன. ஹற்றன் நகர குப்பை கூளங்களால் ஏற்பட போகும் சூழல் மாசு மற்றும் சுகாதார கேடு தொடர்பான சிக்கலுக்கு எவ்வாறு தீர்வை கொடுப்பது என்று மலையக மக்கள் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து தீர்மானிக்க வேண்டும்.

### முன்னாள் ஹற்றன்/டிக்கோயா நகரசபை தலைவர் அழகமுத்து நந்தகுமாரிடம் வினவிய போது,...



இந்த நகரம் கடந்த 90 வருடங்களாக நகர சபை அதிகாரத்தின் கீழ் இயங்கி வருகின்றது. பல தலைவர்கள் இந்த நகரத்தின் நகர சபை தலைவர்களாக இருந்துள்ளனர்.அந்த வகையில் நானும் இந்த நகரத்தின் நகர பிதாவாக 2018 ஆம் ஆண்டுக்கு முன்

இ ருந் துள்ளேன்.

கடந்த 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் ஆளும் கட்சி,எதிர்க்கட்சி ஆகியவை 08/08 என்ற சம பல உறுப்பினர்கள் தெரிவான நிலையில் நாணய சுழற்சி மூலம் இன்றைய தலைவர் எஸ். பாலச்சந்திரன் தெரிவு செய்யப்பட்டார்.

இது ஒருபுறம் இருக்க கடந்த 2018ஆம் ஆண்டுக்கு முன் ஹற்றன்/ டிக்கோயா நகர சபை தலைவர்களினால் சிறப்பாக பராமரிக்கப்பட்டு வந்திருந்த சுத்தமான ஹற்றன் நகரம் இன்று குப்பை நகரம் என புதிய பெயர் பெற்றுள்ளது.

2018ஆம் ஆண்டுக்கு முன்னரான காலத்தில் ஹற்றன் மற்றும் டிக்கோயா நகரம் ஆகியவற்றில் ஒதுக்கப்படும் திண்ம கழிவுகள் ஹற்றன் குப்பை கூளமான குடா ஓயா என்ற ஒதுக்கப்பட்ட பகுதியில் கொட்டப்பட்டு ஹற்றன் நகர சபையினால் பராமரிக்கப்பட்டு வந்தது.

மிக நீண்டகாலமாக குடா ஓயா பகுதியில் கொட்டப்பட்டு வந்த குப்பைகளால் அப்பகுதியில் பாரிய துர்நாற்றம்,சுகாதார பாதிப்பால் அங்கு குப்பை கொட்டக்கூடாது என இ.தொ. காவின் முன்னாள் தலைவர் அமரர் ஆறுமுகம் தொண்டமான் பணிப்புரை விடுத்திருந்தார் அத்தோடு வேறு இடம் ஒன்று பெறப்படும் எனவும் கூறியிருந்தார்.

இந்த நிலையில் அமரர் ஆறுமுகம் தொண்டமானின் பணிப்பை நான் ஏற்றுக் கொண்டேன்.

அதேநேரத்தில் ஹற்றன்/



டிக்கோயா நகர சபையின் தலைவராக நான் பதவி வகித்தேன். அந்த நேரத்தில் தினமும் குப்பைகள் நகரில் நிரம்ப ஆரம்பித்தது. மக்கள் என் மீது கோபம் கொண்டனர் முரண்பட்டனர்.

இந்த நிலையில் சுத்தமான நகரமாக மாற்றியமைக்கப்பட்ட ஹற்றன் நகரை அசுத்த நகராக்கிவிடாமல் நான், அமரர் ஆறுமுகம் தொண்டமானின் பணிப்புக்கு எதிராக நுவரெலியா மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, பெறப்பட்ட அவசர அனுமதி ஊடாக குப்பைகளை கொட்ட புதிய இடம் பெற்று தரும் வரை வழமையாக குப்பை கொட்டப்பட்ட குடா ஓயா என்ற இடத்தில் மீண்டும் குப்பைகள் கொட்டப்பட்டு துர்நாற்றம் ஏற்படாது பராமரிக்கப்பட்டு வந்தது.

இருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் இ.தொ.கா எதிர்பார்த்த வெற்றி ஹற்றன்/ டிக்கோயா நகர சபையில் கிடைக்காத நிலையில் நாணய சுழற்சி மூலம் இ.தொ.கா உறுப்பினரான இன்றைய சபை தலைவர் எஸ்.பாலச்சந்திரன் தெரிவான பின் பொலிஸ் நடவடிக்கை மூலம் மீண்டும் குடாஓயா பகுதியில் கொட்டப்பட்ட குப்பை நிறுத்தப்பட்டது.

அதன் பின்னர் ஹற்றன்/டிக்கோயா நகர சபை பகுதியில் தினமும் சேகரிக்கப்பட்ட குப்பைகளை கொட்டக்கலை சி.எல்.எம்பில் பகுதியில் பாரிய குழி தோண்டி அங்கு கொட்டப்பட்டு வந்தது.

பின் அங்கும் குப்பைகளை கொட்டி பராமரிக்க முடியாத நிலையில் தலவாக்கலை நகரசபை ,கொட்டக்கலை பிரதேச சபை மற்றும் அம்பகமுவ பிரதேச சபை ஆகியவை அவர்களின் பிரதேச குப்பைகளை கொட்டி பராமரித்த குப்பை கூளங்களில் ஹற்றன் குப்பைகளும் கொண்டு சென்று போடப்பட்டது.

காலப்போக்கில் தலவாக்கலை நகர சபை,கொட்டக்கலை மற்றும் அம்பகமுவ பிரதேச சபை ஆகியவை தமக்கு



- நகரசபையின் ஆட்சி மாற்றத்திற்கு ஏற்ப மாறுபடும் குப்பைக் கூள பிரச்சினை...
- மலையக அரசியல் தலைவர்கள் துரித நடவடிக்—கைகளுக்கு செல்ல வேண்டும்

சொந்தமான குப்பை கூளங்களில் ஹற்றன் குப்பைகளை கொட்டுவதற்கு எதிர்ப்பை தெரிவித்தன.

அத்துடன் ஹற்றன்/டிக்கோயா நகர சபை குப்பைகளை தலவாக்கலை,கொட்டக்கலை, அம்பகமுவ ரிக்காடன் பகுதிக்கு கொண்டு செல்லும் செலவும் கோடிக்கணக்கானது.

இதனை கட்டுப்படுத்த முடியாமலும், புதிய இடத்தை இ.தொ.கா சொன்னது போல பெறமுடியாமலும் செய்வதறியாத நிலையில் ஹற்றன் நகர குப்பைகள் தேங்க ஆரம்பமானது.

அத்துடன் உள்ளூராட்சி சபைகளுக்கான 255 சரத்து சட்டமான சுகாதார சட்டமும் இன்று மீறப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தற்போது ஹற்றன் நகரில் தினமும் ஆங்காங்கே தேங்கி நிரம்பும் குப்பைகளை அகற்ற பல ஆலோசனைகள் மற்றும் தற்காலிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எதுவும் கைகூடவில்லை.

இதற்கெல்லாம் காரணம் இ.தொ.கா என்றாகிவிடாது. நகரின் குப்பைகளை அகற்ற ஹற்றன்/டிக்கோயா நகரசபை திராணியிழந்துள்ளது என்று தான் சொல்ல வேண்டியுள்ளது.

நகர சபையை வழி நடத்தி செலவும் நிர்வாக தலைமைத்துவத்தை வழி நடத்தவும் முடியாத அனுபவம் அற்ற தலைவரை நியமித்தமை தான் முக்கிய காரணமாக இருக்கிறது என தெரிவித்தார்.

அத்துடன் எனது தலைமைத்துவத்தில் நகரின் சுகாதாரம் அனைவரும் விரும்பத்தக்க வகையில் பேசப்பட்டது.3R சிஸ்டம் பேணப்பட்டு குப்பைக் கூளங்கள் வகைபடுத்தப்பட்டு வந்தது.இந் நடவடிக்கை இன்று கடைப்பிடிக்கப்படுவதில்லை.



நகர சுத்திகரிப்பாளர்கள் சிறுது நேரம் வேலை செய்துவிட்டு எஞ்சிய நேரத்தில் வீதி வியாபாரத்தில் ஈடுப்படுகின்றனர்.பொது சுகாதார பரிசோதகர்கள் வேறு தொழில்களில் ஈடுப்பட்டு பணம் சம்பாதிக்கின்றனர்.

குப்பை சேகரிப்போர் கடைகளில் குப்பை அகற்ற 100/=ரூபாவும்,வீடுகளில் குப்பை அகற்ற 50/=ரூபாவும் இலஞ்சமாக பெறுகின்றனர்.

இதையெல்லாம் கண்டுகொள்ளாமல் நகர சபை தலைவர் நிர்வாக முகாமைத்துவத்தை நேர்த்தியாக செய்யாமல் ஊழல் நிரைந்த நிர்வாகத்தை வழிநடத்தி செல்கிறார். உள்ளூராட்சி அதிகார சபையும் இதை கண்டு கொள்ளாமல் உள்ளது.

இதை இச்சபையின் உறுப்பினர், முன்னாள் தலைவன் என்ற வகையில் சபை அமர்வில் போது சுட்டிக்காட்டினால் தலைவர் கவனிக்கிறேன்,நடவடிக்கை எடுக்கிறேன் என சொல்லி வருகிறார்.

இந்த நிலையில் ஹற்றன் நகரின் சுகாதார சீர்கேட்டால் நகருக்கு வெளியிடங்களில் இருந்து வரும் மக்கள் முகம் சுழிப்பதோடு சிவனொளிபாதமலை யாத்திரை காலம் டிசம்பர் மாதம் ஆரம்பமாக உள்ளது. அத்துடன் அரசியல் தலைவர்களான ஜீவன் தொண்டமான், பழனி திகாம்பரம், வீ.இராதாகிருஸ்ணன் போன்றோரும் இன்றைய ஹற்றன் நிலையை பார்த்து அதிருப்தி அடைந்துள்ளதை எனக்கு உறுதியாக சொல்ல முடியும்.

இந்த நிலையில் சகல வதிகளையும் கொண்ட அழகிய ஹற்றன் நகரை மாநகராக மாற்ற வேண்டும் என்ற கனவு படிப் படியாக குறைந்து அந்த அந்தஸ்தையும் இழந்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஹற்றன் நகரத்தில் தேங்கும் குப்பைக் கூளங்களால் நகரில் மக்கள் நடமாட கூட முடியாத நிலை தோன்றியுள்ளது.துர்நாற்றம் மற்றும் கட்டாக்காலி நாய்கள் மற்றும் கால் நடைகளின் தொல்லையும் அதிகரித்துள்ளது.நகரிலுள்ள உணவகங்களில் சாப்பிட கூட பொதுமக்களால் முடியாத சூழல்.நகரில் வர்த்தக நடவடிக்கைக்கும் பாதகம் ஏற்படும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது.ஹற்றன் நகர சபையால் ஏன் குப்பை கொட்டுவதற்காக ஒரு காணியை எடுக்க முடியாத காரணிகள் என்ன இதை நகர முதல்வர் தெளிவுப்படுத்த வேண்டும். குப்பை கூளங்களை அகற்றுவதற்கு தற்காலிக நடவடிக்கையை நகர சபை

**ஆறுமுகம் ரமேஸ்**

---





# ஹேவாஹேட்ட நகருக்கு செல்லும் பிரதான வீதியின் அபிவிருத்திப் பணிகள் கைவிடப்பட்ட நிலையில்

## குழிகளையாவது மண்ணிட்டு நிரப்பி தருமாறு மக்கள் கோரிக்கை

கண்டி, கலஹா நகரில் இருந்து ஹேவாஹேட்ட நகருக்கு செல்லும் பிரதான வீதியின் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது முழுமையடையாமல் கைவிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக கலஹா ஹேவாஹேட்ட பிரதான வீதியில் வாகனங்கள் செல்ல முடியாத நிலைக்கு குண்டும் குழியுமாக காணப்படுகிறது.

இப்பாதையில் தினமும் தனியார், இ.போ.ச பஸ்கள் பயணிக்கின்றேன். மழை காலங்களில் பாதையில் உள்ள குழிகளில் நீர் நிரப்பியுள்ளதால் போக்குவரத்தின் போது கால தாமதம் ஏற்படுகிறது. அத்தோடு மழை காலங்களில் இப்பாதையால் நடந்து செல்ல முடியாத அளவுக்கு நீர் நிரம்பி வழிவதால் பாடசாலை



மாணவர்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாவதாக தெரிவிக்கப்படுகிறது.

முச்சக்கரவண்டி சாரதிகளும் இப்பாதையில் பயணிப்பதை தவிர்ப்பதால் அவரச தேவைக்காக நகரத்துக்கு செல்வோர் சொல்லொணா துன்பங்களுக்கு உள்ளாவதாக தெரிவிக்கின்றனர். பாதை சீரமைப்பு பணிகளுக்கு கொண்டுவரப்பட்ட கருங்கற்கள் பாதை ஓரங்களில் கொட்டப்பட்டுள்ளதால் அவையும் போக்குவரத்துக்கு தடையாக உள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷவின் கிராமத்துக்கு ஒரு வேலைத்திட்டத்தின் கீழ் பிரதேசங்களில் பாதை அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்தது. அந்த திட்டத்திலே இந்த பாதைக்கான அபிவிருத்தி பணிகளும் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி நிலைமையால் பாதை அபிவிருத்தியும் கைவிடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.இப் பாதையில் ஏற்பட்டுள்ள பாரிய குழிகளையாவது மண் போட்டு நிரப்பி போக்குவரத்துக்கு வழி செய்யுமாறு பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

**கம்பளை லோகேஸ்**

# அகவை 80 காணும் மாத்தளை மலரன்பன்

மலையகத்தின் புகழ்பூத்த மூத்த எழுத்தாளர்களில் ஒருவரான மாத்தளை மலரன்பன், நவம்பர் 14 தனது 80 வது வயதில் அடியெடுத்து வைக்கிறார். பெருமாள் ஆறுமுகம் என்ற இயற்பெயர் கொண்ட அவர், மலையக தமிழ் மக்களின் சமூக வாழ்வில், மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர்சங்கம், மலைநாட்டு எழுத்தாளர் மன்றம், மலையக இளைஞர் முன்னனி, மலையக மக்கள் முன்னணி ஆகிய பல்வேறு இயக்கங்களுடன் இணைந்து சமூக மேம்பாட்டுக்காக கடுமையாக உழைத்த ஒரு பெருந்தகையாவார். கலை இலக்கியத்துறையை பொறுத்தவரை, மலரன்பனின் பங்களிப்பு பல்பரிமாணம் கொண்டதாகும். சிறுகதை, நாவல்கள், குறுநாவல்கள், வானொலி நாடகங்கள், மொழிபெயர்ப்புகள், திரைக் கதை வசனம், மெல்லிசைப் பாடல்கள் என்று அவர் எழுதிக்குவித்தவை ஏராளம். தனது மலையக சமூகத்தின் குறிப்பாக பெருந்தோட்டத்தொழிலாளர்களின் மேம்பாட்டுக்காக தனது எழுத்தாற்றலை தன்னால் இயன்றவரை பயன்படுத்தி வந்திருக்கும் அவர் மலையக மக்களின் வாழ்வியலை மையமாகக் கொண்டு எழுதிய சிறுகதைகள் சிறப்பு வாய்ந்தவையாக அமைந்தன.



1960 களில் அமரர்கள் இர.சிவலிங்கம், எஸ்.திருச்செந்தூரன் ஆகியோரின் கடும் முயற்சியின் காரணமாக எழுச்சியுற்ற மலையக கலை இலக்கிய எழுத்து இயக்கப் போக்குகளை தொடர்ந்து நோத் மாத்தளை தோட்டத்தில் மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்க முதலாவது கிளையை மலரன்பன், பி. செல்லப்பா, இரா. முனீஸ்வரன், என். சரவள்ளி, ஆகியோரை அணிதிரட்டி 1962 ஏப்ரலில் ஆரம்பித்தார்.

இதனால் எழுச்சியுற்ற மாத்தளை மாவட்ட தமிழ் இளைஞர்கள், கலை இலக்கிய சமூக பணிகளில் தீவிர நோத் மாத்தளை தோட்ட முதல் பட்டதாரியான மரதன் கிருஷ்ணன், கவிஞர் பொ.பூபாலன், கவிஞர் பொன்னழகு, சி.காளிமுத்து, கட்டுரையாளர் எச். எச். விக்கிரமசிங்க, மாத்தளை ஆர். ராஜலிங்கம் போன்றோர் அடங்குவர். அப்போது மாத்தளை புனித தோமையர் கல்லூரியில் பயின்ற பி. செல்லப்பாவுடன் இணைந்து நோத் மாத்தளை தோட்டப் பகுதிகளில் இரவு பாடசாலை, நூல்நிலையங்கள், விளையாட்டுக் கழகங்களை தாபிப்பதில் மலரன்பன் முன்னின்று செயற்பட்டார். கோவில் திருவிழாக்களில் மலையக சமூக சிந்தனையாளர்களான எஸ். திருச்செந்தூரன், தர்மலிங்கம், இர.சிவலிங்கம், கண்டி அசோகா நடராசா போன்றவர்களின் சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்யப்பட்டு இளைஞர்கள் மத்தியில் அறிவுத்தேடலுக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. அந்த காலகட்டத்தில் எழுத்துத் துறையில் கால்பதித்த மலரன்பன் ஜோதி, ராதா பத்திரிகைகளில் சிறுகதைகளை எழுதத் தொடங்கினார். இவை அனைத்தும் தமிழக ராணி, குமுதம் போன்ற சஞ்சிகைகளில் வெளிவந்த சிறுகதைகள் போன்று அமைந்தன. நாளடைவில் பிரபல படைப்பிலக்கியவாதியாக எழுச்சிபெற்ற மலரன்பன் சிறந்த ஒரு விளையாட்டு வீரருமாவார். மாத்தளை கிறிஸ்தவ தேவாலயக் கல்லூரியின் ஹொக்கி அணியில் பங்கேற்ற மலரன்பன் தொடர்ச்சியாக இரு ஆண்டுகள் திறமையாக விளையாடி கல்லூரிக்கு பல வெற்றிகளைப் பெற்றுக்கொடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மலரன்பனின் படைப்புக்கள் பல விருதுகளைப் பெற்றன. மலைநாட்டு எழுத்தாளர் மன்றத் தலைவர் ராமு நாகலிங்கம் கண்டியில் இருந்து வெளியிட்ட 'செய்தி "பத்திரிகை நடத்திய அகில இலங்கை சிறுகதைப் போட்டியில் அவரின் 'சடங்கு" என்ற சிறுகதைக்கு முதல் பரிசு வழங்கப்பட்டது.

தினபதி பத்திரிகையின் தினம் ஒரு சிறுகதை திட்டத்தில் மலைநாட்டு எழுத்தாளர் மன்றத் தலைவர் என்.எஸ்.எம். இராமையாவின் சிபாரிசுடன் 1968 இல் மலரன்பன் எழுதிய 'பார்வதி' என்ற சிறுகதை மிகச் சிறந்த கதை என்று பலராலும் பாராட்டப்பட்டது. பிரபல எழுத்தாளர் அமரர் எஸ்.பொ. தமது கதைக் களம் என்ற கட் டுரையில் மலரன்பனின் சிறுகதைகளை வெகுவாக பாராட்டி எழுதியிருந்தார் என்பது





குறிப்பிடத்தக்கது. நாடளாவிய மட்டத்தில் பத்து சிறுகதைகளை தெரிந்தெடுத்து தொகுத்தால் அதில் மலரன்பனின் 'பார்வதி' யும் அடங்கும் என்று எஸ்.பொ. எழுதினார். மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்துடன் சேர்ந்து வீரகேசரி நடத்திய நான்காவது, ஐந்தாவது சிறுகதைப் போட்டிகளில் பங்குபற்றி மலரன்பன் சிறப்பு பரிசில்களைப் பெற்றார். நோத் மாத்தளை ரப்பர் தோட்ட வாழ்வையும் பண்பாட்டையும் பிரதிபலிப்பதாக மலரன்பனின் 'பால் வனங்களில்" என்ற நாவல் அமைகிறது. பிற்காலத்தில் அந்த நாவலை கொடகே நிறுவனம் வெளியிட்டதோடு ஒரு இலட்ச ரூபாய் பரிசு வழங்கியும் கௌரவித்தது. 'தனிமரங்களும் பெரு நெருப்பும்" என்ற அவரின் குறுநாவல் மலையக இளைஞர் முன்னணி நடத்திய குறுநாவல் போட்டியில் முதல் பரிசைப் பெற்றது. வானொலி நாடகங்களைப் பொறுத்தவரையில் அவரின் 'தேன் சிந்தும் வானம்" தொடர் நாடகமும் பத்தாம் திகதி, வானவில், கறிவேப்பிலை, ஆகிய ஓரங்க நாடகங்களும் முக்கியமானவை.

இவரது பல சிறுகதைகள் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டு சிங்கள வாசகர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. உபாலி வீரரத்ன, இப்னு அசுமத், ரஞ்சனி மீரிகம, டி.எம். ரணவீர ஆகியோர் மலரன்பனின் சிறுகதைகளை மொழிபெயர்த்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. சிங்கள மொழியில் புலமைகொண்ட மலரன்பன், தேனகம சிறிவர்தன, ரட்ணதாச வெரகே, நிசாந்த கருணாரத்ன போன்றோரின் சிறுகதைகளை தமிழில் மொழிபெயர்த்து மல்லிகை, ஞானம், ஜீவநதி ஆகிய சஞ்சிகைகளில் வெளிவரச்செய்தார். பியதாச வெலிகன்னயின் 'எயா ஹரி அப்புறு லமெயக்' என்ற நாவலை 'அவன் அபூர்வ சிறுவன்' என்ற பெயரிலும் விமலா ஆரியரட்னவின் 'மாத்தளே சட்டனே அத்துறு கத்தாவ" என்ற நாவலை 'மாத்தளை போராட்டத்தின் ஓர் உபகதை' என்ற பெயரிலும் மலரன்பன் மொழிபெயர்த்துள்ளார்.

மாத்தளையைச் சேர்ந்த பண்ணாமத்துக் கவிராயர் மலரன்பனின் 12 சிறுகதைகளை தெரிவுசெய்து மொழிபெயர்த்து ஜீனிசஸ் என்ற பெயரில் ஆங்கிலச் சிறுகதைத் தொகுப்பாக வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. மூன்று அரச தேசிய சாகித்திய விருதுகளையும் மூன்று கொடகே தேசிய இலக்கிய விருதுகளையும் மூன்று மத்திய மாகாண சாகித்திய விருதுகளையும் பெற்ற மலரன்பனுக்கு, பெ. சந்திரசேகரன் சிபாரிசின் பேரில் கலாபூஷண விருதும், மனோ கணேசன் இந்து கலாசார அமைச்சராக இருந்தபோது கலைமாமணி விருதும் வழங்கப்பட்டன.

மாத்தளை மாவட்ட செயலகத்தின் வாழ்விலே ஒருமுறை விருதும், பல்லேபொல பிரதேச செயலாளர் விருதும், இரு தடவைகள் மத்திய மாகாண முதலமைச்சர் விருதும், மட்டக்களப்பு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் வழங்கிய தமிழியல் விருதும், கண்டி தமிழ்ச்செல்வம் வழங்கிய விருதும் இவரின் கலை இலக்கிய படைப்பாற்றலின் சிறப்புக்கு கிடைத்த கௌரவங்களாகும். இவற்றை எல்லாம் விட மாத்தளை எஸ். சிவஞானம் மாத்தளை மாநாகர சபையில் பிரதிமுதல்வராக இருந்தபோது மலரன்பனது புகைப்படத்தை மாத்தளை புது நூல்நிலையத்தில் திறந்து வைத்தமை பெரும் சிறப்புக்குரியதாகும்.



எச்.எச்.விக்கிரமசிங்க ...



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆனந்த சமரக்கோன் கலையகத்தில் தமிழ் நிகழ்ச்சி ஆலோசகர் கலாபூஷணம் மகேந்திரனின் ஏற்பாட்டில் நடைபெற்ற மதுரகானம் இசை நிகழ்ச்சி (10) வியாழக்கிழமை மாலை நடைபெற்ற போது கலாபூஷணம் ரகுநாதனுக்கு கலாநிதி தில்லையம்பல சிவகுமார் விருது வழங்கி வைப்பதையும் கல்வி ராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார், நிறுவனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க டவர் ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாசீம் உமர் ஆகியோரையும் காணலாம்.

2023ஆம் வருடத்தில் தெங்கு கைத்தொழில் பதிவுகள் ஆரம்பமாகியுள்ளன

1971ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் திருத்தப்பட்ட ஒழுங்குவிதியின் பிரகாரம் மற்றும் 1972ஆம் ஆண்டின் 15009/01ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரிகை கட்டளையின் பிரகாரம் தெங்கு சார்ந்த உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள சகல உற்பத்தியாளர்கள் மற்றும் பொதியிடுபவர்கள் தெங்கு அபிவிருத்தி அதிகார சபையில் வருடாந்தப் பதிவைப் பெற்றுக்கொள்ளுதல் கட்டாயமாகும்.

பதிவு செய்வதற்கு www.cda.gov.lk எனும் இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக விண்ணப்பத்தில் வேண்டும்.

படிவத்தை நிரப்புவதற்கு முன் அறிவுரைகளை நன்றாக வாசித்து குறித்த கட்டணம் (வங்கி பற்றுச்சீட்டு) மற்றும் ஏனைய சான்றிதழ்களின் அகப்பட பிரதிகளை (Scan Copy) பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

2023ஆம் வருடத்திற்கான பதிவு செய்தல் 2022-11-15ஆம் திகதி ஆரம்பிக்கப்படும்.

பதிவு செய்யப்படும் நாள் முதல் குறித்த வருடத்தின் டிசம்பர் 31ஆம் திகதி வரை இந்தப் பதிவு செல்லுபடியாகும்.

மேலதிக தகவல்களுக்கு
பிரதேசத்திற்குப் பொறுப்பான வெளிக்கள அதிகாரிகள்

தென் மாகாணம் - நிசும் - 076-9901037
சப்ரகமுவ மாகாணம் - தனுஷ்க - 076-9901036
வட மாகாணம் - டி. அஹமட் - 077-9611248
வடமத்திய மாகாணம் - மனோஜ் - 076-9901039
கிழக்கு மாகாணம் - ஏ. அஹமட் - 077-2716797
கம்பஹா மாவட்டம் - ஹேமச்சந்திர - 076-9901032
புத்தளம் மாவட்டம் - சந்தன - 076-9901033
குருநாகல் மாவட்டம் - சானக - 076-9901034
கொழும்பு / களுத்துறை மாவட்டங்கள் - லங்காபுர - 076 9901038

தெங்கு அபிவிருத்தி அதிகார சபை, கோட்டை அலுவலகம்,
தொலைபேசி: 011 2322794 / 011 2322795 / 011 232 2796
இல. 11, டியூக் வீதி, கொழும்பு 11.

தெங்கு அபிவிருத்தி அதிகார சபை, தலைமை அலுவலகம்,
தொலைபேசி: 011 2502503 / 011 2502504

கீர்த்தி ஸ்ரீ வீரசிங்க (தலைவர்)
தெங்கு அபிவிருத்தி அதிகார சபை

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு
தெங்கு அபிவிருத்தி அதிகார சபை

பிரத்தியேகமாக புலம்பெயர்ந்த பணியாளர்களுக்கும் அவர்களது பயனாளிகளுக்கும்!!!

தனியொரு பணப் பரிமாற்றத்தில் ரூ.20,000 இற்குச் சமமான அல்லது அதற்கு மேற்பட்ட வெளிநாட்டு நாணயம் உங்களால் அல்லது உங்கள் அன்புக்குரியவர்களால் அனுப்பப்பட்டுள்ளதா?

உங்களுக்கான பரிமாற்றல் செலவு மீளளிப்பாக ரூ. 1,000/= ஊக்குவிப்புத் தொகையை*

உரிமம்பெற்ற வங்கிகளிடமிருந்து, வெளிநாட்டுப் பணத்தைப் பெற்றுக்கொள்ளும் முகவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள்....

*உரிமம்பெற்ற வங்கிகளில் பேணப்படுகின்ற ரூபாய்க் கணக்குகளுக்குக் கிடைக்கப்பெறுகின்ற மற்றும் கருமபீடத்திலான பணப்பெறுகைகளுக்கு மாத்திரம் ஏற்புடையது.

இலங்கை மத்திய வங்கியின் செய்தி

வெளிநாட்டுப் பணவனுப்பல்கள் வசதிப்படுத்தல் திணைக்களம் 0112 477 426 0112 477 710 frfd@cbsl.lk

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

### வருடம் முழுவதும் சூரிய ஒளி கிடைக்கும் எமது நாடு

# சூரிய சக்திவளத்தை நிலைபேறுடைய விதத்தில் விருத்தி செய்து பயனடைவது எப்போது?

**ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் பற்றிய COP 27 மாநாடு நவம்பர் 6 தொடக்கம் 18 வரையிலான காலப்பகுதியில் எகிப்தில் நடைபெற்று வருகிறது. இதுவரை வெளியிடப்பட்டுள்ள தகவல்களின் படி சர்வதேச ரீதியில் உலக நாடுகளால் முன்னர் வழங்கப்பட்டிருந்த காலநிலைப் பாதுகாப்பு பற்றிய உறுதிமொழிகள் போதியளவு முன்னேற்றம் காண முடியாமல் தேங்கிக் கிடப்பதாகத் தெரியவருகிறது.**

2019 _2020 காலப்பகுதியில் ஏற்பட்ட கொவிட் 19 கொள்ளை நோயின் தாக்கமும் அதன் பின்னர் பொருளாதாரங்கள் தம்மை மீள் சீரமைக்க மேற்கொண்டுவரும் பிரயத்தனங்களும் இப்போது ஏற்பட்டுவரும் உலகளாவிய பொருளாதார மெதுவடைதலைச் சமாளிக்க ஒவ்வொரு நாடுகளும் காட்டிவரும் எதிர்வினைகளும் காலநிலைப் பாதுகாப்பு தொடர்பில் உலக நாடுகள் காட்டிவந்த அர்ப்பணிப்பில் ஒரு தொய்வுநிலை ஏற்பட்டுள்ளமையை சுட்டி நிற்கின்றன. குறிப்பாக பொருளாதார நடவடிக்கைகளுக்காக எரிபொருளை எரிக்கும் போதும் ஏற்படும் காபன் உமிழ்வுகள் 2021ஆம் ஆண்டில் முன்னொரு போதும் இல்லாத வகையில் அதிகரித்து 36.3 பில்லியன் தொன்களாகப் பதிவாகியுள்ளது. 2020 ஆம் ஆண்டில் பொருளாதார நடவடிக்கைகள் முடங்கிக் கிடந்த காரணத்தினால் இது 31.5 பில்லியன் தொன்களாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2010ஆம் ஆண்டுகாலப்பகுதியிலிருந்து நோக்குமிடத்து காபன் உமிழ்வின் அளவு தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்றுள்ளமை தெளிவாகத் தெரிகிறது. 2015ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட பேண்தகு அபிவிருத்திக் குறிக்கோள்களில் இவ்விடயம் அழுத்தியுரைக்கப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்துவந்த காலப்பகுதியில் காபன் உமிழ்வு அதிகரித்துள்ளதுடன் கொவிட் நோய் காரணமாக 2020இல் தற்காலிகமான ஒரு வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. இப்போது அது மீண்டும் அதிகரித்துச் செல்கிறது. எகிப்தில் நடைபெறும் மாநாட்டில் 151 நாடுகள் தேசிய ரீதியில் காபன் உமிழ்வைக் குறைப்பது தொடர்பில் கவனம் செலுத்துவதாக அறிவித்துள்ளன. இந்த உறுதிமொழிகள் மீறப்படுமாயின் உலக வெப்பநிலை அதிகரிக்கும் அளவை 1.5 செல்சியஸ் மட்டத்தில் வைத்திருக்க முடியாது எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மறுபுறம் உலகளாவிய ரீதியில் காடழிப்பும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. 2020 இல் இருந்து காடழிப்பு நடைபெறும் அளவை வருடாந்தம் 10 சதவீதத்தினால் குறைப்பதாக 145 நாடுகள் உறுதிமொழிவழங்கி இருந்தன. காடழிப்பு துரிதமாக இடம் பெற்றுவரும் அமேசன் பிராந்தியத்தில் 2022ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் காடழிப்பு வீதம் 23 சதவீதமாக அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி காலநிலைக்கு ஊறுவிளைவிக்கும் மீதேன் வாயு உமிழ்வை 2020 தொடக்கம் 2030 வரையிலான காலப்பகுதியில் 30 சதவீதமாகக் குறைப்பதாக 117 நாடுகள் உறுதி மொழி வழங்கியிருந்தபோதிலும் வெறும் 15 நாடுகள் மாத்திரமே இந்தவிடயம் தொடர்பில் உறுதியாக திட்டங்களை முன்வைத்திருந்ததாக இக்காலநிலை மாநாட்டில் சுட்டிக்காட்டப்பட்டது.

39 நாடுகள் 2022 இறுதியில் பெற்றோலியப் பயன்பாடு தொடர்பில் அரசாங்கத்தின் நிதிப்படுத்தலைக் நிறுத்தவதாக அறிவித்திருந்தன. ஆனால் அவற்றுள் 6 நாடுகள் மாத்திரமே அதனை செயலில் காட்டியிருந்ததாக குறிப்பிடப்பட்டது.

**இலங்கை அரசாங்கம் புதுப்பிக்கத் தக்க சக்திவளங்களுக்கு மாறுவது பல்துறை நன்மைகளை ஈட்ட உதவும்.**



உலகலாவிய நிதியில் காலநிலைப் பாதுகாப்பிற்காக பாதிப்புக்குள்ளாகும் நிலையில் உள்ள நாடுகளுக்கு உதவும் பொருட்டு 100பில்லியன் டொலர் பெறுமதியான நிதியம் ஒன்றை தாபிக்க வேண்டுமென 2009 இல் விதந்துரைக்கப்பட்டிருந்தது. ஆனால் 2020ஆம் ஆண்டளவில் இந்நிதியத்திற்கு 83.3 பில்லியன் டொலர்கள் கிடைத்துள்ளதாக வளர்ச்சியடைந்த நாடுகள் கூறுகின்றன. ஆனால் வேறு தகவல்களின் படி இந்நிதியத்திற்கு வெறும் 24.5 பில்லியன் டொலர்கள் மாத்திரமே சேர்ந்துள்ளதாகத் தெரிகிறது. இந்த நிதியத்தில் இருந்து ஏதாவது உதவிகள் கிட்டுமா என்று இலங்கை முயற்சிப்பதாகத் தெரிகிறது. காலநிலைப் பாதுகாப்பு தொடர்பில் இலங்கை மேற்கொண்டுவரும் முயற்சிகளை சுட்டிக்காட்டி இது தொடர்பில் நிதிவழங்கப்படுமாயின் முன்னேற்றம் காணலாம் என நியாயம் கற்பித்து நிதியைப் பெற முயலலாம். பூமத்திய கோட்டிற்கு அண்மையில் அமைந்துள்ள வருடம் முழுவதும் ஏறத்தாழ சமஇராக் காலம் கொண்டுள்ளதுடன் வருடம் முழுவதும் பெரும்பாலான நாட்களில் சூரிய ஒளி கிடைக்கும் நாடாகிய இலங்கை சூரிய சக்திவளத்தை நிலைபேறுடைய விதத்தில் விருத்தி செய்து நன்மையடைய முடியும். அங்கொன்றும் இங்கொன்றுமான சூரிய சக்தி வளப்பண்ணைகள் சிறியளவில் அமைக்கப்பட்டுள்ள போதிலும் தேசிய ரீதியில் பேரளவில் அதற்கான முயற்சிகள் இன்னும் இளநிலைப்பருவத்திலேயே உள்ளன. நிலத்தில் மட்டுமன்றி கடற்பரப்பிலும் சூரிய சக்திவளத்தைப் பெறலாம். அண்மையில் சிங்கப்பூர் நாடு லாவோஸ் நாட்டிலிருந்து மின்சாரத்தை இறக்குமதி செய்ய மேற்கொண்ட நடவடிக்கையை அதற்கொரு உதாரணமாகக் கூறலாம்.

> **பெற்றோலியவளத்தின் முக்கிய நாடாகக் கருதப்படும் சவூதி அரேபியாவே புதுப்பிக்க சக்தி வளங்களுக்கு கிரமமாக மாறிவருகிறது**

பொதுமக்களின் வீடுகளில் சூரிய கலக் கட்டமைப்புகளை அமைப்பதற்கான நிதிவசதிகளை வழங்குவதன் மூலம் நிலைபேறுடைய விதத்தில் பெற்றோலியத்தைப் பயன்படுத்தி மின்தேவைப் பூர்த்தி செய்யும் நிலைமையில் இருந்து மீட்சி பெற முடியும். இன்றைய சூழ்நிலையில் சூரிய கல மின்கட்டமைப்பொன்றை நிறுவ பெரும் தொகைப் பணத்தைச் செலவிட வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. அரசாங்கம் காலநிலை பாதுகாப்புக்காக சர்வதேச சமூகத்திடமிருந்து நிதிவசதிகளைப் பெற்றால் நடுத்தர வர்க்கத்தினருக்கு சூரிய கலத்தொகுதிகளைப் பொருத்துவதற்காக செலவிட முடியுமாயின் நாட்டின் மின் உற்பத்திக்காகச் செலவிடப்படும் எரிபொருள் செலவுகளை மீதப்படுத்தவதோடு, காபன் உமிழ்வுக்கு எதிரான அதன் அர்ப்பணிப்பையும் நிறைவேற்றலாம். பெற்றோலியப் பயன்பாட்டிலிருந்து மீள்வதை விரும்பாத அழுத்தக் குழுக்களின் மாபியாக்கள் சூரிய சக்தி பயன்பாட்டுக்கு மாறும் முயற்சியைத் தடுத்துவருவதாகவும் செய்திகள் வருகின்றன. பெற்றோலியவளத்தின் முக்கிய நாடாகக் கருதப்படும் சவூதி அரேபியாவே புதுப்பிக்க சக்தி வளங்களுக்கு கிரமமாக மாறிவருகிறது. இலங்கை அரசாங்கம் புதுப்பிக்கத் தக்க சக்திவளங்களுக்கு மாறுவது பல்துறை நன்மைகளை ஈட்ட உதவும். சம்பந்தப்பட்டவர்கள் கவனிப்பார்களா?

> **பெற்றோலியப் பயன்பாட்டிலிருந்து மீள்வதை விரும்பாத அழுத்தக் குழுக்களின் மாபியாக்கள் சூரிய சக்தி பயன்பாட்டுக்கு மாறும் முயற்சியைத் தடுத்துவருவதாகவும் செய்திகள் வருகின்றன**

---



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

# எகிப்தின் காலநிலை மாற்றத்திற்கான மாநாடும் அதன் போலித் தன்மையும்

**உலகளாவிய அரசியல் போக்கில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் அதீதமானதாக அமைந்துள்ளன. குறிப்பாக காலநிலை மாற்றம் உலகம் முழுவதும் பொருளாதார நெருக்கடியை கடந்து பாரிய இயற்கை அழிவுகளால் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. காலத்திற்கு காலம் உலகில் வளர்ச்சியடைந்த நாடுகள் ஒன்று கூடி சில தீர்மானங்களை எடுப்பதுவும் பின்னர் அதனை நடைமுறைப்படுத்தாது மீளவும் ஒன்று சேர்ந்து முதல் எடுக்கப்பட்ட தீர்மானத்தில் அரைகுறையான அமுலாக்கங்களை நிகழ்த்துவதும் வழமையான அரசியலாக தெரிகிறது. அத்தகைய நகர்வின் நீட்சியொன்றாகவே எகிப்தில் கூடிய உலக நாடுகளின் தலைவர்களின் உரையாடல் நிகழ்ந்து வருகிறது. இக்கட்டுரையும் கோப்–27 மகாநாட்டிற்கான தீர்மானங்களையும் அதன் அரசியலையும் தேடுவதாக அமைந்துள்ளது.**

06.11.2022 அன்று எகிப்தின் தலைநகரான கெய்ரோவில் புறநகர் பகுதியில் உலக நாடுகளின் தலைவர்கள் ஒன்று கூடினர். 1992 முதல் நிகழ்ந்துவரும் இம்மகாநாடு 1994 முதல் முழுமையாக செயல்வடிவம் பெற்று இயங்கிவருகிறது. இதில் 198 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன. 1995 முதல் பருவநிலை தொடர்பிலான உரையாடலை நாடுகள் சந்திப்பதன் மூலம் விவாதித்து வருகின்றன. மகாநாட்டின் தொடக்க உரையை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டனியோ குட்டரெஸ் ஆற்றினார். அவரது உரையில் பருவநிலை உச்சி மகாநாட்டுடன் மனித குலம் ஒத்துழைக்க வேண்டும் அல்லது அழிவை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும். நாம் பருவநிலை அழிவுக்கான பாதையில் இருக்கிறோம். நமது கால்கள் தொடர்ந்து அதனை நோக்கி வேகமாக நகர்ந்து வருகின்றன என எச்சரித்துள்ளார்.

இந்த மகாநாட்டில் பசுமை இல்லவாயுக்களை எவ்வாறு குறைப்பது என்பதை பற்றிய விவாதம் முதன்மையானதாக அமைந்துள்ளது. குறிப்பாக வளர்ந்த நாடுகள் அத்தகைய வாயுக்களை அதிகமாக வெளியிடுவதும் வறிய நாடுகள் அதன் விளைவுகளை எதிர்கொள்வதும் வழமையான அரசியலாக உள்ளது. வெள்ளப்பெருக்கு, வறட்சி சூறாவளி, நிலச்சரிவு மற்றும் காட்டுத்தீ போன்ற இயற்கை அனர்த்தங்களது அதீதமான பேரழிவை ஏற்படுத்திவருகிறது. அதனை எதிர்கொள்ள முடியாத வறிய நாடுகள் பொருளாதார சுமையினால் அடிப்படை நிலையை இழந்துவருகின்றன. இதனால் வளர்ந்த நாடுகள் இத்தகைய இழப்பீட்டை சரிசெய்ய ஆண்டுக்கு 100 பில்லியன் டொலர்களை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை மகாநாடு முதன்மைப்படுத்தியுள்ளது. இதற்கான ஒப்புதலை வழங்கிய வளர்ந்த நாடுகள், வறிய நாடுகளது கோரிக்கையை ஏற்றுக் கொண்டன. இத்தகைய விளைவுகளால் 55 நாடுகள் அதிகமான பாதிப்பினையும் பொருளாதார நட்டத்தையும் சூழலியல் நெருக்கடியையும் எதிர்கொண்டுள்ளன.

புவி வெப்பமாதல், அதீதமான காலநிலை மாற்றங்களை ஏற்படுத்துமெனவும் அதனால் ஏற்படக் கூடிய பாதிப்புகளால் 2030களில் 290 பில்லியனாக இருக்கும் எனவும் ஒரு கணிப்பீடு காலநிலை மாற்றம் சார்ந்து முன்வைக்கப்படுகிறது. தொழில்மயவாக்கத்தினால் வெப்பநிலை 1.1 பாகையால் அதிகரித்துள்ளது. இதன் நேரடி விளைவுகளால் வறிய நாடுகள் முழுமையான பொருளாதார இழப்பை எதிர்கொள்கின்றன. அதனால் தமது நாட்டு மக்களது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடியாது கடன் சுமையை எதிர் கொள்கின்றன. இதற்கான நிவாரணத்தையே அவ்வறிய நாடுகள் எதிர்பார்க்கின்றன. ஆனால் அதற்கான விவாதம் பரீஸ் மகாநாட்டிலிருந்தே நிகழ்ந்துவருகிறது. அதற்கான தீர்வையே சரியான முறையில்முன்னெடுக்க முடியாது குழப்பத்தில் மகாநாடுகள் நிறைவடைகின்றதான குற்றச்சாட்டுக்கள் ஏற்கனவே உள்ளன. இது பற்றிய விவாதத்தை 2024இல் நிகழவிருக்கும் மகாநாட்டில் முதன்மைப்படுத்துவதாக வளர்ந்த நாடுகள் கூறுகின்றன. இதற்கான ஒப்பந்தம் ஒன்றின் பிரகாரம் நிதி வழங்கும் செய்முறை விவாதத்திற்கு உட்படுத்தப்படுவதாக கூறப்படுகிறது. அவ்வாறாயின் இத்தகைய மகாநாடுகளால் ஏற்படப் போகும் விளைவுகள் எதுவென்பதே பிரதான கேள்வியாகும்.



முதலாவது, வறிய நாடுகள் தொடர்ந்து நெருக்கடியை எதிர்கொள்வதும் வளர்ந்த நாடுகள் தமது இருப்பினை பாதுகாக்கும் செய்முறையை மேற்கொள்வதும் வழமையானதாக காணப்படுகிறது. அதற்கான சந்திப்புகளாகவே மகாநாடுகள் அமைந்துவிடுகின்றன. இது பற்றி ஹர்ஜீத் சிங் எனும் காலநிலை நடவடிக்கை வலையமைப்பின் பணிப்பாளர் குறிப்பிடும்போது இத்தகைய ஒப்பந்தம் ஒரு சமரச முயற்சி என்றார். அது மட்டுமன்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கும் நாடுகளுக்கும் எந்தவித உறுதியான ஆதரவையும் வழங்காமல் மாசுபடுத்திய நாடுகளை இழப்பீடு மற்றும் பொறுப்பேற்பதில் இருந்து பாதுகாப்பது துரோகச் செயலாகும் எனக் குற்றம்சாட்டியுள்ளார்.

இரண்டாவது, செல்வந்த நாடுகள் தமக்கிடையிலான போட்டித் தன்மையினால் மோதிக் கொள்கின்றவே அன்றி காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை முதன்மைப்படுத்த தவறுகின்றன. வளர்ந்த நாடுகளது மோதலில் அகப்பட்டுள்ள வறிய நாடுகள் பாரிய பொருளாதார சுமையை எதிர் கொண்டுள்ளன. அண்மைய காலத்தில் பாகிஸ்தான், நைஜீரியா போன்ற நாடுகள் பாரிய பாதிப்புகளை எதிர்கொண்ட போது மீட்புக்கு எந்த செல்வந்த நாடுகளும் முன்வராமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகவே உள்ளது.

மூன்றாவது, ஐக்கிய நாடுகள் அமைப்பின் காலநிலை மாநாடுகள் வெறும் சந்திப்புகளாகவே நகர்கின்றன. வளர்ந்த நாடுகளது சந்தைக்கான வாய்ப்புகளைத் தேடுவதுடன் அதற்கான வாய்ப்புக்களை நோக்கி நகர்வதாகவே அமைகின்றன. ஒவ்வொரு ஆண்டும் சந்திப்புகள் நிகழ்கின்றனவே அன்றி, தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றனவே அன்றி, முடிவுகள் அமுல்படுத்தப்படுவதாக தெரியவில்லை. இதன் விளைவுகளால் செல்வந்த நாடுகள் உலகளாவிய ரீதியில் அதிக இலாபத்தை அடைகின்றன. வறிய நாடுகளுக்கான உற்பத்தி பாதிக்கப்படும் போது அதற்கான பதிலீட்டு உற்பத்தியையும் தொழில்நுட்பத்தையும் செல்வந்த நாடுகளே முதன்மைப்படுத்துகின்றன. இதனையே அந்த நாடுகள் முதன்மைப்படுத்துகின்றனவே அன்றி இயற்கையின் கட்டமைப்பை பாதுகாக்க எந்த முயற்சியையும் எடுக்காத நிலை காணப்படுகிறது. இதனால் மீள மீள வறிய நாடுகளே நெருக்கடியை எதிர்கொள்கின்றன.

நான்காவது, வறிய நாடுகள் தெளிவான ஒத்துழைப்புடன் இயங்காமையும் செல்வந்த நாடுகள் காலநிலை மாற்றத்தை தமக்கு அமைவாக மேற்கொள்ள காரணமாகின்றது. அது மட்டுமன்றி விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தை பிரமிப்பாக நோக்கும் நிலை மேலும் இயற்கைக் கட்டமைப்பை பாதிப்பதாகவே அமைய வாய்ப்புள்ளது. அனேக வறிய நாடுகளது அணுகுமுறைகள் விஞ்ஞானத்தையும் தொழில்நுட்பத்தையும் நோக்கியதாக அமைந்துள்ளன. அதனால் ஏற்படும் பாதிப்புக்களை கருத்தில் கொள்ளாத நிலை மேலும் நெருக்கடிக்கு வழிவகுத்துள்ளன.

ஐந்தாவது, காலநிலை அரசியலாக மாறியுள்ளதே அன்றி ஆரோக்கியமான சூழலை நோக்கி கட்டமைக்கப்படவில்லை. அதனை ஐக்கிய நாடுகள் சபையே கருத்தில் கொள்ளாது செயல்படுகிறது. குறிப்பாக வளர்ந்த ஐரோப்பிய நாடுகளுக்கும் புதிதாக எழுச்சியடைந்து வரும் இந்தியா, சீனா போன்ற நாடுகளுக்குமிடையிலான மோதலானது அரசியல் நகர்வாகவே தென்படுகிறது. அதிலும் ஐரோப்பிய நாடுகளான ஜேர்மனி, பிரான்ஸ் என்பன ஏனைய ஐரோப்பிய நாடுகளுடன் முரண்படுவதுடன் இராணுவ ஆயுத தளபாடங்களின் விருத்தி பாரிய நெருக்கடியாக காணப்படுகிறது. ரஷ்ய, உக்ரைன் போரின் விளைவுகள் பாரிய காலநிலை மாற்றத்தைத் தரக்கூடியதாக உள்ளது. அதனை கட்டுப்படுத்தாது வளர்ந்த நாடுகள் மேலும் ஆயுத தளபாட விநியோகத்தை அதிகரித்து வருகின்றன. ரஷ்யாவை எதிர்க்க வெண்டும் என்பதற்காக உக்ரைனின் ஆயுத தளபாட பாவனையை வளர்ந்த நாடுகள் அதிகரித்து வருகின்றன. இதன் விளைவுகள் பாரிய தாக்கத்தை சுற்றுச்சூழலுக்கும் அதனால் காலநிலைக்கும் ஏற்படுத்தி வருகிறது.

எனவே எகிப்தில் நிகழும் காலநிலை தொடர்பிலான மகாநாடு பாரிய மாற்றம் எதனையும் ஏற்படுத்தும் செய்முறையைக் கொண்டதாக தெரியவில்லை. மாறாக சந்திப்பும் உரையாடலும் தீர்மானமுமாகவே அமைய வாய்ப்புள்ளது. தொடர்ந்து இயற்கையின் பேரழிவுக்கு உலகம் உட்படும் துயரத்தையே அனுபவிக்கத் தயாராகிறது. மாறாக கடுமையான நிபந்தனைகளை முதன்மைப்படுத்தி அதனை கண்காணித்து செயல்படும் நிலை ஏற்படும் பட்சத்திலும் அனைத்து நாடுகளும் சமமாக கணிக்கப்படுவதோடு பொறுப்புக் கூறல் சார்ந்து அனைத்து நாடுகளும் ஒரே அளவீட்டுக்குள் உட்படும் போதும் மட்டுமே காலநிலை மாற்றத்தின் விளைவுகளிலிருந்து உலகம் தப்பிக் கொள்ள முடியும்.



தமிழ்க்கவியின்
வாழ்க்கைக் கோலங்கள் 5

# பெறுமதியில்லாமல் வரும் எதிலும் அலட்சியம்தான்...

காலம் அரக்கப்பறக்க ஓடிக் கொண்டுதான் இருக்கு அது ஆருக்  காகவும் காத்துக் கொண்டிருக்கிறதில்லை. முன்னொருகாலத்தில் நாங்கள் எங்கட பூட்டியின்ர சோகக் கதைய கேக்கிறதில் சொக்கிப் போய் இருப்பம் 'எணை பேந்து...ம் சொல்லணை பேந்து...' என்று அலட்டி அலட்டி கதை கேட்பம்.

காதலிச்சவை பெற்றார் சம் மதிக்காம விட்டா... ஓடிப்போறது, இப்பத்தையில் நடைமுறை எண்டு நீங்க நினைக்கலாம். ஆனா அது அப்பவே உள்ளதுதான். எந்த சோடிக்கும் கலியாண எழுத்துக் கிடையாது. அடிக்கடி சண்டைவரும் புரியன் பெண்டிலை தாறுமாறா அடிப்பான். அதில ஆரும் தலையிட்டுக் கேள்வி கேக்க ஏலாது.' என்ர மனிசிய நான் அடிக்கிறன் இதில மற்றவை தலையிட ஏலாது ' என்பான். அது எழுதப்படாத சட்டமா இருந்துது. ஆனாலும் ரெண்டத்தா ஒருத்தர் சாகும்வரை சோடியாவே வாழ்ந்து காட்டுவினம். பிள்ளை பெரியமனிசி ஆக முதலே கூட கட்டிக்குடுக்கிற வழக்கம் இருந்ததாம். அப்பிடித்தான் எங்கட பூட்டியும் பதின்மூண்டு வயசில பிள்ளையப் பெத்திருக்கிறா.

பெத்தென்ன அவவாவட புருசன்காறன் விட்டிட்டு வேற பெட்டையக் கூட்டிக் கொண்டு ஓடிற்றானாம். மனிசி அந்தநாளையில பட்ட துன்பக்கதையளத்தான் சொல்லும். 'நாலு ரூவாக்கு ஒரு நெல்லு மூடை விக்குது. நான் காதில போட்டிருந்த கலாவரைக்குச்சுத் தோட்டை நாலு பணத்துக்கு வித்தன். நாலு பணம் என்றால் இருபத்துநாலுசதம். அதை எடுத்துக்கொண்டு வன்னிக்கு போற சனத்தோட சேந்து கால்நடையா வெளிக்கிட்டன்' எண்டு, தான் பருத்துறையிலிருந்து வவுனியாவுக்கு வந்து கடையப்பம் சுட்டு வித்து காலத்தை ஓட்டின கதையைச்' சொல்லுவா. அவா இப்ப இருந்தா எப்பிடி இருக்கும். நாங்கள் இருவத்தைஞ்சு சதத்துக்கு ஒரு கொத்து அரிசி வாங்கின காலம் சிறிமா ஆட்சியில மாறிச்சுது. அப்பதான் அரைக் கொத்தரிச்சட்டமும் வந்துது.

அந்தக்காலத்தில உந்த சகல குடும்பங்களுக்கும் அரசாங்கம் கூப்பன் அரிசிய விநியோகம் செய்தது. இனாமாகவும் இருவத்தைஞ்சு சதமாகவும். கூப்பனை எப்பிடி இல்லாமப்பண்ணுறது எண்டதையும், உலகத்திலயே இலங்கையிலதான் இந்த நடைமுறை இருக்கெண்டும் அதை நிப்பாட்டிவிட்டால் அடுத்த தேர்தல் தங்களுக்கு ஆபத்தா போயிருமெண்டும் அரசியல்வாதியள் திகைச்சுப்போய் நிண்டவைதான். இப்ப பாத்தியளோ அடிச்சுப் போட்டுக்கட்டினாலும் கட்டிப் போட்டு அடிச்சாலும் கதை ஓண்டுதான் எண்டமாதிரி சமுர்த்தி வந்திட்டுது. அதோடசாடையா சிங்கள மொழி ஊடுருவலும் சந்துக்கால தெரியுது. நீங்க வங்கிக்கு ஒருக்கா போங்கோ. அங்க வாங்கிறது. வெள்ளைச்சீனி நாப்பத்தைஞ்சுயேம். பக்கத்து வீட்டில புதிசா கலியாணம் முடிச்ச பாப்பாக்கா வெள்ளைச்சீனிய போத்தல்ல போட்டு வச்சிருப்பா எங்களுக்கு வாயூறும். இப்ப எப்பிடி விசியம் தலைகீழா மாறிக்கிடக்கு பாருங்க கறுப்புச்சீனிக்கு விலை வச்சிட்டுது. 'அன்ன நடையால தன்நடையுங் கெட்டுதாம்.' அந்தநாளையில் உந்த பீப்பீ டீப்பீயெல்லாம் கிடையாதே.

உள்ளங்கைக்குள்ள பொத்திப்பி



திவிநெகும, வாசனா, ரன் கெகுளு, போன்ற சொற்கள் தெரியுது உதுக்கெல்லாம் தமிழ் என்ன தெரியாது. சமுத்தி எண்டா தமிழில என்ன.

சரிவிடுங்க, அரிசிக்கு விலை அறுவது சதமா மாறின நேரம் என்ர அப்பர் சந்தோசப்பட்டவர் நெல்லுக்கு அப்ப மூடை இருவத்தேழு ரூவாத்தான் இனி எப்பன் காசு கூட வரும் எண்டுதான். ஆனாலும் கோப்பிறட்டிகடையளில மட்டும் நெல்லு முப்பத்திரண்டு ரூவாயா எடுத்தாங்கள். அதுக்கு முதல் அவை விதைக்கயுக்கயே விவசாயியள கடனாளியா ஆக்கி விதைப்புக்கு கடன் குடுத்திருவங்கள் பிறகு பிறகு மானியத்தில வந்த பயளையள் கடனாக வந்து இப்ப முப்பத்தையாயிரம் ரூவாக்கு வந்திட்டுது. ஆனா அப்பைக்கதான் உந்த அமோனியா எண்டு சொல்லி வெள்ளைச்சீனிகணக்கில ஒரு பயளை வந்தது. ஊரில படிச்ச ரெண்டொருமனிசர் சொன்னவைதான் எடேய் உந்தப்பயளையள் மண்ணைத் திண்டிருமடா வேண்டாமெண்டு. ஆர் கேட்டது. அதுதான் பயளையப் போட்ட பத்து நாளில் பயிரெல்லாம் பச்சைப்பசேலெண்டு சோழகக்காத்தில சுழண்டு ஆடுதே. முப்பத்தைஞ்சுயேம் வித்த கறுப்புச்சீனிதான் நாங்கள் நெடுகடிச்சு காசைக் கொண்டு போய் சின்ன குட்டிச்சாக்கில் நிறைய சாமான் வாங்குவம். இனி குட்டிச்சாக்கில காசைக் கொண்டே கைத்தூக்கில சாமான் வாங்கப்போறம். அந்த நாளையில பேப்பரில பணவீக்கம் பணவீக்கமெண்டு வரக்க நான் அப்புவிட்ட போய் கேட்டன் 'ஏனப்பு பணத்த வீக்கமாக்காம ஒரு பெரிய வல்லுவம்( வல்லுவம் ஆவணங்கள் வைக்க இருக்கும் சிறுபை காணி உறுதிகள் ஆவணங்கள் பணம் எல்லாம் இதில வைப்பர்) வாங்கிப் போடலாமே' எண்டா சிரிப்பார். அது உனக்கு இப்ப சொன்னாலும் விளங்காது விடு எண்டிருவார். உந்த சாமானெல்லாம் நாங்கள் பழகுமட்டும் சும்மாதான தந்தவங்கள் பிறகு பாத்தா அதில்லாம நாங்கள் இருக்கேலாதெண்ட நிலமைக்கு வந்திட்டம். போனவரியம் பெரிய அளவில விவசாயம் விழுந்து போச்சுது எண்டு சொல்லுகினம் ஆனா அமோனியாவை வந்த உடன வயலுக்க போட்ட எங்கட சனம் அவங்கள் மானியமாக் குடுத்த சேதனப்பயளையள இன்னும் வீடுகளுக்க கட்டி வச்சிருக்கிறதைப் பாக்கிறம் என்ன பெறுமதியில்லாம வாற எதையும, நாங்கள் அலட்சியமாத் தான் பாக்கிறம்.

வெள்ளைக்காறர் ஆட்சிக்காலத்தில அரச வேலையளுக்கு கூட்டிக் கொண்டு போறவைக்கு கோதுமை மாவ கொட்டிக் குடுத்தான். அதை பதப்படுத்த தெரியாம சவப்பெட்டிக்கு கடுதாசி ஒட்ட பசை கிண்டுவினமாம் கிண்டுவினம் என்ன கிண்டுவினம் நானே கிண்டிக்குடுத்திருக்கிறன். எட. இப்ப ஆர் உந்த வேலையளில மினைக்கெடுற. எல்லாம் காசை எறிஞ்சா தானா வருது. பின்னர் ஒரு கெட்டித்தனமான பெண்டுகள் சேந்து அந்தமாவை ஆவியில வாட்டி, ஓட்டில போட்டு வறுத்து, பதமாக்கி புட்டு ரொட்டி எண்டும் ஏன் இடியப்பம் தோசையெண்டும் எத்தினை விதமா எத்தினை வண்ணமா சாப்பாடு செய்து அசத்துறாளவை. ஐம்பதுகளின் நடுப்பகுதியில ஒருநாள் பருத்துறையால என்ர பேரன் அம்மாவை பாக்க வாறார் எண்டு, அம்மா கோதம்பமாப்புட்டு எங்களுக்கும், அரிசிமாவில அவருக்கும் புட்டவிச்சா. வந்தவர் எங்கட தட்டுகளில பொன்னிறமா கிடந்த புட்டைக் கண்டிட்டு 'இதென்ன மாவடி'எண்டு கேட்டதோட எடுத்து மணந்து பாத்திட்டு ' எடியே நல்ல வாசமாக்கிடக்கடி எனக்கும் போடெண்டார். அவற்ற எண்ணம் எதோ தினை சாமை புட்டாக்கும் எண்டு. அம்மா பறையாம கொணந்து போட்டாவா. அவர் தலைய ஆட்டி ரயிச்சு சாப்பிட்டார் திண்டு முடியத்தான் அம்மா சொன்னா 'உது கூப்பன்மாப்பிட்டு' எண்டு மனிசன் விறைச்சுப்போச்சு. 'உண்ணாணையடி' எண்டும் நம்பாமக் கேட்டார். இன்று அங்கிங்கெனாதபடி எங்கும் கோதுமை ஆதிக்கம் செலுத்துது. ஆனாப்பாருங்க இது எங்கட மண்ணில கும்பிட்டாலும் விளையாது. அங்கயிருந்துதான் வரவேணும் அவன் எவ்வளவு கெட்டிக்காரனெண்ணுறியள். இப்பிடியே நாங்கள் இண்டைக்கு ஓட்ஸ், பாதாம், பிஸ்தா, என்சூர் இன்னும் சைனா யப்பான் இத்தாலி போல உலகநாடுகள் உள்ள தீனெல்லாம் ரயிச்சு ருசிக்கிறம் எங்க அங்க கொண்டே எங்கட சோத்தை வித்துப் போடுங்க பாப்பம். எட உதைச்சொல்லுறியள் ஒரு பிறந்தநாள் கொண்டாட்டம் கேக்கும் தொதலும் விசுக்கோத்தகள் சொக்லேட்டுகள் எண்டு பரவிக்கிடக்கு. அதிரசம், முறுக்கு பயற்றம் பணியாரமெல்லாம் வைக்கயில்லயோ எண்டு கேக்க... 'ச்சீக் நாலுபேர் வாறடத்தை உதுகள வச்சு பரிசை கெடவோ' எண்டா வீட்டுக்காறி. பெறுமதியில்லாம வாற எதிலும் அலட்சியம்தான்...

# வசந்த கானங்களும் நகைச்சுவை விருந்தும்

கவிக்கமல் பாசில் ரஜினி இணைந்து வழங்கும் "வீனஸ்" அக்ஷரா"குழுவினர்களின் இனிய இசையில் இலங்கையின் முன்னணி பாடக, பாடகிகள் கலந்து சிறப்பிக்கும் "தேனும் பாலும் கலந்த வசந்த கானங்கள்" மற்றும் நம் நாட்டின் பிரபல நகைச்சுவைக் கலைஞர்களின் கட்டுடா தாலி கொட்டுடா தன், கவிஞர் தனபாலன்,ஹோட்டல் செட்டிநாத் உரிமையாளர் தங்கவேல் யோகராஜன்,தேசமான்ய குருசுவாமி பிச்சைக் கிருஷ்ணா ஆகியோர் கலந்து கொள்வர். கலை அதிதிகளாக புதிய அலைகலை வட்டம் ஸ்தாபகர் ராதா மேத்தா, கலைநிலா உவைஸ் சரீபு, இசையமைப்பாளர் பசால் ஜின்னா, வகவத் தலைவர் கவி மாமணி நஜ்முல்





மேளம் நகைச்சுவை விருந்து என்பன, எதிர் வரும் 20.11.2022 சனிக்கிழமை பி.ப.6.00 மணிக்கு கொழும்பு 13 குளிரூட்டப்பட்ட ஸ்ரீ கதிரேசன் மண்டபத்தில் இடம்பெற உள்ளன.



மக்கள் நலன் சம்மேளனத்தின் தவிசாளர் அஸீஸ் லக்ஹானா தலைமையில் நடைபெற இருக்கும் இந்நிகழ்வில் இலங்கை பொன்மனச் செம்மல் "எம். எஸ். தாஜ்மஹான் " பிரதம அதிதியாகக் கலந்து நிகழ்வினைச்சிறப்பிக்க இருக்கின்றார். முன்னிலை அதிதியாக எஸ். ஆனந்தகுமார் கலந்து கொள்ளும் இந்நிகழ்வில் கொழும்பு மாநகரசபை பிரதி மேயர் M.T. இக்பால் விஷேட அதிதியாகக் கலந்து சிறப்பிப்பார். மற்றும் கௌரவ அதிதிகளாக Option Overseas (Pvt) Ltd உரிமையாளர்ள ம்.என்.மொஹமட் ரபீக்,கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ஜோசப் பெர்ணான்டோ, சட்டத்தரணி ரஷீத் எம்.இம்தியாஸ், சிராஜ் ட்ரேடர்ஸ உரிமையாளர் மொஹம்மட் சிராஜ், கலைஞரகளான ரவீந்திரன், சண்மு. சிறப்பு அதிதிகளாக ஓவியன் ஆர்ட்ஸ் உரிமையாளர் ஓவியநா ஹுசைன், கலாபூஷணம் மொஹமட் அலி ஜே.பி, இசையமைப்பாளர் தவராஜா எஸ்.ரி. தேவா, வகவச் செயலாளர் இளநெஞ்சன் முர்சிதீன், சிரேஷ்ட ஒலிபரப்பாளர் எம்.எஸ். எம் ஜின்னா, சிரேஷ்ட ஊடகவியலாளர் கலைஞர் கே.ஈஸ்வரலிங்கம், கவிஞர் ஈழகணேஷ், மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள், சமூக சேவையாளர்கள் என பலரும் கலந்து சிறப்பிக்கும் இந்நிகழ்வு முற்றிலும் இலவசமானதாகும். கலைரசிகர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அழைக்கின்றனர்.

## 9ஆம் உலகத் தமிழ் வம்சாவளி மாநாட்டில்

# உலகத் தமிழர்களை ஊக்குவிக்கும் விருதுகள்

ஒன்பதாம் ஆண்டு உலகத் தமிழ் வம்சாவளி மாநாடு ஜனவரி 6 & 7 ஆம் திகதிகளில் தமிழகத்தில் சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற உள்ளது. அந்நிகழ்வில் 60 நாடுகளில் இருந்து 1500க்கும் மேற்பட்ட தமிழர்களும், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள மூவாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்களும் கலந்து கொள்ள உள்ளனர். இவ்வாண்டு உலக பொருளாதாரத்தில் தமிழர்கள் மேலோங்க வேண்டும் என்ற நோக்கத்தில் பல்வேறு நாடுகளை சேர்ந்த சிறு மற்றும் குறுந்தொழில் முனைவோர்களை உள்ளடக்கிய பன்னாட்டு MSME B2B MEET நடைபெற உள்ளது.




அம்மாநாட்டில் தமிழக மற்றும் இந்திய அரசின் சிறு மற்றும் குறுந்தொழில், தமிழ் வளர்ச்சித் துறை, தொழில் துறை, பல்வேறு மாநில கலை பண்பாட்டு துறை, சுற்றுலாத்துறை அமைச்சகங்களும் பங்கேற்க உள்ளன. மேலும் புதிய தொழில் முனைவோர்களை உருவாக்க பல்வேறு நாட்டு அரசாங்க வர்த்தக ஆணையங்கள், பல்வேறு மாநில தொழில் வாய்ப்புகளை கருத்துரைக்க உள்ளனர். இதன் மூலம் தமிழர்கள் தொழில் வாய்ப்புகளை ஒரே இடத்தில் சந்திக்கவும், சந்தைப்படுத்தவும் இந்நிகழ்வு அமைய உள்ளது.



மேலும் உலகத் தமிழர்களை ஊக்குவிக்கும் விதமாக சாதனைத் தமிழன் விருது, தமிழ் நிறுவன விருது, நல்லாசான் விருதுகளை முதன்மை விருந்தினர் மூலம் வழங்கப்பட உள்ளது. பல்வேறு அமர்வுகளாக நடைபெறும் இந்நிகழ்வில் இறுதி அமர்வாக தென்னிந்திய திரைத்துறை கலைஞர்கள் பங்கேற்கும் 15 ஆம் ஆண்டு எடிசன் திரை விருதுகள் நடைபெற உள்ளது. அந்நிகழ்வில் 11 நாட்டு தமிழ் தொலைக்காட்சி நடிகர் நடிகைகளும் கலை நிகழ்வு நடத்த உள்ளனர்.

எடிசன் திரை விருதுக்கான தேர்வு பட்டியல் நவம்பர் மாதம் மூன்றாவது வாரத்தில் வெளியிட உள்ளது. இந்நிகழ்வில் உலகத் தமிழர்கள் இணையமூலம் வாக்களிக்கும் தமிழ் திரைப்பட துறையினர்களுக்கு ஜனவரி 7ஆம் திகதி மாலை 4 மணி முதல் விருது வழங்கப்பட உள்ளது.

இந்நிகழ்விலும் அயலகத்தமிழர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர் என உலகத்தமிழ் வம்சாவளி அமைப்பின் தலைவரும் எடிசன் விருது குழு தலைவருமான செல்வகுமார் பன்னாட்டு ஊடகங்களுக்கு இணைய வழியில் நேர்காணல் அளித்தார்.

இந்நிகழ்விற்கு இலங்கை அரசாங்கத்தையும், இலங்கையில் உள்ள தொழில் முனைவோர் சங்கங்களையும் அழைப்பதற்காக இன்று ஞாயிற்றுக்கிழமை அவர் வருகை தர உள்ளார். +60166167708 என்ற whatsapp எண்ணில் செல்வகுமாரை தொடர்பு கொள்ளலாம்.

# முஸ்லிம் சமூகத்தின் தகவல் பெட்டகம் மர்ஹூம் எம்.ஐ.எம்.முஹியத்தீன்

(1937 -2021)

ஆய்வாளர், பன்னூலாசிரியர், புள்ளிவிவரவியலாளர், ஆவணக் காப்பாளர், சமூக அரசியல் செயற்பாட்டாளர் என்ற பன்முக ஆளுமைதான் மர்ஹூம் எம்.ஐ.எம்.முஹியத்தீன். அவரது முதலாவது நினைவு தினம் இன்றாகும் (13.11.2022).















அக்கரைப்பற்று 02 ஆம் குறிச்சியில் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்த அவர், கல்வியாலும் கடும் முயற்சியாலும் முன்னேறியவர். ஆரம்பக் கல்வியை மெதடிஸ்த மிஷன் பாடசாலையிலும், அடுத்த கட்ட கல்வியை அக்கரைப்பற்று கனிஷ்ட ஆங்கில பாடசாலையிலும் கற்றார். அதனையடுத்து மட்டக்களப்பு மத்திய கல்லூரியிலும், வந்தாறுமூலை மத்திய கல்லூரியிலும் கல்வியைத் தொடர்ந்தார்.

பாடசாலைக் கல்வியை முடித்த பின்னர், சிறிது காலம் ஆசிரியராகப் பணி புரிந்தார். உயர்கல்வியைத் தொடரக் கூடிய பொருளாதார வளம் அப்போது அவருக்கு இருக்கவில்லை. பின்னர் நில அளவைத் திணைக்களத்தில் இணைந்து கொண்டார். அப்போது மொறட்டுவ கட்டுபெத்தவில் அமைந்திருந்த செய்முறைத் தொழில்நுட்ப நிறுவனத்தில்(Institute of Practical Technology Katubedde)கட்டிட நிர்மாணம், மாநகர பொறியியல், நில அளவையியல் (Building Construction, Municipal Engineering, Surveying and Leveling) படித்தார். இதுவே பின்னர் மொறட்டுவ பல்கலைக்கழகமாக மாறியது.

இதன் பின்னர் உத்தரவு பெற்ற நில அளவையாளராக (Licensed Surveyor & Leveller) தகைமை பெற்றார். பின்னர் வீடமைப்புத் திணைக்களத்தில் உதவிக் கட்டிட வடிவமைப்பாளராக (Assistant Architect) பணியாற்றினார். ஆபிரிக்க நாடான ஸாம்பியாவிற்கு சென்று அங்கு 4 வருடங்கள் பணி புரிந்தார். அங்கு Chief Inspector of Building ஆகவும், Chief Land Surveyour ஆகவும் கடமையாற்றினார்.

இக்காலகட்டத்தில் Construction Survey Institute of London நடத்தும் பரீட்சையில் சித்தியடைந்து அதில் அங்கத்துவம் பெற்றார். ஆய்வு முயற்சிகளில் ஈடுபடுவது, தரவுகளைச் சேகரிப்பது, ஆவணப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது போன்றவற்றில் அதிக ஈடுபாடும் ஆர்வமும் காட்டினார். முஸ்லிம் சமூகம் தொடர்பான பெறற்கரிய, பெறுமதியான நூல்களை வெளியிட்டும், ஆய்வுகளை மேற்கொண்டுமுள்ளார். இதுவே இவரது பிரதான பங்களிப்பாகவும் அமைந்தது.

இவர் பணி புரிந்த வீடமைப்பு அமைச்சு கட்டிடத் திணைக்களம், அப்போது கொழும்பு கோட்டையில் அமைந்திருந்தது. அதற்கருகில் தான் அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் (All Ceylon Muslim League) அலுவலகமும் அமைந்திருந்தது.

அங்கு அடிக்கடி சென்று வரலானார். அதன் நூலகத்தை நன்கு பயன்படுத்தினார். பின்னர் அதில் அங்கத்தவராக இணைந்து கொண்டார். அதன் உதவிச் செயலாளராக தெரிவு செய்யப்பட்டார். பின்னர் இணைச் செயலாளராகவும் தெரிவானார். பரிஸ்டர் ஹாஷிமும் இவரும் இணைச் செயலாளர்களாக இருந்து, சிறப்பாக இயங்கிய காலம் மறக்க முடியாதது.

முஸ்லிம்கள் என்றால் யார்? சோனகம் என்றால் என்ன? முஸ்லிம்களது அடிப்படைப் பிரச்சினைகள் எவை? இவ்வாறான கேள்விகளுக்கான பதில்களை, தனது ஆராய்ச்சி மற்றும் தேடல் மூலம் முன்வைத்தார். (18ஆம் பக்கம் பார்க்க)

கலாபூஷணம் எம்.ஏ.பகுர்டீன்...
அட்டாளைச்சேனை குறூப் நிருபர்




# ஓர் ஆசானின் அறிவுரை!

காத்தான்குடி கலைமதி றபாய்தீன்

கல்லூரி மலர்களே!
கல்விச் செல்வங்களே!
கல்வி உங்கள்
கண் போன்றது!
கருணை உங்களுக்கு
பொன் போன்றது!
கண்ணில்லையென்றால்
பார்வையில் ஒளி உண்டோ!
வையகத்தில் வாழும்
வழி உண்டோ!

அறிவுபெட்டகம் என்னிடம்
அடங்கியிருக்கும்
அறிவுமுத்துக்களை
ஒவ்வொன்றையும்
பொக்கிஷமாக
பொறுக்கி எடுத்துக்கொள்!
பாடப்புத்தகம் என்னுள்
பதிந்திருக்கும்
பள்ளிபாடங்களையும்
வாழ்க்கைப் பாடங்களையும்
பக்குவமாக நீ
படித்துக்கொள்!

தத்துவக்களஞ்சியம் என்னிடம்
நிறைந்திருக்கும்
ஒழுக்கநெறிகளையும்
பண்புகளையும்
படிப்படியாக நீ
வளர்த்துக்கொள்!
இறைபக்தியைப்போல்
குருபக்தியையும்
என்றும் நீ
இதயத்தில்
இருத்திக்கொள்!
அப்போதுதான்
மாணவா! நீ
மண்ணில்
கண்ணியம் நிறைந்த
மேதையாவாய்!
புண்ணியம் பேணும்
புனிதனாவாய்!
உன்
எதிர்காலம்
ஏற்றம் காணும்!
வாழ்க்கை
வளர்ச்சி காணும்!




# உனக்கும் காலம் வரும்

தேவந்தி (சயூரன்)
காரைதீவு

வலிகளின் ரணம்
வாழ்க்கையில் வடுவாய்
உறவுகள் முன்னே
ஊமையாய் இன்னும்

கனவுகளைத் தேடி
காலத்தோடும் ஓடி
அடுத்தவரை நாடி
அவமானங்களும் கூடி

பிணமாய்ப் போனால்
பிள்ளையின் நிலை என்னவோ
பணமது இல்லையேல்
பட்டினி தானென்று

நல் மன மனிதனை
கண்டு கொள்ள நீயும்
நடையாய்த் திரிந்தும்
பலனில்லை மனமே

படை என்று இங்கு
பல இருந்தென்ன
பாமரனின் துயரைத்
துடைத்தவர் உண்டோ

உடை கண்டு யாரிடமும்
உதவிகள் கேட்டால்
உன் உரிமையும் அவரிடம்
உறைந்திடும் தன்னாலே

தடைகளும் அகலும்
தர்மமும் ஜெய்க்கும்
துவண்டு விடாமல்
துணிவாய் இரு மனமே....

# நாடக பொம்மை

அனுகவி றிப்கான்
அட்டாளைச்சேனை

கால்கள் போடும் தாளத்தினை
பாதைகள் உணர்வதில்லை
பாதையின் ரணகளத்தினை
கால்களும் கண்டு கொள்வதில்லை
மேடையின் அரங்கேற்றம்
பாதையையும் மெருகூட்டலாம்
நாட்டிய வடிவமைப்பை
நான் ஒன்றும் இயற்றவில்லை
விதி போடும் மெல்லிசையில்
அயர்ந்து தூங்கி கிடக்க
நான் ஒன்றும் நீங்கள் செதுக்கிய

சிற்பமும் அல்ல சிலையும் அல்ல
புதைந்தே கிடப்பதற்கு
நீங்கள் தரையோடு மிதித்துச்செல்லும்
புற்தரையும் அல்ல
புற்தரையும் வீரிட்டு தழைத்தே தீரும்
மிதமிஞ்சிய மழையின் பின்
புரிந்து கொள்ளுங்கள்
நானும் மனிதன்தான்
அறிந்து கொள்ளுங்கள்
நானும் மனித பிறவிதான்

# எப்படி வாழ்வார்?

வரக்காமுறையூர் ராசிக்

திரும்பும் திசை யெல்லாம்
தீமைகளே பல்கிப் பெருகுது
அரும்பும் பிள்ளைகள் கூட
அதிலே மூழ்கிச் சாகுது
போகும் பாதை யெல்லாம்
போதைப் பொருளே ஆளுது
வேகமாய் வாலிபர் கூட்டம்
வீழ்ந்து அதிலே மாளுது
கடைத் தெரு வெல்லாம்
கலப்படம் வந்து கலக்குது
காடையர் கூட்ட மொன்று
காசை யள்ளி பொறுக்குது

விற்பனை பொருளெல்லாம்
விலையுயர்ந்து எகிருது
விறகு போலாகி யது
வறண்ட வயிறுகளை எரிக்குது
கல்விச் சாலைக ளெல்லாம்
காசுக்கு விலை போகுது
அள்ளி இரைப்போருக்க மட்டும்
அணைக்கும் கரம் ஆகுது
ஏழை எளியோரெல்லாம்
எங்கு இனி செல்வார்
இல்லையென்ற இந்நாட்டில்
எப்படி இனி வாழ்வார்?



# கிழவன் நான்

பொத்துவில்
அஜ்மல்கான்

முதுமையினால் களவாடப்பட்டு
கண்ணீரினால் வாழ்க்கையினை
அலங்கரித்து வாழும்
கிழடன் நான்!

அதிகமாய் பாசமிருக்க
அதனை எவனிடம்
நான் இறக்கி
வைப்பேன் என
நடிங்கி துடித்து
கிடக்கின்றது இதயம்

நடக்க இயலாது
கால்களும் கை
விரிக்க முடியாத
விரல்களும் யாசகம்
கேட்டு எழுந்து
போனது ஏனோ!

பறந்த மனம்
என்பதால் அடர்ந்து
போன மனிதர்களால்
அநாதையாய் ஆக்கப்பட்டேன்
இன்று

ஆடம்பர வாழ்வினை
அயாரது உழைத்து
கொடுத்துப் போனேன்
என் உறவுகளுக்கு
இன்று

புன்னகையினால் மிதக்க
வேண்டிய மனம்
கண்ணீரினால் மூழ்கிப்
போகிறது இன்றுவரை

இருந்தும்!
வறுமையுடன் வாழப்
பழகிய எனக்கு
பொறுமையாக வாழத்
தெரியாமல் மாய்த்துக்
கொள்ள புறப்பிடுகிறேன்
இன்று

# பேச்சற்ற இடைவெளி....

ஷப்ரா இல்முத்தீன்
அட்டாளைச்சேனை

பேச்சற்ற இடைவெளியொன்று
உறவுக்கு முற்றுப் புள்ளியென்று
நினைத்திருந்த போது தான்

உறவைத் தக்க வைத்துக் கொள்ள
அது மிகப் பெரும்
துணையாய் நிற்பதை
பார்க்க முடிந்தது...

நான் பேச்சற்ற
இடைவெளியொன்றை
தொடர்கையில் தான்

யாரோ என்னைத் தேடுகிறார்கள்
என் இன்மையை உணர்கிறார்கள்
என் காயங்களுக்காய்
வருந்துகிறார்கள்
என் உணர்வுகளை மதிக்கிறார்கள்

என்னையும் அவர்கள்
நட்பு வட்டாரத்தில் ஒருத்தியாய்
ஏற்றுக் கொள்கிறார்கள்

என் பேச்சுக்கும்
ஒரு பிடி மரியாதை
தர வேண்டுமென நினைக்கிறார்கள்

எனக்காக இரண்டு நிமிடம்
பிராத்தனை செய்கிறார்கள்

பேச்சற்ற இடைவெளியொன்று
உறவுக்கு முற்றுப் புள்ளியென்று
நினைத்திருந்த போது தான்
இத்தனையையும் உணர முடிந்தது

ஆதலால்
ரசிக்கிறேன்
தொடர்கிறேன்
பேச்சற்ற இடைவெளியொன்றை

# தொடர் தோல்வி

பானு ஜிப்ரீ சாய்ந்தமருது

பாடசாலை செல்லும் வேலை
பாடம் ஏறவில்லை
மணமாலை கொண்ட வேலை
மனமகிழ குழந்தையுமில்லை

வியாபாரம் செய்த வேலை
இலாபமும் காணவில்லை
எழுத நினைத்து எழுதுகையில்
எழுத்தும் கணக்கிலில்லை
பேச நினைத்து பேசுகையில்
பேச்சும் புரியவில்லை

என் திறமை
என்ன தான் தெரியவில்லை
சாதிக்க எண்ணுகின்றேன் சாமர்த்தியம்
தெரியவில்லை

சாக்கடையில் வீழ்ந்தும் எழுகின்றேன்
ஏனென்று புரியவில்லை
மக்களும் என்னை கணக்கில் எடுப்பதாகத்
தெரியவில்லை

இறந்ததும் மக்கள் மனதில்
வாழ வழியுமில்லை
வாரிக் கொடுக்க பணம்
பொருள் என்னிடமில்லை

வாழ்ந்து சாதிக்க வழிகள்
எதுவும் தெரியவில்லை
இருந்தும் முயற்சியை
கைவிட மனம் வரவில்லை

காலம் கடந்து கடலும்
கரை ஒதுங்குகின்றது
பஞ்சமும் விரைந்து
பக்கமாக வந்து நிற்கின்றது
பாதாள உலகமிது
பழி தீர்க்க பார்க்கின்றது

தொடர்ந்தும் தொடராக
தொடர் தோல்வியை காட்டுகின்றது
இவ்வுலகம் மாயை
இறைவனை தொழுவதே மேன்மை

# நேரலைகளில்...

ஏ எம் கஸ்புள்ளா,
கிண்ணியா

சிரித்த முகத்துடன்
கைகளை உயர்த்திக் கொள்கிறேன்
ஒருவர் தெரிந்தவர்
இன்னொருவர் தெரியாதவர்

நிறங்கள் பார்க்கவில்லை
சாதிகேட்கவில்லை
அவர்களோடு சிலநேர கை குலுக்கள்கள்,

இன்னும் கொஞ்சம் எட்டிய
தூரத்தில்
கனம் பண்ணும்
முதிர்ந்த முகங்கள்

கதவைத் திறந்து விட
துடிக்கும் இளசுகள்
மறு கதவை திறந்து
மாலையிடும் புதுசுகள்

வந்திட்டான்டா "தலைவன்"
அத்தனை சன நெரிசலுக்குள்
ஒரு குரல் ஒலித்துக் கொண்டே இருந்தது

நேரலைகளில்
'எனது வேட்புமனு,
தாக்கள்'

# கவித்தூறல்

இணுவில் வாகீசன்

பெண்ணே
மழைக்கால வானமாய்
என் மனவெளிகள்
உன் நினைவுகளை
சுமந்தபடி
கவித்தூறல்களை பொழிகிறது
உன் மனதோரம்
என் ஈரநினைவுகள் படியும்
என்ற நம்பிக்கைகளுடன்...





# மூன்றெழுத்தில் வரம்!

அகீலா ஜவுபர்
ஏத்தாளை புத்தளம்

மூன்றெழுத்து முத்தாரமே
என்னை முத்தமிட்ட முதல் பெண்ணே
மூவுலக மாந்தருக்கும்
கிடைக்காத என் வரமே

கருவான என்னை
கலங்காமல் ஈன்றாய்
கரம் பிடித்து என்னை
அழுங்காமல் வளர்த்தாய்

உன் அணைப்பில் நானும்
நூல் பொம்மையானேன்
உன் அன்பை வென்றிடவே
வேறேதும் உலகில் இல்லையே

உன் மூச்சு காற்றில்
உயிர் வாழும் ஒற்றை ஜீவன் நானே
இமைப்போலே என்னை காக்கும்
தெய்வத்துது நீயே

உன் பாதம் பட்டாலே
அது பூமிக்கு வரம் தானே
உன் மனம் குளிர்ந்தாலே
என் தரிசனம் அதுதானே

நீ இருக்கும் நாள் வரை
என் வாழ்வு தொலையாதே
நீ இல்லை என்றாலும்
உன்னை மீட்டிட கேட்டிடும்
என் தவம் நிற்காதே!

# தலைக்கனம்

நுஸ்ஹா
நவாஸ்
ஏறாவூர்

என்னை விஞ்ச
ஆளில்லையென்று
தன்னைத்தானே
அதிகம் புகழ்ந்து
பேரெண்ணம் கொண்டு......

ஆணவத்தினால்
அலங்கரிக்கப்பட்ட
தலைக்கனத்தை
அணிகலனாக
அணியாதே!

பவளங்கள் பதிக்கப்பட்ட
பணிவெனும் ஆபரணத்தை
தாராளமாகச் சூடிக்கொள்!
ஆவணம் போல் அதைக்
கவனமாய் பேணிக்கொள்!

ஏழையாயினும் கோழையில்லை
அறிவில்லையாயினும்
அளவில்லா அழிவில்லா
அனுபவமிருக்கலாம்!!
யாரையும் இழிவாகக் கருதாதே !

அதிகமாய்ப் புகழ்ந்து பெருமையடிக்கும்
தலைக்கனமும்
வேண்டாம்!

தன்னைத்தானே
தரம் குறைக்கும்
தாழ்வுமனப்பான்மையும்
வேண்டாம்!

தன்னம்பிக்கையுடன்
மிருகக்குணமற்ற
மமதையற்ற
மற்றவரை மதிக்கும்
மனிதனாய் இரு!!

# கைபேசி

அருலானந்தம் ஞா.பிரகாஷ்
கந்தப்பளை



பெரியவர் சிறியவர்
கைகளை விலங்காக்கி
கண்களை கைது
செய்து
இந்த அவசர
உலகில் மிக
அவசியமாய் ஆகின்றாயோ?

ஆறு அங்குல
அளவு நீ!
சிறிய பூச்சி
சிலந்தி வலையில்
சிக்கியது போல்

எங்கள் வாழ்க்கையும்
உன்னால்
சீரழிகிறதோ?

எட்டாத தூரத்தில்
இருப்பவருடன்
பேசுவதை எளிதாக்கி அருகில்
இருப்பவருடன்
பேசுவதை அரிதாக்கி விட்டு

மனதை அடிமையாக்கி நம்மை
அடங்கியாலும் விசித்திர சாதனமே!

## கவிஞர்கள் கவனத்துக்கு...

கவிதை மஞ்சரிக்கு கவிதைகள் அனுப்பும் வாசகர்கள் தயவு செய்து 15 - 18 வரிகளுக்கு மேற்படாமல் தமது கவிதைகளை எழுதி அனுப்ப வேண்டும். பொருட்சுவை, சொற் சிக்கனம், கருப் பொருளை நெற்றியடியாக சொல்லுதல், ஆற்றொட்டமான நடை என்பன கவிதைக்கான அடிப்படை இலக்கணம், ஒரு விஷயத்தை சுருக்கமாக, நறுக்கென சொல்வதே கவிதை.

வளவளவென நீண்டு செல்லும், பொருளற்ற கவிதைகள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டா. ஒரு கவிதையின் பொருள் ஒன்றுக்கு மேற்பட்டதாக இருக்கக் கூடாது. இளங்கவிஞர்கள் புதிய உத்திகளை பயன்படுத்த முன்வர வேண்டும். ஏனெனில் கவி பழகும் இளங் கவிஞர்களுக்கான நடை முற்றமே கவிதை மஞ்சரி.

- ஆசிரியர்

# உயிர் காக்கும் விவசாயி

ஏரூர் எம்.ரி.எம்.அன்ஸார்



காட்டை வெட்டிக்
கழனி யாக்கினான்
நாட்டை செழிப்பாக்க
வியர்வையை உரமாக்கினான்

வறண்ட நிலத்தைப்
பதப்படுத்தி வென்றான்
இருண்ட உலகை
ஒளியாக்கி நின்றான்

இடுப்பும் வலிக்கவே
நாற்றும் நட்டான்
தடுப்பும் போட்டே
பயிரைக் காத்தான்

பெய்திடும் மழையில்
அவனும் நனைந்தான்
செய்திடும் தொழிலில்
கண்ணாய் இணைந்தான்

சேற்றில் துவைந்தே
நமக்காக உழைத்தான்
சோற்றில் கைவைத்திட
அவனே திளைத்தான்

உன்னதம் காத்திடும்
உழவன் புனிதம்
விண்ணகம் தொட்டிடும்
அவன்செயலே மனிதம்

வெயிலும் மழையும்
அவனின் நட்பு
துயிலும் மறந்து
உழைப்பதே சிறப்பு

நெஞ்சம் நினைத்திடும்
உன்னதத் தியாகி
பஞ்சமின்றி உயிர்
காக்கும் விவசாயி

# முழுக் குடும்பத்திற்குமான புதிய சுகாதார சவர்க்காரத்தை அறிமுகப்படுத்தும் Safe Guard




உயர் தரமான தனிநபர் சுகாதாரப் பொருட்களைத் தயாரிப்பதில் பெயர்பெற்ற வர்த்தகநாமமான Safe Guard, பக்றீரியா எதிர்ப்பு சவர்க்கார உற்பத்தி வரிசையில், உலகளாவிய வர்த்தக நாமங்களுக்கு ஏற்ப மிக உயர்ந்த சர்வதேச தரத்தில் தயாரிக்கப்படுகின்ற, உலகத் தரம் வாய்ந்த தனிநபர் சுகாதார சவர்க்காரத்தை அறிமுகப்படுத்தியிள்ளது.

உலக சுகாதார ஸ்தாபன தரத்தின்படி தயாரிக்கப்பட்ட உயர் தரமான முகக்கவசங்களை அறிமுகப்படுத்தியதன் மூலம், Safe Guard இலங்கையின் தனிநபர் சுகாதாரப் பிரிவில் கூடுதல் சந்தைப் பங்கினை அனுபவித்து வருகிறது. தொற்றுநோய் நிலைமைகளின்போது கொவிட் 19 க்கு எதிரான பாதுகாப்பிற்கான மிகவும் உயர் வர்த்தக நாமங்களில் ஒன்றாக நுகர்வோர், நிறுவனங்கள் மற்றும் அரசாங்க ஸ்தாபனங்களால் இந்த வர்த்தகநாமம் உபயோகிக்கப்பட்டதுடன், அவற்றால் அங்கீகரிக்கப்பட்டது.

Safe Guard பக்றீரியா எதிர்ப்பு சவர்க்கார தயாரிப்பு வரிசையானது புத்தாக்கமான கிருமிக் கொல்லி தொழில்நுட்பத்துடன் மேம்படுத்தப்பட்டுள்ளது. இது சருமத்தில் மென்மையாக இருக்கும் அதேநேரத்தில் தீங்கு விளைவிக்கும் பக்றீரியா மற்றும் கிருமிகளை அழிக்க உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. சவர்க்கார வரிசையானது, வழக்கமான சவர்க்காரங்களில் காணக்கூடிய, தீங்கு விளைவிக்கும் இரசாயனங்கள் இல்லாமல் தயாரிக்கப்படுகிறது. இது பாதுகாப்பானது என்பதுடன், முழுக் குடும்பத்தின் பயன்பாட்டிற்கும் உகந்தது.

"ICL Brand Pvt Ltd நிறுவனத்தில், எமது தயாரிப்புத் தரக் கட்டுப்பாட்டை கண்டிப்பாக கடைப்பிடிப்பதன் மூலம் கடுமையான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை தொடர்ச்சியாக பின்பற்றுகின்றன. தொடர்ச்சியாக புத்தாக்கம் மற்றும் தயாரிப்பு மீள்வடிவமைப்பு ஆகியன, நிறுவனம் தனது நுகர்வோர் மீது கொண்ட அர்ப்பணிப்பின் இன்றியமையாத அங்கமாகும்.

தொற்றுநோய் நிலைமையின் சவாலான காலகட்டத்தில், தனிப்பட்ட சுகாதாரத் தயாரிப்புக்களுக்கான நுகர்வோர் தேவையை நாங்கள் கண்டறிந்தோம்." என்று கெப்பிட்டல் மகாராஜா குழுமத்தின், குழும பணிப்பாளரான சாந்தி பகீரதன் கருத்து வெளியிட்டார்.

# NDB இரண்டாவது முறையாக அறிமுகப்படுத்தும் "பணம் வெளிநாட்டிலிருந்து பரிசு எங்களிடமிருந்து"

NDB வங்கியானது வெஸ்டர்ன் யூனியன் பணப்பரிமாற்றங்களைப் பயன்படுத்தி NDB கிளைகள் மூலம் பணத்தைப் பெறுபவர்களுக்கு ஒரு மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான பரிசுத் தொகையுடன் கூடிய சூப்பர் மார்க்கெட் வவுச்சர்களை (voucher) வழங்கும் புதிய ஊக்குவிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த பணம் அனுப்புதல் ஊக்குவிப்பு திட்டம் அக்டோபர் 20, 2022 முதல் தொடங்கப்பட்டு, டிசம்பர் 31, 2022 வரை நடைபெறும். அதன்படி, இந்த கார்கில்ஸ் பரிசு வவுச்சர்களை எந்த ஒரு கார்கில்ஸ் பூட் சிட்டி , கார்கில்ஸ் புக் சிட்டி, ஃபுட் சிட்டி எக்ஸ்பிரஸ், கேஎஃப்சி, டிஜிஜ ப்ரைடேஸ் & ரீகல், மெஜஸ்டிக் மற்றும் எம்பயர் சினிமாஸ் ஆகியவற்றில் வாடிக்கையாளர்கள் பாவனை செய்ய முடியும்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி குறித்து வங்கி விழிப்புடன் இருப்பதுடன்,வெளிநாட்டில் வசிக்கும் மற்றும் வேலை செய்யும் இலங்கை பிரஜைகளிடமிருந்து அந்நிய செலாவணி பணம் பெறுவதற்கான போராட்டம் பற்றியும் வங்கி அறிந்து உள்ளது . சமூகத்துடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்ட வங்கியாக,NDB தேசிய முயற்சிக்கு ஆதரவளிக்கும் முகமாக இந்த கடினமான காலங்களில் வாடிக்கையாளர்களுக்கு பரிசு வவுச்சர்களை வழங்கும் கூடுதல் அம்சத்துடன், சட்ட முறைப்படி வங்கி வழிகள் மூலம் பணம் அனுப்புவதை ஊக்குவிக்க இந்த கவர்ச்சிகரமான திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.




இதன்படி, வெஸ்டர்ன் யூனியனில் இருந்து 50,000 ரூபாய்க்கு மேல் பணம் அனுப்பும் பயனாளிகளுக்கு பரிசு வவுச்சர்கள் பெறும் வாய்ப்புகள் உள்ளது.

மேற்கூறிய வழிகளில் பணம் பெறும் எவரும், மாதத்திற்கு 100,000 ரூபாயும், வாரத்திற்கு 50,000 ரூபாயும் மற்றும் ஒரு நாளைக்கு 10,000 ரூபாயும் வரை வெல்லத் தகுதி பெறுவார்கள்.

# Ex-Pack Corrugated Cartons PLC நிறுவனத்துக்கு காபன்நடுநிலை சான்றிதழ் வழங்கி கௌரவிப்பு

அபர்தீன் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிடெட்டின் துணை நிறுவனமும், இலங்கையின் முன்னணி அலைவுநெளிவுள்ள கொள்கலன் தயாரிப்பாளர்களுமான ExPack Corrugated Cartons PLC, உள்நாட்டு மற்றும் சர்வதேச வாடிக்கையாளர்களுக்கு பொதியிடல் தீர்வுகளை வழங்கி வரும் நிலையில், தனது பச்சைஇல்ல வாயு வெளியேற்றத்தை முழுமையாக குறைத்துள்ளமைக்காக அண்மையில் காபன் நடுநிலை சான்றிதழைப் பெற்றுள்ளது.



ExPack இன் நிலைபேறான செயற்பாடுகள் செயன்முறையின் போது பரிபூரணமான வகையில் இனங்காணப்பட்டிருந்ததுடன், நிறுவனத்தில் வலு தொடர்பான மதிப்பாய்வுகள் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன், நிறுவனத்தின் ஏனைய பிரிவுகளில் நீர் நுகர்வு, கழிவு முகாமைத்துவம், போக்குவரத்து தொடர்பான ஆய்வுகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

GHG மதிப்பாய்வுகள் தொடர்பான உறுதிப்படுத்தல்களை, National Cleaner Production Centre (NCPC) ஐ முன்னெடுத்திருந்ததுடன், கட்டிட பொறியியல் சேவைகள் ஆலோசனை நிறுவனமான coenergi, MEP வடிவமைப்பு ஆலோசனை நிறுவனம் மற்றும் காபன் நடுநிலை ஆலோசனை நிறுவனம் ஆகியன, ExPack உடன் இணைந்து, பச்சைஇல்ல வாயு வெளியேற்றங்களை கணிப்பீடு செய்திருந்ததுடன், காபன் நடுநிலையை எய்துவது தொடர்பில் வழிகாட்டல்களை வழங்கியிருந்தன. கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் coenergi உடன் ExPack கைகோர்த்திருந்ததுடன், அதனூடாக, காலநிலை மாற்றம் மற்றும் உலக வெப்பமயமாதல் தொடர்பான பல சவால்களை எதிர்கொள்ளும் தனது நிலையை மேலும் வலிமைப்படுத்தியிருந்தது.

இந்த கௌரவிப்பு தொடர்பில் ExPack இன் தவிசாளர் சத்தார் காசிம் கருத்துத் தெரிவிக்கையில், "பெருமளவு இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தும் இந்தத் துறையின் தன்மையை கவனத்தில் கொள்ளும் போது, இந்த சாதனையை எய்தியுள்ளமை உண்மையில் பாராட்டதலுக்குரியதாகும். சூழல் தொடர்பில் நாம் பொறுப்பு வாய்ந்த வகையில் முன்னெடுக்கும் செயற்பாடுகள் தொடர்பில் இந்த சாதனை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளதுடன், ExPack இன் பிரதான நம்பிக்கையாகவும் இது அமைந்துள்ளது. எம்மைப் பொறுத்தமட்டில் இது ஒழுக்கமான செயற்பாடு என்பதற்கு அப்பால் கடமையாக அமைந்துள்ளது. நிலைபேறாண்மையை நோக்கிய எமது பயணத்தில், coenergi, NCPC மற்றும் துறைசார் பங்காளர்களுடன் இணைந்து நாம் செயலாற்றுவோம்." என்றார்.

# நவீன தொழில்நுட்பத்துடனான Light & Shade காட்சியகம் கல்கிஸ்சையில் திறப்பு

உயர்ந்த மட்டத்திலான Blinds மற்றும் Shades ஆகியவற்றுக்கு இலங்கை சந்தையில் முன்னணியாளராகத் திகழும் Light & Shade இனால் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய நான்காவது வாடிக்கையாளர் காட்சியகம், 170, காலி வீதி, கல்கிஸ்சை என்ற முகவரியில் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. One Galleface, நாவலை மற்றும் கண்டி ஆகிய பிரதான நகரங்களை மையமாகக் கொண்டு Light & Shade இன் காட்சியகங்கள் காணப்படுகின்றன.




அதன் நவீன காட்சியகங்கள் விஸ்தரிக்கப்பட்டமை குறித்துக் கருத்துத் தெரிவித்த Light & Shade இன் பிரதம நிறைவேற்று அதிகாரி இர்ஷாட் அக்தர், "எமது உற்பத்திகள் மற்றும் சேவைகளை நிறுவன மற்றும் வர்த்தக ரீதியில், வீட்டு அலங்கரிப்புக்கள் தொடர்பான அன்றாட வாடிக்கையாளர்கள் இலகுவில் அணுகக்கூடிய வகையில் விஸ்தரிக்கக் கிடைத்தமை குறித்து பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.

Light & Shade தொழில்முனைவோர், பிரபலங்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் உள்ளக மற்றும் வெளியக அலங்கார நிபுணர்களைக் கொண்ட விசுவாசமான வாடிக்கையாளர்களைக் கொண்டிருப்பதுடன், இது அதிநவீன அல்லது எளிமையான, வசதியான வாழ்க்கையின் பிரதிபலிப்பாக இருந்தாலும், தங்களின் சொந்த அல்லது வாடிக்கையாளரின் வாழ்க்கை முறையை நிறைவுசெய்யும் சூழலை உருவாக்கும் வாய்ப்பை ஏற்படுத்துகிறது.

புதிய காட்சியகம் வாடிக்கையாளர்களுக்கு மிகவும் அனுபவம் வாய்ந்த விற்பனை ஆலோசகருடன் நேரடியாகக் கதைப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்துகிறது" என்றார். "எந்தவொரு themes மற்றும் இடத்துக்குப் பொருத்தமான பல்வேறு வடிவமைப்புக்கள் மற்றும் இயக்க முறைகளுடன் கூடிய உற்பத்திகளை நாம் வழங்குகின்றோம்.

புதிய வாழ்க்கை முறையின் தேவைக்கு ஏற்ற வகையில் சர்வதேச சந்தைக்கான விநியோகத்தையும் நாம் வழங்கி வருகின்றோம்" எனவும் அவர் குறிப்பிட்டார்.

# சிறந்த வாய்ச் சுகாதாரத்தை ஊக்குவிக்கும் க்ளோகார்டின் நடமாடும் பல் மருத்துவ பிரிவு

இலங்கையின் மிகவும் நம்பகமான வாய்ச் சுகாதார பராமரிப்பு வர்த்தக நாமங்களில் ஒன்றான க்ளோகார்ட், சிறுவர்களின் வாய்ச் சுகாதாரத்தின் முக்கியத்துவத்தை மேம்படுத்துவதற்காக அதன் நடமாடும் பல் மருத்துவ கிளினிக்கிற்கு புத்துயிரளித்துள்ளது. சுகாதார அமைச்சுடன் இணைந்து பல் மருத்துவ கிளினிக் மற்றும் விழிப்புணர்வு பிரசார நடவடிக்கைகள் மீண்டும் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டன. இங்கு நாடு முழுவதும் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு இலவச பல் பரிசோதனைகள் மற்றும் பல் தூய்மைப்படுத்துதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.




அண்மையில் இடம்பெற்ற யாழ்ப்பாணம், நல்லூர் திருவிழாவில், க்ளோகார்டின் நடமாடும் பல்மருத்துவ கிளினிக் தனது விழிப்புணர்வு பிரசாரத்தை முன்னெடுத்திருந்தது. சுகாதார அமைச்சின் பல் சிகிச்சை நிபுணர்களால் முன்னெடுக்கப்பட்ட வேடிக்கையான மற்றும் யாவரையும் ஈர்க்கும் வகையிலான விழிப்புணர்வு அமர்வை இந்த கிளினிக் முன்னெடுத்திருந்தது.

ஒவ்வொரு சிறுவரும் பல் பரிசோதனை செய்துகொள்ளும் வாய்ப்பு வழங்கப்பட்டதோடு, அதன் பிறகு, க்ளோகார்ட் குழுவிடமிருந்து பரிசுகள் உள்ளிட்டவையும் வழங்கப்பட்டன. இது, சிறந்த வாய்ச் சுகாதாரத்தை பராமரிப்பதன் முக்கியத்துவத்தை அவர்களுக்கு நினைவூட்ட உதவும்.

இது தவிர, மேலதிக நிகழ்வாக க்ளோகார்டின் உருவ பொம்மையான 'சூட்டி லேனா' வும், சிறுவர்கள் தங்களது கிளினிக்கை ஆரம்பித்த வேளையிலும் அதன் நிறைவிலும் அவர்களுடன் விளையாடி, மகிழ்வித்தது. சிறுவர்களை மகிழ்விக்கும் அதே வேளையில், சிறந்த வாய்ச் சுகாதாரத்தை பேணுவதற்காக சிறுவர்களை ஊக்குவிக்கவும் சூட்டி லேனா தனது பங்களிப்பைச் செய்து வருகிறது.

# இலங்கையில் 5 வருட நிறைவைக் கொண்டாடும் vivo




முன்னணி உலகளாவிய ஸ்மார்ட்போன் வர்த்தகநாமமான vivo, புதிய மைல்கற்களை எட்டும் வகையில் தொடர்ச்சியாக தனக்கு ஆதரவளித்து உதவிய அனைத்து பங்காளிகள், பணியாளர்கள், வழங்குநர்கள், விநியோகஸ்தர்கள், ஊடகங்கள் மற்றும் நுகர்வோருக்கு தனது நன்றியைத் தெரிவிப்பதன் மூலம், இலங்கையில் தனது 5ஆவதுஆண்டு நிறைவைக்கொண்டாடுகிறது.

குறிப்பாக சவாலான காலங்களில் vivo வர்த்தக நாமத்தை இலங்கை சமூகத்தின் ஒரு அங்கமாக கருதியமை தொடர்பில் அது நன்றி தெரிவிக்கிறது.

vivo இலங்கையில் தனது மகத்தான பயணத்தை 2017 இல் ஆரம்பித்ததோடு, தனது புத்தாக்கமான ஸ்மார்ட்போன் தொழில்நுட்பம் மற்றும் வாடிக்கையாளர் பராமரிப்பு சேவைகள் மூலம் கடந்த 5 வருடங்களில் தனக்கென ஒருஇடத்தை வெற்றிகரமாக உருவாக்கியுள்ளது.

சரியான விடயங்களை சரியான வழியில் செய்யும் Benfen தத்துவம் மற்றும் அதன் நுகர்வோரை மையமாகக்கொண்ட அணுகுமுறைமூலம் வழிநடத்தப்பட்டு, உலகளாவிய கண்டுபிடிப்புகளை பிராந்தியத்தில் கொண்டுவர vivo பெரும்முயற்சியை மேற்கொண்டுள்ளது.

vivo ஒருவர்த்தக நாமம் எனும்வகையில், நுகர்வோருடன் வலுவான உறவுகளை வளர்த்தல் மற்றும் தனது தொழில்நுட்ப புத்தாக்க கண்டுபிடிப்புகள் மூலம் மதிப்புசேர்த்தல் மற்றும் வாழ்க்கை முறையை எளிதாக்கும் தயாரிப்புகளுடன் ஸ்மார்ட்போன் சந்தையை வளப்படுத்துதல் ஆகிய குறிக்கோள்கள் மூலம் இயங்கிவருகிறது.

இலங்கை ஸ்மார்ட்போன் சந்தையில் vivo அறிமுகமானதில் இருந்து, ஒரு சிறந்த மற்றும் நம்பகமான வர்த்தக நாமமாக அது பிரபலமடைந்துள்ளது.

விற்பனை மற்றும் பராமரிப்பு சேவைகளுக்கான அணுகலை உறுதிசெய்யும் வகையில் 2,500 இற்கும் அதிகமான சில்லறை விற்பனைநிலையங்களின் வலுவான வலையமைப்பின் மூலம் அது உறுதியடைந்துள்ளது.

# புத்தம் புதிய சர்வதேச காட்சியறையை துபாயில் திறந்துள்ள Envoy




ஸ்டைல் மற்றும் தரத்துக்கு பெயர் பெற்றதும், இலங்கையின் சர்வதேச நாமங்களுள் ஒன்றாகவும், Hameediaவின் முதன்மையான வர்த்தக நாமங்களுள் ஒன்றாகவும் விளங்கும; Envoy, துபாயில் Festival Mallஇல் தமது துபாய் காட்சியறையை அண்மையில் திறந்து வைத்ததன் மூலம் மத்திய கிழக்கில் உத்தியோகபூர்வமாக தன்மை விரிவுபடுத்திக் கொண்டது.

இதன் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக ஷெய்க் ஜுமா பின் மக்டும் அல் மக்டுமின் அலுவலக நிர்வாக இயக்குனர் மற்றும் தனிப்பட்ட ஆலோசகராக விளங்கும் யாகூப் அல் அலி கலந்து கொண்டார். கௌரவ விருந்தினர்களாக Al Matiya Club இன் தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியான ஜும்மா மதானியுடன் உப தலைவர் மற்றும் பொது முகாமையாளரான மௌனிரா யூசுப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் Hameedவின் நிர்வாக இயக்குனர் பவுசுல் ஹமீட் மற்றும் சான்று பெற்ற ஆண்கள் ஆடையலங்காரத் தோற்ற ஆலோசகர், பிரசித்தி பெற்ற பாடகர் அர்ஜுன் குமாரசுவாமி மற்றும் சில விஷேட அதிதிகளும் கலந்து கொண்டனர்.

Envoy என்பது ஒரு முதன்மையான வர்த்தக நாமம் ஆகும். இது சர்வதேச ஆடம்பர அலங்காரங்களுக்கு இணையாக உள்ளதுடன் கட்டுப்படியான விலையிலும் காணப்படுகின்றது. சுமார் 25 வருடகால விரிவான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு பிறகு இந்த வர்த்தகநாமம் உருவாக்கப்பட்டது. formal, ceremonial, smart casual, casual, linen, suits, shirts, blazers என இத்தயாரிப்பில் பல தெரிவுகள் காணப்படுகின்றன. காலணிகள், பெல்ட்கள் மற்றும் ஆடவர் அணிகலன்கள் என பலவிதமான தோல் உற்பத்தி பொருட்களின் தெரிவுகளும் அவற்றுள் உள்ளடங்குகின்றன.


# இலங்கையின் கிரிக்கட் ஜாம்பவான் தசுன் ஷானகவை வர்த்தக நாம தூதுவராக நியமித்துள்ள Orange Electric

Orel Corporation, அதன் வர்த்தக வளர்ச்சியின் ஒரு பகுதியாக, இலங்கை ODI மற்றும் T20 கிரிக்கெட் அணியின் தலைவரான தசுன் ஷானகவை அதன் முதன்மை வர்த்தக நாமமான Orange Electric இன் வர்த்தக நாமத் தூதுவராக நியமித்துள்ளது. இது தொடர்பான ஒப்பந்தத்தில் கையொப்பமிடும் நிகழ்வு அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. இதில் தசுன் மற்றும் Orel Corporation இன் முகாமைத்துவக் குழுவினர் கலந்து கொண்டனர். நடுத்தர வரிசை ஆட்டக்காரரும் வலது கை பந்து வீச்சாளருமான, தசுன் ஷானக சிறந்த சகலதுறை ஆட்டக்காரராவார். அவர் பலருக்கு ஆதர்சமாக விளங்குகின்றார். தளரா மன உறுதியால் கிரிக்கெட் உலகில் சாதனைகளைப் படைத்துள்ளார். அவரது தலைமையின் கீழ், சமீபத்தில் ஆசியக் கோப்பை

2022 சம்பியன்ஷிப்பை இலங்கை அணி வெற்றிகொண்டது. கிரிக்கெட் உலகில் தனக்கென ஒரு அடையாளத்தை உருவாக்கி நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளார் தசுன்.

உலகளாவிய சந்தைகளில் புத்தாக்கம் மற்றும் சிறப்பு என்பனவற்றின் மூலம் Orel Corporation இலங்கையின் விம்பத்தை உயர்த்திய ஒரு நிறுவனமாக விளங்குவதால், வெவ்வேறு களங்களைச் சேர்ந்த இரு தலைவர்களுக்கிடையிலான இந்த கூட்டு, சர்வதேச அரங்கில் இலங்கையை மேலும் முன்னகர்த்துவதில் ஒருங்கிணைவை உருவாக்குகிறது. இதன் விளைவாக இலங்கையின் நற்பெயரை மேம்படுத்துவதற்கும் நாட்டிற்கு தேவையான பொருளாதார செழிப்பைக் கொண்டு வருவதிலும் பங்களிக்கும்.






## மேஷம்

ராசிநாதன் செவ்வாய் 3ம் இடத்தில் வக்கிரம் பெற்றிருக்கிறார். நவம்பர் 6க்கு அதிபதியான புதன் அஷ்டம ராசியான விருச்சிகத்திற்கு மாறுகிறார். தொழிலில் சிறு பிரச்சினைகள் தோன்றி மறையும். வண்டி வாகன சேர்க்கை ஏற்படும். மனைவி வழியில் வருமானம் அதிகரிக்கும். பயணங்கள் நன்மை தரும். குடும்ப உறவுகள் சுமுகமாக இருக்கும். நட்பு வட்டாரங்கள் பெருகும். அரசுத் துறையில் ஆதாயங்கள் உண்டு. கலைஞர்கள் நல்ல வாய்ப்பினைப் பெறுவார்கள். கடன் பிரச்சினையில் சிக்கல்கள் உண்டு. செவ்வாய் வக்கிரகதியில் இருப்பதால் முன்னுக்குப் பின் முரணான சிந்தனை தோன்றும். நீங்கள் பேசுவதை நீங்களே மறுப்பீர்கள். வேலை செய்பவர்களால் பிரச்சினை ஏற்படும். சுப நிகழ்வுகள் தள்ளிப் போகும்.

## ரிஷபம்

12க்குரிய செவ்வாய் 2ல் வக்கிரம் பெறுகிறார். சில ஏமாற்றங்கள் நல்ல மாற்றங்களாக மாறிவிடும். நிலம் கட்டடத்தில் செய்யும் முதலீடு முதலியவை உங்களுக்கு ஆதாயமாக இருக்கும். எதிர்பாராத பணவரவு ஏற்படும். கோயில் தரிசனம் முதலிய புண்ணிய தரிசனங்களை மேற்கொள்வீர்கள். மிக முக்கியமான ஒருவருடைய சந்திப்பு உங்களுக்கு ஆதாயமாக இருக்கும். செய்யும் பயணங்கள் மூலமாக உங்களுக்கு நன்மைகள் ஏற்படும். செவ்வாயின் வக்கிரமும், சனியின் பார்வையும் உடல் ஆரோக்கியத்தில் பிரச்சினைகளை ஏற்படுத்தும் வாய்ப்பு உண்டு. அரசாங்க காரியங்களில் தடைகள் இருக்கும். தாமதம் ஏற்படும். ஆடம்பரச் செலவுகளை தவிர்க்க வேண்டும். தாயாரின் உடல் நிலையில் கவனம் தேவை.

## மிதுனம்

செவ்வாய் வக்கிரகதி பெறுகிறார். ராசி அதிபதி புதன் 6ஆம் இடத்துக்கு மாறுகிறார். ராகு வியாபாரத்தில் நுட்பங்களையும் வெற்றியையும் தருவார். ஆபரணச் சேர்க்கைகள் ஏற்படும். தொழிலில் புதிய நுணுக்கங்களை தெரிந்து கொள்வீர்கள். வெளிநாட்டு வேலை அல்லது வணிகம் செய்பவர்களுக்கு வாய்ப்புகள் அதிகரிக்கும். கேட்ட இடத்தில் பணம், உதவி கிடைக்கும். சுபகாரியங்கள் குடும்பத்தில் நிகழும் வாய்ப்பு உண்டு. அரசாங்கத்தால் ஆதாயம் உண்டு. ஒப்பந்தங்கள் உங்கள் சார்பாக முடிவாகும். வெற்றியை நோக்கி உங்கள் பயணம் தீவிரப்படும். பிடிவாதத்தை விட்டுவிட வேண்டும்.பேச்சிலும் செயலிலும் தளர்வு வேண்டும். விட்டுத்தந்தால் கெட்டுப்போக மாட்டீர்கள். ராசியில் செவ்வாய் இருக்கிறார். அதிக கோபம் ஏற்படும். சிறு பொருள் இழப்பு ஏற்படும். கவனம் இல்லாவிட்டால் பொருள் திருட்டு ஏற்படும். வாகனங்களை சரி செய்து கொள்ளுங்கள். விழிப்புணர்வுடன் இருக்கவும்.

## கடகம்

சென்ற வாரத்தை விட சற்று முன்னேற்றமான வாரம் இது என்றுதான் சொல்ல வேண்டும். மூன்றுக்குரிய புதன் 5ஆம் இடத்துக்கு மாறுவது நன்மை தரும் அமைப்பு. குருவின் பார்வை ராசிக்கு இருப்பதால் ராசிநாதன், உங்களை சற்று நிமிர வைப்பார். நிதான உணர்வும் முன்னெச்சரிக்கை உணர்வும் இருப்பதால் எந்தச் சிக்கலான பிரச்னையிலும் மாட்டிக்கொள்ள மாட்டீர்கள். ஆலய தரிசனம் ஏற்படும். பிள்ளைகளின் படிப்பு முயற்சிக்கு பலன் கிடைக்கும். உத்தியோக உயர்வும் அரசாங்க காரியங்களில் சகாயமும் ஏற்படும். கணவன் மனைவி அந்நியோன்யம் அதிகரிக்கும். நண்பர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். 7ல் உள்ள சனி ஆட்சி பெற்றிருக்கிறார். இளைய சகோதரர்கள் சற்று முரண்டு பிடிப்பார்கள். நட்பு வட்டாரங்களில் நிதானமாகப் பேச வேண்டும். பேச்சில் முரண்பாடு கருத்து வேறுபாடு முதலியவை ஏற்படும் வாய்ப்பு உண்டு.

## சிம்மம்

தொழில் மற்றும் சுகாதிபதி செவ்வாய் வக்கிரம் பெற்றிருக்கிறார். சூரியன் நீச பாதையைக் கடந்து விட்டார் என்பதால் உங்களுக்கு அதிக பிரச்சினைகள் வராது. எனவே, இவ்வாரம் உங்கள் எதிர்பார்ப்புகள் சாதகமாகும் வாய்ப்பு உண்டு. சங்கடப்படுத்திய பிரச்சினைகள் விலகும் வாரம் இது. வீடு பூமி சார்ந்த தொழில்கள் முன்னேற்றமாக நடக்கும்.மேலதிகாரிகளால் சிறு பிரச்சினை உண்டு. அலுவலக சூழல் மனதில் அழுத்தம் தரும். சுபகாரியத் தடைகள் உண்டு. எனவே, எதிலும் நிதானமும் எச்சரிக்கையும் தேவை. பிறர்மீது எக்காரணத்தை முன்னிட்டும் குற்றம் காண வேண்டாம். முக்கியமான ரகசியங்களை பிறரோடு பகிர்ந்து கொண்டு அவஸ்தைப்பட வேண்டாம்.

## கன்னி

ராசிநாதன் வார பிற்பகுதியில் விருச்சிகத்திற்கு மாறுகிறார். முன்னேற்றத்தை தரும் வாரம். ஆயினும் இந்த அமைப்பை செயல்பட விடாது தடுக்கும் அமைப்புகளும் உண்டு என்பதால் நீங்கள் எச்சரிக்கை உணர்வோடும் நிதானத்தோடும் எதையும் அணுக வேண்டும். ரியல் எஸ்டேட், செங்கல், மண் போன்ற தொழில் செய்பவர்களுக்கு விற்பனை சுமுகமாக நடக்கும். பிறரிடம் ரகசியத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம். எல்லோரையும் அனுசரித்து நடந்து கொள்ளவும். சில காரியங்களில் இழுபறி இருக்கும். சிலர் உங்களை எளிதாக பழி சொல்லும்படியாக நடந்துகொள்ள வேண்டாம்.

## துலாம்

ராசியிலிருந்து புதன் வார பிற்பகுதியில் விலகுவது ஒரு வழியில் நல்லது. குருவின் சுபப் பார்வை தன, குடும்ப ஸ்தானத்தில் விழுவதால் குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். குழந்தைகளின் படிப்பு போன்ற விஷயங்கள் அனுகூலமாக இருக்கும். தொழில், வணிகம் பெரிய பாதிப்பின்றி நடக்கும். அரசியல் ரீதியாக நன்மைகள் கிடைக்கும் வாரம் இது. உடன் பிறப்புகளால் ஆதாயம் உண்டு. தந்தை மற்றும் தந்தைவழி உறவுகளில் கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம். ஒரு முறை செய்ய வேண்டிய காரியங்கள் இரண்டு, மூன்று முறை செய்ய வேண்டியிருக்கும். ராசியில் உள்ள கேது காரணமில்லாத கவலைகளை அதிகரித்து உணர்ச்சிவசப்பட வைக்கும். அர்த்தாஷ்டமச் சனி நடக்கிறது. உறவுகளை பகைத்துக் கொள்ள வேண்டாம்.

## விருச்சிகம்

லாபாதிபதி புதன் உங்கள் ராசியில் பிரவேசிக்கிறார். அவர் விரய ஸ்தானத்தில் இருந்து விலகியது நல்லது. குரு சுக்கிரன் போன்ற சுப கிரகங்கள் வலிமை பெற்றிருக்கின்றன. குடும்பத்தில் மகிழ்ச்சியான தருணங்கள் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியமாக இருக்கும். வழக்குகள் பிரச்சினையின்றி சாதகமாக முடியும். வேலை செய்யும் இடத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். மேலதிகாரிகளின் ஆதரவும் வழி காட்டுதலும் உண்டு. தொழில் லாபம் அதிகரிக்கும். அஷ்டமத்தில் உள்ள செவ்வாயால் பாதிப்பு உண்டு. மனதில் தைரியக் குறைவு ஏற்படும். அவ்வப்பொழுது டென்ஷன் ஏற்படும். ரத்தம் தொடர்பான நோய்கள் இருந்தால் பிரச்சினையைத் தரும். உடனடியாக நீங்கள் அதை கவனித்துக் கொள்ள வேண்டும். தந்தைக்கு சிறு ஆரோக்கிய பிரச்சினை ஏற்படலாம்.

## தனுசு

லாபாதிபதி புதன் விரயத்துக்கு வருகின்றார். 2ல் சனி நான்கில் குரு என்ற அமைப்பு. இந்த அமைப்பால் வாரத்தில் நற்பலன்கள் சற்றுக் குறையவே செய்யும். ஆனாலும் பெரிய அளவில் பிரச்சினைகள் வராது. குருவின் பார்வை பலம் தொழில் ஸ்தானத்திற்குக் கிடைப்பதால் தொழில், உத்தியோகம், கௌரவம் முதலியவை சிறப்பாகவே இருக்கும். வருமானம் பெரிய பாதிப்பில்லாமல் இருக்கும். விரயத்தில் வரும் புதன் தோஷங்களை குரு பார்வை குறைக்கும். கவலைகளும் சிரமங்களும் குறையும். புதிய முயற்சிகளும் திட்டங்களும் முன்னேற்றத்தை நோக்கிச் செல்லும். பணி மாற்றம் ஏற்படும் வாய்ப்பு உண்டு. பன்னிரண்டில் புதன் என்பதால் நரம்பு சம்பந்தமான உபாதைகள் ஏற்படலாம். பண இழப்பும் ஏற்படலாம். நாக்கில் சனி என்பது போல உங்கள் பேச்சே உங்களைச் சிக்க வைக்கும். எனவே பேச்சைக் குறைத்துக் கொள்ளுங்கள் அல்லது நிதானமாக பேசுங்கள்.

## மகரம்

ராசியில் சனி பலமாக இருக்கிறார். பாக்கியாதிபதி புதன் லாப ஸ்தானத்திற்கு வருகிறார். இது நல்ல அமைப்பு. குருவின் பார்வை உங்கள் எண்ணங்களை பூர்த்தி செய்யும். நினைத்தது நடக்கும். குலதெய்வ வழிபாடு நேர்த்திக்கடன் முதலியவற்றை செய்வீர்கள். ஆடை, ஆபரணச் சேர்க்கை ஏற்படும். புதிய உறவுகளைச் சந்திக்கும் வாய்ப்பு உண்டு. வருமானமும் உயரும். சுபகாரியத் தடைகள் விலகும். 3ல் குரு வக்கிரம் பெற்றிருக்கிறார். ராசியில் சனி இருப்பதாலும். மற்றும் சந்திரன் நிலையை ஒட்டி பார்க்கின்ற பொழுதும் மனதில் அவ்வப்போது சஞ்சலங்கள் உதயமாகி உங்கள் தைரியத்தை அசைக்கும். உங்கள் பேச்சை நீங்களே மறுக்கும் படியாக இருக்கும். செலவுகள் அதிகரிக்கும். குடும்ப பொறுப்பும் அலைச்சலும் கூடுதலாக இருக்கும். தொழில் வணிகத்தில் போட்டியைச் சந்திக்கக் கூடிய நிலையில் இருப்பீர்கள். மேலதிகாரிகளால் சில தொல்லைகள் உண்டு.

## கும்பம்

5ம் அதிபதி புதன் தொழில் ஸ்தானத்திற்கு வாரத்தின் பிற்பகுதியில் மாறுகிறார். 2 ல் குரு இருப்பதும் உங்கள் துன்பங்களை கட்டுப்படுத்தும் அமைப்பு. 3ல் ராகு பொருள் வரத்து உண்டு. எதிர்பாராத சில நல்ல வாய்ப்புகள் உங்களுக்கு கிடைக்கும். அது உங்கள் எதிர்காலத்தை உயர்த்தும். பூமி கட்டிட வகைகளில் லாபம் உண்டு. குழந்தைகள் எதிர்காலத்தை பற்றிய அச்சம் நீங்கும். குடும்ப பிரச்சினைகளை சுமுகமாகக் கையாளவும். எந்தப் பிரச்சினையையும் அதிரடியாக முடிவெடுக்காது சற்று நிதானமாக சிந்தித்து முடிவெடுக்கவும். தொழில்களில் புதிய உத்திகளை கையாள வேண்டும். மேலதிகாரிகளின் தொந்தரவு உண்டு.. பதவி உயர்வு தாமதப்படும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். செவ்வாய் 4ம் பார்வையாக அஷ்டம ஸ்தானத்தைப் பார்ப்பதால் வண்டி வாகனங்கள் ஓட்டும்போது கவனம் வேண்டும். எதிர்பார்ப்புகளை குறைத்துக் கொள்ளவும்.

## மீனம்

சப்தமாதிபதி புதன் வாரத்தின் பிற்பகுதியில் பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். பொதுவாகவே பெரிய பிரச்சினை இல்லாத அனுகூலமான வாரம் இது என்றுதான் சொல்ல வேண்டும். பதினொன்றில் சனி என்பதால் உத்தியோகத்தில் தொழில் வருமானத்தில் பிரச்சினைகள் இல்லை. புதிய வேலை தேடுபவர்களுக்கு தகுந்த வேலை கிடைக்கும். அரசாங்க அனுகூலமும் உண்டு. அரசாங்கத்திற்கு நீங்கள் விண்ணப்பித்திருந்தால் உங்களுக்கு அனுகூலமான பதில் இந்த வாரம் கிடைக்கும் வாய்ப்பு உண்டு. கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தமும் வாய்ப்பும் கிடைக்கும். 2ல் உள்ள ராகு ராசியை நோக்கி வருவதால் ஆரோக்கியம், வருமானம், குடும்ப பிரச்சினை முதலியவற்றை கவனமாகக் கையாள வேண்டும். வேலைச்சுமை அதிகரித்துக் கொண்டே போகும். திடீர் வெளியூர் பயணங்கள் ஏற்படலாம். எக்காரணத்தை முன்னிட்டும் கோபத்தில் வார்த்தைகளைக் கொட்டி விடாதீர்கள். முன் கோபத்தை கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டிய வாரமிது.

கடந்த வாரத் தொடர்

# சமரசங்கள் அற்ற படைப்பாளி தெளிவத்தை ஜோசப்

படைப்பாளர் மு. சிவலிங்கம் 1972ம் ஆண்டில் வீரகேசரியில் கம்போசிடர் எழுத்து கோர்ப்பவராக பணியில் சேர்ந்து கொண்டார். தட்டச்சு செய்யப்படும் எழுத்துகள் ஈய எழுத்துளாக வார்க்கப்பட்டு அவை வார்த்தைகளாக தொகுக்கப்படும். இப்படி எழுத்துகளை வாக்கியங்களாக தொகுத்து ஒரு பக்கமாக வடிவமைப்பவர்களை கம்போசிடர் என அழைப்பார்கள். அவர்கள் வேலை செய்யும் இடம் பாண் போறணையைப் போல அனல் பறக்கும். பின்னர் ஒப்பு நோக்குபவராகவும் கார்டூனிஸ்டாகவும் பின்னர் துணை ஆசிரியராகவும் வீரகேசரியில் மு. சிவலிங்கம் பணியாற்றியிருக்கிறார். அறுபதுகளில் தலைப்பாகை, மீசை, கறுப்பு கோட், முதுகுபுறமாக தோளில் மாட்டப்பட்ட குடை சகிதமாக கங்காணி காளி முத்துவை வீரகேசரியில் வரைந்திருப்பார் சிவலிங்கம். இக் கோட்டோவியமும் காளி முத்துவின் பேச்சுகளும் அக்காலத்தில் புகழ் பெற்றிருந்தன.

அப்போது டிவோஸ் ஒழுங்கையில் ஒரு வீட்டில் கார்மேகம் குடியிருந்தார். வீரசேகரி ஆசியர் கே.வி. எஸ். வாஸ் அளவுக்கு கார்மேகம் புகழ் பெற்றவராக இருந்தார். எஸ். பொன்னுதுரை (எஸ்பொ) ஸ்டனிஸ்லாஸ் (அன்டன் பாலசிங்கம்) செல்லசாமி, கோவிந்த ராஜ், தெளிவத்தை ஜோசப், மாத்தளை கார்திதகேசு ஆகியோர் வந்து செல்லும் இலக்கிய கூடமாக அவ்வீடு திகழ்ந்தது.

"ஜோசப் ஒரு சிவாஜி ரசிகனாக இருந்திருக்க வேண்டும். சினமா பார்க்கும் ஆர்வம் இருந்தாலும் பிற்காலத்தில் அவை பறி சிலாகித்து பேசமாட்டார். அக் காலத்தில் அவர் சிங்கள நாடகங்களைப் பார்ப்பார். எங்களையும் பார்க்கச் சொல்வார். தரமான மலையாளப்படங்களின் ரசிகர், அவர் சொல்லித் தான் செம்மீன் படத்தை நான் பார்த்தேன். வத்தளையில் இருந்து மனைவியுடன் கார் பிடித்து படம் பார்க்க கொழும்பு வரும் போது அவருடன் நாங்களும் படம் பார்க்கச் செல்வோம். தரமான கலாசார ரசனையை எங்களுக்குள் அவர் விதைத்தார்; வளர்த்தார் என்பேன்" என்று நினைவு கூர்கிறார். மு. சிவலிங்கம். சிலிங்கம் நேரிடையாகப் பயன் பெற்றார் என்றால் பலர் ஏகலைவனாக தூர நின்று தம்மை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஜோசப்பின் அண்ணன் தெளிவத்தை தோட்டத்தில் உத்தியோகத்தராகக் கடமையாற்றியபோது அவருக்கு சமைத்து போடுவதற்காகத்தான் அத் தோட்டத்துக்கு இவர் சென்றிருக்கிறார். பதுளை அனோஜா டாக்கீசில் படம் பார்த்து விட்டு வந்து படக் கதையை மெகா சீரியல் போல விலாவரியாக தோட்டத்தவர்களிடம் சொல்வாராம். கதை சொல்லியாக மாறுவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருந்திருக்க வேண்டும் என்று சொல்லும் தெளிவத்தை ஜோசப், ஸ்டார் பிரேண்டில் தொழில் கிடைத்ததும் சுகததாச விளையாட்டங்குக்கு அருகாமையில் அமைந்திருந்த மருத்துவமனையில் பணியாற்றி வந்த தன் சகோதரரின் வீட்டில் இருந்துதான் ஸ்டார் பிராண்ட் நிறுவனத்துக்கு துவிச்சக்கர வண்டியில் தொழிலுக்கு சென்றிருக்கிறார். வத்தளையில் குடியேறியது திருமணத்தின் பின்னர்.

அவர் அண்ணனுக்கு திருமணமானபோது இவருக்கு இருபது வயது. தெளிவத்தையில் இருந்து கொழும்புக்கு வரும்போது அண்ணன் வீட்டில் தங்குவார். அண்ணியின் தங்கை பிலோமினா அந்த வீட்டில் பத்து வயது குழந்தையாக இருந்தார்.

பிலோமினாதான் இவருடைய விளையாட்டுத் தோழி. விளையாட்டுத்தோழியாக ஆரம்பித்த உறவு பின்னர் நட்பாகவும் காதலாகவும் மாறி 1968ஆம் ஆண்டில் கிரண்பாஸ் புனித ஜோசப் ஆலயத்தில் திருமணமாக முடிந்தது. மனமொத்த தம்பதிகள் என்று சொல்வார்களே அது நூற்றுக்கு நூறு வீதம் ஜோசப் பிலோமினா தம்பதிக்கு பொருந்தும்.


வண்ணவானவில் ஆசிரிய பீடத்தில் தெளிவத்தை

கடந்த மாத இறுதியில் அவர் வீட்டுக்கு அழைப்பு எடுத்தபோது மனைவி தான் மறுமுனையில் பேசினார். அவருக்கு இரண்டுமாதமாக சுகமில்லை. இப்போதும் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கிறார். அவர் உடலுக்குள் விஷக் கிருமிகள் புகுந்துள்ளதாம். ரேடியோ சிகிச்சை மூலம் குணப்படுத்தி வருகிறார்கள்.

வீட்டுக்கு வருவதும் வத்தளை ஹோமாசுக்கு போவதுமாக இருக்கிறார். ஒரு விஷயம் தான் சொல்வேன். தயவு செய்து அவருக்காக ஆண்டவரிடம் வேண்டிக் கொள்ளுங்கள் என்றபோது, இவருக்கா, சுகமில்லையா என்று தூக்கிவாரிப் போட்டது. இம் மாத இறுதியில் மீண்டும் அழைப்பு எடுத்தபோது மறுமுனையில் ஹலோ சொன்னவர் ஜோசப். "நான் ஒரு வழியாக மீண்டு வந்துவிட்டேன். தோள் பட்டையைத் தூக்க முடியாமல் வலி என்றுதான் பிரச்சினை ஆரம்பித்தது. பல கிலோக்களில் எடை குறைந்துவிட்டது. இப்போது சாப்பிட முடிகிறது.

*Back to normal.* நீங்கள் பயப்பட வேண்டாம். உங்களுக்கு ஏதாவது எழுதிச் தருகிறேனே!" என்று உற்சாகமாகப் பேசினார். எனக்கு அப்பாடா என்றிருந்தது!

1994இல் தினகரனுக்கு வந்த பின்னர் நான்தான் அவருடைய லேக்ஹவுஸ் வாசல். நாம் பாவிகளாக இருக்கிறோம், மலையக சிறுகதை வரலாறு, துரைவி சிறுகதைப் போட்டி சிறுகதைகள் ஆகியவற்றையும் 1994முதல் 2022 வரை தினகரன் வாரமஞ்சரி, வண்ண வானவில் இதழ்களில் வெளியானவை என்பதில் எனக்கு மகாபெருமை! இருவருக்கும் இடையில் மிகுந்த புரிதல் காணப்பட்டது.

ஒரு இரண்டு வருடங்களாக அவரை தொந்தரவு செய்து எஸ் பொவைப் பற்றிய தொடரை வானவில்லில் வெளியிட்டேன். எஸ்.பொ எவ்வளவு அற்புதமான மனிதரோ அதேபோல எஸ்.பொ தொடரும் தெளிவத்தை கைபட்டு அற்புதமாக வெளிவந்து முடிவடையாமலேயே நின்றுபோனது வருத்தத்துக்குரியது. அது நூலாக வெளிவந்திருந்தால் எஸ்.பொவுக்கு மகுடம் சூட்டியதாக இருந்திருக்கும்.

தன் எழுத்தை வீரகேசரியில் ஆரம்பித்தபோதும் அவரது முக்கியபடைப்புகள் தினகரனிலேயே வெளியானது. மலையகச் சிறுகதை வரலாறு நூலின் முன்னுரையில் (1999), மலையக மக்கள் வரலாறு, மலையக தொழிற்சங்க வரலாறு, மலையக இலக்கிய வரலாறு, மலையக சஞ்சிகை வரலாறு, மலையக நாவரல் மற்றும் சஞ்சிகை வரலாறு ஆகிய நூல்களை எழுத வேண்டும் என்ற தன் விருப்பத்தைக் குறிப்பிட்டுள்ளார். வயதின் காரணமாக அது சாத்தியப்படவில்லை. ஸ்டார் பிரேன்ட் நிறுவன வரலாற்றையும் ஒரு நாவலாகக் கொண்டு வர வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

ஐம்பதைத் தாண்டியவர்களுக்கு பகல் உண்டபின் கொஞ்ச தூக்க கலக்கம் ஏற்படுவது இயற்கை. ஆனால் வயதை பொருட்படுத்தாமல் உச்சி பொழுதுகளிலும் கொழும்பு வீதிகளில் சுற்றித் திரிந்தவர்களில் மூன்று படைப்பாளர்களை குறிப்பிட்டுச் சொல்லலாம்.

ஒருவர் மல்லிகை ஜீவா. வெயில் தகிக்கும் பிற்பகல் இரண்டரை மணிக்கு செட்டியார்த் தெரு, பிரதான வீதி, கொச்சிக் கடையில் சுற்றிக் கொண்டிருப்பார்.

தெளிவத்தை ஜோசப் பெரும்பாலும் பி.ப இரண்டு மணியளவில்தான் லேக்ஹவுஸ் வருவார். முன்றாமவர் அந்தனி ஜீவா. இம் மூவரும் கடுமையான உழைப்பாளர்கள். பெரும்பாலும் சுகதேகிகளாகவே வாழ்ந்து அந்திமத்திலேயே நோய் வாய்ப்பட்டார்கள். ஜோசப் நோய்வாய்ப்பட்டதாக நான் கேள்விப்பட்டதில்லை. பல வருடங்களுக்கு முன்பு அவர் பஸ்சில் பயணித்துக் கொண்டிருக்கும்போதுதான் மாரடைப்பு ஏற்பட்டிருக்கிறது.

ஆனால் அவர் அதை அறிந்திருக்கவில்லை, அன்று மாலை வீடு திரும்பிய பின்னர் மனைவியின் நச்சரிப்பு காரணமாகவே ஆஸ்பத்திரிக்கு சென்றார். அங்கே தான் அவரது இதய நாளங்களில் அடைப்பு ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டு உடனடி அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். இந்த அனுபவங்களை அவர் என்னிடன் பகிர்ந்திருக்கிறார்.

அவர் பல விருதுகளின் சொந்தக்காரர். கலாபூஷண விருது, தேசிய சாகித்திய விருது, சாகித்திய ரத்னா விருது ஆகிய அரச விருதுகளும் தமிழக விஷ்ணுபுர விருது, கொடகே விருது, கரிகாற்சோழன் விருது என்பனவும் இன்னும் பலவும் அவருக்கு ஊக்கிகளாக செயற்பட்டு அவரது இயங்கு சக்தியை அதிகப்படுத்தி இருக்கலாம்.

ஒருவர் மறைந்ததும் ஈடுசெய்ய முடியாத இழப்பு என்று சொல்வது வழக்கம். ஆனால் ஈடுசெய்ய முடியாத இழப்புகளும் உண்மையாகவே ஏற்படத்தான் செய்கின்றன. ஓவியர் தவத்தின் மறைவு ஈடுசெய்ய முடியாத இழப்பே.

அவரைப்போன்ற இன்னொரு ஓவியர் இப்போது இங்கில்லை. பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்த செங்கை ஆழியானின் மறைவு ஈடுசெய்யப்படவில்லை. இடதுசாரி எழுத்தாளரான தெணியானின் மறைவும் ஈடு செய்ய முடியாததே. அகஸ்தியருக்கு பின் தெணியான் இருந்தார். இன்று அது வெற்றிடமாகி விட்டது.

தெளிவத்தையின் மறைவும் ஈடுசெய்ய முடியாதே என்பதை இலங்கை தமிழ்ப்படைப்பாளர் பரப்பில் அனைவருமே ஏற்றுக் கொள்வார்கள்.

அவர்தன் தனித்துவத்தையும் வித்வ கர்வத்தையும் கடைசிவரை விட்டுக் கொடுக்கவே இல்லை. சமரசம் செய்து கொண்டதும் இல்லை.

அவரிடம் எனக்கு மிகவும் பிடித்தது தனக்குக் கிடைத்த விருதுகளை தன் பெயருடன் பயன்படுத்திக் கொள்ளாத அந்தக் கர்வம். இந்த விருதை போட்டுக் கொண்டால் தான் எனக்கு கௌரவம் என அவர் நினைத்ததில்லை.

க.பொ.த உயர்தரம் சித்திபெறாதவர்களும் கலாநிதி எனப் போட்டுக் கொள்வது பற்றி என்னிடம் சொல்லி அவர் வருத்தப்பட்டுள்ளார். என்றைக்கும் அவர் உபயோகித்த பெயர் தெளிவத்தை ஜோசப் என்பது மட்டுமே. உண்மையாகவே பகிர்வும், ஆழமும், விரிவும் கொண்டவர் என்பதை அது பறைசாற்றுகிறது.

இறுதியாக, தெளிவத்தை மீதான என் கோபத்தையும் பதிவு செய்கிறேன். அவரிடம் தன் வரலாற்றை எழுதித் தரும்படி கேட்டேன். உங்கள் வாழ்க்கை நினைவுகளை கட்டுரைகளாக எழுதுங்களேன் எனக் கேட்டேன்.

அதை அவர் கவனத்தில் கொள்ளவில்லை. பல வரலாறுகளைப் படைத்த அவர் தன் வரலாற்றை எழுதாமல் விட்டதால் ஒரு நூறு வருட தமிழ் இலக்கிய வரலாறு வெளிவராமல் போய்விட்டது!

இன்னொரு ஜோசப்... மு. சிவலிங்கத்தை நான் திருப்பிப் பார்க்கிறேன். ஜோசப்பின் பணியை அவர் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

அருள் சத்தியநாதன் ...✍

## சிறப்பான வெளியுறவு... (08ஆம் பக்கத் தொடர்)

அதுமாத்திரமன்றி இந்தியாவுடன் நெடுங்காலம் தொடக்கம் பாரம்பரிய உறவுகளைக் கொண்டிருந்த நாடுகளுக்கும், இந்தியப் பிரதமர்கள் கடந்த காலத்தில் பயணம் மேற்கொள்ளாத நாடுகளுக்கும்தான் பிரதமர் நரேந்திர மோடி பெரும்பாலும் பயணங்கள் மேற்கொண்டார் என்பதையும் எம்.ஜே. அக்பர் இங்கே சுட்டிக் காட்டுகின்றார்.

இதுஒருபுறமிருக்க வெளிநாட்டு விவகாரங்களில் வல்லுநரான பிரெஞ்சு பத்திரிகையாளர் முசின் எனாமி என்பவர் மற்றொரு கருத்தைத் தெரிவித்துள்ளார்.

"பிரதமர் நரேந்திர மோடியின் வெளிநாட்டுப் பயணங்களால், அனைத்து நாடுகளும் இந்தியாவை கூர்ந்து கவனிக்கத் தொடங்கின. இந்தியா மீது சிறிய நாடுகளுக்கு நம்பிக்கை அதிகரித்துள்ளது. இந்தியாவுடனான எங்கள் நாட்டின் உறவுகள் நெருக்கமாகியுள்ளன. இரு நாடுகளுக்கும் இடையே பரஸ்பர வணிகம் அதிகரிக்கத் தொடங்கியிருக்கிறது" என்று குறிப்பிடுகின்றார் அவர்.

பிரிட்டன் பத்திரிகையாளரான வனேசா வாரிக் பல ஆண்டுகளாக இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகள் குறித்து எழுதி வருகிறார். அவர் பின்வருமாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

"பிரதமர் மோடியின் முதல் ஐந்து ஆண்டுகளில் அவரது வெளிநாட்டுப் பயணங்கள் அதிகமாக இருந்தபோது, அவரைப் பற்றி உலக அளவில் அனைவரும் பேசினார்கள். அவர் பயணித்த எல்லா நாடுகளிலும் புலம்பெயர் இந்தியர்கள் அவரை வரவேற்ற விதம் பாராட்டத்தக்கது. ஆனால் இப்போது அவரது பயணங்கள் குறைந்து விட்டன. வெளிநாடுகளுடனான உறவுகளை சீர்படுத்துவதே நரேந்திர மோடியின் அன்றைய நோக்கமாக இருந்தது."

இவ்வாறு அவர் கூறுகின்றார்.

நரேந்திர மோடி எப்போதுமே வளைகுடா நாடுகளுடனான தனது நல்லுறவைப் பேணி வருகிறார். இந்திய வரலாற்றிலேயே வளைகுடா நாடுகளுடன் அவருக்குத்தான் சிறந்த உறவு இருந்து வருகின்றது. மாலைதீவு மற்றும் பஹ்ரைன் நாடுகள் மோடிக்கு உயரிய விருதுகளை வழங்கிப் பெருமைப்படுத்தியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் கொவிட் பேரிடர் காலத்திலும், பொருளாதார நெருக்கடி வேளையிலும் விரைந்து வந்து உதவிகள் வழங்கிய நாடு இந்தியா ஆகும். இந்திய அரசு கடைப்பிடித்து வருகின்ற சிறப்பான வெளியுறவுக் கொள்கைக்கு இதுவும் சிறந்ததொரு உதாரணம் ஆகும்.

# சிறுமியை திருமணம் செய்துவைக்க மறுத்ததால் வீட்டுக்கு தீ வைப்பு

*யாழ். விசேட நிருபர்*

யாழ்ப்பாணம் ஏழாலை பகுதியில் 15 வயதான சிறுமியை தனக்கு திருமணம் செய்து தருமாறு இளைஞன் ஒருவர் வற்புறுத்தி வந்ததாகவும் அதற்கு வீட்டார் சம்மதிக்காத நிலையில் இளைஞனின் குழுவினர் வீட்டினுள் நுழைந்து வீட்டுக்கு தீ வைத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு அந்த குழுவால் அவர்களுக்கு அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள் விடுக்கப்பட்டு வந்ததாகவும் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

நான்கு பேர் கொண்ட வன்முறை கும்பல் ஒன்றினாலே வீடு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. குறித்த வீட்டினுள் வியாழக்கிழமை உட்புகுந்த நால்வர் அடங்கிய வன்முறை கும்பல் வீட்டில் இருந்தோரை அச்சுறுத்தி வீட்டுக்கு தீ வைத்துள்ளனர்.



தீ வீடு முழுவதும் பரவியதில் வீட்டில் இருந்த முக்கிய ஆவணங்கள் உள்ளிட்டவை உட்பட பெறுமதியான பொருட்கள் அனைத்தும் தீக்கிரையாகியுள்ளன.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மின்சார சபையில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாக பணமோசடி

## தலங்கமவில் கணவன், மனைவி கைது

இலங்கை மின்சார சபையில் தொழில் வாய்ப்பு பெற்று தருவதாக கூறி நிதி மோசடி செய்த தம்பதியினர் தலங்கம பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த மோசடி தொடர்பாக தலங்கம பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைக்கபெற்றிருந்தது. இந்நிலையில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் சம்பவத்துடன் தொடர்புடைய தம்பதியினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 33 வயது மற்றும் 27 வயது அவரின் மனைவியும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் இருவரும் தலங்கம பிரதேசத்தைச் சேர்ந்தவர்களெனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதன்போது சந்தேகநபர்கள் இருவரும் வேலை வாய்ப்பு பெற்று தருவதாக கூறி தொலைபேசி அழைப்பினூடாக கடந்த மார்ச் மாதம் முதல் 7,68,300 ரூபா பெற்று கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் கடுவெல நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளனர். தலங்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# 2023ஆம் வருடத்திற்காக வழங்குநர்களைப் பதிவு செய்தல்

## அக்குறணை பிரதேச சபை

2023ஆம் வருடத்தினுள் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்படும் வழங்கல்கள் மற்றும் சேவைகளை நிறைவேற்றுவதற்கு விரும்பும் வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. ஒரு விண்ணப்பத்திற்காக 1500.00 ரூபா தொகை அறவிடப்படுவதுடன் தம்மால் சுயமாகத் தயாரித்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தின் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்களை தலைவர், அக்குறணை பிரதேச சபை, அலவத்துகொட என்ற முகவரிக்கு 2022.12.31ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2023' என்று குறிப்பிடுதல் வேண்டும்.
02. சகல காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகளிலும் செயலாளர், அக்குறணை பிரதேச சபை, அலவத்துகொட எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
03. வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதி மற்றும் உங்களால் வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரம் மற்றும் ஆளடையாளம் பற்றிய ஏனைய ஆவணங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. உங்களிடம் பொருட்கள் மற்றும் சேவைகளை கோரும்போது விலைமனுக்களைச் சமர்ப்பிக்காத, கட்டளை வழங்கப்படும் போது வழங்கல்களை மேற்கொள்ளாத, குறித்த நேரத்திற்கு மற்றும் குறித்த தரத்திற்கு அமையாத வழங்குநர்கள் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.
05. பதிவு செய்துள்ள வழங்குநர்களின் பட்டியலிலிருந்து விலைகளைக் கோரி குறித்த பொருட்கள் மற்றும் சேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
06. மேலதிக விபரங்களுக்கு 066-2244387 என்ற தொலைபேசி இலக்கத்தில் அலுவலக நேரங்களில் தொடர்புகொண்டு விசாரித்து அறியலாம்.

| தொடர் இல. | வழங்கல் விபரம் |
|---|---|
| 01 | சகல அலுவலக காகிதாதிகள் |
| 02 | அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள், உருக்கு தளபாடங்கள் |
| 03 | கணனி, புகைப்படப் பிரதி இயந்திரங்கள், அச்சுப்பொறிகள், தொலைநகல், கைவிரல் ரேகை பதிவு இயந்திரம், டுப்ளோ இயந்திரம், சகல டோனர் வகைகள் மற்றும் கணனி துணைப்பாகங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் |
| 04 | வீதி விளக்கு உபகரணங்கள் மற்றும் அலுவலக மின் உபகரணங்கள் |
| 05 | விளையாட்டுத்துறைப் பொருட்கள் |
| 06 | சீருடைகள், திரைச்சீலைகள், மேசைத் துணிகள், பாதணிகள், காலுறைகள், அலுவலக பைகள், உத்தியோகபூர்வ இலச்சினைகள் |
| 07 | நிர்மாண இயந்திர உபகரணங்கள் |
| 08 | நிர்மாணப் பொருட்கள் (சீமெந்து, கருங்கல், மணல், செங்கல், கூரைத்தகடு, சிறுகல், நிறப்பூச்சுகள், குழாய்கள், ஜீ.ஐ. குழாய்கள், இரும்பு போன்றன) பிவிசி நீர்க்குழாய் மற்றும் துணைப்பாகங்கள், சகல வகையான கொங்கிறீட் உற்பத்திகள் (ஹியூம் குழாய்கள், கம்பித்தூண், புளொக்கல், தரையில் பதிக்கும் கற்கள்) |
| 09 | வாகன உதிரிப்பாகங்கள் (டயர், டியூப், பெற்றரி, எண்ணெய் வகைகள், ஏனைய உதிரிப்பாகங்கள், மீற்றர்) |
| 10 | சுகாதார மற்றும் துப்புரவேற்பாட்டு சேவைகளுக்கு தேவையான பொருட்கள் (தும்புத்தடி, விளக்குமாறு, தூரிகை, சவர்காரம். கையுறை, கிருமிநாசினி, மழை அங்கி, கம்பூட்ஸ், வாய்க் கவசம் போன்றன) |
| 11 | வாகனங்களை சேர்விஸ் செய்தல் |
| 12 | வீதிப்பராமரிப்பு மற்றும் வேலைத்தள உபகரணங்கள் (மண்வெட்டி, சவல், ரேக்கை, கத்தி, அளவை பட்டி போன்றன) |
| 13 | ஆயுர்வேத ஔடதங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் |
| 14 | தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு துணைப்பாகங்கள், உபகரணங்கள் |
| | **சேவைகள்** |
| 15 | வாகன இயந்திராதிகளை வாடகைக்கு வழங்குதல் |
| 16 | அச்சு வேலைகள் (புத்தகம், ஆவணங்கள், படிவங்கள், பில் புத்தகங்கள், சுவரொட்டிகள், அலுவலக அடையாள அட்டைகள்) |
| 17 | பட்டறை வேலைகள் |
| 18 | நில அளவை, சட்டம் மற்றும் ஆலோசனை சேவைகள் |
| 19 | சிங்கள, ஆங்கில, தமிழ் மொழி பெயர்ப்புச் சேவைகள் |
| 20 | அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் |
| 21 | கணனி, அச்சுப்பொறி, தொலைநகல், புகைப்படப் பிரதி இயந்திர, விரல் ரேகை பதிவு இயந்திரம், வளிச்சீராக்கி இயந்திர திருத்தவேலைகள் |
| 22 | உருக்கியொட்டும் வேலைகள், மேசன் வேலைகள், நீர்க்குழாய், பட்டறை சேவைகள், தொழில்நுட்ப சேவைகள், உள்ளக தொலைபேசி சேவைகள் |
| 23 | வாகன திருத்தவேலைகள், கடைசல் இயந்திர வேலைகள், வாகன சேவைகள் வழங்குதல் |
| 24 | உத்தியோகபூர்வ முத்திரை, திகதி முத்திரை, நினைவுப் படிகம் தயாரித்தல், டிஜிட்டல் அறிவித்தல் அச்சிடல் மற்றும் பொருத்துதல் |
| 25 | அபாயகரமான மரங்கள் வெட்டுதல் |
| 26 | உணவு வழங்குதல் |
| 27 | உற்சவப் பொருட்கள் (கெனபி கூடாரங்கள், உணவை பாதுகாக்கும் தொகுதிகள், நெஸ்கபே இயந்திரம், உணவுத் தட்டுகள், கண்ணாடிக் குவளைகள் போன்றன) |
| 28 | ஒப்பந்தக்காரர்களின் பொருட்டு - ரூபா 3,000.00 |

**ஐ. எம். இஸ்திகார்,**
**தலைவர்**
**அக்குறணை பிரதேச சபை**
**அலவத்துகொடை.**

# பெறுகை அறிவித்தல்

## இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்

### இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் கண்ணாடி போத்தல்களைக் கொள்வனவு செய்வதற்காக கேள்வி கோரல்

**கேள்வி இல : AD/1/GB/353/2022**

**இறுதி நாள்:**

**2022 நவம்பர் மாதம் 29ஆம் திகதி மு.ப. 11.30**

இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் கண்ணாடி போத்தல்களைக் கொள்வனவு செய்வதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் மீளளிக்கப்படாத ரூபா 3,000.00 + VAT கேள்விக் கட்டணத்தை தலைமை அலுவலகத்தின் நிதியாளருக்குச் செலுத்தியதன் பின் **2022 நவம்பர் மாதம் 14ஆம் திகதி முதல் 2022 நவம்பர் மாதம் 28ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி** வரையான அரச வேலை நாட்களில் **''மெஹெவர பியஸ'', 16ஆம் தளம், இல. 41, கிருள வீதி, நாராஹென்பிட்டி** எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் வரவேற்புக் கருமபீடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்களை தலைவர், திணைக்கள பெறுகைக் குழு எனும் பெயரில் பின்வரும் முகவரிக்கு **2022 நவம்பர் மாதம் 29ஆம்** திகதி மு.ப. 11.30 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லாவிடில் அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்வி இலக்கம் மற்றும் கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி மற்றும் நேரம் என்பன கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக தகவல்களை 0112-436613 எனும் தொலைபேசி இலக்கத்தில் நிர்வாக முகாமையாளரிடமிருந்து வேலை நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி கோரல் நிறைவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்,**
**''மெஹெவர பியஸ'' 16ஆம் தளம்,**
**இல. 41, கிருள வீதி, நாராஹென்பிட்டி.**
**தொலைபேசி: 2320356-9**




# அரசியலமைப்புப் பேரவைக்கான உறுப்பினர்கள் நியமனம்

இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 41அ உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தாபிக்கப்படவுள்ள அரசியலமைப்புப் பேரவையின் உறுப்பினர்களின் நியமனம் தொடர்பாக பரிசீலிப்பதற்காக பகிரங்க வாழ்வில் அல்லது உயர் தொழிலில் தமக்கென்று சிறந்த நிலையை ஏற்படுத்திக் கொண்ட கீர்த்தி வாய்ந்தவர்களும் நேர்மையுடையவர்களும் அத்துடன் ஏதேனும் அரசியற் கட்சியின் உறுப்பினரல்லாதவர்களுமான ஆட்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் (www.parliament.lk என்னும் பாராளுமன்ற இணையத்தளத்தில் காணப்படும் மாதிரிப்படிவத்துக்கு இணங்க தயாரிக்கப்பட்டு) சுயவிபரப் படிவத்துடன்,

**பாராளுமன்ற செயலாளர் நாயகம்**
**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே.**

எனும் முகவரிக்கு 2022 நவம்பர் 28ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அரசியலமைப்புப் பேரவையின் உறுப்பினர்கள் நியமனம்" எனக் குறிப்பிடவும்.

பாராளுமன்ற கௌரவ சபாநாயகரின் கட்டளையின் பிரகாரம் வெளியிடப்பட்டது.

**பாராளுமன்றச் செயலாளர் நாயகம்**
**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே**

2022.11.13

# உருகுணை பல்கலைக்கழகம்

## விவசாய பீடம்

### விஷேட ஏற்பாடுகளின் கீழான உட்சேர்ப்பு 2021/2022 ஆண்டு அனுமதி வருடங்களுக்காக

2021/2022 ஆண்டுகளுக்காக அனுமதிவருடங்களுக்காக விவசாயவள முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பத்தில் கௌரவப்பட்டம் மற்றும் விவசாயவர்த்தக முகாமைத்துவத்தில் விஞ்ஞானமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை பின்பற்றுவதற்காக பரீட்சார்த்திகளிடமிருந்து உருகுணை பல்கலைக்கழக விவசாயபீடமானது விண்ணப்பங்களை அழைக்கின்றது. இவ் இரு பட்டப் படிப்புகளும் நான்கு கல்விசார் வருடங்களைக் கொண்ட கௌரவ பட்டப்படிப்புகளாகும். தகுதியுள்ள பரீட்சார்த்திகளை தெரிவு செய்வதற்காக விரைவில் அனுமதிப் பரீட்சையொன்று நடைபெறும். அனுமதிப் பரீட்சையில் தகைமை பெறும் பரீட்சார்த்திகள் இறுதி தெரிவிற்கான நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

**1. விவசாயவள முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பத்தில் கௌரவப் பட்டம்.**

அனுமதிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகுதித்தன்மைக்காகபரீட்சார்த்திகள் பின்வரும் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்தல் வேண்டும்.

**(அ) தொழில்சார் தகைமைகள்:**
கல்வி அமைச்சினால் அல்லது பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விவசாய திணைக்களத்தின் எந்தவொரு விவசாய பாடசாலையிலிருந்தும் அக்குவனாஸ் பல்கலைக்கழக பாடசாலை, ஹாட்டி தொழில்நுட்ப பயிற்சிக் கல்லூரி, இணைக்கப்பட்ட பல்கலைக்கழக கல்லூரி ஆகியவற்றிலிருந்து விவசாயத்தில் அல்லது விலங்குற்பத்தியில் பெற்றவொரு பட்டச் சான்றிதழ் கற்கை அல்லது விவசாயத்தை பிரதான பாடமாகக் கொண்டு தேசியகல்வியியல் கல்லூரியிலிருந்து பெற்ற பட்டச்சான்றிதழொன்று

**(ஆ) கல்விசார் தகைமைகள்:**
i. கபொத (சா/த) பரீட்சையில் ஒரே அமர்வில் விஞ்ஞானம் மற்றும் கணிதம் அடங்கலாக நான்குதிறமைச் சித்திகளுடனான ஆறு பாட சித்தி.
ii. கபொத (உ/த) பரீட்சையில் பின்வரும் பாடங்களில் ஒரேஅமர்வில் ஆகக்குறைந்தது மூன்றுசித்திகள் பெற்றிருத்தல் வேண்டும்:தாவரவியல், இரசாயனவியல், விலங்கியல், உயிரியல், பௌதீகம், கணிதம் (தூய/பிரயோக) மற்றும் விவசாயம்

**(இ) தொழில்சார் அனுபவம்:**
விவசாயத்தில் பட்டச்சான்றிதழை பெற்ற பின்னர்,விவசாய/விலங்குற்பத்திதுறையில் அரசாங்க அல்லது தனியார் துறை அல்லது தொடர்புடைய துறைகளில் நிரந்தர அலுவலராக விண்ணப்பங்களை மூடும் தினத்தன்று ஐந்துவருட அனுபவம்.

**(ஈ) புலமைப்பரீட்சைகள்**
முழுநேர அடிப்படையில் பட்டப் படிப்புகற்கை நெறியை தொடர்வதற்காக தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு புலமைப்பரீட்சைகள்/கல்வி விடுமுறையை வழங்குவதற்காக ஏற்புடைய நிறுவனங்களின் தலைவர்கள் ஏற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

**(உ) அனுமதிப் பரீட்சை:**
i. மேலேயுள்ள பட்டப்படிப்பிற்காக பத்து பரீட்சார்த்திகள் வரையும் தெரிவு செய்வதற்கான பரீட்சையொன்று விரைவில் நடைபெறும். இப்பரீட்சையானது 30 நிமிடங்களுக்கான தகுதிகாண் பரீட்சைத் தாள் மற்றும் 2 மணித்தியாலங்களுக்கான பல தேர்வு கேள்விகள் மற்றும் கட்டமைக்கப்பட்ட கட்டுரை வினாக்களுடனான பாடவிடயத் தாள்
ii. அனுமதிப் பரீட்சைக்கான கட்டணம் 500 ரூபாவாகும்.

**2. விவசாய வர்த்தக முகாமைத்துவத்தில் விஞ்ஞானமாணி கௌரவப் பட்டம்:**

அனுமதிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகுதித்தன்மைக்காக பரீட்சார்த்திகள் பின்வரும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்தல் வேண்டும்.

**(அ) கல்விசார் தகைமைகள்:**
i. கபொத (உ/த) பரீட்சையில் ஒரேஅமர்வில் இரசாயனவியல், பௌதீகம் (புவியியல் அல்லது விவசாயம்) மற்றும் உயிரியல் (தாவரவியல் மற்றும் விலங்கியல்) ஆகிய பாடங்களில் மூன்று பாடங்களில் சித்தி. வெளிநாட்டு மாணவர்களுக்கும் நிகரான தகைமைகள் பிரயோகப்படுத்தப்படும்.

**(ஆ) அனுபவம்:**
i. விவசாய வர்த்தகதுறையில் அரசாங்க/தனியார்/வெளிநாட்டு கைத்தொழில் நிறுவனங்களில் நிரந்தர ஊழியராக விண்ணப்பங்களை மூடும் திகதியில் ஐந்து (5) வருட வேலை செய்த அனுபவம்.

**அல்லது**

ii. விவசாய வர்த்தகதுறையில் சுயவேலைவாய்ப்பில் பத்து (10) வருடஅனுபவம்.

**(இ) கட்டணகட்டமைப்பு:**
i. இலங்கை பரீட்சார்த்திகளிடமிருந்து
அறவிடப்படும் கற்கைநெறிக் கட்டணம் : வருடமொன்றிற்கு 200,000 ரூபா. (மொத்த செலவு: 800,000 ரூபா) வெளிநாட்டு பரீட்சார்த்திகளிடமிருந்து
அறவிடப்படும் கற்கைநெறிக் கட்டணம் : வருடமொன்றிற்கு 2000 அமெரிக்க டொலர் (மொத்த செலவு: 8000 அமெரிக்க டொலர்.)
ii. நூலககட்டணம், த.தொ. வசதிக் கட்டணம்,மாணவர் நலன்புரிக் கட்டணம், பதிவுசெய்தல் கட்டணம் மற்றும் ஏனைய உரித்தான கட்டணங்கள் பல்கலைக்கழக விகிதங்களுக்கமைவாக அறவிடப்படும்.
iii. விண்ணப்ப செயன்முறை கட்டணமானது இலங்கை மற்றும் வெளிநாட்டு பரீட்சார்த்திகளுக்கு முறையே 1000 ரூபா மற்றும் 50 அமெரிக்க டொலர் ஆகும்.

**இரு பட்டப் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கான பொதுவான தேவைப்பாடுகள்.**

- அனுமதிப் பரீட்சைக்கான எத்தனிப்புக்களின் எண்ணிக்கை - மூன்று (3)
- விண்ணப்பபடிவத்தின் மூடும் திகதியன்று வயதானது 40 இற்கு குறைவாகவிருத்தல் வேண்டும்.
- அனுமதிப் பரீட்சை மற்றும் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கான மொழிமூலம் - ஆங்கிலம்.

பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கான உரித்தான அனுமதிப் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய பின்னர், கம்புறுப்பிட்டிய, மாப்பலான, உருகுணை பல்கலைக்கழக விவசாயபீடத்திலிருந்து விண்ணப்பப்படிவங்களையும் ஏனைய விபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம். உரியமுறையில் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2022 டிசம்பர் 31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விவசாயபீட உதவிப் பதிவாளரை வந்தடையும் வகையில் உரித்தான நிறுவனங்களின் தலைமைகளூடாக அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் மற்றும் ஏனைய உரித்தான விபரங்களை தபாலில் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள், சுயமுகவரியிடப்பட்டதும் 9'' x 4'' அளவுள்ளதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான தபாலுறையை உதவிப் பதிவாளர், விவசாயபீடம், உருகுணை பல்கலைக்கழகம், மாப்பலான,கம்புறுப்பிட்டிய என முகவரியிடப்பட்டதும் விண்ணப்பதாரியின் பெயர் மற்றும் முகவரி குறிப்பிடப்பட்டதும் மக்கள் வங்கி கம்புறுப்பிட்டிய கிளையிலுள்ள 133100160000029 என்ற கணக்கிலக்கத்திற் உருகுணை பல்கலைக்கழக விவசாயபீடத்தின் பெயருக்கு வழங்கப்பட்டதும் அனுமதிப் பரீட்சைக்கான உரித்தான கட்டணத்தை வரவுவைக்கப்பட்டதுமான வங்கிபணவரவுத் துண்டுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். உரியமுறையில் பூர்த்திசெய்யப்பட்ட/ பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களும் (www.agri.ruh.ac.lk) உரித்தான நிறுவனங்களின் தலைமைகளூடாக அனுமதிப் பரீட்சைக்கான பணக்கொடுப்பனவுத் துண்டுடன் உருகுணை பல்கலைக்கழக விவசாயபீட உதவிப் பதிவாளருக்கு அனுப்பி வைக்கப்படலாம்.

**பதிவாளர்,**
**உருகுணை பல்கலைக்கழகம்,**
**மாத்தறை.**

# கிழக்கின் வர்த்தகத்துறையை மேம்படுத்த வியட்நாம் உதவி

மட்டக்களப்பு சுழற்சி நிருபர்

நாட்டின் சீர்ற்ற பொருளாதாரத்தினை கட்டியெழுப்பும் அரசின் திட்டத்தில் கிழக்கு மாகாணத்தில் வர்த்தகத்துறையை அபிவிருத்தி செய்யும் வியட்நாம் மற்றும் இலங்கை நாடுகளுக்கிடையிலான வர்த்தக மாநாடு நேற்று முன்தினம் மட்டக்களப்பு பாசிக்குடா அமாயா சுற்றுலா விடுதியில் நடைபெற்றது.

இலங்கைக்கான வியட்நாம் தூதுவராலயமும் கிழக்கு மாகாண வர்த்தக பிரதிநிதிகளும் இணைந்து இந்த வர்த்தக மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தனர் இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் ஹொட் ஹி தாங் ட்ராக்(Hot thi thanh Truc) மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத் ஆகியோர் தலைமையில் இம்மகாநாடு நடைபெற்றது.

இம் வர்த்தக மாநாட்டில். வியட்னாமிய வர்த்தகத்துறை, பொருளாதார துறை வளர்ச்சிகளை பயன்படுத்தி கிழக்கு மாகாண வர்த்தகர்களை ஊக்குவிப்பதே இதன் பிரதான நோக்கமாகும்.

வியட்நாம் தூதுவர் கருத்து தெரிவித்த போது,..

1986 ஆம் ஆண்டுக்கு முன் பொருளாதார வளர்ச்சி குன்றிருந்த வியட்நாம் நாடு இன்று சர்வதேச வர்த்தக துறையில் முன்னேற்றம் கண்ட ஒரு நாடாக திகழ்கின்றது.

விஞ்ஞானத்துறை தொழில்நுட்பத் துறை உட்பட வர்த்தக துறையில் வியட்னாம் முன்னேறி வருவதையும் மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துவதாகவும் இதன் அடிப்படையில் இலங்கை நாட்டை வர்த்தக மற்றும் பொருளாதார துறையில் முன்னேற்றுவதற்கு வியட்நாம் நாடு மிகுந்த ஆர்வத்துடன் இருப்பதாகவும் எதிர்காலத்தில் கூடுதலான பங்களிப்பை செய்யும் என்றும் தெரிவித்தார்.

## முஸ்லிம் சமூகத்தின் தகவல் பெட்டகம்... (13ஆம் பக்கத் தொடர்)

அவர் தனது சொந்த செலவில் எழுதி வெளியிட்ட 148 நூல்கள், ஆவணங்கள், ஆய்வுக் கட்டுரைகள் என்பன அவரது கடும் உழைப்பிற்கும், ஆவணச் சேகரிப்புக்கும், கள ஆய்வுக்கும், தேடலுக்கும் சான்றாக நின்று நிலைத்திருக்கின்றன.

இலங்கை முஸ்லிம்கள் தொடர்பில் அவர் மேற்கொண்ட ஆய்வு மற்றும் எழுத்துப் பணிகள் காலத்தால் அழியாதவை. இன்றும் பயன் தர வல்லவை. அவரது எழுத்துகள், ஆவணங்கள் அனைத்தையும் ஒன்று திரட்டி 30.10.2022 இல், 'எம்.ஐ.எம்.முஹியத்தீன் ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தல் நிலையம்' (M.I.M.Mohideen Research & Documentation Centre) அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இல. 117, பட்டினப் பள்ளி வீதி, அக்கரைப்பற்று 02 இல் இது இயங்குகிறது. ஆய்வாளர்களும், ஆர்வலர்களும், பல்கலைக்கழக மாணவர்களும், உயர் வகுப்பில் கற்கும் பாடசாலை மாணவர்களும், பொது மக்களும் இதனைப் பயன்படுத்தலாம். இவற்றைப் பிரதி செய்யக் கூடிய வசதிகளும் உள்ளன. Pen drives மூலம் பிரதி எடுக்கக் கூடிய வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

அவர் பிறந்த இடமான 2/3 பொது வீதி, தற்போது எம்.ஐ.எம். முஹியத்தீன் வீதி என, அக்கரைப்பற்று மாநகர சபையால் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இன்று (நவம்பர் 13) மாலை 3.30 மணிக்கு ஆளுநர் சபையின் தலைவர் பொறியியலாளர் ஜௌபார் இஸ்மாயில் அவுஸ்ரேலியாவிலிருந்து "சூம்" ஊடான தலைமை உரையை நிகழ்த்துவார். இதனையடுத்து அரமபமாகவுள்ள ஓராண்டு நிறைவு விழா நிகழ்வுகளில் "அக்கரைப்பற்று பட்டின ஜும்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை தலைவரும் ஓய்வு பெற்ற கொத்தணி அதிபருமான அதிபர் திலகம் எம்.ஏ .உதுமாலெவ்வையை நிகழ்த்துவார். இதனைய டுத்து துஆப் பிராத்தனையும் இடம்பெறும்.

மர்ஹூம் மொஹிடீனது ஓராண்டு நிறைவையொட்டி அக்கரைபற்று வலய கல்வி வட்டத்திலுள்ள பாடசாலைகள் மத்தியில் கட்டுரைப் போட்டிகள் நடாதுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல். நினைவு முத்திரை வெளியிடுதல்,, இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக படமளிப்பு விழாவின்போது அன்னாருக்கு கௌரவ கலாநிதி பட்டம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல், இலங்கை முஸ்லிம்கள் தொடர்பான வரலாற்று ஆய்வரங்கை நடாத்தல், போன்ற ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆளுநர் சபையின் பிரதம நிறைவேற்றுச்செயலாளர் சிராஜ் மஷ்ர் தெரிவித்தார்.


# களனி பல்கலைக்கழகம்

## வழங்குநர்களை பதிவு செய்தல் – 2023

களனிப் பல்கலைக்கழகத்துக்கு பின்வரும் வழங்கல்கள்/ சேவைகள்/ ஒப்பந்தங்களை 2023 ஆம் வருடத்தில் வழங்குவதற்கு பதிவு செய்ய விரும்பும் நபர்கள் மற்றும் நிறுவனங்களிலிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

**வகுதி எண் பண்டங்களை வழங்குதல்**

1. காகிதாதிகள் (புகைப்படப் பிரதி, டிஜிட்டல்,வெளிபடைத்தன்மையான தாள்கள், தட்டச்சுத் தாள்கள், இன்னும் பலவும்)
2. அச்சு வேலைகள் / இறப்பர் முத்திரைகள் / திகதி முத்திரைகள் போன்றன
3. அலுவலக மற்றும் ஏனைய தளபாடங்கள் - மரம்
4. அலுவலக மற்றும் ஏனைய தளபாடங்கள் - உருக்கு
5. நாரிழை (பைபர் கிளாஸ்) உற்பத்திகள்
6. அலுவலக உபகரணங்கள் புகைப்படப் பிரதி இயந்திரம், தொலைநகல் இயந்திரங்கள் மற்றும் துணைப்பாகங்கள், மெகி போட்கள் போன்றன
7. டயர், டியூப் மற்றும் வாகன உதிரிப்பாகங்கள்
8. அரிந்த பலகைகள் (உள்ளூர் மற்றும் இறக்குமதி செய்யப்பட்டவைகள்)
9. ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் (பற் சத்திரசிகிச்சை உபகரணம் அடங்கலானவை)
10. இரசாயனங்கள், மருந்துகள் மற்றும் மருந்தாக்கங்கள்.
11. கற்பித்தல் உபகரணம், வீடியோ, ரேடியோ, கமரா மற்றும் புகைப்பட உபகரணங்கள் மற்றும் தாள்கள், கட்புல, செவிப்புல பல்லூடக புரஜெக்டர்கள், பகிரங்க அறிவித்தல் முறைமை போன்றன.
12. பாதுகாப்பு கமரா முறைமை
13. தொலைபேசித் தொகுதி மற்றும் துணைப்பாகங்கள்
14. மின்சார மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள்
15. குளிரூட்டிகள், உறைநிலை சாதனங்கள், போத்தல் குளிரூட்டிகள் மற்றும் வளிச்சீராக்கி இயந்திரம் என்பன
16. கணனி இயந்திரம், அச்சு இயந்திரம் மற்றும் துணைப்பாகங்கள் மற்றும் கணனி காகிதாதிகள்
17. நூலக புத்தகங்கள் மற்றும் பருவ வெளியீடுகள்
18. தீயணைப்புக் கருவிகள்
19. கனரகப் பொருட்கள்/ கட்டிடப் பொருட்கள்/ நிறப்பூச்சு வகைகள்/ மின்சாரப் பொருட்கள் போன்றவை.
20. துப்புரவேற்பாட்டுப் பொருட்கள்/ பீவீசீ குழாய்கள்/ ஜீ.ஐ. குழாய்கள்/ துணைப்பாகங்கள்/ நீர்ப் பம்பிகள் போன்றவை.
21. விளையாட்டுப் பொருட்கள் மற்றும் விளையாட்டு சாதனங்கள்
22. பிளாஸ்டிக் மற்றும் பித்தளை பெயர்ப் பலகைகள் / சமிஞ்ஞை பலகைகள் / செதுக்கல்
23. தும்புத்தடி / தூரிகை மற்றும் மெத்தைகள் (இறப்பர் கலந்தது)
24. கிருமி நாசினிகள் (பூங்கா வாங்குகள் அடங்கலானவை) விவசாய இரசாயனங்கள் மற்றும் உரம் போன்றன.

**சேவைகள் / ஒப்பந்தங்கள்**

25. அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள்
26. மின்சார உபகரணங்களின் திருத்தவேலைகள் (குளிரூட்டிகள்/ வளிச்சீராக்கிகள்/ வீடியோ கமரா / கணனிகள் மற்றும் மின் விசிறிகள், CCTV முறைமைகள்) போன்றன.
27. கணனி வலையமைப்பு முறைமைகளை நிறுவுதல் மற்றும் திருத்தவேலைகள்
28. பாதுகாப்பு கமரா முறைமை திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள்
29. மோட்டார் வாகனங்கள் / லொறி, பஸ் போன்றவற்றின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
30. கட்டிட திருத்த வேலைகள் மற்றும் சிறிய கட்டிட திருத்தவேலைகள், மேம்படுத்தல் வேலைகள், நிர்மாணங்கள், நிறப்பூச்சு பூசுதல், உருக்கியொட்டும் வேலை மற்றும் உருக்கு வலைகளை பொருத்துதல் / அலுமினிய வேலைகள்
31. உள்ளக மின்சார முறைமை அமைத்தல் மற்றும் கம்பி பதித்தல்
32. உள்ளக தொலைபேசி முறைமை வடம் பதித்தல் மற்றும் திருத்த வேலைகள்
33. ஆய்வுகூட மற்றும் மருத்துவ உபகரணம் / வாயு உபகரணங்களின் திருத்தவேலைகள்
34. வீதிகளின் புனர்நிர்மாணம் மற்றும் நிலச்சீராக்கம் மற்றும் மரம் வெட்டுதல், கிளைகள் வெட்டுதல் மற்றும் அகற்றுதல்
35. அலுவலக கதிரைகளின் திருத்தவேலைகள் / குஷன் செய்தல் மற்றும் பொலிஷ் பண்ணுதல்/ மேடை திரைச்சீலைகள் மற்றும் தரைவிரிப்புக்களின் வழங்கல்.
36. தளபாடங்களின் திருத்தவேலைகள் - மரம் / உருக்கு
37. வாசிகசாலை புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் கட்டுதல்
38. அழுக்குத் துணிகளை துவைத்தல் சேவைகள் / அலுவலக திரைச்சீலைகளை சுத்திகரித்தல் இன்னும் பலவும்.
39. தையல் வேலைகள் - பட்டதாரிகள் ஆடை/ மாலைகள்/ சீருடைகள்/ தோற் பைகள்/ துவாய்கள் போன்றன வழங்கல்
40. சாணி உரம், மண், கருங்கல், மணல், சீமெந்து புளொக்குகள், செங்கல் போன்றவற்றை வழங்கல்
41. வாகனங்களை குத்தகைக்கு அல்லது வாடகைக்கு வழங்கல் (கார்/ வேன்/ லொறி/ பஸ்/ முச்சக்கர வண்டிகள்) கலி (Gully) இயந்திர சேவைகள் போன்றன
Rolex, Omega, Swiss, Branded Watches, Diamond Jewellery, 21K, 18K, 14K, 12K Jewellery Items & Silver, Old Notes, Antique Furniture
Maximum price for Silver spoons and forks imported from Italy(Arjanthu)
WE BUY PAWNED GOLD JEWELLERY ITEMS
0776 562 382, 0777 077 333

COMMERCIAL LAND FOR SALE
COLOMBO
4 ACRES BARE LAND FOR SALE
IDEAL FOR FACTORY /WAREHOUSE /APARTMENT COMPLEX OR ANY OTHER COMMERCIAL PROJECT.
1.7KM TO HIGHWAY ENTRANCE, 6 KM FROM COLOMBO PORT CITY, 30KM TO AIRPORT (35 MIN)
RS. 6 MN PER PERCH (NEGO)
+94 777 258 280
NO BROKERS, AGENTS PLEASE




புராதன பொருட்கள்
பழைய சாரிகள், பழைய நாணயத்தாள்கள், "ஹவாடி பட்டிகள்", இரத்தின துண்டுகள், பழைய தங்க ஆபரணம், பழைய வெள்ளிக் கோப்பைகள், கலப்படம் செய்யப்பட்ட தங்கம் ஆகியன உயர்ந்த விலைகளில் கொள்வனவு செய்யப்படும்.
(அடகு வைக்கப்பட்ட தங்க ஆபரணங்களுக்கு உயர்ந்த விலை)
- நம்பிக்கையான சேவை -
077 6 608 634 / 077 1 230 122

LANDS FOR SALE
RATMALANA
FACING GALLE ROAD & CHAKINDRARAMA ROAD
35 PERCH LAND & BUILDING
PAPILIYANA
FACING DEHIWALA ROAD
40 PERCH LAND & BUILDING
NUGEGODA
EMBULDENIYA, FACING VIVEKARAMA ROAD
40 PERCH LAND
NO BROKERS CALL GENUINE BUYERS ONLY
0779 319 979/ 0777 551 355




STUDY IN CANADA
Your pathway to Canadian Permanent Residence
INFO. & APPLICATION SESSION
SATURDAY 19TH NOVEMBER 2022
10:00 AM TO 5:00 PM
HILTON COLOMBO (Moonstone Room)
GET PLACED INTO THE TOP UNIVERSITIES & INSTITUTIONS IN CANADA
ENTRANCE FREE!
WALK-IN FOR FREE CONSULTATION
FOR MORE INFORMATION CALL US ON 0777 761 346
Canada Visa Refused ?
Don't Lose hope! Call or Visit Us
flex Institute
Level 12, Parkland Building, No. 33 Park Street, Colombo 02, Sri Lanka.
10 Years of Trusted Services
flexinstitute www.flexinstitute.lk




# படித்ததும் பகர்வதும் 118

சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்



## நல்லதை சொல்கிறோம்

### மாணவர் ஒழுக்கம்

"அம்பாறை மாவட்டம் திருக்கோவில், தம்பிலுவில் பொலிஸ் பிரிவிலுள்ள தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயதில் 8ம் ஆண்டில் கல்வி கற்கும் இரு மாணவர்களுக்கிடையே பாடசாலையில் ஏற்பட்ட மோதலில் இரு மாணவர்களும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட, ஒரு மாணவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்." என்ற செய்தி கடந்த வாரம் பரபரப்பாகப் பேசப்பட்டது.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஒழுக்கம் சீர்கெட்டு வருவதற்கு இது சிறந்த உதாரணமாக தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் ஆங்காங்கு பாடசாலையில் நடைபெறுகின்ற வேறு நிகழ்வுகளும் இதனை உறுதி செய்கின்றன. அதிபர்களை, ஆசிரியர்களை, மாணவத் தலைவர்களை, சிரேஷ்ட மாணவர்களை மதிக்காமல் நடந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருவது கவலையைத் தருகிறது.

முன்னைய காலத்தில் அதிபருக்கும், ஆசிரியர்களுக்கும் மட்டுமன்றி மூத்த மாணவர்களுக்கும் கௌரவமளித்து கண்ணியத்தோடு நடந்து கொள்கின்ற நற்பண்பு மாணவர்களிடையே பரவலாக காணப்பட்டது. ஆனால் இன்றைய காலத்தில் இது படிப்படியாக மாறி வருகிறது. ஆசிரிய ஆசிரியைகளிடம் வாக்குவாதம் செய்தல், அவர்கள் சொல்கின்ற விடயங்களுக்கு மாற்றமாக நடந்து கொள்ளுதல், அவர்களுக்கு எதிராக பெற்றோர்களிடம் அவசியமற்ற முறையில் முறைப்பாடுகள் செய்தல் போன்றன பெரும்பாலும் எல்லா பாடசாலை மாணவர்களிடமும் பொதுவாக காணப்படுகின்ற ஒரு நிலைப்பாடாக இன்று உள்ளது. இது கவலைக்குரியது மட்டுமல்லாமல் உடனடியாக களையப்பட வேண்டிய விடயமுமாகும்.



திரைப்படங்கள், தொலைக்காட்சி நிகழ்சிகள், சமூக வலைத்தளங்களில் இடம்பெறுகின்ற பதிவுகள் போன்றன மாணவர்களின் இத்தகைய தவறான போக்குக்கு துணை நிற்கின்றன என்றால் மிகையல்ல. இந்நிலையை மாற்றியமைக்க ஒவ்வொருவரும் தம்மாலான முயற்சிகளை செய்வது அவசியமாகும்.

அதிபர்கள், ஆசிரியர்கள், மட்டுமன்றி பெற்றோர்களும் இவ்விடயத்தில் கூடிய கவனம் எடுத்து மாணவர்களை நல்வழிப்படுத்தவும், அவர்களது நல்லொழுக்க விழுமியங்களை வளர்த்தெடுக்கவும், பொருத்தமான செயற்பாடுகளை முன்னெடுத்தல் அவசியம்..


நாளைய தலைவர்களாக வந்து, வழி நடத்துவோராக மாறக்கூடிய இன்றைய மாணவர்களை நல் வழியில் செலுத்த நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து, ஆக்கபூர்வமான திட்டங்களை வகுத்து செயற்பட முன்வருவோம்.

## நெஞ்சுக்கு நீதி

நல்லொழுக்கம் நானிலத்தில் உயர்வளிக்கும்
மாணவருக்கு நாங்களதை உணர்த்திடுவோம்
கள்ளமின்றி நற்பண்புகளுடன் வாழ்ந்திட்டால்
காலமெல்லாம் வாழ்வினிக்கும் புரிந்திடுவோம்

## சிந்தனை செய் மனமே

### வாழும் மனிதம்



ஒரு தபால்காரர், "கடிதம்" என்றவாறு ஒரு வீட்டின் கதவைத் தட்டினார். "வருகிறேன்" என்று உள்ளிருந்து ஒரு சிறு பிள்ளையின் குரல் கேட்டது. ஆனால் ஒருவரும் வரவில்லை; மூன்று அல்லது நான்கு நிமிடங்கள் கழிந்தன. இறுதியாக, கோபமடைந்த தபால்காரர், "ஏய், சீக்கிரம் வந்து கடிதத்தை எடுத்துக்கொள்ளுங்கள்". என்றார் கோபமாக.

"ஐயா, கடிதத்தை கதவுக்கு அடியில் வைங்க; நான் வருகிறேன்" என்றது அந்த சிறு பிள்ளையின் குரல். தபால்காரர், "இது ஒரு பதிவுத்தபால். அதற்கு கையொப்பம் தேவை, எனவே நீங்கள் கையெழுத்திட வேண்டும்" என்றார்.

சுமார் பத்து நிமிடங்களுக்குப் பிறகு, கதவு திறந்ததும், எரிச்சலடைந்திருந்த தபால்காரர் வாயடைத்துப் போனார். கடிதத்தை எடுக்க வந்தவர் கால் இல்லாத ஒரு சிறுமி. தபால்காரர் கடிதத்தை அமைதியாக கொடுத்துவிட்டு வருத்தத்துடன் திரும்பிச் சென்றார்.

சில நாட்கள் சென்றன. தபால்காரர் சிறுமியின் வீட்டிற்கு கடிதம் வரும் போதெல்லாம் கதவு திறக்கும் வரை அமைதியாக காத்திருப்பது வழக்கமானது. தபால்காரர் எப்போதும் வெறுங்காலுடன் இருப்பதை அந்தப் பெண் கவனித்தாள். எனவே, ஒருமுறை அவர் வந்தபோது, அந்த சிறுமி தரையில் உள்ள கால்தடங்களில் இருந் து தபால்காரரின் கால் அளவை அளந்தெடுத்தாள்.

தீபாவளி நெருங்கிக் கொண்டிருந்தது, தீபாவளிக்கு முன்பு, கடித ம் கொடுக்க வந்த அவரிடம், அந்த பெண் "மாமா, இது உங்களுக்கு என் தீபாவளி பரிசு" என்று ஒரு பரிசுப் பொதியை கொடுத்தாள்.

தபால்காரரும் "நீ எனக்கு மகள் போன்றவள்; உன்னிடம் இருந்து நான் எப்படி பரிசு வாங்க முடியும்?" என்றார்.

சிறு மி வற்புறுத்தியதால், அதனைப் பெற்றுக்கொண்டவர் வீட்டிற்கு எடுத்துச் சென்று திறந்து பார்த்தபோது அதில் ஒரு ஜோடி காலணி இருந்தது. அவரது கண்களில் கண்ணீர் நிரம்பியது, அவரது முழுச் சேவைக் காலத்தின் போதும் அவர் வெறுங்காலுடன் இருப்பதை யாருமே கவனிக்கவில்லை.


அ டுத்த நாள், தனது தபால் நிலையத்தை அடைந்த தபால்காரர், தன்னை உடனடியாக வேறு பகுதிக்கு மாற்ற வேண்டும் என்று அதிகாரியிடம் கெஞ்சினார். அவர் காரணம் கேட்டதும், எல்லாவற்றையும் சொல்லிவிட்டு, கண்ணீருடன், "ஐயா, இன்னைக்கு அப்புறம் அந்தத் தெருவுக்கு என்னால் போக முடியாது. அந்தச் சிறுமி என்னை வெறுங்காலுடன் பார்த்துக் காலணியை எனக்குக் கொடுத்தாள், நான் எப்படி அவளுக்குக் கால் கொடுக்க முடியும்?" என்றார்.

'மற்றவர்களின் வலிகளைப் புரிந்து உதவுவதே மனித குணம். சக மனிதர்களிடமும் அனைத்து உயிர்களிடமும் கருணை காட்டுவோம்'

## வாசித்ததில் வசீகரித்தது

### எங்கே நிம்மதி?

புத்தளம், கற்பிட்டி எஸ். ஐ. எம். ஏ. ஜப்பார் பிரபலமான எழுத்தாளர், நாடக ஆசிரியர், நடிகர், பாடலாசிரியர், கவிஞர், வசனகர்த்தா என பன்முகம் கொண்டவர். இவர் 'நவமணி' பத்திரிகையில் தொடச்சியாக 'மனிதன்' எனும் தலைப்பில் எழுதிவந்த கட்டுரைகளின் ஒரு பகுதி 'மனிதன் மா மனிதனாக' எனும் பெயரில் முன்னாள் அமைச்சர் ஏ. எச். எம். அஸ்வரால் 2005ல் நூலாக வெளியிடப்பட்டது. அந்நூலிலிருந்து...




பிறந்துவிட்ட ஒவ்வொரு மனிதனும் தேடுகின்ற, விலை போட்டு வாங்கமுடியாத பொருள் நிம்மதி! இதைப் பணக்காரனும் தேடுகிறான். பாட்டாளியும் தேடுகிறான். உழவனும் தேடுகிறான். ஊர்க்காவலனும் தேடுகிறான். அரசியல்வாதியும் தேடுகிறான். அன்றாடங்காய்ச்சியும் தேடுகிறான். ஆனால் அது எங்கே இருக்கிறது என்று யாருக்கும் தெரிவதில்லை.

"காலைக்கடன் முடித்து என் காரிலே ஏறி எவ்வளவு வேகமாக ஓட்ட முடியுமோ அவ்வளவு வேகத்தில் சென்று அலுவலக வேலைகளை முடித்துவிட்டு அதே வேகத்தில் வீட்டிற்குத் திரும்பி வந்து உட்காரும்போது என் மனைவி ஒரு கப் டீ கொண்டு வந்து தருவாள். அதைக் குடிக்கும் போது தான் நிம்மதி" என்கிறான் பிரிட்டிஷ்காரன்.

"தெருவிலே போய்க் கொண்டிருக்கிறேன் அழகான கால் உள்ள ஒரு பெண் போகிறாள் அவளை அழைத்துச்சென்று ஹோட்டலில் தங்கி அவளை அனுபவித்து விட்டு எழுகிறேனே அப்போது தான் எனக்கு நிம்மதி" என்கிறான் ஒரு பிரெஞ்சுக்காரன்.

"இரவு நேரம் வீட்டில் உறங்கிக் கொண்டிருக்கிறேன். நடுச்சாமம்! என் வீட்டுக் கதவு தட்டப்படுகிறது. திறந்து பார்க்கிறேன் சிலர் நிற்கின்றனர் என்ன? என்கிறேன். 'நீதானே கந்தசாமி' என்று கேட்கிறார்கள். 'இல்லை அடுத்த வீடு' என்கிறேன் அப்பொழுது தான் எனக்கு நிம்மதி என்கிறான் ஒரு தமிழன்.

வருமான வரி அதிகாரிகள் வருகிறார்கள், வீடு முழுக்க சோதனை, திக்! திக்! என மனம் அடிக்கிறது. சோதனை முடிந்த அதிகாரிகள் வெறுங்கையோடு திரும்புகிறார்கள். மறைத்து வைத்த கறுப்புப் பணம் அவர்களிடம் சிக்கவில்லை என்பதை என்னும் போது நிம்மதி

"பசி! பசி! என அலைந்தேன். பல இடங்களில் கேட்டேன். பார்க்கவில்லை யாரும். ஒரு வயதான மாது கொஞ்சம் பழைய சோறு போட்டாள். அதைச் சாப்பிட்ட போது தான் எனக்கு நிம்மதி" என்கிறான் பிச்சை எடுப்பவன்.

இவை எல்லாம் நிம்மதி என்று சொல்ல முடியாது. இந்த நிம்மதி வந்த வேகத்தில் போய்விடும். காரணம் அது எக்ஸ்பிரஸ் வேகத்தில் வருகிறது. நிற்க நேரம் இல்லை. நிற்கவும் முடியாது. நிரந்தரமான நிம்மதியாக ஆகாது. உழைக்கின்ற மனிதனுக்கு நிம்மதி இல்லை. உண்ணும் போது கூட நிம்மதி இல்லை உறங்கும் போது கூட நிம்மதி இல்லை. சிலரால் நிம்மதியாகத் தூங்க முடிவதில்லை இதற்குக் காரணம் நிதானம் இல்லாமல் மனிதன் அலைகிறான். அந்த நிதானம் எப்படி வரும்?

எந்த ஒரு செயலில் ஈடுபடும் போதும் நின்று நிதானித்து அளந்து ஆழமாக அடி எடுத்து வைக்க வேண்டும் என்று சிலர் சொல்வார்கள். எடுத்தேன் கவிழ்ந்தேன் என்ற செயல்பாடு இருக்கக்கூடாது.

"போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்று நினைக்க வேண்டும்.

## தகவல் களஞ்சியம்

### பாலியல் வன்புணர்வுகள்!

இலங்கையில் பாலியல் வன்புணர்வுகள் அதிகரித்துள்ள அதிர்ச்சியான தகவல் வெளியாகியுள்ளது. இந்த வருடத்தின் முதல் ஒன்பது மாதங்களுக்குள் 1,500 பெண்கள் மீதான பாலியல் வன்புணர்வுகளும், சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்களும் சம்பந்தப்பட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடந்த வருடத்தின் முதல் ஒன்பது மாதங்களுடன் ஒப்பிடும் போது இது பாரிய அதிகரிப்பாகும். இந்த வருட செப்டம்பர் 30ஆம் திகதி வரை, ஒப்புதலற்ற இத்தகைய பலாத்கார பாலியல் வன்புணர்வுகள் இடம்பெற்றுள்ளன



இதில் 273 வன்புணர்வுகள் இளம் வயதினருடன் தொடர்புடையவையாகும் ஒப்புதலுடன் இடம்பெற்ற பாலியல் செயற்பாடுகள் பெரும்பாலானவை காதல் விவகாரங்களுடன் தொடர்புடையவை என பொலிஸார் தெரிவித்துள்ளனர். எனினும் பாதிக்கப்பட்ட பெண்கள் 16 வயதுக்குட்பட்டவர்கள் என்பதால் இவை பாலியல் வன்புணர்வுகளாகவே கருதப்படுகின்றன.

இலங்கை தண்டனைச் சட்டத்தின் 363வது பிரிவின்படி, 16 வயதுக்குட்பட்ட ஒரு பெண்ணுடன் உடலுறவு கொள்வது சட்டப்படி பாலியல் வன்புணர்வாகவே கருதப்படுவதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## பேசும் கவிதை

### அப்பாவின் சொத்து

அப்பாவின் சொத்துக்கள்
அனைத்தும் பிரிக்கப்பட்டன

அவரின் இறப்புக்கு பிறகு.

அசையும் அசையா சொத்துக்கள்,
பணம், வீடு, வாசல், நிலம், புலம்
எல்லாம் பிரிக்கப்பட்டன...

அம்மாவைத் தவிர.

ஏனோ யாருக்கும் தெரியவில்லை?

அப்பாவின்
உண்மையான சொத்தே
அம்மா தான் என்று

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207



# ஈழத்து நவீன இலக்கிய முன்னோடிகள் 26

மூத்த எழுத்தாளர் தி. ஞானசேகரன்

பின்னர் விரிவுரையாளர் நியமனம் பெற்று மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலையில் நான்கு வருடங்களும் கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையில் பதினொரு வருடங்களும் கடமையாற்றினார். அதன்பின்னர் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் கொத்தணி அதிபராக நான்கு வருடம் கடமையாற்றிய போது ஸ்ரீலங்கா கல்வி நிர்வாக சேவையில் உள்வாங்கப்பட்டார். அதன்பேறாக பதவி உயர்வு பெற்று பிரதேச கல்விப் பணிப்பாளராக 01.10.1991 முதல் 03.05.1993 வரை பணியாற்றி சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

இவரது முதற் படைப்பு 1951இல் ஈழகேசரியில் வெளி வந்த எனது கிராமம் என்ற 15 வரிக் கட்டுரையாகும்.

பண்டாரவன்னியன் நாடகத்தைத் தவிர முல்லைமணி இருபது நாடகங்கள் வரை எழுதியுள்ளார். அவற்றுள், சிதையாத செல்வம், சேற்றில் மலர்ந்த செந்தாமரை, யாதும் ஊரே, கர்ணனின் கடைநாள் வரப்பிரசாதம், இருள் நீங்கியது, மலர்ந்த வாழ்வு, கலையரசி, நன்னித்தம்பி கீரன், லோச் செல்லப்பர், எது வாழ்வு, சிதையாத செல்வம், வெற்றித் திருநகர், பெட்டிசம் போடுவேன், இரவில் முல்லைத்தீவு என்பன முக்கியமான நாடகங்களாகும்.

1959இல் வீரகேசரி நிருபராக இவர் நியமிக்கப்பட்டார்.

முல்லைமணி எழுதிய முதல் சிறுகதை துணை 1970ஆம் ஆண்டு வீரகேசரியில் வெளியாகியது. ஏறத்தாழ ஐம்பது சிறுகதைகள் வரை எழுதியுள்ளார். அவற்றில் பன்னிரண்டு சிறுகதைகள் அரசிகள் அழுவதில்லை என்னும் தொகுப்பாக 1977இல் மலர் வெளியீடாக வந்தது. இத்தொகுதி இலங்கை அரசின் சாகித்திய விருதினைப் பெற்றது. 2005இல் கொண்டுவந்த சீதனம் என்ற சிறுகதைத் தொகுதி வெளிவந்தது.

ஞானம் நடத்திய புலோலியூர் க.சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டியில் இவர் எழுதிய கொக்கிளாய் மாமி என்ற சிறுகதை முதற் பரிசினைத் தட்டிக் கொண்டது.

'முல்லைமணி வே.சுப்பிரமணியம் இயற்கையாகவே கவிபுனையும் ஆற்றல் அமைந்தவர்" என பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, இவர் பாடிய தான்தோன்றி ஈஸ்வரர் பாமாலை நூலின் அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார். ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் பாமாலை (1977) நெடுங்கேணி வில் வையடிப் பிள்ளையார் பாமாலை (1978), காவத்தை நீலகாமம் முத்துமாரியம்மன் திருவூஞ்சல்(1978) என்பன இவரது நூலுருவம் பெற்ற பக்திப் பனுவல்கள். வீரகேசரி வெண்பாப் போட்டியிலும் துறைநீலாவணை இலக்கியப் பேரவையின் கவிதைப் போட்டியிலும் இவர் பரிசு பெற்றுள்ளார்.

இலங்கை வானொலியிலும், ஏனைய கவியரங்குகளிலும் தலைமைக் கவிஞனாக இவர் பங்கு கொண்டுள்ளார்.

இவரது 'வன்னியர் திலகம்" என்ற நாவல் (1998) தேசிய சாகித்திய விருதினையும் வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் பரிசையும் கலை இலக்கியப் பேரவையின் பரிசையும் பெற்றது. இவற்றைவிட பிறந்த மண் கமுகஞ்சோலை (2000) மழைக்கோலம்" (2003) ஆகிய நாவல்களையும் முல்லைமணி எழுதியுள்ளார். கமுகஞ்சோலை நாவல் வடக்கு கிழக்கு மாகாண இலக்கியப் பரிசினைப் பெற்றது.

முல்லைமணி பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார். 1999இல் இலக்கியப் பார்வை, வன்னியியற் சிந்தனை (2001) ஆகியவை கட்டுரை நூல்களாக வெளிவந்துள்ளன. பல சமயக் கட்டுரைகளையும் இவர் எழுதியுள்ளார். மதியும் பிறையும் என்பது இவர் ஈழமுரசில் எழுதிய ஐம்பது கட்டுரைகளின் பொதுத்தலைப்பாகும்.

தமிழ்மொழிப் பயிற்சி என்ற இவரது நூல் 1975இல் வெளியானது.

முல்லைமணி, நாட்டார் இலக்கியத்திலும் ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். 1972இல் அது தொடர்பாக மக்கள் கலைகள் என்னும் தலைப்பில் வானொலியில் பன்னிரண்டு சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். இச்சொற்பொழிவுகள் பின்னர் வானொலி மஞ்சரியில் வெளியாகின.








# பண்டாரவன்னியன் வரலாற்றை குறியீட்டு நாடகமாக வெளிக்கொணர்ந்த முல்லைமணி

கலாநிதி முல்லைமணி வே.சுப்பிரமணியத்துக்குப் பெரும் புகழை ஈட்டிக் கொடுத்தது பண்டார வன்னியன்| என்ற வரலாற்று நாடகமாகும். இந்நாடகம் பற்றி பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"வரலாற்று மாணவர்களாலேயே சரியாக அறியப்படாதிருக்கும் வன்னி இராச்சியத்தின் முக்கியத்துவத்தினையும், ஆங்கில ஆதிபத்தியத்துக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்திய பண்டாரவன்னியனின் முக்கியத்துவத்தையும் புலப்படுத்துகின்றது பண்டாரவன்னியன் நாடகம். இந்த நாடகத்தை ஆசிரியர் சிக்கல் இல்லாது தெளிவாக ஆக்கியிருப்பதன் மூலம், தான் மேற்கொண்ட நோக்கங்களை மிகச் சிறப்பான முறையில் நிறைவேற்றியிருக்கிறார். வன்னிப்பிரதேச மக்களுக்கு மட்டுமன்றி நம்பிக்கை குறைந்து தளர்ந்துபோயிருக்கும் இலங்கைத் தமிழர் யாவருக்கும் நம்பிக்கையும் தேசப்பற்றும் உரிமைக் குரலும் ஓங்க இந்நாடகம் பயன்படும். வன்னி நாட்டுத் தலைவனொருவனின் சிறந்த வாழ்க்கையை நாடகமாக்கியிருக்கும் ஆசிரியர், ஒடுங்கிய பிரதேச மனப்பான்மைக்கு முக்கியத்துவம் கொடுக்காது, தேசிய நோக்குடன் தேசப்பகைப்புலத்திற் பண்டாரவன்னியனின் சிறப்பைத் தீட்டியிருப்பது பாராட்டுக்குரியது"(பண்டாரவன்னியன் நாடகநூல் அணிந்துரையில்)

1970இல் முல்லைமணி எழுதிய இந்த வரலாற்று நாடகம் இலங்கை கலைக்கழக நாடகப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றது. இந்த நாடக நூலின் இரண்டாவது பதிப்பு 1972இல் வெளிவந்து 5000 பிரதிகளுக்குமேல் விற்பனையாகி அகில இலங்கைக்கும் அறிமுகமாகியது.

அதன்பின் இந்நூல் நான்கு பதிப்புகளைக் கண்டது. இந்நாடகம் இலங்கையில் மாத்திரமன்றி அமெரிக்க, ஐரோப்பிய, அவுஸ்திரேலிய நாடுகளிலும் மேடையேற்றப்பட்டது. இந்த நாடகத்தை அடியொற்றி தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி பாயும்புலி பண்டாரவன்னியன்| என்னும் நாவலையும், கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் பண்டாரவன்னியன்| காவியத்தையும் யாத்துள்ளார். முல்லைமணி, பண்டாரவன்னியன் நாடகத்தை மேடை நாடகமாக மட்டுமன்றி நாட்டுக்கூத்தாகவும் இயற்றியுள்ளார்.

இந்த நாடகம் பிறந்த வரலாறு பற்றி முல்லைமணி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"அந்நியரின் இறுதி மூச்சுவரை அயராது போரிட்ட அடங்காப்பற்றின் காவலன் பண்டார வன்னியனுக்கு எதிரிகளே சிலை எழுப்பினர். நினைவுச் சிலை அமைந்த கிராமம் கற்சிலையின் பெயராலேயே கற்சிலைமடு என அழைக்கப்படுகிறது. ஆங்கிலப்படைத்தளபதி வொன்டிறிபேக் தன்புகழை நிலைநாட்ட நிறுவிய கல், பண்டார வன்னியனின் வீரத்தைப் பறைசாற்றுகிறது.

ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டு காலமாக கவனிப்பாரற்றுக் கடுந்தவம் புரிந்து கொண்டிருக்கும் கற்சிலை கூறும் செய்தியே பண்டாரவன்னியனின் வரலாற்றாராய்ச்சிக்குத் தூண்டுகோலாக அமைந்தது. இதன் பின்னணியிலேயே இந்நாடகம் பிறந்தது. சுமார் பத்து ஆண்டுகளாக வன்னிநாட்டுக் காட்டிலும், ஏட்டிலும் கொழும்பு நூதனசாலை நூல் நிலையத்திலும் தேடிச்சேர்த்த பல தகவல்கள் நாடகத்தை எழுத அடிப்படையாக இருந்தன."

சுப்பிரமணியம் என்ற இயற்பெயர் கொண்ட முல்லைமணி, முல்லைத்தீவில் உள்ள முள்ளியவளை கிராமத்தில் சபாபதி வேலுப்பிள்ளை, பொன்னம்மா தம்பதிக்கு இரண்டாவது மகனாக 03.05.1933இல் பிறந்தார்.

தனது ஆரம்பக்கல்வியை முள்ளியவளை சைவப் பாடசாலையில் பெற்ற இவர், பின்னர் திருநெல்வேலி பண்டித கலாசாலையில் சேர்ந்து தனது கல்வியைத் தொடர்ந்தார். 1949முதல் 1952வரை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பயின்று ஆங்கிலத்தில் எஸ்.எஸ்.சி. பரீட்சையில் சித்தியடைந்தார். 1954இல் மகரகம ஆங்கில ஆசிரிய கலாசாலைப் பயிற்சிக்குத் தேர்வுபெற்று 1955முதல் 1956வரை பயிற்சிபெற்றார். 1969இல் தமிழ், சமஸ்கிருதம், வரலாறு, ஆகிய பாடங்களில் கலைமாணி சிறப்பு (B.A Special) பட்டம் பெற்றார்.

03.10.1957இல் இவருக்கு வவுனியா மகாவித்தியாலயத்தில் ஆசிரிய நியமனம் கிடைத்தது. அங்கிருந்து முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரிக்கு மாற்றம்பெற்றார். அக்கல்லூரியில் 16 வருடங்கள் கடமையாற்றிய

இவர், தான் பிறந்த மண்ணோடு சேர்ந்த பல பணிகளிலும் தம்மை ஈடுபடுத்தி சமூகத்தின் உயர்வுக்கும் பாடுபட்டார். கலை இலக்கிய, சமயத் துறைகளில் ஈடுபட்ட இவரது சுயசரிதை 2007இல் நினைவுச் சரங்கள் என்ற மகுடத்தில் வெளியிடப்பட்டது.

முல்லைமணியின் இலக்கியப் பணிகளுக்காக பல்வேறு நிறுவனங்கள், கௌரவப் பட்டங்கள் வழங்கிக் கௌரவித்துள்ளன. கலாபூஷணம், தமிழ்மணி, இலக்கியச் செல்வர், இலக்கிய ஜோதி என்பன அவற்றுள் சிலவாகும். வடக்கு கிழக்கு கல்வி கலாசார விளையாட்டுத் துறை 1995இல் இவரைக் கௌரவித்தது.

1999இல் இவருக்கு வடக்கு கிழக்கு மாகாண ஆளுனர் விருது வழங்கப்பட்டது.

இவர் ஓர் அகில இலங்கை சமாதான நீதவானும் ஆவார். இவரது கலை இலக்கிய ஆய்வுப் பணிகளை அங்கீகரித்து 2005இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதி பட்டம் வழங்கிக் கௌரவித்தது. இலங்கை அரசின் இலக்கியத்திற்கான அதியுயர் விருதான சாகித்தியரத்தினா விருது இவருக்கு 2015இல் வழங்கப்பட்டது.

இவர் 13.12.2016 அன்று அமரரானார்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 37

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | 04 | |
| | 05 | | 06 | 07 | 08 |
| 09 | 10 | 11 | 12 | 13 | |
| | 14 | | 15 | | 16 |
| 17 | | 18 | | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | | 25 |

பெயர் ..........................................
வகுப்பு ..........................................
தொலைபேசி இல ..........................................
பாடசாலை பெயர் ..........................................
வதிவிட முகவரி ..........................................
..........................................

.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) எமது நாட்டின் குளங்கள் போன்ற நன்னீர் நிலைகளில் வளருகின்ற தாவரம் இது. வெண்ணிறத்திலும், நீலநிறத்திலும் அழகிய மலர்கள் பூக்கும் தாவரம். நீலநிறப்பூ எமது நாட்டின் தேசிய மலராகப் போற்றப்படுகின்றது.
(6) இல்லம், உள்ளம், உட்புறம் ஆகிய மூன்று பொருள் தருகின்ற ஒரு சொல்.
(9) உலகெங்கும் மிகவும் பிரதானமான மொழியாக விளங்குவது இந்த மொழி ஆகும். இம்மொழியை நன்கு சரளமாகப் பேசத் தெரிந்தால் உலகின் பெரும்பாலான நாடுகளுக்குச் செல்லும் போது, மொழிச்சிக்கல் இல்லாது சமாளிக்க முடியும். அதனால்தான் சர்வதேச மொழியாக இது குறிப்பிடப்படுகின்றது.
(19) ஆழ்ந்த உறக்கத்தில் வருவது இது. நிலவு என்பதை நிலா என்கிறோம். அது போலத்தான் இச்சொல்லும் சுருக்கமாக இங்கே உள்ளது. (தலைகீழான சொல்)
(21) ஆகாயத்தை கடலாகவும், அங்கு தென்படுகின்ற நட்சத்திரங்களை மீன்களாகவும் உவமையாகக் கொண்டோமானால் இச்சொல்லை கண்டுபிடிப்பது இலகு. நட்சத்திரங்களை குறிக்கும் மற்றொரு சொல் இது.

**மேலிருந்து கீழ்**

(2) களிமண்ணில் இருந்து தயாரிக்கப்பட்டு, கட்டடங்கள் நிர்மாணிக்க பயன்படுகின்ற கல். (தலைகீழான சொல்)
(4) கொடிய விஷமுள்ள பிராணி இது. இப்பெயரில் உலோகம் ஒன்றும் உள்ளது.
(6) பறவைகளின் வாயைக் குறிக்கின்ற சொல்.
(16) ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தீர்களானால் இவற்றைக் காணலாம். வானமெங்கும் மிதந்து திரிகின்ற வெண்பஞ்சுக் கூட்டங்கள்.
(17) ஒலிகளை கேட்டு உணரும் புலனங்கம்.
(18) நீரில் வாழ்வதற்கென்றே நன்கு இசைவாக்கமடைந்துள்ள உயிரினம். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 36

### விடைகள்

**இடமிருந்து வலம்**
01. மின்சாரம் 09. அரி 11. புதன் 14. பாசம்
19. தருமம் 23. கம்பன்

**மேலிருந்து கீழ்**
01. அம்மி 03. சாண் 08. அன்னம் 10. பாரி
11. கரும்பு 15. சதம் 18. தேன்

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 35

### பாராட்டு பெறுவோர்

**1. அப்லல் அஹமத்**
தரம் 04, நாங்கல்ல மு.ம.வி
337, மங்கெதர, துல்ஹிரிய.

**2. எம்.எம்.எம். அஜ்மல்**
தரம் 06, மா/ சாஹிரா தேசிய கல்லூரி, மாத்தளை.
இல. 37 கண்டி வீதி, வறக்காமுறை, உக்குவளை.

**3. சாபில் அப்துல்லாஹ் தமீம்**
தரம் 11, அக்/அல்முனவ்வறா
கனிஷ்ட கல்லூரி, அக்கரைப்பற்று 4

**4. தைய்யிபா ஹசன்**
தரம் 08, பா.மு.ம. கல்லூரி,
இல. 34, டி வாஸ் லேன், கிறேன்பாஸ், கொழும்பு 14.

**5. ஸீனத் தஹானி சாட்**
தரம் 10B, க/ பதியுதீன் மகளிர் கல்லூரி,
இல. 34/12 செமனரிவத்த வீதி, தென்னக்கும்புர.

**6. எம்.ஜே.எப். அதிபா**
தி/ கிண்ணியா மு.ம.ம. வித்தியாலயம்,
கிண்ணியா.

**7. எம்.ஏ. அஜ்மல்**
தரம் 03 A, கே/மாவ. பள்ளிப்போருவ மு.வி.
இல. 123/4, பள்ளிப்போருவ, ஹெம்மாதகம.

**8. வை. டிலோசிக்கா**
தரம் 09, பி/டி/மத்திய கல்லூரி,
இல.36, கலவல பதன, பூணாகல வீதி, பண்டாரவளை.

**9. எம்.ஏ. ஆயிஷா ஸைனப்**
தரம் 11B, ரஹ்மானிய்யா ம.வி.தே. பாடசாலை,
இல. 41B, முஸ்லிம் வீதி, வெலிப்பன்னை.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 37
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



குறளமுதம் :
**அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்த்து விடும்**

***தெளிவுரை :***
*அடக்கம் ஒருவனை உயர்த்தித் தேவருள் சேர்க்கும்; அடக்கம் இல்லாதிருத்தல், பொல்லாத இருள் போன்ற தீய வாழ்க்கையில் செலுத்தி விடும்*

# கால்களை ஊன்றி நிற்க காது தேவை



காது எதற்கு இருக்கின்றது என்று யாரையாவது கேட்டு பாருங்கள்? கேட்பதற்கு என்பார்கள். ஆனால், காது இன்னொரு விஷயத்தை செய்கிறது. அது மிக முக்கியமானது. உங்கள் கால்கள் தரையில் ஊன்றி நிற்பதற்கு காரணம் காது தான். மனிதன் மயங்கி சரிந்து விழாமல் மொத்த உடல் அமைப்பையும் சமநிலை படுத்த காது மிக அவசியமாகிறது.

ஒரு சைக்கிளால் அதன் இரண்டு டயர்களால் நிற்க முடிவதில்லை ஏன்? மனிதன் மட்டும் எப்படி இரு கால்களால் நிற்கிறான்? சைக்கிள் நிற்க கூடுதலாக ஸ்டேண்ட் தேவைப் படுகிறது. அதனால் தன்னை தானே சமநிலை படுத்திக்கொள்ள முடிவதில்லை. ஆனால், மனிதனால் அது முடியும். அவன் வடிவம் நிற்க முடியாத நிலையில் இருந்தாலும் எந்த சக்தி அவனை சமநிலையுடன் நிற்க வைக்கிறது என்றால் அது அவன் காதில் உள்ள 'காக்லியா" திரவத்தினால் தான்.

ஒரு இறந்த மனித உடலை நிற்க வைக்க முடியுமா? முடியாது. ஏனெனில், அவன் சமநிலை தவறி விட்டான். அதே உயிருடன் இருப்பவனால் நிற்க முடிகிறது. காது கேட்பதற்கும் காக்லியா திரவம் உதவுகிறது. ஒலி அலைகளை காது மடங்கல் உள்வாங்கி காக்லியாவை அதிர்வடைய வைத்து அந்த அலைகள் பல ஆயிரம் வழிகளில் அலைந்து திரிந்து மைக்ரோ நொடியில் உங்கள் மூளைக்கு சத்தங்களை உணர வைக்கிறது. 10 அல்லது 15 டெசிபல் சத்தங்கள் வரை காது கேட்க போதுமானது. அதை மீறும் போது காதில் பிரச்சினைகள் வரும். முதலில் மயக்கம், தலைசுற்றல், வாந்தி, தலை வலி என தொடர்ந்து இறுதியில் காது கேட்கும் திறன் குறைந்து விடும்.

காதின் மடல்கள் மிக அற்புதமான வடிவத்தில் ஆனது. மண்ணெண்ணெய் அடுப்பில் புலன் வைக்காமல் அப்படியே எண்ணெய்யை ஊற்றினால் எப்படி சிதறி போகும்? அதேபோன்று தான் அந்த காது மடல்கள் இல்லாவிட்டால், சத்தங்கள் நேரடியாக மண்டைக்குள் மோதி அதுவே உங்களை கொன்று விடும், அவ்வளவு வலியுடனானதாக இருக்கும்.

அதை தான் பில்டர் செய்கிறது காது மடல்களும் அதை சுற்றி உள்ள சிக்கலான அமைப்புகளும்.






**ஷெருபா ஆனந்தராஜா**
தரம் 13, புனித அந்தோனியார் மகளிர் மகா வித்தியாலயம்.



**ஷெமாயா ஆனந்தராஜா**
தரம் 07, புனித அந்தோனியார் மகளிர் மகா வித்தியாலயம்.

# 'நிலாச் சோறு' மூதாதையரின் அறிவியல்



குழந்தைகளுக்கு நிலாவை காட்டி சோறு ஊட்டுவது விளையாட்டு காரியம் அல்ல. அது அறிவியல். குழந்தை கருவில் இருக்கும் போது தாயின் தொப்புள் கொடி வழியாக குழந்தைக்கு உணவு செல்கிறது. குழந்தை பிறந்து தொப்புள் கொடி உடலில் இருந்து பிரிந்த பின்பு தான் உணவுக் குழலின் விட்டம் விரிய தொடங்குகிறது. இது முழுமையடைய ஐந்து வருடம் ஆகிறது. நிலவை காட்டி சோறு ஊட்டுவதால் குழந்தை மேல்நோக்கி பார்க்கும் போது, தொண்டை மற்றும் உணவுக்குழல் விரிவடைகிறது. அப்போது உணவு இலகுவாக இரைப்பையை நோக்கி இறங்குகிறது.

மேலும் தொண்டைக் குழலில் கீழ்நோக்கி இறங்கும் அலைவு இயக்கங்கள் மற்றும் செரிமான ஊக்கிகளுக்கு நல்ல பயிற்சி கிடைக்கின்றன.

இப்பயிற்சிகள் மூலம் குழந்தைகளின் உணவு செரிமான மண்டலம் ஆரோக்கியம் பெறுகிறது. மேலும் நிலாவை காட்டி சோறு ஊட்டும்போது குழந்தைகள் உணவில் ஆரம்வம் செலுத்துகிறார்கள்.

கைத்தொலைபேசியை காண்பித்தும், டிவியை காண்பித்தும் குழந்தைகளுக்கு உணவூட்டும் இன்றைய தலைமுறை தாய்மார்கள், இன்றிலிருந்து குழந்தைகளுக்கு நிலாச்சோறு ஊட்டுங்கள்.

# உயர் வாழ்வு காண்போம்!

உலகில் தோன்றும் உயிரினம் அனைத்தும்
உயிர் நீங்கி இறந்திடுவது நிச்சயம்
பிள்ளைகளே! மனித உருவில் பிறந்த நாமும்
படைப்பினங்கள் போல உயிர் துறந்து மரணித்திடுவோம்!

உலகில் காணும் உயர்ந்த படைப்பு மனித இனமே!
உன்னதமாய் ஆறறிவும் பெற்று நாமுள்ளோம்.
அவ்வறிவினை வளர்த்திட நாம் முனைந்திட வேண்டும்.
அவ்வாறெனில் தான் வாழ்வில் உயர்வு கண்டிட முடியும்.

சிறு பராயம் முதல் சீர் கல்வி பெற்றிட வேண்டும்.
சிறந்த பண்புகள் நம்மில் உருவாக வேண்டும்.
அதற்கென நாம் செயற்படல் எம் முதற்கடமை.
அவ்வடிப்படையில் முயற்சித்தால் நாம் சீர் பெறுவோம்.

முதலில் மனப்பாங்கைச் சீர் செய்தல் அத்தியாவசியம்
மற்றவர் முன்னேற்றம் கண்டு மனமகிழ்தல் தேவை; பொறாமை கூடாது.
முதியோர், பெற்றோர்க்கு மரியாதை செய்தல் மிகவும் கட்டாயம்.
முன்னில் வருபவரை வந்தனம் கூறி வரவேற்க வேண்டும்.

பொய், களவு என்பன மனிதனைச் சீரழித்து விடுவன.
புகலும் வாய்ச் சொல்லில் உண்மையே பளிச்சிட வேண்டும்.
ஏழை, எளியோரைக் கண்டால் ஆதரிக்க வேண்டும்.
அல்லலுற்றோர் துன்பம் போக்க ஆதரவு நல்க வேண்டும்.

எவ்விடத்திம் எங்கும் பொறுமையைக் கைக்கொள்ள வேண்டும்
எதிராய் இயங்குபவனிடமும் ஆதரவு காட்டல் தேவை.
இவ்வாறெல்லாம் சிந்தித்துச் செயல்பட்டுக் கல்வியில் முன்னேறி
இவ்வகிலத்தில் வாழ்வாங்குவாழ முனைந்து நிற்போம்!

வெலிப்பன்னை அத்தாஸ்


## இவ்வார மழலை




மனோஜ் / ஜீவஜோதி,
களுத்துறை

# வாரம் ஒரு பெரியார்

‘தமிழுக்கும் அமுதென்று பேர், அந்தத் தமிழின்பத் தமிழெங்கள் உயிருக்கு நேர்’ என்ற தேன் சுவைசொட்டும் பாடல் வரிகளுக்கு சொந்தக்காரர் பாவேந்தர் பாரதிதாசன். தமிழ்நாட்டில் பிறந்த அவர், உலகெங்கும் புகழ் படைத்தவர். ‘புரட்சிக்கவி’ என்றும் ‘பாவேந்தர்’ என்றும் அவர் போற்றப்படுகின்றார்.



## தமிழுக்கு அரும்பணியாற்றிய பாவேந்தர் பாரதிதாசன்

தமிழ்மொழிக்கு அருட்தொண்டாற்றியவர் பாரதிதாசன். தமிழாசிரியர், கவிஞர், திரைக்கதாசிரியர், எழுத்தாளர், கவிஞர், என்று பல்வேறு துறைகளில் தமிழ்மொழியின் இனிமையை மக்களிடம் எடுத்துச் சென்றவர் அவர், தனது படைப்புகளுக்காக இந்தியாவின் ‘சாஹித்ய அகாடமி விருது’ பெற்றுள்ளார்.

பாவேந்தர் பாரதிதாசன், தென்னிந்தியாவின் புதுவையில், ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி, 1891 ஆம் ஆண்டில் கனகசபை முதலியார் மற்றும் இலக்குமி அம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். பாரதிதாசனின் இயற்பெயர் சுப்புரத்தினம். அவரது தந்தையின் பெயரின் முதல் பாதியை தன்னுடைய பெயரில் இணைத்து ‘கனகசுப்புரத்தினம்’ என்று அழைக்கப்பட்டார்.

அவர் தனது இளம் வயதிலிருந்தே தமிழ்மொழி மீது அதீத பற்றுடையவராகத் திகழ்ந்தார். பாடசாலையிலே புகழ்பெற்ற அறிஞர்களிடம் தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம் மற்றும் சைவ சித்தாந்த வேதாந்தங்களை முறையாகக் கற்றார். சிறுவயதிலேயே சுவைமிக்க அழகான பாடல்களை எழுதும் திறனும் பெற்றிருந்தார். மூன்றாண்டுகள் பயிலக் கூடிய இளங்கலைப் பட்டத்தை, இரண்டு ஆண்டுகளிலேயே முடித்து கல்லூரியிலேயே முதலாவதாகத் தேர்ச்சி பெற்றார். மிகச்சிறிய வயதிலேயே இத்தகைய தமிழ்ப் புலமை அவரிடம் இருந்ததால் கல்லூரிப் படிப்பு முடிந்தவுடனே அவர் 1919 இல் காரைக்காலைச் சேர்ந்த அரசினர் கல்லூரித் தமிழாசிரியாராகப் பதவியேற்றார்.

1920ஆம் ஆண்டில் பழநி அம்மையார் என்பவரை திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்கு நான்கு பிள்ளைகள்.

தமிழ்மொழி மீது பற்றுக் கொண்டவராக இருந்த பாரதிதாசன், தனது மானசீகக் குருவாக சுப்பிரமணிய பாரதியாரைக் கருதினார். அவர், பாரதியாரை நேரில் சந்தித்துள்ளார். பாரதியிடமிருந்து பாராட்டுக்கள் பெற்றதோடு மட்டுமல்லாமல், அவரது நட்பும் கிடைத்தது அவருக்கு. அன்று முதல், அவர் தனது இயற்பெயரான கனகசுப்புரத்தினம் என்பதை ‘பாரதிதாசன்’ என்று மாற்றிக் கொண்டார்.

பாரதியாரிடம் நட்பு கொண்ட அன்று முதல், ‘பாரதிதாசன் என்ற பெயரிலே அவர் தனது படைப்புகளை வெளியிட்டார். அச்சமயத்தில், சுதந்திரப் போராட்ட சூழல் நிலவியதாலும், அவர் திராவிட இயக்கத்தின் தீவிர தொண்டன் என்பதாலும், தந்தை பெரியார் மற்றும் பல அரசியல் தலைவர்களுடன் இணைந்து பல போராட்டங்களில் ஈடுபட்டு பலமுறை சிறைக்குச் சென்றார். அவரது இலக்கிய நடையைக் கண்டு வியந்த அன்றைய திரைத் தயாரிப்பாளர்களும், இயக்குனர்களும் அவருக்கு வாய்ப்புகள் வழங்கியதால், அவர் திரைப்படங்களுக்கும் கதைவசனம் எழுதியுள்ளார். அரசியல் தலைவர்களான அண்ணாதுரை, மு. கருணாநிதி, மற்றும் எம்.ஜி. இராமச்சந்திரன் போன்றோர் அவருடைய படைப்புகளுக்காக அவரை ஊக்குவித்ததால், அவர் 1954ஆம் ஆண்டில் புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். எண்ணற்ற படைப்புகளை அவர் தமிழ்மொழிக்கு வழங்கியுள்ளார்.

பாரதிதாசனுக்கு பெரியார், ‘புரட்சிக் கவிஞர்’ என்ற பட்டமும், அறிஞர் அண்ணா, ‘புரட்சிக்கவி’ என்ற பட்டமும் வழங்கினர். அவர் பெற்றுள்ள விருதுகள் ஏராளம். தமிழ்நாடு மாநில அரசாங்கம், அவரது நினைவாக ஆண்டுதோறும் ஒரு தமிழ் கவிஞருக்கு ‘பாரதிதாசன் விருதினை’ வழங்கி வருகிறது. ‘பாரதிதாசன் பல்கலைக்கழகம்’ என்ற பெயரில் ஒரு மாநில பல்கலைக்கழகம் திருச்சிராப்பள்ளியில் நிறுவப்பட்டது.

பன்முகம் கொண்ட பாரதிதாசன் ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி, 1964 ஆம் ஆண்டில் இயற்கை எய்தினார்.

உலகில் பல்வேறு துறைகளிலும் பிரகாசித்த பெரியார்கள் பற்றிய சிறு தகவல்கள் வாரமொரு தடவை இப்பகுதியில் பிரசுரமாகின்றது. நீங்களும் உலகப் பெரியார் பற்றிய தகவல்கள், சித்திரங்கள் மற்றும் உங்கள் ஆக்கங்களை எமக்கு அனுப்பி வைக்க முடியும். உங்கள் பெயர், வயது, பாடசாலை விபரங்களுடன் பிரசுரம் செய்வோம்.

# விளையாட்டு




# வரலாறு திரும்புகிறது

அதிரடியாக உலகக் கிண்ணத்தை ஆரம்பித்த நியூசிலாந்து அணி வெளியேறியது. சொந்த மண்ணில் அவுஸ்திரேலியாவுக்கு நின்று பிடிக்க முடியவில்லை. இம்முறையும் தென்னாபிரிக்காவுக்கு துரதிருஷ்டம் துரத்தியது. ஆசிய கிண்ணத்தை வென்றாலும் ஒரு சாதாரண ஆட்டத்தை வெளியிட்ட இலங்கையால் முன்னேற முடியவில்லை. மேற்கிந்திய தீவுகளுக்கு ஆரம்ப சுற்றையே தாண்ட முடியவில்லை. அதிர்ச்சி கொடுக்கலாம் என்ற பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், சிம்பாப்வே மற்றும் அயர்லாந்தின் கனவு கலைந்துவிட்டது.

கடைசியில் ஆரம்பப் போட்டிகளில் தோல்வியை சந்தித்து வெளியேறத் தயாராக ஆடிய பாகிஸ்தானும், சுப்பர் 12 சுற்றில் சுமாராக ஆடிய இங்கிலாந்தும் டி20 உலகக் கிண்ண இறுதிப் போட்டிக்கு முன்னேறின.

மெல்போர்ன் மைதானத்தில் பாகிஸ்தான் மற்றும் இங்கிலாந்து அணிகள் இன்று உலகக் கிண்ணத்தை கைப்பற்ற பலப்பரீட்சை நடத்தவிருக்கின்றன.

வலுவான பந்துவீச்சு, இணையற்ற ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களுடன் இருக்கும் பாகிஸ்தான் எப்போது விழும், எப்போது எழும் என்று சொல்ல முடியாது என்பதற்கு இந்த உலகக் கிண்ணம் நல்ல உதாரணம்.

சுப்பர் 12இல் முதல் இரு போட்டிகளிலும் இந்தியா மற்றும் சிம்பாப்வேயிடம் தோற்று சொந்த ரசிகர்களிடம் ஏச்சுப் பேச்சை சந்தித்த பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, நெதர்லாந்திடம் தோற்று தனக்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது என்று தெரிந்ததும் மீண்டு எழுந்தது.

அரையிறுதியில் அதுவரை வலுவாக இருந்த நியூசிலாந்தை இலகுவாக வீழ்த்தியது. தனது பலமாக இருக்கும் பந்துவீச்சு மற்றும் ஆரம்ப துடுப்பாட்டம் இரண்டும் அந்தப் போட்டியில் முழுமையாகக் கைகொடுத்தது. என்றாலும் பாகிஸ்தானின் பெரும் ஓட்டையாக இருக்கும் மத்திய வரிசை துடுப்பாட்டம் இறுதிப் போட்டியில் எப்படி செயற்படப் போகிறது என்பதைப் பொறுத்தே அந்த அணியின் உலகக் கிண்ண கனவு நிறைவேறும்.

சுப்பர் 12 சுற்றில் இங்கிலாந்தின் ஆட்டம் சொல்லும்படியாக இருக்கவில்லை. அயர்லாந்திடம் தோற்றது, அவுஸ்திரேலியாவுடனான போட்டிக்கு மழை குறுக்கிட்டது. கடைசியில் இலங்கையுடனான வெற்றியே அந்த அணியை அரையிறுதிக்கு அழைத்துச் சென்றது.

இந்தியாவுக்கு எதிரான அரையிறுதி என்பது இங்கிலாந்து தனது பலத்தை காட்டுவதாக இருந்தது. இந்தியா நிர்ணயித்த 169 ஓட்ட வெற்றி இலக்கை அநாயாசமாக அடைந்தது. ஒரு விக்கெட் கூட விழவில்லை. இங்கிலாந்து இறுதிப் போட்டிக்கு முழுத் தயாருடன் இருப்பதை இது காட்டுகிறது.

இங்கிலாந்தின் துடுப்பாட்ட வரிசையாகட்டும், பந்துவீச்சாகட்டும் டி20 போட்டிக்கு என்றே தயார் செய்யப்பட்டிருக்கிறது. அந்த அணியில் எப்போதும் தளம்பல் இருக்காது. ஒருநாள் உலகக் கிண்ணத்தில் நடப்புச் சம்பியனாக இருக்கும் இங்கிலாந்து பெரிய போட்டித் தொடர்களில் அரையிறுதிக்கேனும் முன்னேறி நொக் அவுட் போட்டிகளுக்கு முகம் கொடுப்பதில் தம்மை பழக்கப்படுத்திக் கொண்டிருக்கிறது.




டி20 போட்டிகளைப் பொறுத்தவரை இங்கிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகள் இதுவரை 28 போட்டிகளில் ஆடிய நிலையில் இங்கிலாந்து அணி அதில் 17 போட்டிகளில் வென்றிருப்பதோடு பாகிஸ்தானால் 9 போட்டிகளிலேயே வெல்ல முடிந்திருக்கிறது.

என்றாலும் கடந்த கால சாதனைகளை வைத்து இறுதிப் போட்டியில் யார் வெல்வார்கள் என்று தீர்மானிக்க முடியாது. அன்றைய தினத்தின் சூழல், அணிகளின் திறமையே சம்பியனை தீர்மானிக்கும்.

ஆனால் இம்முறை உலகக் கிண்ணத்தில் மற்றொரு முக்கிய தீர்மானிக்கும் சக்தியாக காலநிலை மாறியிருக்கிறது. இறுதிப் போட்டி நடைபெறும் இன்றைய தினத்திலும் மேலதிக நாளாக ஒதுக்கப்பட்டிருக்கும் நாளைய தினத்திலும் மெல்போர்னில் மழை பெய்வதற்கு அதிக வாய்ப்பு இருப்பதாக காலநிலை அவதானிப்பு நிலையம் கூறுகிறது. அப்படி நிகழ்ந்தால் கிட்டத்தட்ட கடந்த ஒரு மாதமாக இடம்பெறும் உலகக் கிண்ணமே பாழாகிவிடும்.

அவுஸ்திரேலியாவில் 1992 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டியில் பாகிஸ்தான் அணி இதே நியூசிலாந்தை வீழ்த்தியே இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. இங்கிலாந்து இந்தியாவுக்கு பதில் தென்னாபிரிக்காவை தோற்கடித்து இறுதிக்கு வந்தது.

என்றாலும் தென்னாபிரிக்காவின் துரதிருஷ்டம் அப்போதும் இருந்தது. அந்த அரையிறுதியில் தென்னாபிரிக்க அணி 13 பந்துகளில் 22 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்றபோது மழை குறுக்கிட மழைக்கு பின்னர் ஆரம்பமான போட்டியில் அந்த அணி 1 பந்தில் 21 ஓட்டங்களை பெற வேண்டும் என்று மாற்றப்பட்டதால் தோல்வியை சந்தித்தது.

இம்முறை அது நெதர்லாந்திடம் தோற்றது ஒருபக்கம் இருக்க சிம்பாப்வேக்கு எதிரான போட்டியில் 24 பந்துகளில் 13 ஓட்டங்களை பெற வேண்டி இருந்தபோதுதான் மழை குறுக்கிட்டு போட்டி கைவிடப்பட்டது. அது கூட அரையிறுதிக்கு முன்னேறாமல் போனதற்கு முக்கிய காரணம்.

1992ஆம் ஆண்டு இங்கிலாந்து–பாகிஸ்தான் இறுதிப் போட்டியில் சந்தித்தன. அதுவும் இதே மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில். எனவே அந்த வரலாறு மீண்டும் திரும்பி இருப்பதாக பலரும் கூற ஆரம்பித்திருக்கிறார்கள். அப்போது பாகிஸ்தான் உலகக் கிண்ணத்தை வென்றது.

அந்த வரலாற்றை திருப்பி எழுத பாகிஸ்தான் முயலும். ஆனால் வரலாற்றுத் தவறை சரிசெய்ய இங்கிலாந்து மும்முரம் காட்டும் என்பதில் சந்தேகமில்லை.




# ஒழுக்கம் விழுப்பம் தரும்

"இலங்கையின் மற்றைய சில கிரிக்கெட் வீரர்களை விட எனது வாழ்க்கை முறை மாறுபட்டது. அதற்காக நான் கெட்டவன் என்று அர்த்தமில்லை. நான் எனது நண்பர்களுடன் மதுபான விடுதியில் இருந்தால் வெறும் ஓய்வுக்காக மாத்திரமே இருப்பேன்.

என்னை பார்ப்பவர்கள் நான் மது அருந்துவதாகவும், கூத்துக் கும்மாளத்தில் ஈடுபடுவதாகவும் நான் கிரிக்கெட் ஆடவில்லை என்றும் நினைக்கக் கூடும். எனது வாழ்க்கை முறை நான் ஓய்வாக இருக்க உதவுகிறது." என்று ஓர் ஆண்டுக்கு முன் தனுஷ்க குணதிலக்க அளித்த பேட்டியில், எத்தனை விகிதத்தில் உண்மை, பொய் கலந்திருக்கிறது என்று தெரியவில்லை.

ஆனால் சிட்னியின் சசெக்ஸ் வீதியில் இருக்கும் ஹோட்டலில் வைத்து கடந்த நவம்பர் 6ஆம் திகதி அதிகாலை குணதிலக்கவை கைது செய்தபோதும் அவரது நடத்தையில் ஏதோ கோளாறு இருக்கிறது என்பது புரிகிறது.

டி20 உலகக் கிண்ணத்தில் இருந்து வெளியேறிய இலங்கை அணி கடந்த சனிக்கிழமை தனது கடைசி சுப்பர் 12 சுற்றில் இங்கிலாந்திடம் தோற்றுவிட்டு, ஊர் திரும்புவதற்கு அவசர அவசரமாக உடைகளை தயார் செய்துகொண்டிருந்தபோதே அங்கு வந்த பொலிஸார் குணதிலக்கவை இழுத்துச் சென்றார்கள்.

சிட்னியைச் சேர்ந்த 29 வயது பெண் ஒருவரின் புகாரின் பேரிலேயே குணதிலக்க கைது செய்யப்பட்டார். அதுவும் பாலியல் புகார். சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது.

இதுவரை நடந்த விசாரணை, பெண்ணின் வாக்குமூலத்தின்படி கதை சில வாரங்கள் நீண்டது. அதாவது டி20 உலகக் கிண்ணத்திற்காக இலங்கை அணி அவுஸ்திரேலியா சென்று நமீபியாவுடனான முதல் போட்டியில் தோல்வி அடைந்து, அந்தப் போட்டியில் குணதிலக்க டக் அவுட் ஆகி பின்னர் தொடைப்பகுதியில் காயம் ஏற்பட்டு, அணியில் இருந்து வெளியேற்றப்பட்டது தொடக்கம் நிகழ்ந்திருக்கக் கூடும்.

காதல் செய்வதற்கு என்றே இருக்கும் 'டின்டர்' என்ற செயலியின் வழியாகவே தனுஷ்கவும் அந்தப் பெண்ணும் சந்தித்திருக்கிறார்கள். இருவருக்கும் இடையிலான தொடர்பு சில வாரங்கள் நீடித்திருக்கிறது. பின்னர் கடந்த நவம்பர் 2ஆம் திகதி இருவரும் சிட்னியில் இருக்கும் ஒபேரா மதுபான விடுதியில் சந்தித்திருக்கிறார்கள்.

அப்போது இருவரும் ஒருமித்து உடலுறவு கொள்ள ரோஸ்பேயில் இருக்கும் பெண்ணின் வீட்டுக்குச் செல்ல தீர்மானித்திருக்கிறார்கள். எனினும் தனுஷ்கவுக்கு ஆணுறையை பயன்படுத்தும்படி பெண் கேட்டுக்கொண்டபோது இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் தம்மை தனுஷ்க கட்டாயப்படுத்தியதாகவும் அந்தப் பெண் குற்றம்சாட்டியிருக்கிறார். அந்தப் பெண்ணின் வாக்குமூலத்தை முழுமையாகப் போட்டால் 'வயது வந்தோருக்கு மாத்திரம்' என்று குறிப்பிட வேண்டி இருக்கும்.

சிட்னியை தலைநகராகக் கொண்ட நியூ சவுத் வேல்ஸ் மாகாணத்தில் கடந்த ஜூன் மாதம் அமுலுக்கு வந்த சட்டத்தின்படி இது பாரதூரமான குற்றம். அந்த சட்டம் எல்லாம் தனுஷ்கவுக்கு எங்கே தெரிந்திருக்கப்போகிறது. இப்போது பிணையில் கூட வெளியே வர முடியாமல் தடுப்புக்காவலில் இருக்கிறார்.

வழக்கு இப்போது விசாரணையில் இருக்கிறது. இந்த சம்பவத்தில் இருக்கும் உண்மைதன்மை, தனுஷ்க குற்றவாளியா என்பது பற்றி இப்போதைக்கு உறுதியாகக் கூற முடியாது. ஆனால், ஒரு கிரிக்கெட் வீரராக இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி, அதுவும் உலகக் கிண்ணத்தில் பங்கேற்றிருந்தபோதே இந்த சம்பவம் நிகழ்ந்திருக்கிறது.

இங்கே அவிழ்க்கப்படாத முடிச்சுகள் எத்தனையோ இருக்கின்றன. முதலில் காயமடைந்து அணியில் இருந்து வெளியேற்றப்பட்ட வீரரை இலங்கைக்கு திருப்பி அனுப்பாமல் அணியில் தக்கவைத்தது ஏன்? என்ற கேள்வி பெரிதாக எழுப்பப்பட்டபோது, காயம் குணமடைந்தால் அணியுடன் இணைக்க வசதியாக இருக்கும் என்று இலங்கை கிரிக்கெட் சபையால் விளக்கம் அளிக்கப்பட்டது. என்றாலும், அவர் அணியுடன் இணைந்திருந்தால் அணியின் கட்டுப்பாடுகள் அவருக்கு இருக்கவில்லையா என்ற கேள்விக்கு யார் பதிலளிப்பார்கள். தனுஷ்க மாத்திரம் அல்ல, இலங்கை அணியைச் சேர்ந்தவர்கள் உத்தியோகபூர்வமற்ற பல விருந்து நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றிருப்பதாக செய்திகள் கசிகின்றன.

> தனுஷ்கவின் தவறுகளுக்கு அவரை மாத்திரம் குற்றம் சொல்ல முடியாது, அதற்கு அப்பால் இலங்கை கிரிக்கெட் தன்னை சுயவிசாரணை செய்ய வேண்டிய நேரம் வந்துவிட்டது என்றே இதனை புரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கை கிரிக்கெட் சபை தனுஷ்கவுக்கு அனைத்து வகை கிரிக்கெட்டிலும் இடைக்காலத் தடை விதித்து, சம்பவங்கள் குறித்து விசாரிக்க மூன்று பேர் கொண்ட குழுவையும் நியமித்திருக்கிறது.

ஆனால் தனுஷ்க பற்றியும், அண்மைக் காலமாக இலங்கை அணியின் நிகழும் ஒழுக்க சீர்கேடுகள் பற்றியும் உலகுக்கே தெரியும். தனுஷ்க விவகாரத்தில் இலங்கை கிரிக்கெட்டின் அணுகுமுறை, அவர் இத்தனை பெரிய சிக்கலில் மாட்டுவதற்கு தூண்டுதலாக அமைந்திருக்கிறது என்பது கடந்த கால வரலாற்றை பார்த்தாலே புரிந்துவிடும்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் மாத்திரம் பெண்களுடன் தவறாக நடந்துகொண்டது பற்றி தனுஷ்கவுக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுகள் பதிவாகி இருக்கின்றன. மிரிஸ்ஸவில் இருக்கும் ஹோட்டல் ஒன்றில் பெண் ஒருவரிடம் தவறாக நடந்துகொண்ட தனுஷ்க கன்னத்தில் அறை வாங்கினார் என்ற செய்தி ஓர் ஆண்டுக்கு முன் வெளியாகி இருந்தது.

2018ஆம் ஆண்டு கொள்ளுப்பிட்டியில் உள்ள ஹோட்டல் அறையொன்றில் நோர்வே பெண் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளானது பற்றி தனுஷ்கவிடம் பொலிஸ் விசாரணை கூட நடந்தது.




அப்போது வீரர்களுக்கான விதிகளை மீறியதற்காக அவருக்கு இலங்கை கிரிக்கெட் சபை ஆறு போட்டிகளில் தடை விதித்திருந்தது.

பொலிஸ் விசாரணையில் தனுஷ்க தப்பிள்ளை என்றும் அவரது கூட்டாளி சந்தீப் ஜூட் செல்லியாவே இரு நோர்வே பெண்களில் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகவும் கண்டறியப்பட்டது. ஆனால் இலங்கை அணி தங்கியிருந்த அறையில் நடந்தது தான் பெரிய பிரச்சினை.

நள்ளிரவுக்கு முன் வீரர்கள் ஹோட்டல் அறையில் இருக்க வேண்டும் என்பதும் அங்கு வேறு விருந்தினர்கள் இருக்கக் கூடாது என்பதும் இலங்கை கிரிக்கெட்டின் கண்டிப்பான சட்டம். ஆனால் இதனை பெரிதாகப் பொருட்படுத்தியதாக தெரியவில்லை. இதற்காக தனுஷ்க சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து இடைநிறுத்தப்பட்டு பின்னர் அந்தத் தடை நீக்கப்பட்டது.

இந்த சம்பவத்திற்கு சில மாதங்களுக்கு முன் 2017 ஒக்டோபரில் பிந்திய இரவுக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டு பயிற்சியை தவறவிட்ட தனுஷ்க மீது ஒழுக்காற்று விசாரணை கூட நடந்திருந்தது. அதற்காக தனுஷ்கவுக்கு ஆறு போட்டித் தடை விதிக்கப்பட்டு பின்னர் அது மூன்றாகக் குறைக்கப்பட்டது.

பின்னர் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் மாத்தறையில் உள்ள ஹோட்டல் ஒன்றில் ஒரு சிலருடன் கைகலப்பில் ஈடுபட்டு மாட்டிக் கொண்டார். இது பற்றி மூன்று பேர் கொண்ட குழு அமைத்து விசாரித்த இலங்கை கிரிக்கெட் சபை, போட்டித் தடைக்கு பதில் கட்டாய ஆலோசனை அமர்வுகளில் கலந்துகொள்ளுமாறு அனுப்பியது.

ஆனால் ஒரு மாதத்தின் பின் இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்ட இலங்கை அணியில் தனுஷ்க குணதிலக்கவுடன் நிரோஷன் திக்வெல்ல மற்றும் குசல் மெண்டிஸ் கொரோனா கட்டுப்பாட்டை மீறி வீதி ஓரத்தில் புகை பிடித்தது ஊர் சிரித்த கதை. இதற்காக இலங்கை கிரிக்கெட் சபை ஓர் ஆண்டு போட்டித் தடை விதித்து பின்னர் அதனை ஆறு மாதங்களாகக் குறைத்துக்கொண்டது.

2015 ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட்டை ஆரம்பித்த 31 வயதான தனுஷ்க குணதிலக்கவின் நடத்தை இப்படித்தான். அவர் அதனை திருத்திக் கொள்வதாகவும் தெரியவில்லை. ஆனால் இப்படிப்பட்ட ஒரு வீரரை தொடர்ந்து தேசிய அணிக்கு தேர்வு செய்தது, அவருக்கு வழங்கிய தண்டைனையை அடிக்கடி குறைத்தது, இப்பேர்ப்பட்ட ஒருவரை காயமடைந்தபோதும் அணியில் தக்கவைத்திருந்தது என்ற எத்தனையோ கேள்விகளுக்கு விடை தெரியவில்லை.

எனவே, தனுஷ்கவின் தவறுகளுக்கு அவரை மாத்திரம் குற்றம் சொல்ல முடியாது, அதற்கு அப்பால் இலங்கை கிரிக்கெட் தன்னை சுயவிசாரணை செய்ய வேண்டிய நேரம் வந்துவிட்டது என்றே இதனை புரிந்துகொள்ள வேண்டும்.

**எஸ்.பிர்தௌஸ்...**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 நவம்பர் மாதம் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
# செந்தூரம்
2022 நவம்பர் 13 ஞாயிற்றுக்கிழமை



சாஹித்திய விருது பெற்ற
எழுத்தாளர்
**எம். ரிஷான்**
செவ்வி (06ஆம் பக்கத்தில்)



**வைரவிழா,**
**பொன்விழா காணும்**
**திரு./ திருமதி**
**மணவை அசோகன்**
தம்பதிகளின் கதம்பம்
(5ஆம் பக்கத்தில்)

# 500 ஆண்டுகளாக வாடகை உயராத வீடுகள்



ஜெர்மனியின் புக்கரி என்ற சிறு நகரத்தில் கடந்த 500 ஆண்டுகளாக வீட்டு வாடகை உயர்த்தப்படவே இல்லை. ஏழைகளுக்காக 1520 ஆம் ஆண்டு கட்டப்பட்ட வீடுகளில் ஏழைகளாக இருந்தால் அதிகபட்சம் இரண்டு ஆண்டுகளுக்கு தாராளமாக குடியிருக்கலாம். வீட்டு வாடகை ஒரு டொலருக்குக் குறைவுதான். ஆனால் அந்த ஊருக்கென்று சில சட்டதிட்டங்கள் காலாகாலமாக பேணப்பட்டு வருகிறது. இரவு 10 மணிக்கு ஊர்வாயில் மூடப்படும். கத்தோலிக்கர்களாக இருக்க வேண்டும். நாளுக்கு மூன்று நேரம் பிரார்த்தனை செய்ய வேண்டும் என்பது தான் அந்த நிபந்தனைகள். இங்கே 67 வீடுகள், 147 மாடிக் குடியிருப்புகள், ஒரு தேவாலயம் மற்றும் ஒரு நிர்வாகக் கட்டடம் உள்ளன. நூற்றுக்கும் அதிகமானவர்கள் இன்றும் கூட வாழ்கிறார்கள்.

# இரண்டரை ஆண்டுகள் நீடித்த விக்கல்

விக்கல் வருவது வழக்கம்தான். அதனைப் போக்க என்னவெல்லாம் செய்வார்கள். மூச்சை அடக்கிப் பிடிப்பது, இடைவிடாது தண்ணீர் குடிப்பது என்ற சாதாரண வைத்தியங்கள் தவிர, திடீரென்று கண்ணத்தில் அறைவது போன்ற அதிர்ச்சி வைத்தியங்களும் உண்டு. சிலர் பழைய கோபத்திற்கு அடித்துவிட்டு, ஏன் என்று கோபத்தோடு கேட்டால், “விக்கல் நின்று விட்டது பார்” என்று கூறி தப்பிக்கொள்வார்கள்.



ஆனால், பிரிட்டனின் கிறிஸ் சான்ட்ஸிற்கு இந்த அதிர்ச்சி வைத்தியம் எதுவும் சரிப்பட்டுவரவில்லை. 2010ஆம் ஆண்டு அவருக்கு வந்த விக்கல் இரண்டரை ஆண்டுகள் இடைவிடாது இருந்தது.

மருத்துவர்களும் எத்தனையோ சிகிச்சை செய்து பார்த்தார்கள் விக்கல் நிற்பதாக இல்லை. கடைசியில்தான் அவரது மூளையில் கட்டி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அந்தக் கட்டிக்குத்தான் இந்த விக்கல் இருந்திருக்கிறது. கட்டியை அகற்றியதும் விக்கல் நின்றுவிட்டது. உண்மையில் சான்ட்ஸிற்கு வந்த விக்கல் அவரின் உயிரையே காத்தது.

# அமெரிக்காவும் யுத்தமும்




ஐக்கிய அமெரிக்கா என்ற நாடு நிறுவப்பட்டது 1776ஆம் ஆண்டு. அன்று தொடக்கம் இன்றுவரை அந்த நாட்டுக்கு ஏதாவது ஒரு போரில் ஈடுபடாவிட்டால் தூக்கம் வராது போல். அதாவது அமெரிக்காவின் 242 ஆண்டு வரலாற்றில் 225 ஆண்டுகளை அந்த நாடு யுத்தத்திலேயே கழித்திருக்கிறது. இதன்படி பார்த்தால் அந்த நாடு பிறந்தது தொடக்கம் 20 ஆண்டுகள் கூட அமைதியாக இருந்ததில்லை.

1776 ஆம் ஆண்டை பார்த்தோம் என்றால் அமெரிக்க புரட்சிப் போர், சிக்கமாகுவா போர், இரண்டாவது சரோகி போர், பெனமிட் –யங்கி போர் என்று ஏகப்பட்ட போர்கள்.

இந்த போர்கள் 1796ஆம் ஆண்டு ஒருவழிய முடிய இரண்டு ஆண்டுகள் மாத்திரமே அமைதி நீடித்தது. அடுத்ததாக குவாசி போர் ஆரம்பமானது. இப்படியாக வரலாறு நெடுகிலும் போர்... போர்... போர்தான்.

சேர்ந்தாற்போல் அதிகபட்சம் ஐந்து ஆண்டுகளே அமெரிக்கா யுத்தம் ஒன்றில் ஈடுபடாமல் இருந்திருக்கிறது. அது 1935 தொடக்கம் 1940 ஆம் ஆண்டு வரையான காலமாகும். இது பொருளாதார நெருக்கடியை சந்தித்த காலம் என்பதால் வயிற்றுப்பிழைப்பை பார்க்கவே நேரம் சரியாக இருந்தது.

அடுத்ததாக வந்துவிட்டது இரண்டாவது உலகப் போர், பனிப்போர், கொரியப் போர், வியட்னாம் யுத்தம் என்று நீளுகிறது. இப்படி கடைசியாக 2000 ஆம் ஆண்டு மாத்திரம் அமெரிக்கா எந்த ஒரு யுத்தத்திற்கும் போகவில்லை. அடுத்ததாக 2001 செப்டெம்பர் பதினொன்று தாக்குதல், அதனைத் தொடர்ந்து ஆப்கான் படையெடுப்பு என்று போர் படலம் தொடர்கிறது.

அண்மையில் கூட அமெரிக்கா நீண்டதொரு போர் பட்டியலில் ஈடுபட்டது, ஈடுபட்டு வருகிறது. சோமாலிய தீவிரவாதத்திற்கு எதிரான போர், சிரிய மற்றும் யெமன் போர், உக்ரைன் சிவில் யுத்தம் என்று ஓய்வில்லாமல் யுத்தம்தான்.

அமெரிக்காவில் இதுவரை வந்த எந்த ஜனாதிபதியும் அமைதிக் கால ஜனாதிபதிகள் இல்லை. எல்லோருமே போர் காலத்தில் போர் புரிவதற்காக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதிகள் என்றே எடுத்துக் கொள்ள வேண்டும்.

இதில் இரண்டாவது உலகப் போருக்கு பின்னர் இடம்பெற்ற அனைத்து யுத்தங்களும் அமெரிக்கா ஆரம்பித்து வைத்த யுத்தங்கள்தான். வரலாற்று கணக்கெடுப் பின்படி இரண்டாவது உலகப் போருக்கு பின்னர் உலகில் இடம்பெற்ற 248 போர்களில் 201 போர்கள் அமெரிக்கா ஆரம்பித்து வைத்தவை.

எனவே, உலகின் ஒட்டுமொத்த இராணுவச் செலவில் அமெரிக்கா மாத்திரம் 35 வீதமான செலவை கொண்டிருப்பதில் ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

உலகெங்கும் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பின்படி உலக அமைதிக்கு அச்சுறுத்தலாக இருக்கும் முதல் நாடு எது தெரியுமா? வேறு யாராக இருக்க முடியும்? அமெரிக்காவேதான்.

# பேஸ்புக் மான்மியம்



பேஸ்புக்கில் நாளொன்றுக்கு 500,000 புதிய பயனர்கள் இணைகின்றனர். அதாவது ஒவ்வொரு வினாடிக்கும் 6 புதியவர்கள் இணைகிறார்கள். ஆனால் அமெரிக்கா அளவுக்கு எந்த நாடும் இல்லை. அங்கே கிட்டத்தட்ட 68 வீதமானவர்களுக்கு பேஸ்புக் கணக்கு இருக்கும். பேஸ்புக்கில் இருப்பவர்களில் 76 வீதமானவர்கள் நாளாந்தம் அதனை பயன்படுத்துகிறார்கள். சராசரியாக ஒருவருக்கு 155 பேஸ்புக் நண்பர்கள் இருப்பார்கள். என்றாலும் 270 மில்லியன் போலி பேஸ்புக் கணக்குகள் இருக்கின்றது என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்.

பேஸ்புக்கில் மிகப் பிரபலமான பக்கம் அதன் முகப்புப் பக்கம்தான். அதனை 204.7 மில்லியன் பேர் லைக் செய்திருக்கிறார்கள். அதிகம் லைக் செய்யப்பட்ட பேஸ்புக்கிற்கு சொந்தமில்லாத பக்கம் கால்பந்து நட்சத்திரம் கிறிஸ்டியானோ ரொனால்டோ உடையது. அந்தப் பக்கத்தை 122.6 மில்லியன் பேர் லைக் செய்திருக்கிறார்கள்.

பேஸ்புக்கில் வணிக பக்கங்கள் மாத்திரம் 60 மில்லியன் இருக்கின்றன. 5 மில்லியன் விளம்பரங்கள் மூலம் பேஸ்புக் நிறுவனம் பணத்தை அள்ளுகிறது.

# உயிர்களை ஆட்டி படைக்கும் பேய்கள்!

(கடந்த வாரத் தொடர்)



மரணதண்டனைகள் நடந்த இடத்தை ஆராயும் தருணத்தில் பசுமை கோபுரம் நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர் இந்த இடத்தில் நடந்த அனைத்தையும் சிறுமி பார்த்தாள். அவள் பார்த்தது இதுதான்: அன்னே ராணி மண்டியிட்டு, சற்று முன்னோக்கி சாய்ந்தாள். அவளது மரணதண்டனை செய்பவன் வாளுடன் (கோடாரி அல்ல) அவள் காலணி அணியாததால், பின்னால் இருந்து முற்றிலும் அமைதியாக அவளை அணுகினான். அவர் முதலில் தனது காலணிகளை கழற்றியிருக்கலாம், அதனால் அவர் எப்படி அணுகுவார் என்பதை அண்ணாவால் கேட்க முடியவில்லை, அதனால் மரண பயம் அவளை முன்கூட்டியே கைப்பற்றாது.

மரணதண்டனை நிறைவேற்றுபவர் தனது தலையை ஒரே அடியால் வெட்டியதால், அன்னே பொலினுக்கு ஒரு நகர்வு கூட செய்ய நேரம் இல்லை. ஒரு வினாடி கழித்து அவர் துண்டிக்கப்பட்ட தலையை முடியால் தூக்கி பார்வையாளர்களுக்கு காட்டினார். மேலும் கூட்டம் ஒரு இறந்த முகத்தைக் கண்டது, பயங்கரமான முகமூடியால் சிதைந்தது. மற்ற சுற்றுலாப் பயணிகள் மரணதண்டனை காட்சியைப் பார்க்காததால், அங்கிருந்தவர்கள் அனைவரும் சிறுமியின் கதையை உப்புத் தானியத்துடன் எடுத்துக் கொண்டனர். இருப்பினும், இரண்டு மாதங்களுக்குப் பிறகு,



பல வரலாற்றாசிரியர்கள், உண்மையில், அன்னே ராணியின் மரணதண்டனை சிறுமி நினைத்தபடியே நடந்தது என்பதை உறுதிப்படுத்தினர். கூடுதலாக, மரணதண்டனை நிறைவேற்றுபவரால் நிறைவேற்றப்பட்டது என்று விஞ்ஞானிகள் நிறுவியுள்ளனர், அவர் பாதிக்கப்பட்டவர்களை மிகவும் நுட்பமாக நடத்துவதற்கு பெயர் பெற்றவர், இதற்காக பிரான்சில் இருந்து சிறப்பாக அழைக்கப்பட்டார்.

பேய்கள் உள்ளதா?, கோபுரத்தின் சுவர்களுக்குள் பயங்கரமான மற்றும் விவரிக்க முடியாத நிகழ்வுகள் இன்றும் நடைபெற்று வருகின்றன என்பதையும் குறிப்பிட வேண்டும். ஒருமுறை ஒரு காவலர் பிரதேசத்தை ஒரு சாதாரண சுற்று செய்தார். அவர் புனித பீட்டர் தேவாலயத்தின் அருகே சென்ற தருணத்தில், ஜன்னலுக்கு வெளியே பார்க்க வேண்டும் என்ற தீவிர ஆசை அவருக்கு எழுந்தது.

அந்த மனிதன் சுவரில் ஏணியை வைத்து, எழுந்து உள்ளே பார்த்தான். அவர் அங்கு பார்த்ததிலிருந்து கிட்டத்தட்ட மயக்கமடைந்தார்.

தேவாலயத்தின் நடுவில், கோட்டையில் தொங்கவிடப்பட்ட உருவப்படங்களிலிருந்து காவலருக்கு நன்கு தெரிந்த பல வரலாற்று நபர்கள் மெதுவாக நடந்து கொண்டிருந்தனர்.

ஆன் பொலினைப் போலவே தோற்றமளிக்கும் ஒரு இளம் கருப்பு முடி கொண்ட பெண்மணி முன்னிலை வகித்தார். அவரைத் தொடர்ந்து தாமஸ் மோர் அவர் ஒரு அரசியல்வாதி மற்றும் தேசத் துரோக குற்றச்சாட்டுக்கு ஆளானார், 1535 இல் தூக்கிலிடப்பட்டார். அடுத்து சாலிஸ்பரியின் டச்சஸ் மற்றும் ஜேன் கிரே ஆகியோர் அவரது கணவர் லார்ட் டட்லியுடன் கைகோர்த்தனர்.

ஊர்வலத்தின் முடிவில் 1745 கலவரத்தில் பங்கேற்பாளர்கள் பின்தொடர்ந்தனர். இந்த மக்கள் அனைவரும் பச்சை

**கோவென்ட்ரி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விக் டேண்டி என்ற புரோகிராமர் இந்த பேய் கதைகள் அனைத்தும் பொய் என்றும் முட்டாள்தனமான கதை என்றும் கருதினார். ஆனால் ஒரு மாலை, அவர் வேலை செய்து கொண்டிருந்தபோது, அவருக்கு பனிக்கட்டி வியர்வை வெளியேறியது. யாரோ தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பதை அவர் தெளிவாக உணர்ந்தார்.**

கோபுரத்தில் தலை துண்டிக்கப்பட்டனர், மேலும் அவர்கள் தங்கள் தோற்றத்தில் ஒரு பயங்கரமான தோற்றத்தை ஏற்படுத்தினார்கள்:

அவர்கள் அனைவரின் கழுத்திலும் சிவப்பு இரத்தம் தோய்ந்த கோடுகள் இருந்தன, மேலும் அவர்களின் முகங்கள் மரண வெளிர், நீல நிறத்தில் இருந்தன மற்றும் கண்கள் நிலக்கரி போல எரிகின்றன.

மிகவும் தர்க்கரீதியாக, லண்டனில், பேய்கள் ஏன் பெரும்பாலும் மக்களுக்கு காட்டப்படுகின்றன என்ற கேள்வி எழுகிறது. பிரிட்டிஷ் தலைநகரில் நள்ளிரவில் அதிக எண்ணிக்கையிலான குழந்தைகள் பிறக்கின்றன என்பதால் இது நேரடியாக என்று ஒரு பதிப்பு கூறுகிறது.

அத்தகைய நபர்கள் பேய்களைப் பார்க்கவும் உணரவும் முடியும், மேலும் அவர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளவும் முடியும் என்று நடுத்தர வட்டாரங்களில் பரவலாக நம்பப்படுகிறது. இருப்பினும், உலகம் முழுவதிலுமிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு முன்னால் லண்டனின் பேய்கள் ஏன் தோன்றும் என்பதை இந்தக் கருதுகோள் விளக்க முடியாது.

அநேகமாக, மூடுபனி ஆல்பியனில் வசிப்பவர் தனது ஆன்மாவின் ஆழத்தில் ஏற்கனவே ஒரு பேயை சந்திக்கத் தயாராக இருக்கிறார், இருப்பினும் அவர் அதை ஒப்புக்கொள்ள வாய்ப்பில்லை.

கோவென்ட்ரி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விக் டேண்டி என்ற புரோகிராமர் இந்த பேய் கதைகள் அனைத்தையும் கவனத்திற்கு தகுதியற்ற முழு முட்டாள்தனமாக கருதினார். ஆனால் ஒரு மாலை, அவர் வேலை செய்து கொண்டிருந்தபோது, அவருக்கு பனிக்கட்டி வியர்வை வெளியேறியது. யாரோ தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பதை அவர் தெளிவாக உணர்ந்தார், அந்த தோற்றத்தில் ஏதோ அச்சுறுத்தல் இருந்தது. பின்னர் ஏதோ ஒரு புரிந்துகொள்ள முடியாத மற்றும் வடிவமற்ற வெகுஜனமாக உருவானது, அது சாம்பல் சாம்பல் நிறத்தில் இருந்தது, அறை முழுவதும் ஓடி விஞ்ஞானிக்கு மிக அருகில் வந்தது. மங்கலான வரையறைகளில், ஒருவர் இன்னும் கைகளையும் கால்களையும் பார்க்க முடியும், மேலும் தலையின் இடத்தில் மூடுபனி இருந்தது, ஆனால் மையத்தில் வாயைப் போன்ற ஒரு இருண்ட புள்ளி இருந்தது. சில நொடிகளுக்குப் பிறகு, பார்வை ஒரு தடயமும் இல்லாமல் மெல்லிய காற்றில் மறைந்தது.

இருப்பினும், பயங்கரமான திகில் அனுபவித்த போதிலும், அவர் ஒரு உண்மையான விஞ்ஞானியாக செயல்படத் தொடங்கினார், அதாவது, புரிந்துகொள்ள முடியாத ஒரு நிகழ்வின் காரணத்தைக் கண்டுபிடிக்க முயற்சிக்கிறார். அத்தகைய பார்வையை மாயத்தோற்றங்களுக்குக் காரணம் கூறுவது எளிதான வழி. இருப்பினும், அவர்கள் எங்கிருந்து வர முடியும், ஏனெனில் புரோகிராமர் மது அல்லது போதைப்பொருள் குடிக்கவில்லை. சரி, பேசுவது மற்ற உலக சக்திகள்ஆ, விஞ்ஞானி வெறுமனே அவர்களை நம்பவில்லை. எனவே எளிமையான உடல் காரணிகளை நாம் பார்க்க வேண்டும் என்று அவர் முடிவு செய்தார்.

(தொடரும்)

# "ஐயோ சாமி நீ எனக்கு வேணாம்" உலகமெங்கும் வைரலாகி வரும் பொத்துவில் அஸ்மின் பாடல்




கணவனால், காதலனால் ஏமாற்றப்பட்ட பெண்கஎளின் சர்வதேச கீதமாக ஒரு பாடல் இன்று வெளிவந்து வைரலாகி வருகிறது. விஜய் ஆண்டனியின் "நான்" திரைப்படத்தில் 'தப்பெல்லாம் தப்பே இல்லை' பாடலை எழுதிய தமிழ் சினிமாவில் அறிமுகமான இலங்கை கவிஞர் பொத்துவில் அஸ்மின்தான் இப்பாடலை எழுதியுள்ளார். இவர் ஏற்கனவே விஸ்வாசம், அண்ணாத்த படங்களுக்கு எழுதிய புரோமோ பாடல்கள் வைரலாகின.ஜெயலலிதாவின் இரங்கல் பாடலையும் இவரே எழுதியுள்ளார்.



பாடலுக்கு இசையமைத்துள்ளார் இலங்கையின் தேசிய விருது பெற்ற இசையமைப்பாளர் சனுக. பாடலைப் பாடியுள்ளார் பிரபல இலங்கை பாடகி விண்டி குணதிலக்க. மொழி தெரியாமலே உலக இசை ரசிகர்களால் கொண்டாடப்பட்ட மனிகே மகே ஹித்தே பாடல் போல் இலங்கையில் இருந்து வெளிவந்துள்ள இப்பாடலும் அனைத்து இசை ரசிகர்களாலும் கொண்டாடப்பட்டு வருகிறது.

Ayyo Saami
ஐயோ சாமி
Artiste Windy Goonatillake
Lyrics Pottuvil Asmin
Melody & Music Sanuka Wickramasinghe
All Keys & Guitalele Sanuka Wickramasinghe
Mixing & Mastering Sanuka Wickramasinghe
Visualization Vihayas Productions
Creative Director Prasad Aluthwattha
Visual & Motion Design Prasad Aluthwattha
Production Manager U Rasta G Bandaragoda
Videography / Still Photography U Rasta G Bandaragoda
Production Assistant Pasan Rathnayakeu.

ஐயோ சாமி நீ எனக்கு வேணாம் ...

**பல்லவி**

ஐயோ சாமி நீ எனக்கு வேணாம்
பொய் பொய்யா சொல்லி
ஏமாத்தினது போதும்..

அனுபல்லவி

மனச்சாட்சியை
நீ விலைபேசினாய்
அட நீசொல்லு நீ மனுசனா?
ஐயோ சாமி நீ எனக்கு வேணாம்
பொய் பொய்யா சொல்லி
ஏமாத்தினது போதும்..

சரணம்01

உனைப்போன்ற ஆணை
நான் நம்பி வந்தேன்
உயிர்கொன்று நீ ஓடினாயே..
எனைப்போன்ற பெண்ணை ஏமாற்றிவிட்டு
தினம் நூறு பொய்கூறுறாயேன்...?
ஐயோ சாமி நீ எனக்கு வேணாம்
பொய் பொய்யா சொல்லி
ஏமாத்தினது போதும்..
மனச்சாட்சியை
நீ விலைபேசினாய்
அட நீசொல்லு நீ மனுசனா?
ஐயோ சாமி நீ எனக்கு வேணாம்
பொய் பொய்யா சொல்லி
ஏமாத்தினது போதும்..

**சரணம் 02**





தேன்போலே பேசி
துரோகங்கள் செய்தாய்
அதை யாருக்கும் நீ செய்யாதே.
நான் போன பின்னர்
எனைப்பற்றி இழிவாய்
யாரோடும் பேசிக்கொல்லாதே.
ஐயோ சாமி நீ எனக்கு வேணாம்
பொய் பொய்யா சொல்லி
ஏமாத்தினது போதும்..
மனச்சாட்சியை
நீ விலைபேசினாய்
அட நீசொல்லு நீ மனுசனா?
ஐயோ சாமி நீ எனக்கு வேணாம்
பொய் பொய்யா சொல்லி
ஏமாத்தினது போதும்..

# மீண்டு எழ வழி என்ன?

தமிழினம் தலையெடுக்காது
தடுக்கும் உபாயமென
மாணவரைக் குறி வைத்து
பரப்புகிறார் போதைப்பொருள்!

நிஜாம் பாக்கு வசமாகி
மாவா,சாதா பாக்காகி
கஞ்சா ஹெரோயினுக்காய்
கெஞ்ச வழி வகுப்பர்!
சோர்ந்து படுத்திருப்பர்

மெலிந்து நிறை குறைவர்
கன்னங்கள் உப்பிப் போய்
கழுத்தெலும்பு காட்டி நிற்பர்!
பள்ளியால் துரத்தலாமோ?

வீட்டுக்குள் பூட்டலாமோ?
காக்கியுடைக் கரங்களிடம்
கை கழுவிக் கொடுக்கலாமோ?
போதைப் பொருள் விற்று

பொருள் தேடும் பிசாசுகளை
வாதத்தால் தப்ப வைப்போர்
வாழும் வரை தொடரும்!
பள்ளிப் பொதி சோதித்து

பாசமெனும் விலங்கிட்டு
குடும்ப உணர்வாலே
விடுவித்தலே வழியாம்!

இரா.ஜெயக்குமார்

# செயல் விளைவால் முடிவுகள் எடுத்து நட

நடந்தவை எல்லாம்
தவறு என்று சொல்ல
காலம் அதையும் பார்
பதிவு செய்து கொள்ளும்.

வரலாற்றில் உன் தவறு
நன்றே தெரியும் அறிவாயா?
வெள்ளிடை மலையாக தான்
உண்மைகள் அறியும் உலகு.

நெருக்காத வரை அது
நொருங்காது உண்மை அறி.
துன்புறுத்தாத வரை நாயும்
வளர்த்த வரை கடிக்காது.

பிடிக்கும் வரை வரும்
நித்தம் தான் வெறுப்பு.
பொறுப்பு இல்லாத போது
பொறுமை தனை மீற வைக்கும்.

நல்லவர் எல்லாம்
நீண்ட நேரம் இருக்கார்.
பொறுமையோடு தினமிங்கே!
எல்லை மீறிப் போகலாம்.

நெறி மாறி நடந்து
கொடுத்த துயர் திரும்பினால்
கொடுத்ததை எல்லாம் மீள
பெற்றிடும் நிலை வந்திடும்.

விதைத்த விதை நாளை
காயாகி வந்தால் விதையாகும்.
வலிகளிங்கே மாறிடாது
மீண்டு வந்தால் தாங்குமா?

திருந்திடும் வழிகள் நீ
கண்டுமங்கே அடைப்பதோ?
திமிர் கொண்டு பாய்ந்து
துயர் கொடுத்து சிரிப்பாயோ?

வளமாக வாழ்ந்த நிலம்
கலைத்து சிதைப்பதால்
சிரிப்பு எப்படி கொள்வாரோ?
உன் நிலம் என பார் புரியும்.

மறைந்தவை மீண்டும்
நினைவில் வருவதை
தடுத்திட நினைப்பதேனோ?
உணர்வை கொல்வாயோ?

உரிமைகள் மறுத்து
உறுமிக் கொள்வதால்
என்னதான் நடந்திடும்.
உன் எண்ணப்படி சொல்.

தடயங்களை அழித்து
ஆனந்தம் கொண்டால்
பகைமை வந்து ஒரு நாள்
ஆடும் பார் தாண்டவம்.

எல்லா வழியும் அடைக்க
எல்லைகள் நகர்ந்து போகும்.
நின்று பேசிடும் நேரம்
கடந்து விட்டால் இழந்து போகும்.

மனிதர் என்று நீ
வாழ வந்தால் பார்
மனிதம் என்ற உணர்வும்
கூட வேண்டும் கேள்.

கொடுத்து உண்டு வாழும்
வழியும் இருக்கும் போது
கெடுத்து உண்டு வாழும்
நிலையும் ஏனோ வேண்டும்.

நன்மை செய்து கடந்தால்
தீமை கண்டு கொதித்தால்
வெறுத்திடும் நிலையும்
இல்லை என்றும் பார்.

உன்னை நீ நேசித்தால்
உன்னில் நீ நம்பிக்கை
கொண்டு நடந்து விட்டால்
தவறுகளை தடுத்திடுவாய்.

அடுத்தவர் மனதின்
உணர்வை கண்டு
மதிப்பதா மிதிப்பதா
என்று கொள்வாய் முடிவு.

எல்லாம் இங்கே பார்
செயல் விளைவுகள் வழியே!
முடிவுகள் கொண்டு நட.
மகிழ்ந்திடும் சூழல் வந்திடும்.

அன்புடன் நதுநசி









# இலங்கை ,இந்திய உறவுகளுக்கு உரம் ஊட்டி வருபவர் வைரவிழா காணும் மணவை அசோகன்

இலங்கை இந்திய செய்தி தொடர்பாளர் மணவை அசோகன் எதிர்வரும் 2022.11.17ஆம் திகதி அகவை 60 வயதில் காலடி பதிக்கிறார். இவரது துணையாரும் அதே 2022.11.17 ஆம் திகதி 50 வயதில் காலடி பதிக்கிறார். வைரவிழாவையும் பொன் விழாவையும் கண்ட இத்தம்பதியினரின் பிறந்த நாள் வைபவ நிகழ்வு எதிர்வரும் 17ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு இல. 132, மட்டக்குளி சென்டரல் வீதி, கொழும்பு 15, மட்டக்குளியில் அமைந்துள்ள ANGLO GRAND MAHAL இல் நடைபெறவுள்ளது.

இவர் 19621117ஆம் திகதி இலங்கையில் பிறந்தவர். இவரது தந்தை ஏ. எஸ். மணவைத்தம்பி தமிழகத்தைச் சார்ந்தவர். இவரது தாயார் திருமதி பாப்பாத்தியம்மாள் இலங்கை மாத்தளையைச் சேர்ந்தவர்.

இந்தியாவில் தமிழகத்தில் பொங்கல் விழா வருடாந்தம் மிகவும் சிறப்பாக நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் இலங்கையிலும் அவ்வாறானதொரு விழாவை நடத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு இலங்கையில் கொழும்பு செட்டியார் தெருவில் முதன்முதலாக பொங்கல் விழாவை நடத்தி வருடாந்தம் இவ்விழாவை நடத்தும் வகையில் ஆரம்பித்து வைத்தவர் இவரது தந்தையரான மணவைத்தம்பி ஆவார்.




இவரது தந்தையைப் போல இவரும் இலங்கையில் பல்வேறு விழாக்களை அவ்வப்போது நடத்தி வருகிறார். முத்தமிழ் அறிஞரும் தமிழகத்தின் முன்னாள் முதல்வருமாகிய கலைஞர் மு. கருணாநிதியின் மீதும் கருணாநிதியின் தி.மு. கழகத்தின் மீதும் தீவிர பற்று கொண்டவராக இவர் விளங்கினார்.

இதன் பயனாக கலைஞர் மு. கருணாநிதியின் மூன்றாவது ஆண்டு நினைவாஞ்சலிக் கூட்டத்தை இலங்கையில் கொழும்பு பிரைட்டன் விருந்தகத்தில் சிறப்பாக நடத்திய பெருமை இவரையே சாரும்.

தமிழக மீனவர் கழகத்தின் சார்பாக இலங்கை பிரதிநிதியாக மணவை அசோகன் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு இலங்கை, இந்திய உறவுகளுக்கு உரமூட்டி வருபவர் மணவை அசோகன்.













# உலகத்திலுள்ள சமூகங்களையும், பண்பாடுகளையும் புரிந்து கொள்ள பிற மொழி 'நூல்கள் மொழிபெயர்க்கப்பட வேண்டும்



**சிறந்த மொழிபெயர்ப்பு சிறுகதை நூலுக்கான சாஹித்திய விருது பெற்ற எழுத்தாளர் எம். ரிஷான் ஷெரீபுடனான நேர்காணல்**

எழுத்து, மொழிபெயர்ப்புத்துறை ஆகியவற்றில் இலங்கை மட்டுமன்றி சர்வதேச ரீதியாகவும் அறியப்பட்ட எழுத்தாளர்களில் பிரதானமானவர் எம். ரிஷான் ஷெரீப். கேகாலை மாவட்டத்தில் மாவனல்லையில் பிறந்த இவர் பதுரியா மத்திய கல்லூரியில் பயின்ற பின்னர் மொறட்டுவ பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம், இலங்கை தொலைக்காட்சி பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றில் படித்துப் பட்டம் பெற்றவர். எழுத்துப் பணியோடு மாத்திரம் நின்று விடாமல் இத்தாலியில் இயங்கும் சனல் ஒன் ஸ்ரீலங்கா எனும் தொலைக்காட்சியில் இடம்பெறும் தமிழ் நிகழ்ச்சிகளுக்கு பொறுப்பாளராகவும், பின்னர் வசந்தம் தொலைக்காட்சியில் தயாரிப்பாளராகவும் நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் பணி புரிந்தமை குறிப்பிடத்தக்கது. சிறுகதை, நாவல், கவிதை என மொத்தமாக இதுவரை 32 புத்தகங்களை எழுதியுள்ளார். தனது சுய படைப்புகள் மற்றும் மொழிபெயர்ப்பு நூல்களுக்காக கொடகே இலக்கிய விருது, துரைவி விருது, இந்தியா வம்சி விருது, கனடா இயல் விருது, இந்தியா வாசக சாலை விருது போன்ற முக்கியமான விருதுகளையும், இலங்கை அரசினால் வழங்கப்படும் அரச சாகித்திய விருதையும் பல தடவைகள் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவரது படைப்புகள் இதுவரையில் சிங்களம், ஆங்கிலம், மலையாளம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியாகியுள்ளன.

2022 'அரச சாகித்திய இலக்கிய விருது' விழாவில் இவர் மொழிபெயர்த்த 'அந்திம காலத்தின் இறுதி நேசம்' நூல், சிறந்த மொழிபெயர்ப்பு சிறுகதைத் தொகுப்புக்கான விருதினை வென்றது. சிறந்த மொழிபெயர்ப்பு சிறுகதைத் தொகுப்புப் பிரிவில் இறுதிச் சுற்றுக்கு இவரின் 'சுருக்கப்பட்ட நெடுங்கதைகள்' மற்றும் சிறந்த மொழிபெயர்ப்பு நாவல் பிரிவில் இறுதிச் சுற்றுக்கு 'கிகோர்' ஆகிய நூல்கள் தெரிவாகியிருந்தன.

செந்தூரம் இதழுக்கு அவர் வழங்கிய நேர்காணலை இங்கு தருகின்றோம்.

**கேள்வி : மொழிபெயர்ப்புத் துறை என்பது தனித்துவமானதாகும். நீங்கள் எழுத்துப் பணியோடு மொழிபெயர்ப்பையும் சுமக்கிறீர்கள். அந்த வகையில் ஒரு எழுத்தாளனுக்கும், மொழிபெயர்ப்பாளனுக்கும் இடையிலான புரிந்துணர்வை எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

ஒரு படைப்பை மொழிபெயர்ப்பதற்கு முன்பே அந்தப் படைப்பை எழுதிய எழுத்தாளருடனான புரிந்துணர்வு சிறப்பாக இருந்தால் மாத்திரம்தான் அந்த மொழிபெயர்ப்புப் படைப்பும் சிறப்பாக அமையும் என்றே நான் கருதுகிறேன். எனது அனுபவங்களை வைத்துக் கூறும் போது என்னால் இதை உறுதியாகக் கூற முடியும். நான் மொழிபெயர்க்கும் படைப்புகளை எப்போதும் நானேதான் தெரிவு செய்வேன். நூல்களையும், படைப்புகளையும் வாசிக்கும்போதே அவை தமிழில் வெளிவந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றினால் மாத்திரமே அதை மொழிபெயர்க்கத் துணிவேன்.



சாஹித்திய விருது பெற்ற எழுத்தாளர் எம். ரிஷான்

ஆனால், மொழிபெயர்ப்புப் பணியைத் தொடங்கும் முன்பு அந்தப் படைப்பை எழுதிய மூல எழுத்தாளரிடமிருந்தோ, கவிஞரிடமிருந்தோ மொழிபெயர்ப்பதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக அவர்களை அணுகுவேன்.

என்னுடனான அவர்களது உரையாடல் தொனியையும், அவர்களது மனோபாவம் மற்றும் சுபாவங்களையும் கொண்டு அவர்களை என்னால் புரிந்து கொள்ளவும், நட்பு ரீதியாக அணுகவும் முடியுமாயின் மாத்திரமே மொழிபெயர்ப்பைத் தொடங்குவேன்.

இதுவரை நான் மொழிபெயர்த்த படைப்புகளின் மூல எழுத்தாளர்கள் அனைவருடனுமே எனக்கு சிறந்த புரிந்துணர்வும், நல்ல நட்பும் இருப்பதால்தான் என்னால் அவர்களது படைப்புகளை சிறப்பாக மொழிபெயர்க்க முடிந்திருக்கிறது. அவர்களது ஒத்துழைப்பு இருந்திருக்கா விட்டால் அது சாத்தியமடைந்திருக்காது. எனவேதான் எழுத்தாளனுக்கும், மொழிபெயர்ப்பாளனுக்கும் இடையிலான புரிந்துணர்வு மிக மிக அத்தியாவசியமானதாகும் என்று கருதுகிறேன்.

**கேள்வி: உங்களுடைய மொழிபெயர்ப்பு சிறுகதைகள், நாவல்கள் இலங்கைச் சூழலுக்கு நெருக்கமான விடயங்களை பற்றியே பேசுகின்றன. அவை பற்றிய உங்களுடைய மதிப்பீடு என்ன?**

நான் இலங்கையன் என்பதால் ஆசியச் சூழலுக்கு இணக்கமான படைப்புகளையே பெரும்பாலும் மொழிபெயர்க்கத் தேர்ந்தெடுக்கிறேன். அதுவே உங்களது இந்தக் கருத்துக்குக் காரணமாக அமைந்திருக்கும் என நினைக்கிறேன்.

நான் ஆபிரிக்க உலகச் சிறுகதைகளை மொழிபெயர்த்து, ஒரு பெருந்தொகுப்பாக வெளியிட்ட போதும், உகாண்டா சிறுகதைகளை மொழிபெயர்த்து நூலாக வெளியிட்ட போதும் அதிலிருந்த சிறுகதைகள் இலங்கைச் சூழலுக்கு முற்றிலும் மாற்றமானதாக இருந்தன.

அவற்றை தேர்ந்த தமிழ் இலக்கியவாதிகளும், தேர்ந்த தமிழ் வாசகர்களுமே வாசித்துப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். இலங்கையின் ஆரம்ப கட்ட வாசகர்களுக்கு அவை இலங்கைச் சூழலுக்கு நெருக்கமற்றவை என்ற காரணத்தினாலும், கதைகள் செறிவாக இருப்பதன் காரணத்தினாலும் அவ்வாறானவற்றை வாசிப்பதில் தயக்கம் இருக்கிறது.

என்றாலும், உலகத்திலுள்ள அனைத்து சமூகங்களையும், பண்பாடுகளையும் தமிழ் வாசகர்கள் தெரிந்து கொள்ளவும், புரிந்து கொள்ளவும் அந்தப் படைப்புகள் கட்டாயம் தமிழில் மொழிபெயர்க்கப்பட வேண்டும்.

**கேள்வி: உங்களுடைய மொழிபெயர்ப்பில் வெளிவந்த 'பீடி' நாவலில் இலங்கையின் தற்கால நிலையை மையமாகக் கொண்ட சில விடயங்களை அவதானிக்க முடிந்தது. இதனை மொழிபெயர்க்க ஏதுவாக அமைந்த விடயங்கள் பற்றி கூற முடியுமா?**

'பீடி' நாவல் சமூக, அரசியல் விவகாரங்கள் கலந்து சம காலத்தில் எழுதப்பட்ட ஒரு முக்கியமான நாவல். இலங்கையில் அதன் கதைக்களமானது வெள்ளையரின் ஆட்சிக்காலத்திலிருந்து விரிகிறது.

மேலோட்டமாக வாசிக்கும் போது குடும்பப் பிணைப்பு, சகோதர பந்தம், நட்பு, காதல் என சாதாரணமான ஒரு நாவல் போலத் தோன்றினாலும், அதன் ஒவ்வொரு வரிகளையும் ஆழமாக, கூர்ந்து வாசிக்கும் போதுதான் அதில் இலங்கையின் தற்கால நிலைமையும், பல தசாப்த காலம் முதல் இன்று வரையான அரசியலும் கலந்து விமர்சிக்கப்பட்டிருப்பதை வாசிப்பவர் உணரக் கூடியதாக இருக்கும். .

இலங்கையானது வெள்ளையர்களின் ஆதிக்கத்திலிருந்து மீண்ட போது, கலப்பினப் பரம்பரை உருவாகி அவர்களால் ஏற்பட்ட கலாசார மாற்றங்கள் முதற்கொண்டு, தாழ்ந்த சாதி என சமூகம் கருதும் மனிதர்கள் தமது பெயர் முதற்கொண்டு அனைத்தினாலும் சமூகத்தில் அனுபவிக்க நேரும் சகல விதமான சங்கடங்களையும், துன்பங்களையும் அந்த நாவல் எடுத்துரைக்கிறது.

நாவலின் இறுதியில், கதையின் பிரதான கதாபாத்திரமான மரத்தினைக் காடையர்கள் வெட்டாமல் பாதுகாக்க புத்தர் முதற்கொண்டு எல்லோருமே முன்வருகிறார்கள், இல்லையா? அந்த மரத்தை, இலங்கையின்

(06ஆம் பக்கம் பார்க்க)

சிறுபான்மையினமாகக் கொண்டே 'பீடி' நாவல் எழுதப்பட்டிருக்கிறது. அதை மனதில் வைத்துக் கொண்டு நீங்கள் மீண்டும் அந்த நாவலை வாசித்துப் பார்த்தால், நாவல் முழுவதும் வரும் அந்த மரம் சொல்லும் செய்தி உங்களுக்குப் புலப்படும்.

அந்த நாவலை வாசித்துப் பார்த்தபோது அதில் கூறப்பட்டிருக்கும் மறைமுகமான அரசியல்தான் எனக்கு அந்த நாவலை மொழிபெயர்க்கத் தூண்டியது. அதை எழுதிய சிங்களப் பெண் எழுத்தாளர் தக்ஷிலா ஸ்வர்ணமாலி கூட 'அந்த நாவலை தமிழில் மொழிபெயர்க்கலாமா?' என்று அவரிடம் அனுமதி கோரியபோது முதலில் தயங்கினார். இலங்கையின் சிறுபான்மை இனத்தவர்கள் அதை எவ்வாறு எடுத்துக் கொள்வார்களோ என்ற ஒரு பெருந் தயக்கம் அவருக்குள் இருந்தது.

தமிழில் வெளிவந்து இன்று அந்த நாவலை எல்லோரும் கொண்டாடும்போதுதான் நல்லதோர் படைப்பை அளித்திருக்கிறோம் என்ற திருப்தி எம் இருவருக்கும் வந்திருக்கிறது. இன்னுமொன்றைக் குறிப்பிட வேண்டும். அந்த நாவலில் மரம் சார்ந்திருக்கும் பகுதிகளும், இறந்தவர்கள் உரையாடும் நிகழ்வுகளும் மாத்திரமே புனைவுகள்.

**கேள்வி: புனைவுகளாயினும், யதார்த்தமாயினும் சிங்கள எழுத்தாளர்கள் தமது எழுத்துக்களில் முன்வைக்கும் சமூக அரசியல் சார்ந்த விடயங்களை தமிழ் பேசும் எழுத்தாளர்களால் முழு வீச்சில் சொல்ல முடிவதில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு பரவலாக உள்ளது. இதனை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?**

இலங்கையில் தற்போது வசித்தவாறு எழுதிக் கொண்டிருக்கும் தமிழ் எழுத்தாளர்களையும், சிங்கள எழுத்தாளர்களையும் மாத்திரமே இந்த விடயத்தில் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியிருக்கிறது. அப்படிப் பார்க்கும்போது சிங்கள எழுத்தாளர்கள் தமது எழுத்துகளில் பகிரங்கமாக முன்வைக்கும் சமூக, அரசியல் சார்ந்த விடயங்களை உண்மையில் தமிழ் பேசும் எழுத்தாளர்களால் முழு வீச்சில் சொல்ல முடிவதில்லை என்பது ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு கருத்தாக இருக்கிறது.

ஒரு உதாரணமாக இந்தக் கேள்விக்கும் 'பீடி'யை முன் வைக்கிறேன். அதில் சிங்களப் பெண் எழுத்தாளரான தக்ஷிலா ஸ்வர்ணமாலி சமகால அரசியல்வாதிகளின் பெயர்களைத் தெளிவாகக் குறிப்பிட்டு விமர்சித்தே தனது நாவலை எழுதியிருக்கிறார். அவ்வாறு சம காலத்தில் இலங்கையில் வசித்துக் கொண்டிருக்கும் தமிழ் எழுத்தாளர்கள் எவராலும், தமது சமூகத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகளின் பெயர்களைப் படைப்புகளில் வெளிப்படையாகக் குறிப்பிட்டுச் சாட இயலுமாக இருக்குமா?



மற்றுமொரு உதாரணமாக, என்னால் மொழிபெயர்க்கப்பட்ட 'அபராஜிதன்' நாவலைக் குறிப்பிட விரும்புகிறேன். பிரபல சிங்களப் பெண் எழுத்தாளரான சுநேத்ரா ராஜகருணாநாயக்கவால் எழுதப்பட்ட அந்த நாவலானது, இலங்கைப் பெண்ணொருத்தியால் எழுதப்படவே கூடாத கதையென்று இப்போதும் பரவலாக விமர்சிக்கப்பட்டு வருகிறது.

அத்தோடு அந்த நாவல் எழுதப்பட்ட காலத்தில் இலங்கையில் போர் முடிவுக்கு வந்திருக்கவில்லை. போர் உச்சம் பெற்று நாளாந்தம் படையினரின் சடலங்கள் சவப்பெட்டிகளில் வீடுகளுக்கு வந்து கொண்டிருந்த காலத்தில் 'பிரபாகரனும் நேசிக்கப்பட வேண்டியவர்' என்று சிங்களவர்களுக்கு அன்பாக எடுத்துரைக்கும் விதமாக அந்த நாவலை அந்த சமயத்தில் எழுதுவதற்கு மிகுந்த தைரியம் வேண்டும்.



பல தரப்பிலிருந்தும் எதிர்ப்புகளும், ஆபத்துகளும் வரும் என்பதை நன்றாக அறிந்திருக்கும்போதும் சிங்கள எழுத்தாளர்கள் தமது மதம், சடங்குகள், கலாசாரம், மரபார்ந்த பண்பாடுகள், பாரம்பரிய மூடப் பழக்க வழக்கங்கள் போன்ற பலவற்றைக் குறித்தும் பகிரங்கமாக சாடி எழுதுவதைப் போல அண்மையில் இலங்கையில் தமிழில் எவரும் எழுதியதை நான் காணவில்லை. அதற்காக தமிழ் எழுத்தாளர்கள் எவரையும் குற்றம் சொல்ல முடியாது. சிங்கள எழுத்தாளர்களுக்கு அதியுச்ச நிலையில் இருக்கும் படைப்பு ரீதியான சுதந்திரம், குடும்ப மற்றும் சமூக ரீதியான வரவேற்பு, அவர்களது நூல்களைப் பரவலாக சந்தைப்படுத்தும் வாய்ப்புகள் போன்ற எவையும் இலங்கையில் வசிக்கும் தமிழ் எழுத்தாளர்களுக்கு இல்லை.

**கேள்வி: தமிழகத்தோடு ஒப்பிடுகின்ற போது அங்குள்ள எழுத்துக்களை அதிகம் கொண்டாடுகின்ற எழுத்தாளர்களே இன்னும் இலங்கையில் நிரம்பியிருக்கிறார்கள். இலங்கை சூழலில் உத்வேகத்தோடு வெளிவருகின்ற இலக்கிய நூல்கள், சஞ்சிகைகள் போன்ற படைப்புகள் குறிப்பிட்ட காலத்துக்குள்ளேயே முடங்குகின்றன. இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

உங்கள் கேள்வியிலேயே பதிலும் இருக்கிறது. இலங்கைச் சூழலில் மிகுந்த உற்சாகத்தோடு வெளிவரும் இலக்கிய நூல்கள், சஞ்சிகைகள் போன்றவை குறிப்பிட்ட காலம் மாத்திரம் வெளிவந்து முடங்குகின்றமையினாலேயே தமிழ் இலக்கியப் படைப்புகளைத் தொடர்ச்சியாகக் கொண்டு வரும் தமிழக இலக்கியப் படைப்புகளைக் கொண்டாடும் வாசகர்கள் பெருகி வருகிறார்கள்.

நல்ல இலக்கியப் படைப்புகள் உலகின் எந்த மூலையிலிருந்து எழுதப்பட்டாலும், வெளிவந்தாலும் அவை கொண்டாடப்படவே வேண்டும். ஆகவே, இலங்கையில் தமிழ் இலக்கியப்படைப்புகள் வெளிவருவது அருகி வரும் இந்தக் காலத்தில் இப்படியாவது தமிழ் நூல்களைப் பெற்று நமது இலங்கை மக்கள் வாசிக்கிறார்களே என்று இதனை ஒரு ஆரோக்கியமான சூழலாகவே நாங்கள் பார்க்க வேண்டும்.

**கேள்வி: இந்த நிலையை மாற்றியமைக்க முடியுமென நீங்கள் நினைக்கிறீர்களா?**

தமிழகத்தின் தரமான இலக்கியப் படைப்புகள் இலங்கையில் பரவுவதைத் தடுக்கக் கூடாது. அவ்வாறான சம கால இலக்கியங்களே இலங்கையின் தமிழ் வாசகர்களுக்கு, எழுத்தின் மூலமாக பல தரப்பட்ட சமூகங்களையும் புரிந்து கொள்ளும் வாய்ப்புகளை மேலும் மேலும் உருவாக்கும். இந்த நிலைமையை மாற்றியமைக்கத் தேவையேயில்லை.

காகிதத்தின் விலை அதிகரிப்பதால் இலங்கையில் தமிழ் பதிப்பகங்கள் மூடப்படும் நிலைமை இன்று காணப்படுகிறது. கடந்த காலங்களில் வெளிவந்த பெருவெளி, யாத்ரா, மூன்றாவது மனிதன் போன்ற காத்திரமான இலக்கிய சஞ்சிகைகள் தற்போது முடங்கிப் போயிருக்கின்றன. கலைமுகம், ஜீவநதி, மகுடம், காற்புள்ளி போன்ற தரமான இலக்கியப் படைப்புகளுக்குக் களம் கொடுக்கும் ஒரு குறிப்பிட்ட சில சஞ்சிகைகள் மாத்திரம் மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் காலத்துக்குக் காலம் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இவ்வாறான நிலைமையில், இலங்கையில் இவ்வாறான நூல்களும், சஞ்சிகைகளும் வெளிவருவது வெகுவாகக் குறைந்திருக்கும் இந்தக் கால கட்டத்தில், தமிழகத்திலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் தரமான இலக்கியப் படைப்புகள் இலங்கையில் பரவலாக வாசிக்கப்படுவதைத் தடுப்பதனால் எமக்கும் வருங்கால சந்ததியினருக்கும்தான் பலத்த நஷ்டம் உருவாகி விடும், அல்லவா? தமிழ்மொழியானது உலகம் முழுக்க பரவியிருக்கும் இந்தச் சூழலில் நாம் ஏன் ஒரு தீவுக்குள் நமது தமிழ் இலக்கியத்தை முடக்க முற்பட வேண்டும்? அதை முடக்க முற்படாமல், இலங்கை சார்ந்த எமது சமூகங்களுக்கான இலக்கியப்படைப்புகளை நாம் சிறப்பாக எழுதி வெளிக் கொண்டு வந்தால் நமது எழுத்துகளை அதிகம் கொண்டாடும் பிற நாட்டவர்களை உருவாக்கவும் நம்மால் முடியும், அல்லவா?

**கேள்வி: நீங்கள் இலங்கையில் பெரும்பான்மையாக சிங்கள சமூகத்தினர் வாழ்கின்ற சப்ரகமுவ மாகாணத்தை சேர்ந்தவர். அங்கு, தமிழ் எழுத்துக்களுக்கும், எழுத்தாளர்களுக்குமான சூழல் குறைவாகவே உள்ளது. இந்த நிலைமை இலக்கியச் சூழலுக்கு ஒப்பீட்டளவில் கடினமானதாகும். இதனைக் கையாள்வது சிக்கலாக இல்லையா?**

நீங்கள் கூறுவது சரி. சப்ரகமுவ மாகாணத்தைச் சேர்ந்த என்னை தமிழ் இலக்கியச் செயற்பாடுகள் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட ஏனைய மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் அறிந்திருக்கும் அளவுக்கு எனது மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கு என்னைத் தெரியாது. தமிழ் வாசகர்கள் நிறைந்திருக்கும் உங்கள் மாகாணத்தோடு ஒப்பிடும்போது சப்ரகமுவ மாகாணத்திலுள்ள தமிழ் வாசகர்களின் எண்ணிக்கையும், தமிழில் படைப்புகளை எழுதுபவர்களின் எண்ணிக்கையும் விரல் விட்டு எண்ணக் கூடிய அளவிற்கே தற்போது காணப்படுகிறது.

இத்தனைக்கும் தொண்ணூறுகளுக்கு முற்பட்ட காலப்பகுதியில் தமிழ் இலக்கியச் செயற்பாடுகள் தீவிரமாக நிகழ்ந்த, பல காத்திரமான இலக்கிய சஞ்சிகைகள் வெளிவந்த, நூல் வெளியீடுகளும், இலக்கியக் கூட்டங்களும் பரவலாக நடைபெற்றுக் கொண்டிருந்த மாவனல்லை பிரதேசத்தைச் சேர்ந்தவன் நான்.

இன்று அந்த நிலைமை யாரோ உயரத் தூக்கித் தலைகீழாகப் புரட்டிப் போட்டது போல முற்றாக மாறியிருக்கிறது.

தமிழ் நூல்களை வாசிக்கும் ஆர்வமுள்ளவர்கள் பயன்படுத்தக் கூடிய விதத்தில் செறிவானதொரு நல்ல நூலகம் கூட இல்லாத நிலைமையில் எனது மாகாணம் இன்று காணப்படுகிறது என்பது எந்தளவு வருந்தத்தக்க விடயம்?!

நான் ஊரிலிருந்து கொண்டு எழுதிக் கொண்டிருப்பேனாயின், இந்த நிலைமையானது எப்போதோ என்னை மிகுந்த சோர்வுக்குள் தள்ளி என்னை எழுதவே விட்டிருக்காது. கையாள்வதற்குச் சிக்கலான இந்த நிலைமை என்னை எழுதவோ, மொழிபெயர்ப்புகளைச் செய்யவோ, நூல்களை வெளியிடவோ ஆர்வமூட்டாமல்தான் இருந்திருக்கும். நல்ல வேளையாக நான் வெளிநாட்டில் இருந்து கொண்டு எழுதுகிறேன். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் நூல்களுக்கான புத்தகக் கண்காட்சிகள் பரவலாக வைக்கப்படுவது போன்ற நிலைமை சப்ரகமுவ மாகாணத்தில் இல்லை.

இங்கெல்லாம் இலக்கியவாதிகள் என்பவர்கள் ஒன்றுக்கும் உதவாத வேற்றுக்கிரகவாசிகள் போல தனியாகவும், வேறாகவும் பார்க்கப்படும் துரதிர்ஷ்டமான நிலைமையே இன்று காணப்படுகிறது.

ஊரில் நான் வளர்ந்த காலத்தில் என்னை ஊக்குவிப்பதற்கு எனது குடும்பம் மற்றும் ஆசிரியர்கள் முதற்கொண்டு நிறையப் பேர் இருந்தார்கள். இன்றோ, ஊக்குவிப்பதற்கு யாருமே இல்லாமல் தான் தமது திறமையைக் கொண்டு எனது பிரதேசத்தில் ஆங்காங்கே ஓரிருவர் சுய ஆர்வத்தோடு அத்தி பூத்தாற்போல இப்போது எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.



நேர்காணல்:
நஸார் இஜாஸ்...

Senthooram செந்தூரம்

2022 நவம்பர் 13ஞாயிற்றுக்கிழமை 9

# சினி பஜார்



# கேள்வி பதில்

மொழிவாணன்

**எம்.மாகிரட்**
**எலபடகம.**

**கேள்வி:உலகநாயகன் கமல் ஹாசன் பிறந்த திகதி அன்று ஒரு இனிப்பான செய்தி கேள்விப் பட்டேன்.அதாவது இயக்குநர் மணிரத்தினம் இயக்கத்தில் உலக நாயகன் நடிக்கப் போகிறாராமே...!இது பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்.?**



**பதில்:** நீங்கள் கேள்விப்பட்டது உண்மைதான். அதாவது 35வருடங்களுக்குப் பிறகு இருவரும் மீண்டும் இணைகிறார்கள். ஆமாம், கடந்த 1987ஆம் ஆண்டு இயக்குநர் மணி ரத்தினம் இயக்கத்தில் கமல் நடித்த படம்'நாயகன்' மும்பை'தாதா'வைப்பற்றிய கதையான இது ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்று பெரிய அளவில் ஹிட் அடித்தது.தற்போது மணிரத்தினம் இயக்கத்தில் வெளியான 'பொன்னியின் செல்வன்'திரைப்படம் ரூ500 கோடி வசூலித்து வெற்றி பெற்றுள்ளது.இதன் இரண்டாம் பாகம் ஏப்ரல் மாதம் வெளியாக உள்ளது.

அதேபோல் கமலை பொருத்தவரை அவரது 'விக்ரம்'ரூ450கொடிவரை வசூலை குவித்துள்ளது.

இந்த நிலையில் 'நாயகன்' படத்திற்குப் பிறகு கமலும் மணிரத்தினமும் இணைவார்களா என்று ரசிகர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேளையில்,அதற்கான அறிவிப்பு வெளியாகி உள்ளது.

இது தொடர் பாக உதயநிதி ஸ்டாலினின் ரெட்ஜெயண்ட் மூவீஸ் நிறுவனம் தனது டுவீட்டர் பக்கத்தில்,35 ஆண்டுகளுக்குப் பிறகு மணிரத்தினம் இயக்கத்தில் உலகநாயகன் கமல் நடிக்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்தப் படத்தை கமலின் ராஜ் கமல் என்டர்டெயின்மெண்ட்,மெட்ராஸ்டாக்கீஷுடன் இணைந்து ரெட்ஜெயண்ட் மூவிஷும் தயாரிக்கிறது.படம் 2024ஆம் ஆண்டு திரைக்கு வருமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கமலின் பிறந்த நாள் அன்று இந்த அறிவிப்பு வெளிவந்திருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது! .

**ஆர்.ஆர் ராமன்**
**புத்தளம்.**

**கேள்வி:ரஜினிகாந்தின் மகள் ஐஸ்வர்யா ரஜினிகாந்த் மீண்டும் அப்பாவை வைத்து படம் ஒன்றை இயக்கப் போகிறாராமே... உண்மையா?**



மகள் படத்தில் கவுரவ வேடத்தில் ரஜினி!

**பதில்:**உண்மைதான் .படத்தின் பெயர்'லால் சலாம்'இதில் ரஜினிகாந்த் நாயகனாக நடிக்கவில்லை. கௌரவ வேடத்தில் தான் நடிக்கிறார்.

விஷ்ணு விஷால்,விக்ராந்த் நடிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

6.11.22 அன்று பூஜையுடன் படப்பிடிப்பு ஆரம்பமானது. ஜினி காந்து க்கான சம்பளம் கோடியிலா லட்சத்திலா என்று தெரியவில்லை.

சினி பஜார் கேள்வி பதில்,
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.

# முதல் மந்திரி பிரியாமணி



**வெங்கட் பிரபு** இயக்கத்தில் நாகசைதன்யா நடிக்கும் படத்தில் பிரியாமணி அரசியல்வாதியாக அவர் நடிப்பது மட்டும் இல்லாமல், இடைவேளைக்கு பிறகு பிரியாமணி முதல் மந்திரி ஆவதுபோல் திரைக்கதை அமைத்துள்ளார்களாம். 'பருத்திவீரன்' படத்தில் நடித்து தேசிய விருது பெற்ற நடிகை பிரியாமணி. இவர் தெலுங்கிலும் முன்னணி நடிகர்களுக்கு ஜோடியாக நடித்து பெயரும் புகழும் பெற்றார். அதன் பிறகு சினிமாவை விட்டு சிறிது காலம் விலகி இருந்து விட்டு, இப்போது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கி நடிப்புக்கு முக்கியத்துவம் உள்ள கதாபாத்திரங்களை தேர்வு செய்து நடிக்கிறார். வெங்கட் பிரபு இயக்கத்தில் நாகசைதன்யா நடிக்கும் படத்தில் பிரியாமணியும் இருக்கிறார். இதில் அரசியல்வாதியாக அவர் நடிப்பது மட்டும் இல்லாமல், இடைவேளைக்கு பிறகு பிரியாமணி முதல் மந்திரி ஆவதுபோல் திரைக்கதை அமைத்துள்ளார் களாம். பெண் முதல்வரால் ஆண்கள் செய்ய முடியாததை செய்து காட்ட முடியும், மக்களுக்கு நிறைய நன்மைகள் செய்ய முடியும் என்று அவரது கதாபாத்திரத்தை வடிவமைத்து உள்ளார்களாம்.

# ஐஸ்வர்யா லட்சுமியின் 'கட்டா குஸ்தி'

**இயக்குனர்** செல்லா அய்யாவு இயக்கத்தில் நடிகர் விஷ்ணு விஷால் நடித்துள்ள திரைப்படம் 'கட்டா குஸ்தி'. இந்த படத்தில் நடிகை ஐஸ்வர்யா லட்சுமி கதாநாயகியாக நடிக்கிறார்.

இந்த திரைப்படம் தமிழ்தெலுங்கு என இருமொழிகளில் வெளியாக உள்ளது.

'கட்டா குஸ்தி' படத்துக்கு ஜஸ்டின் பிரபாகரன் இசையமைக்கிறார். இப்படத்தின் படப்பிடிப்பு ஒரு மாதத்திற்கு முன்பே முடிவடைந்த நிலையில், தற்போது போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்படத்தின் முதல் தோற்ற போஸ்டர் சமீபத்தில் வெளியாகி வைரலானது. இந்நிலையில் 'கட்டா குஸ்தி' படத்தின் இரண்டாம் தோற்ற போஸ்டரை நடிகை காஜல் அகர்வால் தனது சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ளார்.

விஷ்ணு விஷாலும் ஐஸ்வர்யா லட்சுமியும் போட்டி போடுவது போன்று இருக்கும் இந்த போஸ்டர் தற்போது இணையத்தில் கவனம் ஈர்த்து வருகிறது.



# அனிருத்தின் 'துணிவு'



**அஜித்** நடித்து வரும் 'துணிவு' படத்தின் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்த படம் அடுத்த ஆண்டு 2023ஆம் ஆண்டு வெளியாகவுள்ளது. எச்.வினோத் இயக்கத்தில் அஜித் நடிப்பில் உருவாகி வரும் படம் 'துணிவு'. இப்படத்தின் முதல் மற்றும் இரண்டாம் தோற்ற போஸ்டர் சமீபத்தில் வெளியாகி வைரலானது. இந்த படம் வங்கி கொள்ளையை மையமாக வைத்து தயாராவதாக ஏற்கனவே கூறப்பட்ட நிலையில், உண்மை கதையில் அஜித் நடித்து வருவதாக தகவல் வெளியானது. இதில் மஞ்சுவாரியர், சமுத்திரக்கனி, ஜி.எம். சுந்தர், மகாநதி சங்கர், ஜான் கொக்கன் ஆகியோர் முக்கிய கதாப்பாத்திரங்களில் நடிக்கின்றனர். இப்படத்தின் தமிழ்நாடு வெளியீட்டு உரிமையை உதயநிதி ஸ்டாலினின் ரெட் ஜெயண்ட் மூவிஸ் நிறுவனம் பெற்றுள்ளது. இப்படத்தின் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், 'துணிவு' படத்தின் புதிய அப்டேட் வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படத்தில் இடம்பெறும் 'சில்லா சில்லா' என்ற பாடலை இசையமைப்பாளர் அனிருத் பாடியுள்ளார். இதனை ஜிப்ரான் தனது சமூக வலைதளப் பக்கத்தில் புகைப்படம் ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளார். இதற்கு முன்பு அனிருத் பாடிய 'ஆலுமா டோலுமா' பாடல் பெரும் வரவேற்பை பெற்றததையடுத்து இந்த பாடலும் மக்கள் மத்தியில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. 'துணிவு' திரைப்படம் 2023ஆம் ஆண்டு பொங்கலுக்கு வெளியாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# திரிஷாவுக்கு என்ன ஆச்சு?



**நடிகை** த்ரிஷா காலில் கட்டுடன் இருக்கும் புகைப்படம் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நடிகை திரிஷா காலில் கட்டுடன் இன்ஸ்டாகிராமில் வெளியிட்டுள்ள புகைப்படம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. திரிஷா கடந்த சில நாட்களாக வெளிநாட்டில் சுற்றுப்பயணம் செய்து வந்தார். வரலாற்று சிறப்புமிக்க இடங்களுக்கு சென்று புகைப்படம் எடுத்து வலைத்தளத்தில் பகிர்ந்தார். இந்த புகைப்படங்களை ரசிகர்கள் வைரலாக்கினர். இந்த நிலையில் தனது காலில் கட்டுப்போட்டுள்ள புகைப்படம் ஒன்றை இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்து சுற்றுப்பயணத்தை ரத்து செய்து விட்டு திரும்பி விட்டதாக பதிவு வெளியிட்டு உள்ளார்.

அந்த புகைப்படத்தை பார்த்து பதறிய ரசிகர்கள் திரிஷாவுக்கு என்ன ஆச்சு? விபத்தில் சிக்கினாரா? காலில் எலும்பு முறிவா? என்றெல்லாம் கேள்விகள் எழுப்பினர்.

# எனக்கு எதுக்கு ஆண் துணை?



**என்னை** மகிழ்வித்துக்கொள்ள நான் இருக்கும் போது, எனக்கு எதுக்கு ஆண் துணை என இன்ஸ்டகிராமில் பதிவிட்டுள்ளார் நடிகை கிரண். நடிகர் விக்ரம் நடிப்பில் வெளியான 'ஜெமினி' படத்தின் மூலமாக தமிழ் சினிமாவிற்கு அறிமுகமானவர் கிரண். அஜித்துடன் 'வில்லன்', கமல் ஹாசனுடன் 'அன்பே சிவம்', பிரசாந்த்துடன் 'வின்னர்' என பல முன்னணி ஹீரோக்களுக்கு ஜோடியாக நடித்தார். தற்போது 41 வயதாகும் கிரண், படு கிளாமரான படங்களை இன்ஸ்டகிராமில் பகிர்ந்து வருகிறார். பார்ப்பதெற்கு கொழுக் மொழுக் என இருக்கும் கிரண், உடல் எடையைக் குறைத்த புகைப்படங்களை பதிவிட்டு லைக்ஸை பெற்றார். சில மாதங்களுக்கு தன்னுடைய பெயரில் செயலி ஒன்றை ஆரம்பித்த கிரண், அதன் மூலம் தன்னுடன் உரையாடுவதற்கும் பழகுவதற்கும், டின்னர் சாப்பிடுவதற்கும், தன்னுடைய போட்டோக்களை பெறுவதற்கும் கட்டணத்தை நிர்ணயம் செய்துள்ளதாக கூறப்பட்டது..

இந்நிலையில் தற்போது இன்ஸ்டகிராமில் ரீல்ஸ் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ள கிரண், "என்னை மகிழ்வித்து கொள்ள நானே இருக்கும் நிலையில் எனக்கு ஏன் இன்னொரு ஆண் தேவை? எனக்கு எந்த ஆணுடைய தேவையும் இல்லை" எனப் பதிவிட்டுள்ளார்.

# கர்ப்பிணிகளின் ஆரோக்கியத்திற்கு முட்டை

முட்டை என்பது நமது சமையலறைகளில் காணப்படும் மிகவும் பொதுவான உணவுப் பொருள். ஒரு பல்துறை மூலப்பொருள், அவை இனிப்பு மற்றும் சுவையான உணவுகளில் பயன்படுத்தப்படுகின்றன. இது கேக்குகள், கஸ்டர்டுகள், பேஸ்ட்ரி உணவுகள், பேட்டர்ஸ், ரொட்டி போன்றவற்றில் பயன்படுத்தப்படுகிறது. இவை அனைத்திலும் முட்டைகள் ஒரு முக்கியமான அங்கமாகும்.

முட்டைகள் சரியான உணவாகும். புரதம், வைட்டமின் டி, வைட்டமின் ஈ, வைட்டமின்



கே, வைட்டமின் பி 6, கால்சியம் மற்றும் துத்தநாகம் உள்ளிட்ட நம் உடலுக்குத் தேவையான ஒவ்வொரு ஊட்டச்சத்துக்களும் முட்டையில் உள்ளன. கர்ப்பிணி பெண்கள் வேகவைத்த முட்டை சாப்பிடுவது நல்லதா? இல்லையா?

தாதுக்கள், வைட்டமின்கள் மற்றும் நல்ல கொழுப்பு நிறைந்திருப்பதால் வேகவைத்த முட்டைகளை கர்ப்பிணி பெண்கள் உண்ணலாம். கர்ப்ப காலத்தில் வேகவைத்த முட்டையை சாப்பிடுவது இந்த முக்கியமான ஊட்டச்சத்துக்கள் அனைத்தையும் தாய்க்கும் குழந்தைக்கும் வழங்கும். பரிந்துரைக்கப்பட்ட முட்டை உட்கொள்ளல் பெண்ணின் கொழுப்பின் அளவைப் பொறுத்து தினமும் 12 முட்டைகள் வரை இருக்கும். ஒவ்வொரு முட்டையிலும் சுமார் 185 மி.கி கொழுப்பு உள்ளது மற்றும் உடலுக்கு தினமும் 300 மி.கி தேவைப்படுகிறது.

வேகவைத்த முட்டை ஆரோக்கியமான வளர்ச்சியை அதிகரிக்க குழந்தைக்கு தேவையான அளவு புரதத்தை வழங்குகின்றன. முட்டைகளில் கோலின் உள்ளது, இது மூளையின் வளர்ச்சி மற்றும் மொத்த வளர்ச்சிக்கு இன்றியமையாதது. இது குழந்தைக்கு வரும் பல நோய்களைத் தடுக்கிறது.

# ஃபேஸ் மாஸ்க்குகள்





இயற்கையான களிமண், ஜெல் அல்லது தோலுரிக்கப்பட்ட ஃபேஸ் மாஸ்க்குகள், வேகன் உணவுப் பொருட்களால் நிரம்பியுள்ளன. இவை சரும ஆரோக்கியத்திற்கு சிறந்தவை. ஃபுல்லர்ஸ் எர்த் கொண்ட ஃபேஸ் மாஸ்க்குகள் சிறந்தவை. ஏனெனில் இந்த மூலப்பொருள் எண்ணெய் மற்றும் பிற அசுத்தங்களை உறிஞ்சும் திறனுக்காக அறியப்படுகிறது.

எண்ணெய் சருமம் அல்லது அடைபட்ட துளைகள் உள்ளவர்களுக்கு ஒரு பயனுள்ள சருமத்தை சுத்தப்படுத்தியாக இருக்கும். இது சருமத்தின் நிறத்தையும், பளபளப்பையும் மேம்படுத்துவதோடு, சருமத்தை மென்மையாக்குவதாகவும் கூறப்படுகிறது.

## க்ளென்சர்

ஃபேஸ் வாஷ் என்பது சருமத்தைச் சுத்தப்படுத்துவதோடு, அழுக்கு, தூசி, மேக்அப் மற்றும் மாசுபாட்டை நீக்குவதற்கும் பயன்படுகிறது. இருப்பினும், ரசாயன அடிப்படையிலான ஃபேஸ் வாஷைப் பயன்படுத்தும் போது, அது சருமத்தின் பாதுகாப்புத் தடையை ஆரோக்கியமற்ற முறையில் அகற்றுவதற்கு வழிவகுக்கும்.

எனவே, ஆர்கானிக் மற்றும் வேகன் முக சுத்தப்படுத்தியைத் தேர்ந்தெடுப்பது, சரியான சுத்திகரிப்பு சமநிலையை ஊக்குவிக்கும் மற்றும் இயற்கையாக சருமத்தையும் பாதுகாக்கும்.

# மாமியாரின் மனதை வெல்ல



திருமணத்திற்கு பின்பு ஒரு பெண்ணுக்கு கணவன், மாமியார் மற்றும் மாமனார் உறவு மிகவும் முக்கியமானதாக மாறுகிறது. உங்கள் கணவருடன் ஒரு நல்ல திருமண உறவை கட்டியெழுப்பும்போது, அவருடனான உங்கள் உறவில் மட்டுமல்ல, அவருடைய பெற்றோருடனான உங்கள் உறவிலும் நீங்கள் முதலீடு செய்வது இன்றியமையாதது. மாமியார்களுடனான உங்கள் உறவில் முதலீடு செய்வது உங்கள் திருமண உறவுக்கு பெரிதும் உதவும் மற்றும் குடும்பத்தின் இரு தரப்பினரும் ஒன்றாக இணைவதை எளிதாக்கும்.

உங்கள் மாமியார் கவலையாகவோ அல்லது தாழ்வாக இருக்கும்போது, உங்கள் சொந்த அம்மாவை எப்படி நடத்துகிறீர்களோ, அப்படித்தான் நீங்கள் நடத்த வேண்டும். அவர்களுடன் உட்கார்ந்து பேசுங்கள், அவருடன் இருங்கள். வேலை செய்ய வேண்டியிருந்தாலும் மடிக்கணினியை எடுத்து அவள் அருகில் உட்கார்ந்து பேசிக்கொண்டே வேலை செய்யுங்கள்.

உங்கள் மாமியார் சமைக்க விரும்பினால், அவரிடம் நீங்கள் சமையலை கற்றுக்கொள்ளுங்கள். உங்களுக்கு சமையலில் ஏதாவது கற்பிக்க முடியுமா என்று அவரிடம் கேளுங்கள் அல்லது சமையல் புத்தகத்தில் இருந்து புதிய செய்முறையை ஒன்றாக முயற்சி செய்ய பரிந்துரைக்கலாம். நீங்கள் அவளுடைய ஈடுபாட்டைக் கேட்பது, அவளுடைய ஆலோசனையைப் பெறுவது, அவளை நன்றாக உணர வைக்கும். இந்த வயதில், பெற்றோர்கள் குழந்தைகளாக மாறுகிறார்கள். ஓய்வு பெற்ற பெற்றோர்கள் சிறிது காலத்திற்குப் பிறகு பயனற்றவர்களாக உணர்கிறார்கள். எனவே அவர்களை உங்கள் வாழ்க்கையில் ஈடுபடுத்துவதற்கான வழிகளைப் பார்க்க வேண்டும்.

உங்கள் மாமியார் குழந்தையாக இருந்தபோது எடுத்த படங்களை உங்களுக்குக் காண்பிக்கும்படி கேளுங்கள். அவளிடம் திருமண அல்பம் இருந்தால், அதை நீங்கள் பார்க்க முடியுமா என்று கேளுங்கள். இது, உங்களுக்கும் அவளுக்கும் இடையான உறவை நெருக்கமாக்கும்.

உங்கள் மாமியாரிடம் உங்கள் வாழ்க்கையில் நடக்கும் சில முக்கியமான விஷயங்களுக்கான ஆலோசனையை கேளுங்கள். இதைச் செய்வது, அவளுடைய கருத்தை நீங்கள் மதிக்கிறீர்கள் மற்றும் நம்புகிறீர்கள் என்பதைக் காட்டுகிறது. இது உண்மையில் நீங்கள் அவள் சொல்வதைப் பாராட்டுவதைப் போல அவளுக்கு உணரவைக்கும். ஒரு மாமியார் தனது வருங்கால மருமகளை அறிந்திருப்பதை விட சிறந்தது எதுவுமில்லை. உண்மையில் முக்கியமான விஷயங்களில் அவளுடைய கருத்துக்களை அறிய அவரிடம் மனம் விட்டு பேசுங்கள்.

# பூமணி அம்மா அறக்கட்டளையின் பல்கலை மாணவனுக்கு கணனி வழங்கல்













பூமணி அம்மா அறக்கட்டளையின் ஸ்தாபக தலைவரும் சர்வதேச தமிழ் வானொலியின் (பிரான்ஸ்) பணிப்பாளருமான விசுவாசம் செல்வராசாவின் நெறிப்படுத்தலில் மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் பொறியியல் பிரிவில் பயிலும் மாணவருக்கு கணணி ஒன்றும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. இந் நிகழ்வானது கொழும்பு.07 ல் அமைந்துள்ள தேசிய நூலக கேட்போர் கூடத்தில் அறக்கட்டளையின் மேல் மாகாண மற்றும் மலையக செயற்பாட்டாளர் திருமதி றெஜீனா இளஞ்செழியன் தலைமையில் நடை பெற்றது. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனும் சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் வட மாகாணசபை யாழ்,மாவட்ட உறுப்பினரும் பூமணி அம்மா அறக்கட்டளையின் இலங்கைக்கான செயலாளருமான ந.விந்தன் கனகரட்ணமும், முனைவர் சதீஸ் குமார் சிவலிங்கமும் (சிரேஷ்ட உப தலைவர், மலையக மக்கள் முன்னணி), திருமதி அன்னலட்சுமி இராசதுரையும் ( சிரேஷ்ட,வாழ் நாள் ஊடகவியலாளர் வீரகேசரி பத்திரிகை), பெரியசாமி சீதாராமனும் (சிரேஷ்ட அறிவிப்பாளர் இலங்கை வானொலி), செந்தில் வேலவர், (பிரதம ஆசிரியர் தினகரன்) கலைஞானச்சுடர் ஸ்ரீமதி சுபாஷினி பகிரவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கவிஞர் முறையூர் மங்கேஸ்வரனின் 'மனதோடு பேசும் மௌனங்கள்"









கவிஞர் முறையூர் மங்கேஸ்வரன் எழுதிய புதுக்கவிதை நூலான 'மனதோடு பேசும் மௌனங்கள்" மற்றும் ஹைக்கூ கவிதை நூலான 'மகிழம் பூக்கள்" ஆகிய கன்னி நூல்களின் வெளியீட்டு விழா மட்டக்களப்பு செங்கலடி பிரதேசத்தில் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

சந்திவெளி தமிழ்ச்சங்கம் பாரம்பரிய கிராமிய கலை மன்றத்தின் ஏற்பாட்டில் முறக்கொட்டாஞ்சேனை ராமகிருஸ்ண மிஷன் வித்தியாலய அதிபர் எம். தவநேசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கல்குடா வலயக்கல்விப்பணிப்பாளர் தினகரன் ரவி, கிரான் பிரதேச செயலாளர் ராஜ்பாபு ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டனர். முத்தமிழ் கலைஞன் பா. கதீஸ்வரன் இங்கு வரவேற்புரை நிகழ்த்தினார். மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தா இசை நடனக்கல்லூரின் விரிவுரையாளர் மோகனதாசன் கவிதை நூல்களுக்கான நயவுரையையும் ஆசிரிய வள நிலையத்தின் விரிவுரையாளர் திருமதி சுதாகினி டெஸ்மன் ராகல் ஆய்வுரையையும் நிகழ்த்தினர்.


மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பல்வேறு பொதுநல அமைப்புக்கள், கவிஞர் மற்றும் கலைஞர் குழுக்கள் நூலாசிரியருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தன.

**(ஏறாவூர் நிருபர் நாஸர்)**

## வழிகாட்டுங்கள்




## தொடர்புபடுத்துங்கள்





## 05 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



## நிறம் தீட்டுங்கள்



## சரியான விடையை எழுதுங்கள்




## உருவங்களின் பெயர்களை எழுதுங்கள்




"உன் அம்மா வீட்டுக்குப் போனியே... ஏன் மறுநாளே திரும்பி வந்துட்டே?"
"நான் இல்லாமல் நீங்க சந்தோஷமா இருக்கிற மாதிரி கனவு வந்திச்சு. அதான் உடனே திரும்பி வந்துட்டேங்க!"
"'மாசமானா வீட்டு வாடகை தரணும்'னு சொன்னேன். இன்னும் நீங்க தரவே இல்லையே..."
"இப்பதான் கல்யாண மாசம். என் மனைவி இன்னும் மாசமாகலையே!"
"உன் மனைவி லெட்டர் எழுதிவச்சிட்டு ஷாப்பிங் போயிருக்காளா...?"
"ஆமாம்... 'ஷாப்பிங் போறேன் எனக்கும் சேர்த்து சமைக்க வேண்டாம், வர ரெண்டு நாளாகும்'னுதான்..."
சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி
"என் கணவர் என்னோட சண்டை போட்டா நான் கோபிச்சிகிட்டு சமைக்க மாட்டேன்."
"அதான் உன் கணவர் அடிக்கடி உன்னோட சண்டை போடுறாரா....?"
"இதோ பாருங்க... உங்க மனைவி உங்களைக் 'கொன்னுடுவேன்'னு சொன்னதையெல்லாம் 'மிரட்டல்'னு எடுத்துக்கிட்டு, உங்களுக்கு போலீஸ் பாதுகாப்பெல்லாம் தர முடியாது!"
"'வலி தெரியாம பிடுங்குவேன்'னு சொன்னீங்க, ஆனா இப்ப ஒரே வலியா வலிக்குதே டாக்டர்?"
"கஷ்டம் வரும்போது நிஜமாவே சிரிக்க முடியுமா?"
"முடியுமே, என் மாமியார் கீழே விழுந்து கஷ்டப்பட்டப்ப, நான் சிரிச்சேனே!"
பொண்டாட்டி இல்லையா?

# 81 ஆவது வகவ கவியரங்கு

























படங்கள்: முஹம்மத் நசார்

வலம்புரி கவிதா வட்டத்தின் 81 ஆவது பௌர்ணமி கவியரங்கு கடந்த பௌர்ணமியன்று செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீனின் நெறிப்படுத்தலில் கொழும்பு, பழைய நகர மண்டபத்தில் இடம்பெற்றது. கவியரங்கிற்கு பிறைக்கவி முஸம்மில் தலைமைத் தாங்கினார்.

எம்மை விட்டும் அண்மையில் மறைந்த இலக்கிய ஆளுமை தெளிவத்தை ஜோசப் அவர்கள் நினைவுகூரப்பட்டார்.

தற்போது சுகயீனமுற்றிருக்கும் எமது வகவ கவிஞரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான பல்கலை வேந்தர் கலைவாதி கலீல் , அது போன்றே மூத்த வகவ கவிஞர் எம். ஏ. எம். ஆறுமுகம் ஆகியோர் பரிபூரண சுகம் பெற வேண்டும் என பிரார்த்திக்கப்பட்டது. செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் தலைமையுரையும், தேசிய அமைப்பாளர் எஸ். தனபாலன் வரவேற்புரையும் நிகழ்த்தினர். பொருளாளர் ஈழகணேஷ் நன்றியுரை வழங்கினார்.

கவிஞர் பிறைக்கவி முஸம்மில் தலைமையில் நடைபெற்ற 81 ஆவது கவியரங்கில் கவிஞர்கள் தமிழ்த்தென்றல் அலி அக்பர், சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ், இலங்கைப் பொன்மனச் செம்மல் தாஜ்மஹான், எஸ். தனபாலன், சந்தக்கவிமணி கிண்ணியா அமீர் அலி, மபாஹிர் மஸ்ஹூர் மௌலானா, கவிநேசன் நவாஸ், மாத்தளைக் கமால், வாழைத்தோட்டம் எம். வஸீர், மலாய் கவி டிவாங்ஸோ, அப்துல் அஸீஸ், மஸீதா அன்சார், எஸ். யூ. கமர்ஜான் பீபி, லைலா அக்ஷியா, சிந்தனைப் பிரியன் ஜமால்தீன் முஸம்மில், வெளிமடை ஜஹாங்கீர், பீ. தங்கவேலு, எம். எஸ். எம். இக்பால் ஆகியோர் கவிதை பாடினர். தற்போது கத்தார் நாட்டுக்கு விஜயம் செய்திருக்கும் வகவத் தலைவர் என். நஜ்முல் ஹுசைன் கத்தாரிலிருந்து கொண்டே, கவியரங்கத் தலைவர் பிறைக்கவி முஸம்மிலை வாழ்த்திப் பாடிய சிறைப்பிடிக்க வேண்டும் எம் கவிஞர்சிந்தையெல்லாம்; சீராட்டி அழைத்தோம், நிறைப் பயணம் செய்யுங்கள் கவிதை நினைவினிலே நாம் வாழ்த்தி மகிழ்ந்தோம் என்ற கவிதையும் ஒலிபரப்பப்பட்டது.

சிவா பிரதீபன், கவிக்கமல், முஹம்மத் பாஸில் போன்ற பலர் நிகழ்வை அலங்கரித்தனர்.



கத்தார் நாட்டில் CWF கத்தார் அனுசரணையில் ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு மற்றும் கத்தார் முத்தமிழ் மன்றம் ஆகியன கூட்டாக இணைந்து ஏற்பாடு செய்த கவியரங்கத்தில் தலைமை தாங்கிய வலம்புரி கவிதா வட்டத் தலைவர் கவிமணி என். நஜ்முல் ஹுசைன் உடன் கவியரங்கில் பங்கு பற்றிய இந்திய கவிஞர்கள் எஸ். சிவசங்கர், முகமது சிக்கந்தர் (புதுவை சிக்கந்தர்), ஜோன்ஸ் ரமனாஜ், இலங்கை கவிஞர்கள் மெய்யன் நடராஜ், எம். வை. எம். ஷரீப், முஹம்மத் சமீன், பாலமுனை றிஸ்வான், கஹட்டோவிட்ட நிஹாசா நிசார், துந்துவ ஹஸீனா முன்ஸிர் ஆகியோர்.



முல்லை முஸ்ரிபா

ஔவன் கவிதை

## குரல்களின் வனம்

அழுகிய குரல்களினாலான மாலையிலிருந்து
வழிகிறது நிணம்
முன்னமிருந்த
மலர் வாசம் வற்றிற்று
முன்னமிருந்த வனத்தின் நிறம் வாடிற்று
எத்தனை கோடி செவிகளை நிரப்பிய பொழுது
இப்பொழுது அழுகிறது
தனித்து விடப்பட்ட துயரத்தை எழுதுவதற்கென
ஒற்றைக் குரலை நீ உயர்த்துகிறாய்
யாருமற்ற நிசியொன்றில்
அமைதியிழந்து துடித்த குரலின் நிழலில்
இருள் படிந்த கறை
நீ
உன்குரலால் பின்னக்கூடும்
ஒரு மலர்
ஒரு செடி
ஒரு வனம்
மென்குரல்களின் கொடி படர்ந்த
வனப்பை பந்தலிடும்
நிலா யாருடையது







## முற்போக்கு சிந்தனைகளால் தமிழினத்தை மீட்டெடுத்த பேரறிஞர் அண்ணா

# மதராச பட்டினத்திற்கு "தமிழ்நாடு" என பெயரிட்டவர் அறிஞர் அண்ணா

அறிஞர் அண்ணா எழுதிய திறனாய்வு நூல்களாக ஆரிய மாயை, இதன்விலை மூவாயிரம், கம்பரசம், தேவலீலைகள், மாஜிக் கடவுள் போன்றவற்றை குறிப்பிடலாம். அண்ணா எழுதிய திறனாய்வு நூல்களில் "ஆரியமாயை"(ஆரியர்களின் போலித்தோற்றம்) மிகுந்த சர்ச்சைகளுக்குள்ளாகி அபராதம் விதிக்கப்பட்டு சிறையும் செல்ல வேண்டியேற்பட்டது. பிராமணர்களை கடுமையாக சாடியதாக விமர்சிக்கப்பட்டது. ஆரியரின் இனச்சேர்க்கை, திரை மறைவுகளை உருவகப்படுத்தும் விதமாக எழுதப்பட்டிருப்பதாக விமர்சனம் வைக்கப்பட்டது. இவ்வாறான காரணத்திற்காகவும், கிளர்ச்சி செய்கின்ற நூல் என்ற காரணத்திற்காகவும் அபராதமும் சிறைத் தண்டனையும் கிடைத்தது.

திறனாய்வு நூலான "ஆரிய மாயை" சர்ச்சை காரணமாக அண்ணா சிறையில் இருந்தபோது பெரியார் எழுதிய " பெரியாரின் பொன்மொழிகள்" என்ற நூல் சட்டத்திற்கு புறம்பான செய்திகளையும், கடவுள் வழிபாட்டையும் தாக்கியிருக்கிறது என்று தடை விதித்து பெரியாரும் அதே சிறையில் பக்கத்து பக்கத்து சிறையில் இருந்தனர். பெரியார் சிறையிலிருந்து மரநிழலுக்கு வந்தால், அ ண் ண ா உள்ளே போய்விடுவார், பெரியார் உள்ளே போனால் அண்ணா வெளியில் வந்து மரநிழலுக்கு வந்துவிடுவார். ஒருநாள் பெரியாருக்கு பணிவிடை செய்யும் கைதி ஒருவன் அண்ணாவின் அறைக்கு வந்து, " ஐயா கொடுக்க சொன்னார்" என ஆறு பிஸ்கட்களை கொடுத்தார். வியப்புடன் அதனை அண்ணா வாங்கி கொண்டார்

நீதிமன்றம் பத்தாம் நாளே இருவரையும் விடுதலை செய்தது. பெரியாரை அழைத்துப்போக கார் வந்திருந்தது. ஆனால் அண்ணாவுக்கு கார் வந்து சேரவில்லை. இருவரும் ஒருவர் பின் ஒருவராக சிறைக்கு வெளியில் வந்தனர்.

இருவரையும் ஒன்றாக நிற்கவைத்து படமும் எடுத்தனர். பின்னர் இருவரும் ஓரே காரில் ஏறிக்கொண்டனர். வழியில் பெரியார் ஒரு நண்பரின் வீட்டில் இறங்கி கொண்டார். அண்ணா செல்ல வேண்டிய இடத்திற்கு விட்டு விட்டு கார் திரும்பியது.

1950 ஆம் ஆண்டும் இந்தியை கட்டாய பாடமாக்கி அரசு உத்தரவிட்டது. இதனை எதிர்த்து தி.மு.க. வினர் போராட்டம் நடத்தினர். அரசோ இரும்புக்கரம் கொண்டு கிளர்ச்சியை ஒடுக்க முற்பட்டது. தி.மு.க. தொண்டர்கள் தடியடிபட்டனர். பலர் கைது செய்யப்பட்டு சிறையிலும் அடைக்கப்பட்டனர்.

ஆனால் தி.மு.க. வின் போராட்டம் தொடர்ந்தது. எனவே. இரு மாதங்களிலேயே அரசு தனது உத்தரவை திரும்ப பெற்றுக் கொண்டது. இந்தி கட்டாய பாடம் அல்ல. விருப்பப்பாடம் என்றும் அறிவித்தது.



கலாபூஷணம்
**பரீட் இக்பால்...**
யாழ்ப்பாணம்

# "பராசக்தி"க்கு வயது 70...!

**(கடந்த வாரத் தொடர்)**

இப்படத்தில் நடித்தமைக்காக சிவாஜி கணேசன் பெற்ற சம்பளம் ரூபா இரண்டாயிரத்து ஐநூறு. இப்படத்தின் படப்பிடிப்பில் சிவாஜி கணேசன் முதலில் பேசிய வசனம்" சக்ஸஸ்".இந்த வசனம் பேசப்பட்டு,படப்பிடிப்பு நடந்த இடத்தில் ஏவியெம் நிறுவனம் சிவாஜிகணேசனின் ஞாபகார்த்தமாக

"அதே தோற்றம் கொண்ட அமைப்பில் செட் அமைத்து, சிவாஜி கணேசன் கரத்தில் ஓர் நாணயத்தை உயர்த்திக் காண்பிக்கும் வண்ணம் ஓர் சிலையை வடிவமைத்து நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு சிறப்பு கௌரவம் ஆற்றியுள்ளனர்" என்பது குறிப்பிடத்தக்கது.

வி.சி.கணேசன் என்ற 24 வயதேயான இவ்விளைஞன் முதலில் பேசிய வசனப்படியே எதிர்காலத்தில் "நடிகர் திலகம் சிவாஜி கணேசனாக" எல்லா விதத்திலும் அவரது வாழ்வு"சக்ஸஸ்" ஆனது.....!

இப்படத்தில் கவியரசு கண்ணதாசன் நீதிபதியாக உச்சக்காட்சியில் நடித்திருப்பார்.

இப்படத்தில் இடம்பெற்ற பாடல்கள்:

**1. தேசம் ஞானம் கல்வி(உடுமலை நாராயணகவி)**
**2. கா...கா...கா..ஆகாரம் உண்ண (உடுமலை நாராயணகவி)**
**3. நெஞ்சு பொறுக்கு திலையே (மகாகவி பாரதியார்)**
**4. இல் வாழ்வினிலே (கலைஞர் கருணாநிதி)**
**5.புதுப் பெண்ணின் மனதை.. (கே.பி.காட்சி சுந்தரன்)**
**6.ஓ ரசிக்கும் சீமானே வா (கே.பி.காட்சி சுந்தரன்)**
**7.எல்லோரும் வாழவேண்டும் (அண்ணல் காங்கோ)**
**8. கொஞ்சும் மொழி (கே.பி.காமாட்சி சுந்தரன்)**
**9. பூமாலை (கலைஞர் கருணாநிதி)**
**10.பொருளே இல்லார்க்கு (கே.பி.காமாட்சி சுந்தரன்)**
**11.வாழ்க வாழ்கவே (புரட்சிக் கவி பாரதிதாசன்)**

### "பராசக்தி" திரைக் கதை சுருக்கம்...

தாயை இழந்து தந்தையுடன் மதுரையில் வாழ்ந்து வரும் கல்யாணிக்கு மூன்று அண்ணன்கள். அண்ணன்கள் அனைவரும் பர்மா எனப்பட்ட மியான்மரில் வணிகம் செய்து வந்தனர். 1940களில் மூண்ட உலகப் போர் சூழலில் தங்கைக்கு கல்யாணம் நிச்சயிக்கப்படுகிறது. போரினால், கதையின் நாயகனான கல்யாணியின் கடைசி அண்ணன் குணசேகரனுக்கு மட்டும் கப்பலில் பயணச்சீட்டு கிடைக்கப்பெற்று, அன்றைய மதராசான சென்னைக்கு வருகிறான். சென்னையில் தான் கொண்டு வந்த அனைத்தும் ஒரு வஞ்சகியின் சூழ்ச்சியினால் இழந்து மதுரைக்கும் செல்ல வழியின்றி பசியினால் சமூக அவலங்களைச் சந்திக்கிறான். இவ்வேளையில் தங்கையின் கல்யாணம் நிறைவுற்றுபின் மகிழ்வாய் குழந்தை பெற்ற அன்றே விபத்தால் கணவனும் மரணிக்கின்றாள். பாலகன் பிறந்த நந்நிகழ்வைக் கூற வந்த போது விபத்தை நேரில் கண்டு அதிர்ச்சியில் தந்தையும் இறக்க, கடன் பொருட்டு வீடும் இழந்து கைம்பெண்கள் சந்தித்த துயரத்தை கல்யாணி எதிர்கொள்கிறாள். அண்ணன்களுடன் கல்யாணி இறுதியில் சேர்கின்றாளா?,பிரிந்த குடும்பம் ஒன்றிணைகின்றனரா? என்பதே இப்படத்தின் மூலக்கதை....

"பராசக்தி"திரைப்படம் வெளியான தினத்தையொட்டி அப்படத்தில் இடம் பெற்ற சில ஜனரஞ்சக வசனங்கள்.....

1.கடல்நீர் ஏன் உப்பாக இருக்கிறது? சொந்த நாட்டிலே வாழ முடியாமல் அயல்நாட்டிற்குச் சென்று வாழும் மக்கள் அழுது அழுது சேர்த்த கண்ணீரால் தான் கடல் நீர் உப்பாக இருக்கிறது.

2.மதராசுல மனுசன் மிருகமா தான் இருக்கான். முதுகெலும்பு ஒடிய மூட்டை வண்டி இழுக்கிறானே. குதிரைக்குப் பதிலாக நரம்பு தெறிக்க தெறிக்க ரிக்சா இழுத்து கூனிப் போயிருக்கிறானே. நாயைப் போல சுருண்டு நடைபாதையில் குடும்பத்தோடு தூங்குகிறானே. அந்த ந ல் ல வ னை ந ா தி ய ற் ற வ னை நாலுகால் பிராணியாய் மாற்றப்பட்ட மனிதனை சொன்னேன். சென்னை புனிதமான நகரம். இங்கே மனிதன் மிருகம்.



3.பைத்தியக்கார உலகம். இந்த உலகத்தில் ஏமாற்றுக்காரன் தான் பிழைக்க முடியும். வயிற்றுக்கு இல்லாமல் வாடும்போது ஒரு பழத்தை எடுத்தேன். அதற்குப் பரிசு அடி உதை. பைத்தியக்காரன் ஒரு சீப்பு பழத்தை திருடுகிறான். உலகம் அவனுக்குப் பயப்படுகிறது.

4.பெரிய மனுசன் வீட்டு அந்தப்புரத்துல தொழிலாளி மொதலாளி பிரச்சினைக்கு இடமே கிடையாது.

5.ஏழைக்குப் பிரசாதம் கேக்குதா?

6.உஷ்ன்னா ஓடுற பசங்க இப்ப உதைக்கற அளவுக்கு வந்துட்டாங்களா?

6."இரக்கமற்ற மனுச சாதிய பகுத்தறிவாளர்னு சொல்றது தப்பு தான்

7. "பிச்சைக்காரனாய் திரிந்தாய் வெட்கமில்லை" திருடனாக மாறினாய் அப்போதும் வெட்கமில்லை ஆனால் உன் ஏமாற்றத்தை வெளியில் சொல்ல வெட்கப்பட்டிருக்கிறாய்.வேடிக்கையான மனிதன்"

8."சமுதாயமே பிச்சைக்கார மடம் தான் ஆனால் அதில் நீ திருவோடு இல்லாத பரதேசி.சமுதாயம் பைத்தியக்கார விடுதிதான் ஆனால் அதில் நீ கல்லெறிய தெரியாத பைத்தியம். சமுதாயம் திருடர் குகை தான் ஆனால் அதில் நீ கண்ணுக்குள்.

(தொடரும்)





**எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ் ...**
கம்பளை




வெலிகம அறபா தேசிய பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற கோட்ட கொட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில்(GPL) சம்ஸ் ஜுவலரி அணி சாம்பியன் பட்டத்தை வென்றது. வெற்றி பெற்ற அணி வீரர்களைப் படத்தில் காணலாம்

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 நவம்பர் மாதம் 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.